NEXT CHAPTER

LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - தூய்மை

- தண்ணீர்
- பாத்திரங்கள்
- அசுத்தங்களை அகற்றுதல்
- உளூ
- காலுறைகளில் மஸஹ் செய்வது விளக்கம்
- உளூவை முறிக்கக் கூடியவை
- மலம், சிறுநீர் கழிக்கும் ஒழுங்குகள்
- குளிப்பு மற்றும் குளிப்பு கடமையானவர்களுக்காக சட்டம்
- தயம்மும்
- மாதவிடாய்

தண்ணீர்

GO TO CHAPTER INDEX

1 கடலைப்பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறும்போது, “அதன் தண்ணீர் சுத்தமானது அதில் (வசிப்பவை) இறந்தவை(யாக இருப்பினும்) அனுமதிக்கப்பட்டது“ என்று கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

அபூதாவூத், நஸாயீ, திர்மிதீ, இப்னு மாஜா, மற்றும் இப்னு அபீ ஷைபா, இப்னு குஸைமா, மாலிக் ஷா..பி மற்றும் அஹ்மத். இங்கு இப்னு அபீ ஷைபாவின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இப்னு குஸைமா மற்றும் திர்மிதீயில் இது ஸஹீஹ் என்று குறிப்பிட்டுள்ளனர். இன்னும் இது ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

2 “நிச்சயமாக தண்ணீர் சுத்தம் செய்யக் கூடியதாகும் அதனை எதுவும் அசுத்தமாக்கி விடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ. அஹமதில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3 நிச்சயமாக தண்ணீரை அதனுடைய வாடை, சுவை, நிறம் இவற்றை மிகைக்கக் கூடியவற்றைத் தவிர்த்து வேறு எதுவும் அசுத்தமாக்காது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ உமாமா அல்பாஹிலி(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு மாஜா. அபூஹாதிமில் இதை ளயீ..ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

4 அசுத்தம் (நீரில்) கலந்து, அதனுடைய வாடை, சுவை, நிறம் மாறாவிட்டால் அந்நீர் சுத்தமானது“ என்று பைஹகீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5 தண்ணீர் ‘குல்லத்தைன்‘ அளவுக்கு இருந்தால் அது அசுத்தமாகாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ, இப்னு மாஜா, திர்மிதீ, இப்னு குஸைமா, ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பான். இதை இப்னுகுஸைமா, ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பான். இது பிந்திய மூன்று நூல்களிலும் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

6 உங்களில் குளிப்புக் கடமையான எவரும் தேங்கி நிற்கும் தண்ணீரில் குளிக்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

7 உங்களில் ஒருவர் ஓடாமல் தேங்கி நிற்கும் தண்ணீரில் சிறுநீர் கழித்து விட்டு, பின்னர் அதில் குளிக்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புகாரீயில் இடம் பெற்றுள்ளது.

8 உங்களில் ஒருவருக்கு குளிப்புக் கடமையான நேரத்தில் தேங்கி நிற்கும் தண்ணீரில் குளிக்க வேண்டாம். முஸ்லிம், அபூ தாவூத்

9 கணவனால் மீதம் வைக்கப்பட்ட தண்ணீரில் மனைவியும், மனைவியால் மீதம் வைக்கப்பட்ட தண்ணீரில் கணவனும் குளிப்பதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். “தேவை ஏற்பட்டால் இருவரும் சேர்ந்து குளித்துக் கொள்ளலாம்“ என நபித் தோழர்களில் ஒருவர் அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

10 “உம்முல் மு.:மினீன் மைமூனா(ரலி) அவர்கள் குளித்து விட்டு எஞ்சிய தண்ணீரில் நபி(ஸல்) அவர்கள் குளித்தார்கள்“ என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். முஸ்லிம்

11 நபி(ஸல்) அவர்களது மனைவியரில் ஒருவர், ஒரு பெரிய பாத்திரத்தில் குளித்தார் அப்போது அங்கு வந்த நபி(ஸல்) அவர்கள் அதில் குளிக்க விரும்பிய போது, “நிச்சயமாக நான் குளிப்பு கடமையானவளாக இருந்தேன்“ என்று (உம்முல் மு.:மினீன்) கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “(இதன் காரணமாக) தண்ணீர் ஒரு போதும் அசுத்தமானதாக ஆகாது“ என்று கூறினார்கள்

திர்மிதீ, இப்னு குஸைமா. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

12 “உங்களுடைய பாத்திரத்தில் நாய் வாய் வைத்துவிட்டால், அதை சுத்தப்படுத்துவதற்காக ஏழுமுறை கழுவுங்கள். அதில் முதல்முறை மண்ணால் சுத்தம் செய்யுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

முஸ்லிம். முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் “அதிலுள்ளதை கொட்டி விடுங்கள்“ என்று உள்ளது. திர்மிதீயின் மற்றோர் அறிவிப்பில் “முதல் முறை அல்லது கடைசி முறை மண்ணால கழுவுங்கள்“ என்ற உள்ளது.

13 நபி(ஸல்) அவர்கள் பூனையைப் பற்றிக் கூறும் போது, “அது அசுத்தமானதல்ல உங்களிடையே சுற்றி வரக் கூடியது தான்“ என்று கூறினார்கள் என அபூ கதாதா(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத் நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா. திர்மிதீ மற்றும் இப்னு குஸைமாவில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

14 ஒரு நாட்டுப் புறத்தார் பள்ளிக்கு வந்து ஒரு மூலையில் சிறுநீர் கழித்து விட்டார். அவரை மக்கள் அதட்டினார்கள். அதை நபி(ஸல்) அவர்கள், தடுத்து, அவர் சிறுநீர் கழித்து முடித்த பின்னர் ஒரு வாளி தண்ணீர் கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். பின்னர் அது அதன் மீது ஊற்றப்பட்டது என்று அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

15 நமக்கு செத்தவை இரண்டும், இரத்தம் இரண்டும் (ஹலால்) அனுமதிக்கப்பட்டுள்ளது. அவைகளில் செத்தவை வெட்டுக்கிளி மற்றும் மீனாகும். அந்த இரத்தம், ஈரல் மற்றும் கல்லீரல் ஆகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், இப்னு மாஜா. இது ளயீ.:ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

16 “உங்கள் குடிபானத்தில் ஈ விழுந்து விட்டால், அதை உள்ளே மூழ்கடித்து விட்டுப் பின்னர் வெளியில் எடுத்து விடவும். ஏனெனில், அதன் ஓர் இறக்கையில் நோயும் மற்றோர் இறக்கையில் நிவாரணமும் உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, அபூ தாவூத்.

“நிச்சயமாக இது நோயிருக்கும் தன்னுடைய இறக்கையின் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது“ என்றும் அபூ தாவூதில் இடம் பெற்றுள்ளது.

17 “உயிருள்ள கால் நடைகளில் (உறுப்புகள்) வெட்டப்பட்டதும் செத்ததே“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூவாஹித் அல்லைஸி(ரலி) அறிவிக்கிறார்.

திர்மிதீ, அபூ தாவூத். இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு திர்மிதீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

பாத்திரங்கள் GO TO CHAPTER INDEX

18 "தங்கப் பாத்திரங்களிலும் வெள்ளிப் பாத்திரங்களிலும் பருகாதீர்கள், இன்னும் அத்தட்டுகளில் சாப்பிடாதீர்கள். ஏனெனில், அவை உலகில் (இறை மறுப்பாளர்களான) அவர்களுக்குரியதாகும் மறுமையில் உங்களுக்கு உரியதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹுதைஃபா இப்னு அல்யமான்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

19 "எவர் வெள்ளிப் பாத்திரங்களில் பருகுகின்றாரோ அவர் தன்னுடைய வயிற்றில் நரக நெருப்பைக் கொட்டிக் கொள்கிறார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

20 "பச்சைத் தோல் பதனிடப்பட்டு விட்டால் அது தூய்மையாகி விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

21 இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக, எந்தத் தோலானாலும் பதனிடப்பட்டு விட்டால் (அது தூய்மையாகி விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸலமா இப்னு அல் முஹய்யிக்(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான்

22"இறந்து போன கால்நடைகளின் தோல்கள் பதனிடப்பட்டு விட்டால் அது தூய்மையாகிவிடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸலமா இப்னு அல் முஹய்யிக்(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு ஹிப்பான. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

23 இறந்து போன ஆட்டை இழுத்துச் சென்றோரை நபி(ஸல்) அவர்கள் கடந்து சென்ற போது, "அதனுடைய தோலை நீங்கள் எடுத்துக் கொள்ளலாமே?" என்று கூறினார்கள். அதற்கவர்கள் "அது தானாக செத்தாயிற்றே?" என்று பதிலளித்தனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "அதைத் தண்ணீர் மற்றும் மரப்பட்டை சுத்தம் செய்துவிடும்" என்று கூறினார்கள் என மைமூனா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ

24 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! வேதம் கொடுக்கப்பட்டோரின் நாட்டில் நாங்கள் வசிக்கின்றோம். எனவே அவர்களது பாத்திரங்களில் நாங்கள் உண்ணலாமா?" என்று நான் கேட்டேன். அதற்கு "அவற்றில் நீங்கள் உண்ணாதீர்கள்! உங்களுக்கு வேறு பாத்திரங்கள் கிடைக்கவில்லையெனில், அவற்றைக் கழுவிவிட்டு அவற்றில் உண்ணுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூ ஸஅலபா அல் குஷனிய்யீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

25 "(இறைவனுக்கு) இணை வைக்கும் ஒரு பெண்ணுடைய தண்ணீர்ப் பையிலிருந்த தண்ணீரைக் கொண்டு நபி(ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் உளூ செய்தார்கள்" என இம்ரான் இப்னு ஹுஸைன்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

26 "நபி(ஸல்) அவர்களுடைய பாத்திரம் ஒன்று உடைந்து விட்டது. அவர்கள் ஒட்டை விழுந்த இடத்தில் அவர்கள் ஒட்டை விழுந்த இடத்தில் வெள்ளித் துண்டினால் அடைத்தார்கள்" என, அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

அசுத்தங்களை அகற்றுதல் GO TO CHAPTER INDEX

27 "நபி(ஸல்) அவர்களிடம் சாராயத்திலிருந்து 'சிர்கா' செய்வது பற்றி வினவப்பட்டதற்கு அவர்கள் 'கூடாது' என்றார்கள் (தடை விதித்தார்கள்)" என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார்.

முஸ்லிம், திர்மிதீ. இது திர்மிதீயில் 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

28 நபி(ஸல்) அவர்கள் மினாவில் தங்களது வாகனத்தில் அமர்ந்தவாறே எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது அதன் (அக்கால் நடையின்) உமிழ் நீர் என்னுடைய தோளில் (விழுந்து) வழிந்தோடிக் கொண்டிருந்தது என அம்ர் இப்னு காரிஜா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், திர்மிதீ. இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

30 "நபி(ஸல்) அவர்கள் (தங்களது ஆடையில் பட்ட) இந்திரியத்தைக் கழுவி விட்டு, அதே ஆடையுடன் தொழுகைக்குச் செல்வார்கள். அப்போது அந்த ஆடையில் கழுவப்பட்ட அடையாளத்தை நான் காண்பேன்" என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

31 "நான் நபி(ஸல்) அவர்களது ஆடையிலிருந்த (இந்திரியத்)தை சுரண்டி விடுவேன். அவர்கள் அதே ஆடையுடன்

தொழுவார்கள்“ என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் என முஸ்லிமில் பதிவாகியள்ளது.

32 “ஆடையில் அது காய்ந்த பின் என்னுடைய நகத்தால் அதை சுரண்டி விடுவேன்“ என்று ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள் என முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் இடம் பெற்றுள்ளது.

33 “பெண் குழந்தையின் சிறுநீர்பட்ட இடத்தைக் கழுவ வேண்டும். ஆண் குழந்தையின் சிறுநீர்பட்ட இடத்தில் தண்ணீர் தெளித்தல் போதுமானது“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸம்ஹு (ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ, ஹாம்கி. இது ஸஹீஹ் எனும் தரத்தில் ஹாம்மில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

34 “மாதவிடாய் இரத்தம் பட்ட துணியை சுரண்டி, பின்னர் அதைத் தண்ணீரால் கழுவி, பின்பு அதன் மீது தண்ணீர் ஊற்றி அதில் தொழுது கொள்ளலாம்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

35 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மாதவிடாய் இரத்தத்தின் கறை (துணியிலிருந்து) போகாவிட்டால்?“ என்று கவ்லா (ரலி) வினவினார். அதற்கு “அதன் மீது தண்ணீர் விட்டால் போதுமானது அதன் கறையால் உனக்குத் தீங்கில்லை“ என்று நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்.

திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உளூ

GO TO CHAPTER INDEX

36 “என்னுடைய சமுதாயத்திற்கு கஷ்டம் தந்து விடுவேன் என்று நான் அஞ்சாவிட்டால் ஒவ்வொரு உளூவுடனும் (மிஸ்வாக்) பல் துலக்குமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டிருப்பேன்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்.

மாலிக், அஹ்மத், நஸயீ மற்றும் இப்னு குஸைமா. இது ஸஹீஹ் எனும் தரத்தில் இப்னு குஸைமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது புகாரீயில் ‘முஅல்லக்‘ தரத்திலுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

37 உஸ்மான் (ரலி) அவர்கள் உளூவிற்காகத் தண்ணீர் கேட்டார்கள். (தண்ணீர் கொடுக்கப்பட்டதும்) மூன்று முறை தம் கைகளைக் கழுவினார்கள் பின்னர் வாய் கொப்பளித்தார்கள், இன்னும் மூக்கில் தண்ணீர் செலுத்திச் சிந்தினார்கள். பின்னர் தமது முகத்தை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் தம்முடைய வலக்கரத்தை முழங்கை வரை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் தம்முடைய இடக் கரத்தை அதே போன்று கழுவினார்கள். பின்னர் தம்முடைய தலைக்கு மஸஹ் செய்தார்கள். (தலையை ஈரக் கையால் தடவினார்கள்). பின்னர் தமது வலக் காலை கணுக்கால்கள் வரை மூன்று முறை கழுவினார்கள். பின்னர் தமது இடக் காலை அதே போன்று கழுவினார்கள். பின்னர், “நபி (ஸல்) அவர்கள் உளூ செய்வதை நான் பார்த்திருக்கின்றேன். அவர்களுடைய உளூ (நான் செய்து காட்டிய) என்னுடைய இந்த உளூவைப் போன்று தான் அமைந்திருந்தது“ என்று கூறினார்கள் என ஹும்ரான் அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

38 அலீ (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களது உளூவை வர்ணிக்கையி, “அவர்கள் தலைக்கு ஒருமுறை மஸஹ் செய்தார்கள்“ என்று கூறினார்கள்.

அபூதாவூத். திர்மிதீ மற்றும் நஸயீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திர்மிதீ மஸஹ் தொடர்பான ஹதீஸ்களில் இது மிகவும் ஸஹீஹானது என்று குறிப்பிட்டுள்ளார்.

39 நபி (ஸல்) அவர்களது உளூவைப் பற்றிக் கூறுகையில், “நபி (ஸல்) அவர்கள் தலைக்கு மஸஹ் செய்தார்கள். அப்போது தம் இரு கைகளையும் முன்னே கொண்டு வந்து, பின்னால் கொண்டு சென்றார்கள்“ என அப்துல்லாஹ் இப்னு ஜைத் இப்னு ஆஸிம் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

40 புகாரீ, முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில், தலையின் முன் பகுதியில் இருந்து (மஸஹை) ஆரம்பம் செய்து, தம்முடைய பிடரிவரை கொண்டு சென்று, பின்னர் (மஸஹை) ஆரம்பித்த இடத்திற்குத் தமது கரங்களைக் கொண்டு வந்தார்கள் என்று இடம் பெற்றுள்ளது.

41 நபி (ஸல்) அவர்களின் உளூவைப் பற்றிக் கூறுகையில் “அவர்கள் தமது தலைக்கு மஸஹ் செய்தார்கள். இன்னும் தமது இரு ஆட்காட்டி விரல்களையும் காதினுள் நுழைத்து, தமது கட்டை விரல்கள் இரண்டினாலும் காதுகளின் வெளிப்பகுதியில் வைத்து மஸஹ் செய்தார்கள்“ என அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ மற்றும் இப்னு குஸைமா. இது ஸஹிஹ் எனும் தரத்தில் இப்னு குஸைமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

42 "உங்களில் எவரேனும் தூக்கத்திலிருந்து எழுந்து விட்டால், அவர் தன்னுடைய மூக்கை மூன்று முறை சிந்தட்டும். ஏனெனில், அவரின் மூக்குத் தண்டில் ஷைத்தான் இரவைக் கழிக்கின்றான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

43 "உங்களில் எவரேனும் தூக்கத்திலிருந்து எழுந்தால், தமது கரத்தை மூன்று முறை கழுவாத வரையில், தண்ணீருள்ள பாத்திரத்தினுள் தனது கையை நுழைக்க வேண்டாம். ஏனெனில், அவரது கை இரவை எங்கு கழித்ததென அவர் அறியமாட்டார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம். இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

44 "நிறைவாக உளூச் செய்யுங்கள். இன்னும் விரல்களைக் கோதிக் கழுவுங்கள். இன்னும் நோன்பாளியாக இல்லாதிருந்தால் நாசிக்கு நன்றாக நீர் செலுத்துங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என லகீத் இப்னு ஸபிரா(ரலி) அறிவிக்கிறார்.

அபூதாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

45 "உளூச் செய்தால் நீ வாய்கொப்பளி" எனும் வாசகம் அபூதாவூதின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

46 "நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்யும் போது, தமது தாடியைக் கோதிக் கழுவினார்கள்" என உஸ்மான்(ரலி) அறிவிக்கிறார்.

திர்மிதீ, இப்னு குஸைமா. இது ஸஹீஹ் எனும் தரத்தில் இப்னு குஸைமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

47 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு முத்து அளவு தண்ணீரில் மூன்றில் இரண்டு பங்கு தண்ணீர் கொண்டு வந்து தரப்பட்டது. அவர்கள் (கழுவும் போது) தம் முழங்கைகளைத் தேய்க்கலானார்கள்!" என அப்துல்லாஹ் இப்னு ஜைத்(ரலி) அறிவிக்கிறார்.

அஹமத், இப்னு குஸைமா. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

48 நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்யும் போது காதுகள் மற்றும் தலைக்கு (மஸஹ் செய்ய) தனித்தனியாகத் தண்ணீர் எடுத்ததை தான் பார்த்ததாக அப்துல்லாஹ் இப்னு ஜைத்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், "நபி(ஸல்) அவர்கள் தம் கையில் மீதமிருந்த தண்ணீரை விட்டுவிட்டு வேறொரு தண்ணீரால் தம் தலைக்கு மஸஹ் செய்தார்கள்" என்றுள்ளது.

49 "நிச்சயமாக என்னுடைய சமுதாயம், மறுமை நாளில் உளூவின் அடையாளத்தால் கரங்கள் ஒளிர்ந்த வண்ணம் வருவார்கள். எவரால், தமது கரத்தின் ஒளியை அதிகப்படுத்திக் கொள்ள முடியுமோ அவர் அவ்வாறே செய்து கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியேற்றுள்ளேன் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

50 "நபி(ஸல்) அவர்கள் செருப்பு அணியும் போதும், தலை வாரும் போதும், உளூச் செய்யும் போது, தமது காரியங்கள் அனைத்திலும் வலப் பக்கத்திலிருந்து ஆரம்பம் செய்யுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

அபூதாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

52 "நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்யும் போது தமது நெற்றி ரோமம், தலைப்பாகை மற்றும் இரண்டு காலணிகளுக்கும் மஸஹ் செய்தார்கள்" என முகீரா இப்னு ஷுஅபா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

53 நபி(ஸல்) அவர்களின் ஹஜ்ஜைப் பற்றி ஜாபிர்(ரலி) கூறுகையில், "அல்லாஹ் எதைக் கொண்டு ஆரம்பம் செய்தானோ, அதைக் கொண்டே நீங்களும் ஆரம்பம் செய்யுங்கள்" என்று நபி(ஸல்) கூறினார்கள் என அறிவிக்கிறார். நஸாயீ, முஸ்லிம்

54 "நபி(ஸல்) அவர்கள் உளூச் செய்யும்போது தம்முடைய முழங்கைகளில் தண்ணீர் ஊற்றினார்கள்" என

ஜாபிர் (ரலி) அறிவிக்கிறார். இது தாரகுத்னீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

55 “(உளூ செய்ய ஆரம்பிக்கும் போது) எவர் ‘பிஸ்மில்லாஹ் சொல்லவில்லையோ, அவரின் உளூ செல்லாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத் இப்னுமாஜா. இது இப்னு மாஜாவில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

56 அபூ ஸயீது அல் குத்ரீ(ரலி) வாயிலாக திர்மிதீயிலும் மேற்கண்ட ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. இதில் ஆதாரமில்லை என்று அஹ்மத் கூறியுள்ளார்.

57 நபி(ஸல்) அவர்கள் தண்ணீரை, வாய் கொப்பாளிப்பதற்கும், நாசிக்கும் தனித்தனியாக எடுத்தார்களென தல்ஹா இப்னு முஸர்ரிஸப் தம்முடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். இது அபூ தாவூதில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

58 நபி(ஸல்) அவர்களின் உளூவைப் பற்றி அலி(ரலி) கூறுகையில், “நபி(ஸல்) அவர்கள் மூன்று முறை (வாய் கொப்பளிக்க எடுத்த) அதே தண்ணீரைக் கொண்டே நாசியையும் சுத்தம் செய்தார்கள்“ என கூறினார். அபூதாவூத், நஸாயீ.

59 நபி(ஸல்) அவர்களின் உளூவைப் பற்றி அப்துல்லாஹ் இப்னு ஜைத்(ரலி) கூறுகையில், “நபி(ஸல்) அவர்கள் உளூவுக்காகப் பாத்திரத்தினுள் தமது கையை நுழைத்தார்கள். பின்னர் ஒரு கை தண்ணீரைக் கொண்டு வாய் கொப்பளித்து, நாசிக்கும் தண்ணீர் செலுத்தினார்கள். இவ்வாறு மூன்று முறை செய்தார்கள்“ என்று கூறினார். புகாரீ, முஸ்லிம்

60 தம் குதிங்காலில் நகத்தளவு மட்டும் தண்ணீர்படாத (வாறு உளூ செய்த) ஒரு நபரைப் பார்த்து, “திரும்பச் செல்! உன்னுடைய உளூவை நல்ல முறையில் செய்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ

61 நபி(ஸல்) அவர்கள் ஒரு ‘முத்‘ அளவு தண்ணீரில் உளூ செய்வார்கள். இன்னும் ஒரு ‘ஸாவு‘ அளவிலிருந்து ஐந்து ‘முத்‘ அளவு தண்ணீரில் குளிப்பார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

62 உங்களில் எவர் நிறைவாக உளூ செய்த பின்னர், “நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். இன்னும் முஹம்மத்(ஸல்) அவர்கள் அவனது நல்லடியாராகவும், உண்மைத் தூதரும் ஆவார்கள் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்“ என்று கூறுகிறாரோ? அவருக்கு சுவர்க்கத்தின் எட்டு வாயில்கள் திறக்கப்படுகின்றன. அவற்றில் விரும்பிய வாயிலில் அவர் நுழைந்து கொள்ளலாம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

“யா அல்லாஹ்! பாவமன்னிப்புக் கோருபவர்களின் , குழுவிலும், தூய்மையானவர்களின் குழுவிலும் என்னைச் சேர்ப்பாயாக!“ எனும் வாசகம் திர்மிதீயில் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

காலுறைகளில் மஸஹ் செய்வது விளக்கம்

GO TO CHAPTER INDEX

63 நபி(ஸல்) அவர்களுடன் நானிருந்த போது, அவர்கள் உளூ செய்தார்கள். அப்போது நான் அவர்களது காலுறைகளைக் கழற்ற முயன்றேன். (அதற்கு) “அவை இரண்டையும் விட்டுவிடு. ஏனெனில், தூய்மையான நிலையில் தான் அவை இரண்டையும் நான் அணிந்துள்ளேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு, அவற்றின் மீது மஸஹ் செய்தார்கள் என முகீரா இப்னு ஷுஅபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

64 “நபி(ஸல்) அவர்கள் காலுறையின் மேலும், கீழும் மஸஹ் செய்தார்கள்“ எனும் வாசகம் முகீரா பின் ஷுஅபா(ரலி) அவர்களிடமிருந்தே அபூ தாவூத் திர்மிதீ, இப்னுமாஜா ஆகிய மூன்றிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

65 “மார்க்கம், அறிவை (மட்டும்) அடிப்படையாகக் கொண்டிருப்பின், காலுறைகளின் கீழ்ப்பக்கம் மஸஹ் செய்வது சிறப்பானதாய் இருந்திருக்கும். ஆனால், நான் நபி(ஸல்) அவர்களை காலுறைகளின் மேல்பக்கம் மஸஹ் செய்யக் கண்டிருக்கிறேன்“ என அலி(ரலி) கூறுகிறார்.

அபூ தாவூத். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

66 பயணத்தில், குளிப்பு கடமையானவர்களைத் தவிர்த்து, மூன்று பகல் மற்றும் மூன்று இரவுகளுக்கு மலம், ஜலம் கழித்தல் மற்றும் தூங்குதல் போன்றவற்றிற்காக எங்கள் காலுறைகளை கழற்ற வேண்டாமென நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள் என ஸஃப்வான் இப்னு அஸ்ஸால் (ரலி) அறிவிக்கிறார்.

நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு குஸைமா. இதில் திர்மிதீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. திர்மிதீயிலும் இப்னு குஸைமாவிலும் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

67 “மூன்று பகலும் மூன்று இரவும் பயணிகளுக்கும், ஒரு பகல் ஒரு இரவு பயணியல்லாதோருக்கும் காலுறைகளில் மஸஹ் செய்து கொள்ள நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள்“ என அலீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

68 நபி(ஸல்) அவர்கள் ஒரு சிறு படையை அனுப்பிய போது அவர்கள் தலைப்பாகைகளிலும், காலுறைகளிலும் மஸஹ் செய்து கொள்ளுமாறு அவர்களுக்குத் கட்டளையிட்டார்கள் என ஸல்பான்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

69 “உங்களில் குளிப்புக் கடமையில்லாதவர் எவரேனும், காலுறைகள் அணிந்து கொண்டே உளூச் செய்தால் அவர் விரும்பினால் அவற்றின் மீது மஸஹ் செய்து கொண்டு, அவற்றுடனேயே தொழட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உமர்(ரலி) வாயிலாக மவ்கூஃப் எனும் தரத்திலும், அனஸ்(ரலி) வாயிலாக மர்ஃபூஉ எனும் தரத்திலும் தாரகுத்னீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இது ஸஹீஹ் எனும் தரத்தில் ஹாம்மில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

70 “மூன்று பகல் மூன்று இரவு பயணிகளுக்கும், ஒரு பகல் ஒரு இரவு பயணியல்லாதோருக்கும் காலுறைகளில் மஸஹ் செய்வதற்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள். அவர்கள் அவற்றைத் தூய்மையான நிலையில் (உளூவுடன்) அணியும் போது (மட்டும்) தான் இந்தச் சலுகை என அபூ பக்ரா(ரலி) அறிவிக்கிறார்.

தாரகுத்னீ. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

71 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! காலுறைகளில் மஸஹ் செய்து கொள்ளட்டுமா?“ என்றார்கள். “ஒரு நாள் (முழுவதும்)?“ என்று நான் கேட்டேன். “ஆம்!“ என்றார்கள். “இரண்டு நாட்கள்?“ என்று நான் கேட்டேன். “ஆம்!“ என்றார்கள். “மூன்று நாட்கள்?“ “ஆம்! நீ விரும்பிய வரை“ என்று கூறினார்கள் என உபை இப்னு இமாரா(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது பலமான ஹதீஸ் இல்லை என பதிவு செய்யப்பட்டுள்ளது.

உளூவை முறிக்கக் கூடியவை

GO TO CHAPTER INDEX

72 நபி(ஸல்) அவர்கள் காலத்தில் அவர்களின் தோழர்கள் இஷாத் தொழுகைக்காகக் காத்திருப்பார்கள். அப்போது (தூக்கத்தின் காரணமாக) அவர்களுடைய தலைகள் கீழே கவிழ்ந்திருக்கும். அவர்கள் (மீண்டும்) உளூச் செய்யாமல் அப்படியே தொழுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது தாரகுத்னீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

73 ஃபாத்திமா பின்த்து அபீஹுபைஷ்(ரலி) நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தொடர்ந்து இரத்தப்போக்குள்ள (இஸ்திஹாளா) பெண்ணாக இருக்கிறேன். நான் தூய்மை அடைவதே இல்லை. எனவே நான் தொழுகையை விட்டுவிடலாமா?“ என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “கூடாது! அது மாதவிடாய் இரத்தமல்ல. ஒரு நரம்பு நோய். எனவே (வழக்கப்படி) உனக்கு மாதவிடாய் ஏற்படும் போது நீ தொழுகையை விட்டுவிடு! அது சென்றதும் இரத்தத்தைக் கழுவி விட்டுத் தொழுது கொள்!“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

74 பிறகு, நீ ஒவ்வொரு தொழுகைக்கும் உளூ செய்து கொள்!“ என்று கூறியதாகவும் புகாரீயில் உள்ளது.

75 நான் காம நீர் சுரக்கும் தன்மையைப் பெற்றவனாக இருந்தேன். இதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்குமாறு மிக்தாதிற்கு நான் கட்டளையிட்டேன். அவரும் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “அதற்காக உளூ செய்து கட்டாயமாகும்“ என்று கூறினார்கள் என அலி(ரலி) அறிவிக்கிறார்.

புகாரீ, முஸ்லிம். இங்கு புகாரியின் வாசகம் இடம்பெற்றுள்ளது.

76 நபி(ஸல்) அவர்கள் தம் மனைவியரில் ஒருவரை முத்தமிட்டு விட்டுப் பின் தொழுகைக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் (மறுபடியும்) உளூச் செய்யவில்லை“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத். இது புகாரீயில் ளயீஃப் எனும் தரத்தில் புதிய செய்யப்பட்டுள்ளது.

77 “உங்களில் எவரேனுனம் தன்னுடைய வயிற்றில் ஏதேனும் (சத்தம்) கேட்டு (காற்று) ஏதும் வெளியேறிதா, இல்லையா? எனும் சந்தேகம் அதனால் எழுந்தால், சத்தத்தைக் கேட்காத அல்லது காற்றை (வெளியேறியதாக) உணராத வரையில் (தொழுகையை முறித்து) பள்ளிவாசலை விட்டு வெளியே செல்ல வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

78 “நான் எனது மர்ம உறுப்பைத் தொட்டு விட்டேன்“ என்றோ அல்லது, “தொழுகையில் ஒரு மனிதர் தன் மர்ம உறுப்பைத் தொட்டுவிட்டால் அவர் உளூச் செய்ய வேண்டுமா?“ என்றோ ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “வேண்டியதில்லை நிச்சயமாக அது உன்னுடைய (உடலின்) ஒரு சதைத் துண்டுதான்“ என்று கூறினார்கள் என தல்கிப்னு அலி(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மீதி மற்றும் இப்னு மாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது 79வது ஹதீஸை விட இது அழகானது என இப்னு அல்மதீனீ குறிப்பிட்டுள்ளார்.

79 “எவர் தனது மர்ம உறுப்பைத் தொட்டு விடுகிறாரோ அவர் உளூச் செய்து கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புஸ்ராஹ் பின்த் ஸஃப்வான் அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

80 “உங்களில் எவருக்கேனும் (தொழுகையில்) வாந்தி அல்லது மூக்கில் இரத்தம் அல்லது வாயில் (வயிற்றின் உணவு) மேலாடும் உணர்வு ஏற்பட்டால், அல்லது காமநீர் வெளிப்பட்டால் அவர் திரும்பச் சென்று உளூச் செய்து கொள்ளட்டும் இதற்கிடையில் அவர் (யாருடனும் எதுவும்) பேசாமலிருந்தால், பின்னர் அவர் தன் தொழுகையை (அப்படியே) தொடரட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு மாஜா. இது அஹ்மதில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

81 “நான் ஆட்டிறைச்சி உண்டதற்காக உளூச் செய்ய வேண்டுமா?“ என்று நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், “நீ விரும்பினால்“ என்று பதிலளித்தார்கள். “நான் ஒட்டக இறைச்சி உண்டதற்காக உளூச் செய்ய வேண்டுமா?“ என்று அந்த மனிதர் கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், “ஆம்“ என்று பதிலளித்தார்கள் என ஜாபிர் இப்னு ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

82 “எவர் மய்யித்(பிரேத்)தைக் குளிப்பாட்டுகிறாரோ அவர் குளிக்கட்டும். எவர் அதைத் தூக்குகிறாரோ அவர் உளூச் செய்து கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், நஸாயீ மற்றும் திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் திர்மிதீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக எந்த ஹதீஸு ம் ஸஹீஹ் எனும் தரத்தை அடையவில்லை என அஹ்மதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

83 அம்ர் இப்னு ஹஸ்கி(ரலி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் எழுதிய கடிதத்தில், “தூய்மையானவர் அன்றி வேறெவரும் குர்ஆனைத் தொடவேண்டாம்“ என்று எழுதியிருந்தார்கள் என அப்துல்லாஹ் இப்னு அபீ பக்ர்(ரலி) அறிவிக்கிறார்.

இது மாலிக்(ரஹ்) ‘முர்ஸல்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நஸாயீ மற்றும் இப்னு ஹிப்பானிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இது மஃலூல் எனும் தரத்தில் உள்ளதாகும்.

84 “நபி(ஸல்) அவர்கள் எந்நேரமும் அல்லாஹ்வை நினைவு கூர்பவர்களாகவே இருந்தார்கள்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

முஸ்லிம். இது புகாரீயில் ‘முஅல்லா‘ எனும் தரத்தில் உள்ளது.

85 நபி(ஸல்) அவர்கள், இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டார்கள் பின் (மீண்டும்) உளூச் செய்யாமல் தொழுதார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

தாரகுத்னீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

86 “மலவாய்க்கு முடிச்சு கண்ணாகும். கண்கள் இரண்டும் தூங்கி விட்டால், முடிச்சு அவிழ்ந்து விடும்“ என்று

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆவியா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், தப்ரானீ

87 இந்த ஹதீஸில் அதிகப்படியாக, "தூங்கி விட்டவர் (செய்த உளூ முறிந்து விடும். ஆகவே அவர் மீண்டும் உளூ செய்து கொள்ளட்டும்" எனும் வாசகம் முஆவியா (ரலி) வாயிலாகவே அபூ தாவூதில் இடம் பெற்றுள்ளது. அலி(ரலி) வாயிலாகவும் இவ்வாறே பதிவாகியள்ளது. மேற்கண்ட இரண்டு அறிவிப்பும் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

88 "எவர் படுத்துத் தூங்கி விடுகிறாரோ, அவர் மீதே உளூ கடமையாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதை அபூதாவூத் முன்கர் என்று குறிப்பிட்டுள்ளார்.

89 "உங்களில் ஒருவர் தொழுகையில் இருக்கும் போது அவரிடம் (ஷைத்தான்) வந்து அவருடைய ஆசனப் பகுதியில் ஊதுகிறான். எனவே அவர் தனக்கு உளூ (முறியாத நிலையிலும்) முறிந்து விட்டதாக எண்ணுகிறார். இவ்வாறு (உங்களில் எவருக்கேனும்) நிகழ்ந்தாலும், அவர் சத்தத்தைக் கேட்காத, அல்லது வாடையை உணராத வரையில் (தொழுகையை விட்டு) திரும்ப வேண்டாம்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். பஜ்ஜார்.

90 இது (89ம் எண் ஹதீஸ்) அப்துல்லாஹ் இப்னு ஜைத்(ரலி) வாயிலாக புகாரீ மற்றும் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

91 இங்கு 89வது ஹதீஸ் போன்றே அபூஹுரைரா(ரலி) வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

92 "உங்களில் எவரிடமேனும் ஷைத்தான் வந்து (சந்தேகத்தைக் கிளப்பி), "உனக்கு உளூ முறிந்து விட்டது" என்று கூறினால், "நீ பொய் சொல்லிவிட்டாய்" என்று அவர் கூறட்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் (ரலி) அறிவிக்கிறார்.

ஹாம்கி. மேலும் இப்னு ஹிப்பானில் "அவர் தன்னுடைய மனதினுள் கூறிக் கொள்ளட்டும்" எனும் வாசகம் சேர்க்கப்பட்டுள்ளது.

மலம், சிறுநீர் கழிக்கும் ஒழுங்குகள்

GO TO CHAPTER INDEX

93 நபி(ஸல்), அவர்கள் மலங் கழிக்கச் சென்றால், தமது மோதிரத்தை (கழற்றி) வைத்து விடுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸயீ, திர்மீதி, மற்றும் இப்னு மாஜா. இது மஃலூஸ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

94 நபி(ஸல்) அவர்கள், மலங்கழிக்கச் செல்லும் போது, "யா அல்லாஹ்! (ஜின்களிலுள்ள) தீய ஆண் வர்க்கத்தை விட்டும், தீய பெண் வர்க்கத்தை விட்டும் உன்னிடம் காவல் தேடுகிறேன்!" என்று கூறுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அபூ தாவூத், திர்மிதீ, இப்னு மாஜா, நஸாயீ மற்றும் அஹ்மத்.

95 நபி(ஸல்), அவர்கள், மலஜலம் கழிக்கச் செல்கையில், நானும் என் போன்ற மற்றொரு சிறுவரும் (தோலால் செய்யப்பட்ட) தண்ணீர் பாத்திரத்தையும், (அடியில் இரும்பு ஒட்டப்பட்ட) சிறுபாத்திரத்தையும் தூக்கிக் கொண்டு செல்வோம். நபி(ஸல்) அவர்கள் தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்வார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

96 நபி(ஸல்) அவர்கள், என்னைத் தண்ணீர்ப் பாத்திரத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு, என்னுடைய பார்வைபடாத தூரம் வரை சென்றார்கள். பின்னர் தன்னுடைய சுயதேவையை நிறைவேற்றிக் கொண்டார்கள் என, முகீரா இப்னு ஷுஅபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

97 "மக்களுடைய வழியிலும், அவர்கள் (தங்கும் மர) நிழலிலும், மலம், ஜலம் கழிப்பதால் ஏற்படும் இரு சாபங்களை அஞ்சிக் கொள்ளுங்கள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்.

98 "நீருற்று, பொதுவழி, மற்றும் நிழலில், மலஜலம் கழிப்பதால் ஏற்படும் மூன்று சாபங்களையும் அஞ்சிக் கொள்ளுங்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத்(ரலி) அறிவிக்கிறார். என்று அபூதாவூதில்

அதிகப்படியாக உள்ளது.

99 “அல்லது தண்ணீர் தேங்கும் இடங்களில்“ என்பது இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக அஹ்மதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவை இரண்டும் ‘ளயீஃப் எனும் தரத்தில் உள்ளவையாகும்.

100 “கனி தரக் கூடிய மரங்களுக்குக் கீழும், ஓடிக் கொண்டிருக்கும் நதியின் கரையிலும் மலஜலம் கழிப்பதை நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள்“ என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

தப்ரானீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

101 “இரண்டு நபர்கள் மலஜலம் கழிக்கச் சென்றால், ஒருவரை ஒருவர் காணாதவாறு மறைத்துக் கொள்ளட்டும். அவர்களில் ஒருவர் மற்றொருவருடன் பேச வேண்டாம். ஏனெனில், இவ்வாறு பேசுவதால் அல்லாஹ் கோபமடைகின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார் என ஜாபிர்(ரழி)அறிவிக்கிறார்.

அஹ்மத். இது இப்னுஸ் ஸகன் மற்றும் இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அது மஃலூஸ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

102 “உங்களில் எவரேனும் சிறுநீர் கழிக்கும் போது, தனது உறுப்பை வலக் கரத்தால் பிடித்துக் கொள்ள வேண்டாம். மேலும் மலஜலம் கழித்து விட்டுத் தனது வலக்கரத்தால் சுத்தம் செய்ய வேண்டாம். இன்னும் பாத்திரத்தில் (தண்ணீர் பருகும் போது அதனுள்) மூச்சு விட வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூகதாதா(ரலி) அறிவிக்கிறார்.

புகாரீ, முஸ்லிம். இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

103 நாங்கள் மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்குவதையும் (பின்னோக்குவதையும்), வலக் கரத்தால் (உறுப்பைப் பிடித்துக் கொண்டு) சுத்தம் செய்வதையும், மூன்று கற்களுக்கும் குறைவானதைக் கொண்டு (மலஜலம் கழித்து விட்டு) சுத்தம் செய்வதையும், விட்டை(சாணம்) மற்றும் எலும்பைக் கொண்டு சுத்தம் செய்வதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என ஸல்மான்(ரழி) அறிவிக்கிறார். முஸ்லிம்

104 “மலம், ஜலம் கழிக்கும் போது நீங்கள் கிப்லாவை, முன்னோக்கவோ, பின்னோக்கவோ செய்யாதீர்கள். மாறாக நீங்கள் கிழக்கிலோ, மேற்கிலோ (கஅபாவை முன்னோக்காத திசையில்) திரும்பிக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ அய்யூப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

105 “எவர் மலஜலம் கழிக்கச் செல்கிறாரோ, அவர் தன்னை மறைத்துக் கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

106 நபி(ஸல்) அவர்கள் மலஜலம் கழித்து விட்டு வரும் போது, “(யா அல்லாஹ்!) நான் உனது மன்னிப்பை வேண்டுகிறேன்“ என்று கூறுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, நஸயீ மற்றும் இப்னு மாஜா.

அபூஹாத்திம், ஹாம்கி இருவரும் இதை ஸஹீஹ் தரத்திலுள்ளது என அறிவித்துள்ளனர்.

107 நபி(ஸல்) அவர்கள் மலஜலம் கழிக்கச் சென்ற போது மூன்று கற்களைக் கொண்டு வருமாறு எனக்குக் கட்டளையிட்டார்கள். எனக்கு இரண்டு கற்கள் மட்டுமே கிடைத்தன. மூன்றாவது கல் கிடைக்கவில்லை. எனவே காய்ந்த ஒரு விட்டைத் துண்டையும் கொண்டு வந்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் அந்த இரண்டு கற்களையும் எடுத்துக் கொண்டு, சாணத்தை விட்டு விட்டார்கள். மேலும், “இது அசுத்தமானது“ என்று கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

இதைத் தவிர்த்து வேறொன்றைக் கொண்டு வா!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அஹ்மத் மற்றும் தாரகுத்னீயில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

108 எலும்பு மற்றும் விட்டையைக் கொண்டு (மலஜலம் கழித்து விட்டு) சுத்தம் செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். மேலும், “நிச்சயமாக அவை இரண்டும் தூய்மைப்படுத்தாது“ என்று கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

109 “சிறுநீர் கழித்து விட்டு சுத்தம் செய்யாமல் இருப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், மண்ணறை

வேதனைகளில் பெரும்பாலனவை அதன் காரணத்தால் தான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ.

110 “மண்ணறையில் கிடைக்கும் தண்டனைகளில் பெரும்பாலனவை சிறுநீர் (கழித்து சுத்தம் செய்யாததால்) தான் ஏற்படுகின்றன“ எனும் வாசகத்தோடு ஸஹீஹ் எனும் தரத்தில் ஹாம்மில் பதிவாகியள்ளது.

111 “நாங்கள் மலம் கழிக்கையில் இடக்காலில் அமர்ந்து கொண்டு, வலக் காலை நிற்க வைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்“ சுராக்கா பின் மாலிக்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

112 “உங்களில் எவரேனும் சிறுநீர் கழித்தால், அவர் தனது உறுப்பை (இடக்கரத்தால்) மூன்று முறை அழுத்தவும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஈசா இப்னு யஸ்தாத் தன் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். இப்னு மாஜா. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

113 “அல்லாஹ் உங்களைப் புகழ்கிறானே (என்ன காரணம்?)“ என்று குபா வாசிகளிடம் நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கவர்கள், “நாங்கள் (மலஜலம் கழித்துவிட்டு) கல்லைக் கொண்டு சுத்தம் செய்தபின், தண்ணீரைக் கொண்டு சுத்தம் செய்கிறோம்“ என்று பதிலளித்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரழி) அறிவிக்கிறார்.

இது புஜ்ஜாரில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் இது அபூ தாவூதிலும் இடம் பெற்றுள்ளது.

114 கல்லைப் பற்றி குறிப்பிடாமல் அபூஹுரைரா(ரலி) அறிவிக்கும் ஹதீஸ், இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குளிப்பு மற்றும் குளிப்பு கடமையானவர்களுக்காக சட்டம்

GO TO CHAPTER INDEX

115 “இந்திரியம் வெளிப்படுவதால் குளிப்பு கடமையாகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

116 “உங்களில் எவரேனும் (உங்கள் மனைவியரின் இரு கைகள், இரு கால்களான) நான்கு கிளைகளுக்கு மத்தில் அமர்ந்து விட்டு, பின்னர் இயங்கி (உடலுறவு கொண்டு) விட்டால் அவர் மீது குளிப்பு கடமையாகி விடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

117 “நீர் வெளிப்படாவிட்டாலும்“ எனும் வாசகம் முஸ்லிமில் கூடுதலாக இடம் பெற்றுள்ளது.

118 ஆண்கள் கனவில் காண்பதைப் போன்றே, பெண்கள் தங்கள் கனவில் காண்பதைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கூறிய போது “அவள் குளிக்க வேண்டும்“ என்று கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

119 “இப்படியும் ஆகுமா?“ என்று உம்மு ஸலமா (வியப்பாகக்) கேட்டதற்கு, நபி(ஸல்) அவர்கள் “ஆம்! அப்படி இல்லை என்றால் எப்படி சாயல் (தாயைக் போன்று) உண்டாகும்?“ என்றார்கள் என்ற வாசகமும் முஸ்லிமில் அதிகப்படியாக காணப்படுகிறது.

120 நபி(ஸல்) அவர்கள் பெருந்துடக்கின் காரணத்தாலும் வெள்ளிக் கிழமையன்றும், இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டதற்காகவும், மய்யித்தைக் குளிப்பாட்டிய காரணத்தாலும் ஆக, நான்கு காரியங்களுக்காகக் குளித்து வந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

இது ஸஹீஹ் எனும் தரத்தில் இப்னு குஸைமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

121 சுமாமா இப்னு உஸால் அவர்களைப் பற்றிக் கூறுகையில், “அவர் இஸ்லாத்தை ஏற்ற போது நபி(ஸல்) அவர்கள் குளிக்கும்படி அவருக்குக் கட்டளையிட்டார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம் மற்றும் அப்துர்ரஸ்ஸாக்

122 “வெள்ளிக் கிழமையன்று குளிப்பது பருவமடைந்த அனைவர் மீதும் கடமையாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அஹ்மத், இப்னு மாஜா, நஸாயீ, திர்மிதீ மற்றும் அபூ தாவூத்

123 “எவர் வெள்ளிக்கிழமையன்று உளூச் செய்கிறாரோ, அவர் சிறப்பான காரியத்தைச் செய்தார். எவர் அன்று

குளித்து விடுகிறாரோ அவர் அதைவிட சிறப்பான காரியம் செய்தார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா இப்ன ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், நஸாயீ, அபூ தாவூத், திர்மிதி மற்றும் இப்னு மாஜா. இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

124 "நபி(ஸல்) அவர்கள் குளிப்பு கடமையல்லாத காலங்களில் எங்களுக்கு குர்ஆன் கற்றுக் கொடுப்பார்கள்" என அலி(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத் நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இங்கு திர்மிதீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இதை திர்மிதீ ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்துள்ளார். இப்னு ஹிப்பான் இதை ஹஸன் தரத்தில் உள்ளது எனக் கருதுகின்றார்.

125 "உங்களில் ஒருவர் மனைவியிடம் சென்று (உடலுறவு கொண்டு) விட்டு, பின்னர் மீண்டும் (உடலுறவு கொள்ள) விரும்பினால் அவர் அவ்விரண்டிற்குமிடையே உளூச் செய்து கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

126 "ஏனெனில், மீண்டும் உளூச் செய்வதால் புத்துணர்ச்சி ஏற்படுகிறது" எனும் வாசகம் ஹாம்மில் அதிகப் படியாக இடம் பெற்றுள்ளது.

127 நபி(ஸல்) அவர்கள் குளிப்புக் கடமையான நிலையில் தண்ணீரை (கையால்) தொடாமலேயே தூங்கி விடுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது மஃலூல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

128 நபி(ஸல்) அவர்கள் கடமையான குளிப்பைக் குளிக்க ஆரம்பித்தால், தம்முடைய கரங்களைக் கழுவுவார்கள். பின்னர் தமது வலக் கரத்தால் இடக் கரத்தின் மீது தண்ணீர் ஊற்றி, தம்முடைய மர்ம உறுப்பைக் கழுவுவார்கள். பின்னர் உளூச் செய்வார்கள். பின்னர் தண்ணீரை எடுத்துத் தம்முடைய கை விரல்களை (தலை) முடியின் அடிப்பகுதியில் நுழைத்து (கோதி), தமது தலை மீது தண்ணீரை மூன்றுமுறை இரண்டு கைகளையும் கூடி அள்ளி ஊற்றுவார்கள். பிறகு உடல் முழுவதும் தண்ணீரை ஊற்றிக் கொள்வார்கள். பின்னர் தமது இரண்டு கால்களையும் கழுவுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

129 புகாரீ, முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் மைமூனா (ரலி) வாயிலாக, "பின்னர், அவர்கள் தம்முடையய மர்ம உறுப்பின் மீது தண்ணீர் ஊற்றி அதைத் தம் இடக் கரத்தால் கழுவுவார்கள். பின்னர் அதை (இடக் கரத்தை) தரையில் தேய்த்துக் கழுவுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

130 புகாரீ, முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் "தரையில் கையைத் துடைத்தார்கள்" என்றும் அதன் இறுதியில் அவர்களிடம் நான் கைக்குட்டையைக் கொண்டு சென்றேன். அதை அவர்கள் மறுத்து விட்டு, தம்முடைய கரத்தால் தண்ணீரை உதறினார்கள்" என்றுள்ளது.

131 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் (முடி அதிகம் உள்ளவளாக இருப்பதால்) என் தலை முடியினைக் கட்டிக் கொள்கிறேன். குளிப்புக் கடமையாகி நான் குளிக்கும் போது என்னுடைய முடியை அவிழ்க்க வேண்டுமா?" என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு அவர்கள், "(வேண்டியது) இல்லை. மூன்று முறை உன் தலையில் தண்ணீர் ஊற்றினால் போதுமானது" என்று கூறினார்கள் என உம்மு ஸலமா(ரழி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பின்படி "மாதவிடாய் குளிப்பிற்கும் என்னுடைய முடியை அவிழ்க்க வேண்டுமா?" என்பதும் சேர்க்கப்பட்டுள்ளது.

132 "குளிப்புக் கடமையானவர்களும், மாதவிடாய் பெண்களும், பள்ளிக்கு வருவதை நான் அனுமதிக்க மாட்டேன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

133 "நானும் நபி(ஸல்) அவர்களும் ஒரு பாத்திரத்தில் (ஒரே நேரத்தில்) கடமையான குளிப்பை குளித்துக் கொண்டிருந்தோம். அப்போது எங்கள் இருவரின் கைகளும் மாறிமாறி (பாத்திரத்தில்) போய் வந்து கொண்டிருந்தன" என ஆயியஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

"எங்கள் கைகள் ஒன்றோடொன்று சந்தித்துக் கொண்டுமிருந்தன" எனும் வாசகம் இப்னு ஹிப்பானில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

134 “நிச்சயமாக ஒவ்வொரு முடியின் அடிப்பாகமும், குளிப்புக்கடமையானதாக உள்ளது. எனவே முடியை (நன்றாகக்) கழுவிக் கொள்ளுங்கள். இன்னும் மேனியை (உடலை) நன்றாகச் சுத்தம் செய்யுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

135 ஆயிஷா(ரலி) வாயிலாக அஹ்மதிலும் இது போன்ற ஹதீஸ் இடம் பெறுகிறது. ஆனால், அங்கு அறிவிப்பாளர் வரிசைத் தொடரில் ஒருவர் யாரென்றே அறியப்படவில்லை.

தயம்மும் GO TO CHAPTER INDEX

136 “எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து (அருட் கொடைகள்) போன்று எனக்கு முன்னர் எவருக்கும் கொடுக்கப்படவில்லை. இன்னும் பூமி முழுவதும் எனக்கு தொழுமிடமாகவும், தூய்மையானதாகவும் ஆக்கப்பட்டு விட்டது. ஒருவர் தொழுகை நேரம் எங்கு வந்துவிட்டாலும் தொழுது கொள்ளலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) அஹ்மத் பைஹகீ

137 “நமக்குத் தண்ணீர் கிடைக்காத பட்சத்தில், அதன் மண் நமக்குத் தூய்மையான தாக்கப்பட்டுள்ளது“ எனும் வாசகம் ஹுதைஃபா(ரலி) வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

138 “(பூமியின்) மண் எனக்காகத் தூய்மையாக்கப்பட்டுள்ளது“ எனும் வாசகம் அலி(ரலி) வாயிலாக அஹ்மதில் இடம் பெற்றுள்ளது.

139 என்னை நபி(ஸல்) அவர்கள் ஒரு தேவையின் நிமித்தம் அனுப்பி இருந்தார்கள். அப்போது எனக்குக் குளிப்புக் கடமையாயிற்று. எனவே கால்நடைகள் மண்ணில் படுத்துப் புரளுவது போன்று நான் மண்ணில் படுத்துப் புரண்டேன். பின்னர் நான் நபி(ஸல்) அவர்களிடம் சென்று நடந்ததைக் கூறினேன். (அதற்கவர்கள்) “நீ உனது கைகளை இவ்வாறு செய்திருந்தாலே போதுமானது“ என்று கூறி, பின்னர் தம் இரு கைகளையும் பூமியில் ஒரேயொருமுறை அடித்தார்கள் பின்னர் மணிக்கட்டு வரையிலான வலக்கரத்தின் மீது இடக் கரத்தால் துடைத்தார்கள். தம் இரு கரங்களின் வெளிப்பக்கத்தையும் தமது முகத்தையும் மஸஹ் செய்தார்கள் என்று அம்மார் இப்னு யாசிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

140 புகாரீயின் மற்றோர் அறிவிப்பில் தமது உள்ளங்கையை பூமியில் அடித்தார்கள். இன்னும் அதில் ஊதினார்கள். பின்னர் தமது முகத்தையும், இரு கைகளையும் மஸஹ் செய்தார்கள் என்றும் இடம் பெற்றுள்ளது.

141 “தயம்மும் என்பது இரண்டு அடிகளாகும். (அவற்றில்) ஒன்று முகத்திற்கும் மற்றொன்று முழங்கை வரையில் இரண்டு கரங்களுக்கும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ. இது மவ்கூஃப் எனும் தரம் பெற்றதாகும்.

142 “பத்து வருடங்களுக்குத் தண்ணீர் கிடைக்காவிட்டாலும் ஒரு முஸ்லிமிற்குத் தூய்மையான மண் உளூவாகும். ஆனால், தண்ணீர் கிடைக்கும் போது, அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளட்டும்! அவன் தன் மேனியைத் தண்ணீர் தீண்டச் செய்யட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

பஜ்ஜார். இது இப்னுன கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்திலும், தாரகுத்னீயில் முர்ஸல் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

143 மேற்கண்ட ஹதீஸ் அபூதர்(ரலி) வாயிலாக திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

144 இரண்டு நபர்கள் பயணித்தவர்கள்: தொழுகையின் நேரம் வந்துவிட்டது. ஆனால் அவர்களிடம் (உளூவிற்கான) தண்ணீர் இல்லை. எனவே அவர்கள் தூய்மையான மண்ணில் தயம்மும் செய்தார்கள். பின்னர் தொழுதார்கள். பின்னர் அந்த (தொழுகையின்) நேரத்திற்குள் இருவருக்கும் தண்ணீர் கிடைத்து விட்டது. ஒருவர் உளூ (செய்து) உடன் (தன்னுடைய தொழுகையை) மீண்டும் தொழுதார். மற்றவர் மீண்டும் தொழவில்லை. பின்னர் இருவரும் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, நடந்ததை விவரித்தனர். மீண்டும் தொழாமலிருந்து விட்டவரை நோக்கி, “நீயே சுன்னத்தை நிலை நிறுத்திவிட்டாய்! உனக்கு உன்னுடைய தொழுகை போதுமானது“ என்றும் (மீண்டும் தொழுத) மற்றவரை நோக்கி “உனக்கு இருமுறை நன்மை உண்டு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்.

145 “நீங்கள் பயணத்திலிருந்தாலோ அல்லது நோய்வாய்ப்பட்டிருந்தாலோ“ என்று தொடங்கும் குர்ஆனின் அந்த

(4:43) வசனத்திற்கு இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் விளக்கமளிக்கையில், “ஒருவர் அல்லாஹ்வுடைய பாதையில் (போரில்) காயப்பட்டு பின் அவருக்குக் குளிப்புக் கடமையாகி தண்ணீர் ஊற்றுவதால் மரணமேற்படும் என தயம்மும் செய்து கொள்ளலாம்“ என விளக்கமளித்தார்கள்.

இது தாரகுத்னீயில் மவ்கூஃப் எனும் தரத்திலும், பஸ்ஸாரில் மர்ஃபூஃ எனும் தரத்திலும், இப்னு குஸைமா மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

146 என்னுடைய மணிக்கட்டுக்கை உடைந்திருந்தது. நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, அதன் மருந்துக்கட்டின் மீது மஸஹ் செய்யுமாறு எனக்கு அலி(ரலி) அறிவிக்கிறார்.

இதை இப்னு மாஜா மிக பலவீனமான அறிவிப்பாளர் தொடருடன் அறிவித்துள்ளார்.

147 தலை உடைக்கப்பட்டிருந்த ஒருவர் குளித்து இறந்து போனார். (நபி(ஸல்) அவர்கள் அவரைப் பற்றிக் கூறுகையில்), “அவர் தனது காயத்திற்கு கட்டுக்கட்டி, அதன் மீது மஸஹ் செய்து, உடல் முழுவதும் மட்டும் குளித்துவிட்டிருந்தாலே போதுமானதாம் இருக்கும்“ என்று கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இதன் அறிவிப்பாளர்களைப் பற்றிய கருத்து வேறுபாட்டினால் இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

148 ஒருவர் ஒரு தயம்முமை கொண்டு ஒரு தொழுகையைத் தொழுவதே. சுன்னத்தாகும். பின்னர் மறு தொழுகைக்கும் தயம்மும் செய்து கொள்ள வேண்டும் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

தாரகுத்னீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாதவிடாய்

GO TO CHAPTER INDEX

149 ஃபாத்திமா பின்து அபீ ஹுபைஷ் அவர்களுக்கு தொடர் உதிரப்போக்கு இருந்து வந்தது. நபி(ஸல்) அவர்கள் அவரிடம், “மாதவிடாய் இரத்தம் கறுப்பாக இருப்பதைக் கொண்டு அறியப்படும். உனக்கு அது ஏற்பட்டால் தொழுகையை விட்டு விடு. அதுவல்லாத மற்றேதும் (இரத்தம்) ஏற்படுமாயின் உளூச் செய்து தொழுது கொள்“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், நஸாயீ. இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. அபூ ஹாதிம் இதை முன்கர் எனக் கருதுகிறார்.

150 மஞ்சள் நிற நீரைப் பார்த்தால் லுஹர் மற்றும் அஸர் தொழுகைக்கு ஒரு முறை குளித்துக் கொள்! மேலும் மக்ரிப் மற்றும் இஷாவிற்கு, ஒரு முறையும் குளித்துக் கொள்! இன்னும் இதற்கிடையில் உளூச் செய்து கொள்! எனும் நபி(ஸல்) அவர்களின் சொல் அஸ்மா பின்த் உமைஸ் வாயிலாக அபூ தாவூதில் இடம் பெற்றுள்ளது.

151 எனக்கு அடிக்கடி கடுமையான தொடர் உதிரப்போக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நான் (இது பற்றி) சட்டம் கேட்க நபி(ஸல்) அவர்களிடம் சென்றேன். “நிச்சயமாக அது ஷைத்தானின் வேலைகளில் ஒன்றாகும். ஆறு அல்லது ஏழு நாட்களை மாதவிடாய் நாட்களாகக் கணக்கிட்டுக் கொள்! பின்னர் குளித்துக் கொள்! நீ தூய்மையாகி விட்டால், இருபத்தி நான்கு அல்லது இருபத்தி மூன்று நாட்கள் தொழுது கொள்! நோன்பும் நோற்றுக் கொள்! நிச்சயமாக இது உனக்குப் போதுமானதாம்விடும். (மற்ற) பெண்கள் எவ்வாறு மாதவிடாய்க் காலத்தைக் கழிக்கின்றார்களோ, அதுபோன்று ஒவ்வொரு மாதமும் செய்து கொள்! லுஹரைப் பிற்படுத்தியும் அஸரை முற்படுத்தியும் தொழ உன்னால் முடியுமானால், நீ தூய்மையடையும் போது குளித்துவிட்டு, லுஹரையும் அஸரையும் (ஒன்றாக இணைத்துத்) தொழுது கொள். பின்னர் மக்ரிபைப் பிற்படுத்தி இஷாவை முற்படுத்தி குளித்து விட்டு இரண்டையும் சேர்த்துத் தொழுது கொள்! பின்னர் ஃபஜ்ருடைய தொழுகையை குளித்து விட்டுத் தொழுது கொள்! இவை இரண்டிலும் இது எனக்கு மிகவும் பிடித்தமானது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹம்னா பின்த்து ஜஹ்ஷ்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், திர்மிதீ, இப்னு மாஜா மற்றும் அஹ்மத்

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்திலும் புகாரீயின் ஹஸன் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

152 உம்மு ஹபீபா பின்த் ஜஹ்ஷ்(ரலி), நபி(ஸல்) அவர்களிடம் (தொடர்ந்து) உதிரப் போக்கு ஏற்படுவதைப் பற்றி முறையிட்டார்கள். அதற்கு, “உனக்கு (மாதவிடாய்) இரத்தம் நிற்கும் வரை தொழுகையை நிறுத்திக் கொள்! பின்னர் குளித்துக் கொள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே அவர்கள் ஒவ்வொரு தொழுகைக்கும் குளித்துக் கொண்டிருந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

153 உம்மு ஹபீபா பின்த்து ஜஹ்ஷ் (ரலி) அவர்களிடம் “நீ ஒவ்வொரு தொழுகைக்கும் உளூச் செய்து கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புகாரீயின் மற்றோர் அறிவிப்பில் காணப்படுகிறது.

154 “நாங்கள் (மாதவிடாயிலிருந்து) தூய்மையடைந்த பின் மண்ணின் நிறம் மற்றும் மஞ்சள் நிற (இரத்த)த்தைக் கணக்கில் கொள்ள மாட்டோம்“ என்று உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார்.

புகாரீ, அபூ தாவூத். இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

155 “நிச்சயமாக யூதர்கள் மாதவிடாயான பெண்களுடன் (சேர்ந்து) உண்ண மாட்டார்கள். நீங்கள் உடலுவைத் தவிர்த்து (விரும்பியதை) எல்லாம் செய்து கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

156 நான் மாதவிடாயாக இருக்கும் போது நபி(ஸல்) அவர்கள் என் கீழ் அங்கியைக் கட்டச் சொல்வார்கள். நான் கட்டிக் கொள்வேன். பின்னர் என்னுடைய உடலோடு (தம்மைப்) பிணைத்துக் கொள்வார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

157 தன்னுடைய மனைவி மாதவிடாயாக இருக்கும் போது அவளுடன் உடலுறவு கொள்வோரைப் பற்றிக் கூறுகையில், “அவர் ஒரு தீனார் அல்லது அர தீனார் தர்மம் செய்யட்டும்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், திர்மிதீ, அபூ தாவூத், நஸாயீ, இப்னு மாஜா. இது ஹாம்கி மற்றும் இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

158 “பெண்ணுக்கு மாதவிடாய் வந்து விட்டால் அவள் தொழுவதுமில்லை மற்றும் அவள் நோன்பு நோற்பதுமில்லை அல்லவா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். (நீண்ட ஹதீஸின் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

159 நாங்கள் ஸரி∴ப எனும் இடத்தை அடைந்ததும், எனக்கு மாதவிடாய் ஏற்பட்டு விட்டது. “நீ தூய்மையாகும் வரை தவா∴ப்பை (பைத்துல்லாஹ்வை வலம் வருவதைத்) தவிர்த்து ஹாஜிகள் செய்கின்ற மற்ற அனைத்தையும் செய்து கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நீண்ட ஹதீஸின சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்.

160 “தனது மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது ஓர் ஆணுக்கு (இல்லறத்தில்) எதை இஸ்லாம் அனுமதித்துள்ளது?“ என்று நான் கேட்டதற்கு, “ஆடைக்கு மேல் அனைத்தும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

161 “நபி(ஸல்) அவர்களது காலத்தில் பெண்கள் (நி∴பாஸ் என்னும்) பிரசவ கால உதிரப்போக்குக்குப் பின்னர் நாற்பது நாட்கள் தனித்திருப்பார்கள்“ என உம்மு ஸலமா(ரழி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், அஹ்மத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

162 அபூ தாவூதின் மற்றோர் அறிவிப்பில், நபி(ஸல்) அவர்கள் நி∴பாஸு டைய காலத்தில் விட்டுவிட்ட தொழுகையை களாச் செய்யுமாறு பெண்களுக்குக் கட்டளையிடவில்லை என்பதும் இடம் பெறுகிறது. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FIRST CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - தொழுகைப்பகுதி

- தொழுகையின் நேரம்
- அதான் (பங்கு)
- தொழுகையின் நிபந்தனைகள்
- தொழுது கொண்டிருப்பவர் பயன்படுத்தும் தடுப்பு
- உள்ளச்சத்துடன் தொழும்படி தூண்டுதல்
- பள்ளிவாசல்கள்
- தொழுகை முறை
- சஜ்தா சஹ்வு, சஜ்தத்துத் திலாவத், சஜ்தத்துஷ்ஷு க்ரு ஆகியவற்றின் விளக்கம்
- உபரியான தொழுகைகள்
- ஜமாஅத் தொழுகை மற்றும் இகாமத்
- பயணி மற்றும் நோயாளிகளின் தொழுகை
- ஜு ம்ஆத் தொழுகை
- அச்சத்தின் போது தொழும் தொழுகை
- இருபெருநாட்கள் தொழுகை
- கிரகணத் தொழுகை
- மழை வேண்டித் தொழுகை
- ஆடைகள்

தொழுகையின் நேரம்

GO TO CHAPTER INDEX

163 “லுஹர் (தொழுகை) உடைய நோய் சூரியன் (உச்சியிலிருந்து) சாய்ந்ததிலிருந்து, ஒரு மனிதனின் நிழல் அவனுக்குச் சமமாக ஆகி, அஸருடைய நேரம் வராத வரையிலாகும். இன்னும் அஸர் (தொழுகை) உடைய நேரம் சூரியன் மஞ்சள் நிறத்தையடையாத வரையாகும். இன்னும் மக்ரிப் (தொழுகை) உடைய நேரம் செவ்வானம் (சூரியன்) மறையாத வரையாகும். மேலும், இஷா (தொழுகை) உடைய நேரம் நள்ளிரவு வரையாகும். இன்னும் சுபுஹு (தொழுகையு)டைய நேரம் கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியன் உதயமாகும் வரையிலாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

164 “அஸர் (தொழுகை) உடைய நேரம் சூரியன் சுத்த வெள்ளையாக இருக்கும் வரை“ என்று புரைதா(ரலி) வாயிலாக முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

165 இன்னும் (முஸ்லிமில்), “சூரியன் (சற்று) உயர்ந்து இருக்கும் வரை“ என்று அபூ மூஸா(ரலி) வாயிலாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

166 நபி(ஸல்) அவர்கள் அஸர் தொழுவார்கள். பின்னர் சூரியன் வெளிச்சமாக உள்ள நிலையில் நாங்கள் எங்களுடைய நகரின் மறு ஓரத்தில் (உள்ள) தம்முடைய வீட்டிற்குத் திரும்பச் சென்று விடுவோம். இன்னும் இஷா தொழுகையைப் பிற்படுத்துவதை விரும்புகிறவர்களாகவும், இஷாவிற்கு முன் தூங்குவதையும் இஷாவிற்குப் பின்

(வீண் பேச்சுக்கள்) பேசுவதையும் வெறுப்பவர்களாகவும் இருந்தார்கள். நாங்கள் எங்கள் அருகில் அமர்ந்திருப்பவரை அறிய முடிகின்ற வேளையில் தொழுகையை முடித்துக் கொள்வார்கள். இன்னும் நபி(ஸல்) அவர்கள் (ஃபஜ்ர் தொழுகையில்) அறுபது முதல் நூறு வசனங்கள் வரை ஓதுவார்கள் என பர்ஸா அஸ்லமி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

167 நபி(ஸல்) அவர்கள் இஷா தொழுகையை சில நேரங்களில் விரைவாகவும், சில நேரங்களில் தாமதமாகவும் தொழுவார்கள். மக்கள் விரைவாக ஒன்று திரளக் கண்டால் விரைவாகவும், தாமதமாக வரக் கண்டால் தாமதமாகவும் (இஷாத்) தொழுவார்கள். இன்னும் ஃபஜ்ர் தொழுகையை நபி(ஸல்) அவர்கள் இருட்டில் தொழுவார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

168 நபி(ஸல்) அவர்கள் கிழக்கு வெளுத்ததும் ஃபஜர் தொழுகையை தொழுவார்கள் (அப்போது) மக்கள் ஒருவரையொருவர் (இருளின் காரணமாக) அறிய முடியாத நிலையில் இருப்பார்கள் என அபூமூஸா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

169 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் மக்ரிப் தொழுவோம். (அதன் பின்) எங்களில் எவராவது சென்றால் அவர் (தன்னால் வீசப்பட்ட) தமது அம்பின் இலக்கினை (அந்நேர வெளிச்சத்தில்) பார்ப்பர் என ராஃபிஃ இப்னு கதீஜ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

170 இரவின் பெரும் பகுதி, கழியும் அளவிற்கு இஷா தொழுகையை நபி(ஸல்) அவர்கள் பிற்படுத்தி பின்னர் சென்று ஒரு இரவுத் தொழுகை நடத்திவிட்டு "என்னுடைய சமுதாயத்திற்குச் சிரமம் ஏற்படும் என நான் அஞ்சவில்லை எனில் இதுவே இஷாவுடைய நேரமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

171 "கடும் வெப்ப காலத்தில், குளிர்ந்த நேரத்தில் (தொழுகையைத்) தொழுங்கள். ஏனெனில் நிச்சயமாக, கடுமையான வெப்பம் நரகத்தின் பெருமூச்சினால் உண்டாவதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

172 "பஜ்ருடைய நேரம் வந்து விட்டது என்று தெளிவாகத் தெரிந்தபின் தொழுங்கள். ஏனெனில், நிச்சயமாக அது உங்களுக்கு மகத்தான கூலியைப் பெற்றுத் தரும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ராஃபி இப்னு கதீஜ்(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத், திர்மிதீ, இப்னு மாஜா, நஸாயீ மற்றும் அஹ்மத். இது திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

173 "எவர் சூரிய உதயத்திற்கு முன் ஃபஜ்ருடைய ஒரு ரக்அத்தை அடைந்து விட்டாரோ, அவர் ஃபஜ்ர் தொழுகையை (அதன் நேரத்தில்) அடைந்து விட்டார். இன்னும் எவர் அஸருடைய ஒரு ரக் அத்தை சூரியன் மறைவதற்குள் அடைந்து விட்டாரோ அவர், அஸர் தொழுகையை (அதன் நேரத்தில்) அடைந்து விட்டார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

174 முஸ்லிமில் ஆயிஷா(ரலி) வாயிலாக இதே போன்று ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. ஆனால் அங்கு ரக்அத்திற்குப் பதிலாக ஸஜ்தா என்று பதிவாகியள்ளது. பின்னர் ஸஜ்தா என்பது ரக்அத்(தில் உள்ளது) எனவும் ஆயிஷா(ரலி) கூறியதாக உள்ளது.

175 "ஃபஜ்ருக்குப் பின்னர் சூரியன் உதயமாகும் வரையிலும், அசருக்குப் பின்னர் சூரியன் மறையும் வரையிலும் எந்தத் தொழுகையும் இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை நான் செவியுற்றேன் என அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

ஃபஜ்ருத் தொழுகைக்குப் பின் எந்தத் தொழுகையுமில்லை என்று முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

176 சூரியன் ஒளிர்ந்து கொண்டு, உதயமாம் வரும் வேளையில் அது உயரும் வரையிலும், இன்னும் சூரியன் உச்சியில் நின்று சாயும் வரையிலும், இன்னும் சூரியன் மறைவதற்காகத் தாழும் (மறையும்) வேளையிலும் ஆகிய மூன்று நேரங்களில் நாங்கள் தொழுவதையும், எங்களில் இறந்தவர்களை அடக்கம் செய்வதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்து வந்தார்கள் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

177 தொழுவது தடை செய்யப்பட்ட வேளைகளில் இரண்டாவது வேளை(யான சூரியன் உச்சி சாயும் நேரம்) பற்றிய செய்தி ஷாஃபிஈயில் அபூஹுரைரா(ரலி) அவர்கள் வாயிலாக ளயீஃப் எனும் தரத்தில் இடம் பெற்றுள்ளது. அதில் "ஜும்ஆ நாளைத் தவிர" என்னும் வாசகம் கூடுதலாக இடம் பெற்றுள்ளது.

ஜும்ஆ நாளில் மட்டும் உச்சிசாயும் நேரத்தில் தொழுவது தடை செய்யப்படவில்லை என்பது இதிலிருந்து தெரியவருகின்றது. (சுபுலுஸ் ஸலாம்)

178 இதே போன்று அபூ கதாதா(ரலி) வாயிலாக அபூ தாவூதிலும் பதிவாகியள்ளது.

179 “அப்து மனா∴ப் உடைய மக்களே! இரவாயினும், பகலாயினும் எந்நேரத்திலும் இந்த இறையில்லத்தில் யாரும் தொழுவதையோ, வலம் வருவதையோ தடுக்காதீர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜுபைர் பின் முத்இம்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

180 “ஷ∴பக் என்பது செவ்வானமாகும்“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

தாரகுத்னீ. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

181 “பஜ்ர் இரண்டிருக்கிறது, ஒரு ∴பஜ்ரில் சாப்பிடுவது தடுக்கப்பட்டும், தொழுவது அனுமதிக்கப்பட்டும், மற்றொரு ∴பஜ்ரில் தொழுவது தடை செய்யப்பட்டும், சாப்பிடுவது அனுமதிக்கப்பட்டும் உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு குஸைமா, ஹாம்கி. இது இரண்டிலும் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

182 நிச்சயமாக அது ஓரத்தில் நீண்டதாகச் செல்வதால் (ஸஹர்) சாப்பாடு தடுக்கப்பட்டுள்ளது. மற்றொன்று ஓநாயின் வால் போன்றுள்ளது என்று ஹாகமில் ஜாபிர்(ரலி) வாயிலாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

183 “செயல்களில் சிறந்தது (தொழுகையை) அதன் நேரத்தில் தொழுவதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்.

இது திர்மிதீ மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் புகாரீ மற்றும் முஸ்லிமில் உள்ளது.

184 “(தொழுகையின்) ஆரம்ப நேரம் அல்லாஹ்வின் திருப்தி கிடைக்கும் நேரமாகும். நடுநேரம் அல்லாஹ்வின் அருள் கிடைக்கும் நேரமாகும், இறுதி நேரம் அல்லாஹ்வின் மன்னிப்புக் கிடைக்கும் நேரமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ மக்தூரா(ரலி) அறிவிக்கிறார்.

இது மிகவும் (பலவீனம்) ளயீ∴ப் எனும் தரத்தில் தாரகுத்னீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

185 மேற்கண்ட ஹதீஸ் இப்னு உமர் வாயிலாக திர்மிதீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதுவும் ளயீ∴ப் எனும் தரத்தில் தான் உள்ளது.

186 “∴பஜ்ருடைய வேளை வந்த பின் (கடமையான) இரண்டு ரக்அத்தைத் தவிர்த்து வேறு எந்த (ந∴பிலான) தொழுகையுமில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

∴பஜ்ருடைய வேளை உதயமான பின் ∴பஜ்ருடைய (கடமையான) இரண்டு ரக்அத்தைத் தவிர்த்து நபி(ஸல்) வேறு தொழுகையே இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் (∴பஜ்ருடைய வேளை வந்த பின் ந∴பிலான தொழுகை இல்லை) வந்த பின் ந∴பிலான தொழுகை இல்லை) என உம்மு ஸலமா (ரலி) வாயிலாக அப்துர் ரஸ்ஸாக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், ∴பஜ்ருடைய கடமையான இரு ரக் அத்துக்களுக்குக்கும் முன்பாக இரு ரக்அத்துகள் சுன்னத்தான தொழுகை உண்டு. ஆகவே ∴பஜ்ருடைய வேளை உதயமான பின் சுன்னத்தான இரு ரக்அத்துகளுடன் ∴பஜ்ருடைய இரண்டு ரக்அத்துகள் கடமையான தொழுகையைத் தவிர வேறு தொழுயையில்லை“ என்று தான் இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். (சுபுலுஸ்ஸலாம்)

187 அம்ர் இப்னு ஆஸ் வாயிலாக தாரகுத்னியிலும் மேற்கண்ட ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

188 நபி(ஸல்) அவர்கள் (பள்ளியில்) அஸர் தொழுது விட்டு என்னுடைய வீட்டினுள் வந்து இரண்டு ரக்அத்துக்கள் தொழுதார்கள். நான் அதைப் பற்றி அவர்களிடம் கேட்டதற்கு, “நான் லுஹருக்குப் பின் இரண்டு ரக்அத் தொழ மறந்து விட்டமையால் இப்போது தொழுதேன்“ என்று கூறினார்கள். அதற்கு “எங்களுக்கு இவ்வாறு தவறி விட்டால் நாங்களும் இதைக் களாச் செய்யலாமா?“ என்று நான் கேட்டதற்கு “கூடாது“ என்று 188 நபி(ஸல்)

அவர்கள் பதிலளித்தார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

189 ஆயிஷா(ரலி) வாயிலாக அபூ தாவூதில் 188வது ஹதீஸ் போன்றே உள்ளது.

அதான் (பாங்கு) GO TO CHAPTER INDEX

190 நான் தூங்கிக் கொண்டிருந்த போது என்னிடம் (கனவில்) ஒரு மனிதர் வந்தார். "அல்லாஹ் அக்பர், அல்லாஹு அக்பர்" என்று பாங்கைச் சப்தமிட்டு இரண்டிரண்டு முறை (கூறுமாறு) கற்றுக் கொடுத்தார். காலையானதும், நான் நபி(ஸல்) அவர்களிடம் (ஓடி) வந்தேன். (அவர்களிடம் நான் கண்ட கனவை எடுத்துரைத்த போது)) அவர்கள், "நிச்சயமாக இது மெய்யான கனவு தான்" என்று கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஜைது(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத். இது திர்மிதீ மற்றும் இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

191 ஃபஜ்ர் தொழுகையின் பாங்கில் "தூக்கத்தை விடத் தொழுகையே மேலனாது" என்ற பிலால்(ரலி) அவர்களின் சொல்லை பற்றிய செய்தி மேற்கண்ட ஹதீஸின் இறுதியில் அதிகப்படியாக அஹ்மதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

192 "முஅத்தின் (பாங்கொலிப்பவர்) 'ஹய்ய அலஸ் ஸலாஹ்' என்று கூறும் போது, 'அஸ்ஸலாத்து கைரும் மினன்னவ்கி' என்று கூறுவது நபிவழிக்கு உட்பட்டது என அனஸ்(ரலி) அவர்கள் கூறியதாக இப்னு குஸைமாவில் வந்துள்ளது.

193 "நபி(ஸல்) அவர்கள் பாங்கை இரண்டிரண்டு முறை உரக்கச் சப்தமிட்டுக் கூறுமாறு தனக்குக் கற்றுக் கொடுத்தார்கள்" என அபூ மக்தூரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

ஆனால் முஸ்லிம்(ரஹ்), "தக்பீரை" ஆரம்பத்தில் இரண்டு முறை மட்டும் பதிவு செய்துள்ளார். அல்லாஹு அக்பர் என்பது நான்கு முறை என்று அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, நஸாயீ மற்றும் இப்னு மாஜா ஆகியோர் பதிவு செய்துள்ளனர்.

194 அதான் (பாங்கு) உடைய வாக்கியங்களை இரண்டிரண்டு முறையும் இகாமத்தில் 'கத் காமதிஸ் ஸலாஹ்' என்பதைத் தவிர்த்து மற்றவற்றை ஒவ்வொரு முறையும் கூற வேண்டுமென பிலால்(ரலி) அவர்களுக்கு கட்டளையிடப்பட்டதென அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

195 நஸயீயில் பிலால்(ரலி) அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் என்றுள்ளது.

196 தமது இரு கட்டை விரல்களையும் தம் இரு காதுகளில் வைத்தபடி பிலால்(ரழி) அவர்கள் பாங்கு சொல்வதை நான் பார்த்தேன். அப்போது நான் அவர்களுடைய வாய் இங்குமங்குமாக (வலப்பக்கமும் இடப்பக்கமுமாக)ச் சென்றதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தேன். இது அஹ்மத் மற்றும் திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

197 "அவர் தம்முடைய இரு காதுகளிலும் தமது இரு விரல்களை வைத்துக் கொண்டார்" என்று இப்னு மாஜாவில் உள்ளது.

198 " 'ஹய்ய அலஸ் ஸலாஹ்' என்று கூறும் போது, அவர் வலப்பக்கமும், இடப்பக்கமும் தமது கழுத்தைத் திருப்பினார். ஆனால் (கழுத்தை) முழுமையாகத் திருப்பவில்லை" என்று அபூ தாவூதில் உள்ளது. இந்த ஹதீஸ் புகாரீ, முஸ்லிமிலும் இடம் பெற்றுள்ளது.

199 நபி(ஸல்) அவர்களுக்கு அவருடைய (பிலால்-ரலி) குரல் இனிமையானதாக இருந்ததால், அவருக்கு பாங்கைக் கற்றுக் கொடுத்தார்கள் என அபூ மஹ்தூரா(ரலி) அறிவிக்கிறார்.

200 நான் நபி(ஸல்) அவர்களுடன் ஓரிரு முறை (மட்டும்) அல்ல் பலமுறை இரு பெரு நாட்கள் தொழுகையையும் பாங்கு மற்றும் இகாமத் இல்லாமல் தொழுதிருக்கிறேன் என ஜாபிர் இப்னு ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

201 இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாகவும், பிறர் வாயிலாகவும் இதே போன்று ஹதீஸ் புகாரீ, முஸ்லிம் இரண்டிலும் இடம் பெற்றுள்ளது.

202 ஒருமுறை அனைவரும் ஃபஜ்ர் தொழுகையை விட்டு விட்டுத் தூங்கியதைப் பற்றிக் குறிப்பிடுகையில், "பிலால்(ரலி) பாங்கு கூறினார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் வழக்கமாக ஒவ்வொரு நாளும் தொழ வைப்பது

போன்றே தொழ வைத்தார்கள்“ என அபூ கதாதா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

203 “நபி(ஸல்) அவர்கள் முஸ்தலி∴பாவிற்கு வந்த போது ஒரு பாங்கு மற்றும் இரு இகாமத்துகளுடன் மக்ரிப் மற்றும் இஷாவை தொழ வைத்தார்கள்“ என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

204 “நபி(ஸல்) அவர்கள் மக்ரிப் மற்றும் இஷாவை ஒரே இகாமத்துடன் சேர்த்து தொழுதார்கள்“ என்று இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

“ஒவ்வொரு தொழுகைக்கும் ஓர் இகாமத்துடன்“ என்று அபூ தாவூதில் அதிகப்படியாக உள்ளது. அபூதாவூதின் மற்றோர் அறிவிப்பில் எந்த ஒன்றுக்கும் அவை இரண்டிற்குமேல் பாங்கு சொல்லப்படவில்லை என்றுள்ளது.

205 “நிச்சயமாக இரவில் பிலால்(ரலி) பாங்கு சொல்வார். (அப்போது(ஸஹர்) உண்ணுவதை நிறுத்த வேண்டாம்). அப்துல்லாஹ் இப்னு உம்மி மக்தூம் பாங்கு சொல்லும் வரை உண்ணுங்கள்“ பருகுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்துல்லாஹ் இப்னு உம்மி மிக்தூம் பார்வையற்றவர். எனவே அவரிடம் “விடிந்து விட்டது, என்று கூறப்படாத வரை பாங்கு சொல்ல மாட்டார்“ என இப்னு உமர் மற்றும் ஆயிஷா(ரலி) அறிவிக்கின்றனர். புகாரீ, முஸ்லிம்

206 ஒரு முறை பிலால்(ரலி) ∴பஜ்ருக்கு (அதன் நேரம் வரும்) முன்பாக பாங்கு சொல்லிவிட்டார். அப்போது நபி(ஸல்) அவர்கள் திரும்பிச் சென்று, “அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக நான் தூங்கி விட்டேன் என்று அறிவியுங்கள்“ என அவருக்குக் கட்டளையிட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

207 “நீங்கள் பாங்கின் அழைப்பைச் செவியுற்றால், முஅத்தின் கூறுவது போன்றே கூறுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

208 முஆவியா(ரலி) வாயிலாக புகாரீயிலும் இதுபோன்ற ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

209 ‘இரண்டு ஹய்யா அலா‘ வைத் தவிர பாங்கின் மற்ற சொற்கள் ஒவ்வொன்றையும் முஅத்தின் கூறுவதைப் போன்றே கூறுவதற்குள்ள சிறப்பைக் குறித்து உமர்(ரலி) அவர்கள் கூறிய (நபிவழிச்) செய்தியொன்று முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

210 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய கூட்டத்தார்க்கு என்னை இமாமாக ஆக்குங்கள்! என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். (அதற்கு) “நீ தான் அவர்களின் இமாம்! நீ அவர்களில் மிகவும் பலவீனமானவரை கவனத்தில் கொள். (அவருக்குத் தகுந்தாற் போல் சுருக்கமாகத் தொழ வை) இன்னும் பாங்கு சொல்வதற்கு (உலகில்) கூலி வாங்காத முஅத்தினை நியமித்துக் கொள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உஸ்மான் இப்னு அபில் ஆஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், திர்மிதீ, நஸாயீ மற்றும் அபூதாவூத். இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

211 “தொழுகை(யின் நேரம்) வந்துவிட்டால், உங்களில் ஒருவர் (பாங்கின் மூலம் தொழுகைக்கு) உங்களை அழைக்கட்டும்“ என்ற நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மாலிக் இப்னு ஹுவைரிஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அஹ்மத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் அபூ தாவூத், இப்னு மாஜா

212 “பாங்கை நிறுத்தி நிறுத்தியும்! இகாமத்தை வேகவேகமாகவும் சொல்! இன்னும் பாங்கிற்கும், இகாமத்திற்குமிடையில், சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் ஒருவர், சாப்பிட்டு முடிக்கும் அளவிற்கு இடை வெளி விடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

213 “உளூச் செய்தவரை தவிர (வேறெவரும்) பாங்கு சொல்ல வேண்டாம்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

214 “பாங்கு சொல்பவரே இகாமத்தும் சொல்லட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜியாத் இப்னு ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இதுவும் ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது உள்ளது.

215 நான் (பாங்கு சொல்ல வேண்டுமென) விரும்பிக் கொண்டிருந்த நிலையில் பாங்கு சொல்லும் முறையைக் கனவில் கண்டேன். (நான் அதைத் தெரிவித்தவுடன் அதை பிலால்(ரலி) அவர்களுக்குக் கற்றுத் தரச் சொல்லி

உத்தரவிட்டு விட்டு என்னிடம் நபி(ஸல்) அவர்கள், “நீ இகாமத் சொல்“ என்று சொன்னார்கள். திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

217 அலீ(ரலி) அவர்கள் வாயிலாக இது பைஹகீயிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

218 ‘பாங்கிற்கும், இகாமத்திற்கும் இடைப்பட்ட நேரத்தில் துஆ (கேட்டால்) அது நிராகரிக்கப்படுவதில்லை‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். நஸாயீ. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

219 “பாங்கை செவியேற்ற பின்பு எவர் “முழுமையான இந்த அழைப்பிற்குச் சொந்தக்காரனே! நிலையான தொழுகைக்கும் உரியவனே! முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு வஸீலா எனும் பதவியையும் சிறப்பையும் வழங்குவாயாக! நீ அவர்களுக்கு வாக்களித்த புகழுக்குரிய இடத்தில் எழுப்புவாயாக!“ என்று (பாங்கு துஆ கூறி) பிரர்த்திக்கின்றாரோ அவருக்கு என்னுடைய பரிந்துரை (உறுதியாக) ஆகுமானதாகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார். என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், திர்மிதீ, நஸாயீ மற்றும் இப்னுமாஜா.

தொழுகையின் நிபந்தனைகள் GO TO CHAPTER INDEX

220 “உங்களில் எவருக்கேனும் தொழுகையில் காற்று பிரிந்தால் அவர் தொழுகையை விட்டு விட்டு உளூச் செய்து கொண்டு பின்னர் தொழுகையை திரும்ப தொழட்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ இப்னு தல்க்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், நஸாயீ, இப்னு மாஜா, திர்மிதீ மற்றும் அபூ தாவூத். இது ஸஹீஹ் எனும் தரத்தில் இப்னு ஹிப்பானில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

221 “பருவமடைந்த பெண்களின் தொழுகை (கழுத்தை மறைக்கும் முக்காட்டுத் துணியின்றி ஏற்றுக் கொள்ளப்படாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

திர்மிதீ, அபூ தாவூத், இப்னு மாஜா மற்றும் அஹ்மத். இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

222 தொழுகையில் உடை விசாலமாக இருப்பின் அதனால் (உடல் முழுவதையும்) போர்த்திக் கொள்ளுமாறு தன்னிடம் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமில், அதன் இரு ஓரங்களையும் ஒன்றுக் கொன்று குறுக்காக (தோளில்) போட்டுக் கொள். அது இறுக்கமானதாக இருந்தால் அதைக் கீழ் அங்கியாக அணிந்து கொள்“ என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அதிகப்படியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

223 “உங்களில் எவரும் தனது தோளில் துணி இல்லாமல் தொழ வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

224 “கீழாடையில்லாமல் மற்றும் தலைக் கழுத்தை மறைக்கும் முழு நீள அங்கியடனும் முகத்திரையுடனும் பெண் தொழலாமா?“ என்று நான் கேட்டதற்கு, “அங்கி கீழே வரை நீண்டு பாதங்களை மறைத்துக் கொண்டால் (தொழலாம்)“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது மவ்கூஃப் எனும் தரம் பெற்றுள்ளது.

225 (மிகவும்) இருட்டான ஓர் இரவில், நாங்கள் நபி(ஸல்) அவர்களுடனிருந்தபோது எங்களுக்கு கிப்லா(திசையைக் கண்டறிவது) கடினமாம் விட்டது. (ஒரு திசையை நோக்கி) நாங்கள் தொழுது விட்டோம். பின்னர் சூரியன் உதயமான பின்னர் பார்க்கும் போது நாங்கள் கிப்லா அல்லாத திசையில் தொழுது விட்டோம் என்பது தெரிய வந்தது. அப்போது தான், “நீங்கள் உங்கள் முகங்களை எங்கு திருப்பினும் அங்கு இறைவனின் முகத்தை அடைவீர்கள்“ (2:115) எனும் வசனம் அருளப்பட்டது என ஆமிர் இப்னு ரபீஆ(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

226 “கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையில் கிப்லா உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. “இது ‘கவீ தரத்திலுள்ள பலமான ஹதீஸ்“ என புகாரீ கூறியுள்ளார்.

227 “ஒட்டகம் எத்திசையில் சென்றதோ அத்திசையை நோக்கி, அதன் மீது அமர்ந்த வண்ணம் நபி(ஸல்) அவர்கள் தொழுவதை நான் பார்த்துள்ளேன்“ என ஆமிர் இப்னு ரபீஆ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“நபி(ஸல்) அவர்கள் தம் தலையின் சமிக்ஞை மூலம் இவ்வாறு தொழுதார்கள். ஆனால் ஃபர்ளு தொழுகையை இவ்வாறு வாகனத்தின் முதுகில் அமர்ந்த படி தொழ மாட்டார்கள்“ என்னும் வாசகம் புகாரீயில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

228 நபி(ஸல்) அவர்கள் பயணத்திலிருக்கும்போது நஃபில் தொழ நாடினால் தமது ஒட்டகத்தை கிப்லா திசையை நோக்கித் திருப்பி, தக்பீர் கூறுவார்கள். பின்னர் ஒட்டகம் எத்திசை நோக்கிச் செல்கிறதோ, அதே திசையில் தொழுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

229 “இறந்தவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் (கப்ரு) மற்றும் குளியலறையைத் தவிர, பூமி முழுவதுமே (அல்லாஹ்வைத்) தொழும் இடம் (மஸ்ஜித்) ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

230 1. குப்பைக் கிடங்கு 2. பிராணிகளை அறுக்கும் இடம் 3. அடக்கத்தலம் 4. பொதுவழி 5. குளியலறை 6. ஒட்டகம் கட்டுமிடம் 7. கஅபத்துல்லாஹ்வின் முதுகு (கூரை) ஆகிய ஏழு இடங்களில் தொழ வேண்டாமென நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

231 “அடக்கத் தலங்களின் அருகே தொழாதீர்கள்“ அதன் மீது உட்காரவும் செய்யாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என அபூ மர்ஸத் அல் கனவி(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

232 “உங்களில் எவரேனும் காலணிகளுடன் பள்ளிக்கு வந்து அவற்றில் ஏதேனும் அசுத்தத்தைக் கண்டால், அதனைத் தூய்மைப்படுத்திக் கொண்டு அவற்றுடன் தொழுது கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

233 “உங்கள் காலுறைகளில் அசுத்தம் பட்டுவிட்டால் (அடுத்து வரும்) மண் அதை தூய்மையாக்கிவிடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

234 “தொழுகையில் தஸ்பீஹ், அல்லாஹ் அக்பர் என்று கூறுதல், குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றைத் தவிர்த்து வேறெதையும் மக்கள் பேசுவது சரியல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆவியா பின் ஹகம்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

235 நபி(ஸல்) அவர்களின் காலத்தில் நாங்கள் தொழுகையில் பேசிக் கொண்டிருந்தோம். நாங்கள் எங்கள் தேவையைக் குறித்து ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்வோம். அப்போது தொழுகைகளைப் பேணிக் கொள்ளுங்கள் நடுத் தொழுகையையும் பேணுங்கள். மேலும் அல்லாஹ்வின் முன்பு (முற்றிலும்) கீழ்ப்படிந்தவர்களாக நில்லுங்கள். (2:237) என்னும் இறைவசனம் அருளப்பட்டு, தொழுகையில் மௌனமாக இருக்கும்படி எங்களுக்கு உத்தரவிடப்பட்டது. தொழுகையில் பேச வேண்டாம். என எங்களுக்கு நபி(ஸல்) அவர்களால் தடைவிதிக்கப்பட்டது என ஜைத் இப்னு அர்கம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம். இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

236 “(தொழுகையில் இமாமுக்கு மறதி ஏற்படும் போது) ஆண்கள், “சுப்ஹானல்லாஹ்“ என்று கூறவேண்டும், பெண்கள் கையைத் தட்ட வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம். முஸ்லிமில் தொழுகையில் என்பது அதிகப்படியாக உள்ளது.

237 தொழுகையில் நபி(ஸல்) அவர்களின் நெஞ்சில் அழுகையிலினால் சட்டி கொதிக்கும் போது ஏற்படுவது போன்ற சத்தம் ஏற்படுவதை நான் பார்த்துள்ளேன் என அப்துல்லாஹ் பின் ஷிக்கீர் தன் தந்தை வழியாக அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

238 நபி(ஸல்) அவர்களிடம் நான் செல்வதற்கு எனக்கு (தினமும்) இரண்டு நேரங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தன. நான் அவர்களிடம் செல்லும் போது அவர்கள் தொழுது கொண்டிருந்தால் அஹ், அஹ் என்று செருமி சமிக்ஞை செய்வார்கள் என அலீ(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். நஸயீ இப்னு மாஜா

239 “நபி(ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு ஸலாம் சொல்லப்பட்டால் அவர்கள்

எவ்வாறு பதில் கொடுப்பார்கள்?“ என்று நான் பிலால்(ரலி) அவர்களிடம் கேட்டேன். (அதற்கு) அவர் தமது கையை விரித்து “இவ்வாறு செய்வார்கள்“ என்று கூறினார் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத். இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

240 “நபி(ஸல்) அவர்கள் உமாமா பின்த் ஜைனபைத் தூக்கிக் கொண்டு தொழுவார்கள். ஸஜ்தாவிற்குப் போகும் போது இறக்கி விடுவார்கள். பின்னர் நிற்கும் போது தூக்கிக் கொள்வார்கள்“ என அபூ கதாதா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

அப்போது ‘நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு இமாமாக நின்று தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்கள் எனும் வாசகமும் முஸ்லிமில் உள்ளது.

241 “தொழுகையில் பாம்பு மற்றும் தேள் ஆகிய இரு கருப்பர்களைக் கண்டால் அவற்றைக் கொன்று விடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்

அபூ தாவூத் திர்மிதீ, நஸாயீ மற்றும் இப்னுமாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொழுது கொண்டிருப்பவர் பயன்படுத்தும் தடுப்பு GO TO CHAPTER INDEX

242 “தொழுது கொண்டிருப்பவரின், குறுக்கே செல்வதால் ஏற்படும் பாவத்தை ஒருவர் அறிந்திருந்தால், அதைவிட நாற்பது(ஆண்டுகளு)க்கு நிற்பதே மேல் எனக் கருதுவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஜுஹைம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. பஸ்ஸாரின் மற்றோர் அறிவிப்பில் நாற்பது ஆண்டுகள் என்றுள்ளது.

243 தொழுகைக்கு வைக்கும் தடுப்பு(சுத்ராவைப்) பற்றி தபூக் யுத்தத்தின் போது நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கவர்கள், “(ஒட்டக) வாகனத்தின் பிற்பகுதியிலுள்ள குச்சியின் அளவு“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

244 “உங்களில் ஒவ்வொரு வரும் ஓர் அம்பையேனும் நட்டு வைத்து தொழுகையில் ஒரு தடுப்பை (சுத்ராவை) ஏற்படுத்திக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸப்ரா இப்னு மஅபத்(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி.

245 “ஓர் ஒட்டக சேணத்தின் பின்னாலுள்ள குச்சியளவு கூட தொழுகைக்கான தடுப்பு இல்லையெனில், பெண், கழுதை, கருப்பு நாய் ஆகியவை ஒரு முஸ்லிமுடைய தொழுகையை முறித்து விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர் அல்கி:பாரி(ரலி) அறிவிக்கிறார்.

கருப்பு நாய் என்பது ஷைத்தானாகும் என்றும் (ஓர் அறிவிப்பில்) உள்ளது. முஸ்லிம்

246 ‘நாய்‘ என்பதைத் தவிர்த்து இந்த ஹதீஸ் அபூ ஹுரைரா(ரலி) வாயிலாகவும் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

247 கடைசி வார்த்தையைத் தவிர்த்து வெறும் ‘பெண்‘ என்பதற்கு பதிலாக ‘மாதவிடாய் ஏற்பட்டிருக்கும் பெண்‘ என்னும் வாசகத்துடன் மேற்கண்ட ஹதீஸ் இப்னு அப்பாஸ் வாயிலாக அபூதாவூத் மற்றும் நஸயீயில் இடம் பெற்றுள்ளது.

248 உங்களில் எவரேனும் மக்களை விட்டுத் தடுப்பாக (சுத்ரா) ஒரு பொருளை வைத்துத் தொழுது கொண்டிருக்கும்போது, எவரேனும் அதனுள் நுழைந்து செல்ல விரும்பினால் கைகளால் (தொழுது கொண்டே) தடுங்கள். அவன் அதை(யும்) மீறினால், (தொழுது கொண்டே) அவனைத் தள்ளி, (அகற்றி) விடுங்கள். ஏனெனில், நிச்சயமாக அவன் ஷைத்தான் தான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில் “அவனுடன் அவனுடைய (ஷைத்தான்) துணைவன் இருக்கிறான்“ என்றுள்ளது.

249 “நீங்கள் தொழும் போது உங்கள் முகத்திற்கு முன்பாக எதையேனும் ஒரு பொருளை (சுத்ரா) தடுப்பாக வைத்துக் கொள்ளுங்கள். அப்படி ஏதும் கிடைக்கவில்லையெனில் ஒரு குச்சியை நட்டுக் கொள்ளுங்கள். அப்படி எதுவும் கிடைக்கவில்லையெனில் ஒரு கோட்டைக் கிழித்துக் கொள்ளுங்கள். பின்னர் தமக்கு முன்னால் நடந்து செல்பவரால் தமக்குத் தீங்கு ஏற்படாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி)

அறிவிக்கிறார்.

அஹ்மத், இப்னு மாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

250 “தொழுகையை (முன்னால் கடந்து செல்லும்) எந்தப் பொருளும் முறித்து விடாது. (இருப்பினும்) உங்களால் முடிந்த வரை தவிர்த்துக் கொள்ளுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்.

அபூ தாவூத். இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உள்ளச்சத்துடன் தொழும்படி தூண்டுதல் GO TO CHAPTER INDEX

251 “இடுப்பில் கை வைத்த நிலையில் தொழுவதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்“ என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம். இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

252 “(இடுப்பில் கை வைத்துத தொழும்) இச்செயல் யூதர்கள், அவர்களுடைய தொழுகையில் செய்யும் செயல்“ என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள்.

253 “இரவு உணவு முன்னதாகவே கொண்டு வரப்பட்டு விட்டால், மக்ரிப் தொழுவதற்கு முன்னரே அதை (உண்ணத்) தொடங்கி விடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

254 “உங்களில் எவரேனும் தொழுகைக்கு நின்றுவிட்டால், அவர் (தம் நெற்றியில் ஒட்டியுள்ள) சிறிய கற்களை அகற்ற வேண்டாம். ஏனெனில், நிச்சயமாக அல்லாஹ்வுடைய அருள் (இறங்கிக் கொண்டு) உள்ளது. அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, நஸயீ மற்றும் இப்னு மாஜா.

“(அவசியம் தேவையெனில் ஒருமுறை செய்து கொள்ளட்டும் அல்லது அப்படியே விட்டுவிடட்டும்“ என்னும் வாசகம் அஹ்மதில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

255 முஅய்கிப் (ரலி) வாயிலாக இதே போன்ற ஹதீஸ் உள்ளது.

256 “தொழுகையில் திரும்பிப் பார்ப்பதைப் பற்றி நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கவர்கள் “அது அடியானின் (கவனம் சிதறும் போது) அவனது தொழுகையில் ஷைத்தான் செய்யும் திருட்டாகும்“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

“தொழுகையில் திரும்பிப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அது அழிவைத் தரும் பின்னர் அவசியம் ஏதும் ஏற்பட்டால் ந∴பில் (தொழுகையில்) திரும்பிப் பார்த்துக் கொள்ளலாம்“ என்று திர்மிதீயில் உள்ளது. இது ஸஹீஹ் எனும் தரத்தில் திர்மிதீயில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

257 “உங்களில் எவரேனும் தொழுகையில் நின்று விட்டால் அவர் தன்னுடைய இரட்சகனிடம் உரையாடிக் கொண்டிருக்கிறார். (எனவே, அவர் எச்சில் துப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டால்) அவர் ஒரு போதும் வலப் பக்கத்திலோ மற்றும் இடப்பக்கத்திலோ துப்ப வேண்டாம். மாறாக, தனது இடப் பக்கமாக காலுக்குக் கீழே துப்பிக் கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

258 “ஆயிஷா(ரலி) அவர்களது இல்லத்தில் ஓர் ஓரத்தில் சித்திரங்கள் வரையப்பட்ட மெல்லிய திரைச் சீலை ஒன்று இருந்தது. (அதைப் பார்த்த) நபி(ஸல்) அவர்கள் உனது இந்தத் திரைச் சீலையை எம்மை விட்டு அகற்றிவிடு! ஏனெனில், தொழுகையில் அதன் சித்திரங்கள் என் முன் வந்து குறுக்கிட்டுக் கொண்டே இருக்கின்றன“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

259 அபூஜஹ்கி அன்பளிப்புச் செய்த சித்திரங்கள் கொண்ட போர்வை போன்ற அங்கி தொடர்பான நிகழ்ச்சியைக் கூறும் போது ஆயிஷா(ரலி) “நிச்சயமாக அது தொழுகையை விட்டு என் கவனத்தைத் திருப்பி விட்டது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அறிவித்தார்கள். புகாரீ, முஸ்லிம்

260 “தொழுகையில் தங்களது பார்வையை வானத்தின் பால் உயர்த்தும் மக்கள், அதைத் தவிர்த்துக் கொள்ளட்டும். இல்லையெனில் (அவர்களது பார்வை) மறுபடியும் அவர்களிடம் திரும்பி வராமல் போகக் கூடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் பின் ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

261 “உணவு முன்னால வைக்கப்பட்டிருக்கும் போதும், (மலம் ஜலம்) ஆகிய இரண்டு துன்பங்கள் நிர்பந்திக்கும்

போதும் (அவற்றை முடிக்காமல்) தொழுகை இல்லை“ என்று நபி(ஸல்) கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

262 “கொட்டாவி ஷைத்தானிடமிருந்து வருவதாகும். எனவே எவருக்கேனும் கொட்டாவி வந்தால், அவர் அதை முடிந்த அளவு அடக்கிக் கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

திர்மிதீயில் தொழுகையில் என்ற வாசகம் அதிகப்படியாக உள்ளது.

பள்ளிவாசல்கள்

GO TO CHAPTER INDEX

263 “தெருக்களில் பள்ளி வாசல்கள் கட்டுமாறும், அவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்ளு மாறும், அவற்றில் நறுமணம் கமழச் செய்யுமாறும் நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூ தாவூத் மற்றும் திர்மிதீ. இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

264 யூதர்களை அல்லாஹ் அழிக்கட்டும்! அவர்கள் தங்கள் நபிமார்களின் அடக்கத்தலங்களைப் பள்ளிவாசல்களாக ஆக்கிக் கொண்டார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“கிறிஸ்தவர்களையும்“ எனும் சொல் முஸ்லிமில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

265 மேலும், “அவர்களில் (யூதர்கள் கிறிஸ்தவர்களில்) ஒரு நல்ல மனிதர் இறந்துவிட்டால் அவருடைய அடக்கஸ்தலத்தின் மீது பள்ளிவாசல்கள் கட்டி விடுவார்கள். இவர்களே படைப்புகளில் மிகக் கெட்டவர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

266 “நபி(ஸல்) அவர்கள் குதிரைப் படை ஒன்றை அனுப்பினார்கள். அவர்கள் (ஸமாமா என்ற) ஒருவரைக் கொண்டு வந்து பள்ளிவாசலின் தூண்களில் ஒரு தூணில் கட்டிப் போட்டார்கள்“ (நீண்ட ஹதீஸின்சுருக்கம்) என்று அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

267 ஹஸ்ஸான் இப்னு ஸாபித்தை உமர்(ரலி) அவர்கள் கடந்து சென்ற போது அவர் பள்ளிவாயிலில் கவிதை படித்துக் கொண்டிருந்தார். உமர்(ரலி) அவர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தார்கள். (அதற்கு) அவர், “உங்களைவிடச் சிறந்தவர் இங்கே இருக்கும்போது (அவர் முன்பு) இதே இடத்தில் நான் கவிதை பாடியுள்ளேன்“ என்று சொன்னார் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

268 “எவர் தன்னுடைய தொலைந்து போன பொருளைப் பள்ளிவாசலில் தேடுகிறாரோ (அவரை நோக்கி) ‘அல்லாஹ் உமக்கு அதைக் கிடைக்காமல் ஆக்குவானாக!“ என்று கூறவும். ஏனெனில் பள்ளிவாசல்கள் இதற்காகக் கட்டப்படவில்லை“ கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

269 “எவரேனும் பள்ளிவாசலில் (வியாபாரம் செய்த வண்ணம்) விற்று, வாங்கிக் கொண்டிருப்பதை நீங்கள் கண்டால் (அவரை நோக்கி), அல்லாஹ் உமது வியாபாரத்தில் இலாபமில்லாமல் ஆக்கட்டும்!“ என்று கூறுங்கள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

270 “பள்ளிவாசல்களில் (பெரும்) தண்டனைகளும் நிறைவேற்றப்படாது. பழியும் தீர்க்கப்படாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹகீம் இப்னு ஹிஸாம்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத் மற்றும் அபூ தாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

271 அகழ் யுத்தத்தில் ஸஅத் பின் முஆத்(ரலி) அவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. அதனால் நபி(ஸல்) அவர்கள் அருகேயிருந்து அவர்களை நலம் விசாரிப்பதற்காக (தொழுகைக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளிவாசலில்) கூடாரம் ஒன்றை அமைத்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

272 “பள்ளிவாசலில் (ஈட்டிகளை எறிந்து) வீரவிளையாட்டுகள் நடத்திக் கொண்டிருந்த அபிசீனியர்களை நான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, நபி(ஸல்) அவர்கள் என்னை மறைத்துக் கொண்டிருக்க நான் (அதைப்) பார்த்தேன்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நீண்ட ஹதீஸின் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

273 “கருநிற அடிமைப் பெண் ஒருவருக்கு பள்ளிவாசலில் கூடாரம் ஒன்று இருந்தது. அவர் என்னிடம் வருவார்

பேசிக் கொண்டிருப்பார்“ என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

274 “பள்ளிவாசலில் எச்சில் துப்புவது பாவமாகும். அதை மண்ணிற்குள் (புதைபடும்படி) மூடுவது (அப்புறப்படுத்துவது) அதற்குப் பரிகாரமாகும்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

275 “பள்ளிவாசல்களைக் கொண்டு மக்கள் பெருமையடிக்காத வரை கியாமத் (அழிவு) நாள் ஏற்படாது“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் (ரழி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூதாவூத், நஸாயீ, மற்றும் இப்னு மாஜா. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

276 “பள்ளிவாசல்களை உயரமாகக் கட்டி அலங்கரிக்குமாறு எனக்குக் கட்டளையிடப்படவில்லை“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

277 ஒருவர் பள்ளிவாசலிலிருந்து குப்பை கூளத்தை வெளியேற்றுவது உட்பட என்னுடைய சமுதாயத்தாரின் நற்செயல்களுக்கான நற்கூலிகள் எனக்குக் காண்பிக்கப்பட்டன“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் (ரலி) அறிவிக்கிறார்.

அபூதாவூத். இது திர்மிதீயில் கரீப் எனும் தரத்திலும், இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது

278 “உங்களில் எவரேனும் பள்ளிவாசலினுள் நுழைந்தால் இரண்டு ரக்அத்கள் தொழாமல் அமர வேண்டாம்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ கதாதா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

தொழுகை முறை

GO TO CHAPTER INDEX

279 நீ தொழுகைக்காக நின்றால் நன்றாக உளூச் செய்து கொள்! பின்னர் கிப்லாவை நோக்கி நின்று, ‘அல்லாஹு அக்பர்‘ என்று தக்பீர் கூறிக் கொள்! பின் (மெதுவாக) ருகூவு செய்! பின்னர் எழுந்து நேராக உனக்குத் திருப்தி ஏற்படும் வகையில் நிதானமாக நின்று கொள்! பின்னர் தலையை உயர்த்தி நன்றாக அமர்ந்து கொள்! பின்னர் திருப்தியாக ஸஜ்தா செய்து கொள்! பின்னர் இதேபோன்று உனக்குத் திருப்தி ஏற்படும் வரையில் தொழுகை முழுவதும் (ஒவ்வொரு ரக்அத்திலும்) செய்து கொள்! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, நஸாயீ மற்றும் இப்னு மாஜா

உனக்குத் திருப்தி ஏற்படும் வகையில் “நின்று கொள்!“ என்பது இப்னு மாஜாவில் முஸ்லிமில் சனதுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

280 ரி:ஃபாஆ இப்னு ரா:ஃபி: வாயிலாக மேற்கண்டவாறே அஹ்மத் மற்றும் இப்னு ஹிப்பானில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

281 “எலும்புகள் அதனிடத்தில் மீண்டு வரும் அளவிற்கு உன்னுடைய முதுகை நேராக்கிக் கொள்!“ என்று அஹ்மதில் உள்ளது.

282 “அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிட்டபடி நன்றாக உளூச் செய்து, பின்னர் அல்லாஹு அக்பர் - ‘அல்லாஹ் பெரியவன்‘ என்று (தக்பீர்) கூறி, அவனைப் புகழ்ந்து போற்றாத வரை உங்கள் தொழுகை முழுமையடையாது“ என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று ரி:ஃபாஆ இப்னு ரா:ஃபிஉ வாயிலாக நஸாயீ மற்றும் அபூதாவூதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் அவை இரண்டிலும், “உன்னுடன் குர்ஆன் (வசனம் மனப்பாடமாக) இருந்தால் அதை ஓதிக் கொள்! (இல்லையெனில்) “அல்ஹம்து லில்லாஹ்“ ‘அல்லாஹு அக்பர்‘ மற்றும் “லாயிலாஹஇல்லல்லாஹ்“ என்று கூறிக் கொள்!“ என்றும் உள்ளது.

283 “பின்னர் சூரத்துல் :ஃபாத்திஹாவை ஓதிக் கொள்! பின்னர் இறைவனின் நாட்டப்படி (நீ நாடியதை) ஓதிக் கொள்“ என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூதாவூதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

284 “பின்னர் நீ விரும்பியதை (ஓதிக்கொள்!)“ என்று இப்னு ஹிப்பானில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

285 நபி(ஸல்) அவர்கள் 'அல்லாஹு அக்பர்' என்று கூறும் போது தமது இரண்டு கரங்களையும் தோள்கள் வரை உயர்த்தினார்கள். பின்னர் ருகூவு செய்த போது தம் இரு கரங்களையும் தம் இரு கால்களின் முட்டியில் வைத்தார்கள். பின்னர் தமது முதுகை வளைத்தார்கள். பின்னர் தம் தலையை உயர்த்தும் போது எலும்புகள் எல்லாம் அதன் இடத்தில் வரும் வரை நேராக நிற்பார்கள். பின்னர் ஸஜ்தா செய்யும் போது (பூமியில்) தம் கைகளை (விரல்களை) விரிக்காமலும், சேர்க்காமலும் வைப்பார்கள். தம் கால் விரல்களின் முனைகளை கிப்லாவை நோக்கியிருக்குமாறு வைப்பார்கள். இரண்டாவது ரக்அத்தில் உட்காரும் போது இடக்காலில் அமர்ந்து வலக்காலை நிமிர்த்தி வைத்தார்கள். பின்னர் கடைசி ரக் அத்தில் அமர்ந்த போது இடக் காலை முற்படுகிறது மற்றொன்றை நிற்க வைத்து தமது இருக்கையின் மீது அமர்ந்தார்கள் என அபூ ஹுமைத் அஸ்ஸாயிதி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

286 நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்காக நின்று விட்டால், "வானங்களையும், பூமியையும் படைத்தவனை நோக்கி சத்தியமார்க்கத்தை விரும்பியவனாக என் முகத்தைத் திருப்பி விட்டேன். மேலும், நான் முஸ்லிம்களில் ஒருவன். "எங்கள் இரட்சகனே! நீயே அரசன்! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீயே என்னுடைய இரட்சகன்! நான் உன்னுடைய அடிமை! என்று இறுதி வரை ஓதுவார்கள் என அலீ இப்னு அபீதாலிப்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் இது இரவுத் தொழுகையில் என்றுள்ளது.

287 நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்காக தக்பீர் கூறிவிட்டால் (கிராஅத்) ஓதுவதற்கு முன்பு, சிறிது நேரம் அமைதியாக இருப்பார்கள். நான் (அதைப்பற்றி) அவர்களிடம் கேட்டதற்கு, 'அல்லாஹ்வே கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே வெகு தூரத்தை நீ ஏற்படுத்தியது போன்று எனக்கும் என் தவறுகளுக்குமிடையில் வெது தூரத்தை ஏற்படுத்துவாயாக! அல்லாஹ்வே! வெண்மையான ஆடையை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்துவது போன்று தவறுகளிலிருந்து என்னைத் தூய்மைப்படுத்துவாயாக! அல்லாஹ்வே! தண்ணீராலும், பனிக்கட்டியாலும், ஆலங் கட்டியாலும் என் தவறுகளைக் கழுவுவாயாக!" என ஓதுவேன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

288 உன்னைப் புகழ்ந்தவனாக உன் தூய்மையை நான் எடுத்துரைக்கிறேன். உன்னுடைய பெயர் பாக்கியமானது. உன்னுடைய நிலை உயர்வானது. வணக்கத்திற்குரியவர், உன்னைத் தவிர வேறு எவருமில்லை" என்று உமர்(ரலி) ஓதுவார்கள்.

இது முஸ்லிமில் 'முன்கதிஃ எனும் தரத்திலும், தாரகுத்னியில் மவ்ஸூல் மற்றும் மவ்கூஃப் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

289 இதே (288ம் எண்) போன்றதை அபூசயீத் அல்குத்ரீ(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களைக் குறித்து அறிவித்துள்ளார்கள். அதில், "நபி(ஸல்) அவர்கள் தக்பீர் கூறியபின், "அஊது பில்லாஹிஸ்ஸமீஇல் அலீம் மினஷ் ஷைத்தானிர்ரஜீம் மின்ஹமஸிஹி வ நஃப்கிஹி வநஃபிதிஹி' - விரட்டப்பட்டவனான ஷைத்தானின் வெறித்தனத்திலிருந்து அவனுடைய பரிகாச வசை பாடலிலிருந்தும் நன்கறிந்தோனும் செவிமடுப்போனுமாகிய அல்லாஹ்விடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்" என்று நபி(ஸல்) அவர்கள் ஓதியதாக வந்துள்ளது. அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா, நஸயீ

290 நபி(ஸல்) அவர்கள் தொழுகையை 'அல்லாஹு அக்பர்' என்று சொல்லி ஆரம்பம் செய்வார்கள். 'அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்பதிலிருந்து குர்ஆன் ஓதத்தொடங்குவார்கள். அவர்கள் ருகூவு செய்யும் போது தம் தலையை உயர்த்தவும் மாட்டார்கள் குனிந்து கொள்ளவும் மாட்டார்கள். நடுநிலையாக வைத்திருப்பார்கள். அவர்கள் ருகூஃவை விட்டு எழுந்து விட்டால், சரியாக நிற்காதவரை ஸஜ்தா செய்ய மாட்டார்கள். இன்னும், அவர்கள் ஸஜ்தாவில் இருந்து தலையை உயர்த்தி விட்டால், சரியாக அமராதவரை (மறுபடியும்) ஸஜ்தா செய்ய மாட்டார்கள். இன்னும், அவர்கள் இரண்டு ரக்அத்களுக்கு ஒருமுறை 'அத்தஹிய்யாத்' ஓதுவார்கள். இன்னும், அவர்கள் தம்முடைய இடக் காலைப் படுக்க வைத்தும் வலக் காலை நிற்க வைத்தும் அமர்வார்கள். ஷைத்தானின் அமர்வு போன்று அமர்வதையும் மிருகங்களின் அமர்வு போன்று அமர்வதையும் தடை செய்வார்கள். மேலும், அவர்கள் ஸலாம் சொல்லி தொழுகையை முடிப்பார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

இது மஃலூஸ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

291 நபி(ஸல்) அவர்கள் (அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கூறி) தொழுகையை ஆரம்பம் செய்யும் போதும்,

ருகூஃவிற்காக 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் கூறும் போதும், ருகூஃவிலிருந்து தலையை உயர்த்தும் போதும் தம் இரு கரங்களையும் தம் தோள்களுக்கு நேராக உயர்த்துவார்கள் என்று இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

292 "தம் இரு கரங்களையும் தம் தோள்களுக்குச் சமமாக உயர்த்துவார்கள். பின்னர் தக்பீர் கூறுவார்கள்" என்று அபூஹு மைத் வாயிலாக அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது.

293 முஸ்லிமில் மாலிக் இப்னுஹு வை ரிஸ் வாயிலாக இப்னு உமர்(ரலி) அவர்களின் ஹதீஸ் போன்றே இடம் பெற்றுள்ளது. ஆனால், அதில் தம் இரு காதுகளுக்குச் சமமாக உயர்த்துவார்கள் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது.

294 நான் நபி(ஸல்) அவர்களுடன் தொழுதேன். அப்போது அவர்கள் தமது நெஞ்சில் தமது இடக்கரத்தை வைத்து, அதன் மீது தம் வலக் கரத்தை வைத்தார்கள் என்று வாயில் இப்னு ஹு ஜ்ர்(ரலி) அறிவிக்கிறார். இப்னு குஸைமா

295 "எவர் உம்முல் குர்ஆன் (சூரத்துல் ஃபாத்திஹா) ஓதவில்லையோ, அவருக்குத் தொழுகை இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உபாதா இப்னு ஸாமித்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

296 இப்னு ஹிப்பான் மற்றும் தாரகுத்னீயின் மற்றோர் அறிவிப்பில், 'சூரத்துல் ஃபாத்திஹா ஓதாமல் தொழுகை முழுமையாவதில்லை' என்றுள்ளது.

297 மற்றோர் அறிவிப்பின்படி அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, இப்னு ஹிப்பான் ஆகிய நூல்களில், "நீங்கள் இமாமுக்குப் பின்னால் ஓதுகிறார்கள் போலும்" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நாங்கள், "ஆமாம்" என்று பதிலளித்தோம். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "நீங்கள் சூரத்துல் ஃபாத்திஹாவைத் தவிர வேறு எதையும் ஓதவேண்டாம். ஏனெனில், எவர் சூரத்துல் ஃபாத்திஹா ஓதவில்லையோ அவருக்குத் தொழுகை இல்லை" என்று கூறினார்கள் என இடம் பெற்றுள்ளது.

298 நபி(ஸல்) அவர்களும், அபூபக்ர்(ரலி), இன்னும் உமர்(ரலி) ஆகியோரும், "அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்" ஓதித்தான் தொழுகையைத் தொடங்குவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

299 அவர்கள் அதன் ஆரம்பத்திலும், இறுதியிலும், பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம் ஓதியதில்லை என்னும் வாசகம் முஸ்லிமில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

300 மற்றோர் அறிவிப்பின்படி "அவர்கள் பிஸ்மில்லாஹ்வை சப்தமிட்டு ஓதமாட்டார்கள்" என்று அஹ்மத், நஸாயீ, இப்னு குஸைமாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

301 இப்னு குஸைமாவின் மற்றோர் அறிவிப்பின்படி அவர்கள் (பிஸ்மில்லாஹ்) மெதுவாக ஓதுவார்கள் என்று உள்ளது.

302 நான் அபூஹு ரைரா(ரலி) அவர்களுக்குப் பின்னால் தொழுதேன். அப்போது அவர்கள் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் ஓதினார்கள். பின்னர் சூரத்துல் ஃபாத்திஹா ஓதினார்கள். 'வலள்ளால்லீன்' எனும் வசனத்தை அடைந்ததும் 'ஆமீன்' என்று கூறினார்கள். அவர்கள் ஸஜ்தா செய்யும் போது, அமர்விலிருந்து எழும் போது 'அல்லாஹு அக்பர்' என்று கூறினார்கள். பின்னர் ஸலாம் சொல்லிவிட்டு, "எவனது கரத்தில் என் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! உங்களில் நபி(ஸல்) அவர்களின் தொழுகைக்கு மிகவும் ஒப்பான முறையில் தொழுபவன் நானேயாவேன் என்று கூறினார்கள் என நுஅய்கி அல் முஜ்மிர் அறிவிக்கிறார். நஸாயீ, இப்னு குஸைமா

303 "நீங்கள் சூரத்துல் ஃபாத்திஹா ஓதினால், பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்! ஓதிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அதுவும் அதன் ஒரு வசனமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னி

304 நபி(ஸல்) அவர்கள் சூரத்துல் ஃபாத்திஹா ஓதி முடித்தவுடன் தமது சப்தத்தை உயர்த்தி 'ஆமின்' என்று கூறுவார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

இது தாரகுத்னியில் ஹஸன் எனும் தரத்திலும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் இடம் பெற்றுள்ளது.

305 அபூதாவூத் மற்றும் திர்மிதீயில் வாயில் இப்னு ஹு ஜ்ர்(ரலி) வாயிலாக இதே போன்ற ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

306 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, "நான் குர்ஆனிலிருந்து எதையும் எடுக்க (ஓத) முடியாத

நிலையில் உள்ளேன். (எனவே) அதை சரிக்கட்டும் வகையில் எனக்கு ஏதாவது கற்றுத் தருவீராக!“ என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “சுப்ஹானல்லாஹ் - அல்லாஹ் தூய்மையானவன்“ என்றும், “அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்“ என்றும், “லா இலாஹ இல்லல்லாஹ் -அல்லாஹ்வைத் தவிர வேறொவருமில்லை“ என்றும் “அல்லாஹு அக்பர் - அல்லாஹ் மிகப் பெரியவன்“ என்றும், “உயர்ந்தவனும் மகத்தானவனுமான அல்லாஹ்வைக் கொண்டே தவிர தீமையிலிருந்து தப்பும் சக்தியும், நன்மையடைவதற்கான ஆற்றலும் இல்லை“ என்று கூறிக்கொள்“ என்று கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸாயீ

இது இப்னு ஹிப்பான், தாரகுத்னி மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

307 நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குத் தொழுகை நடத்துவார்கள். லுஹர் மற்றும் அஸர் தொழுகையில் முதல் இரண்டு ரக்அத்களில் ‘சூரத்துல் ஃபாத்திஹாவையும் இரண்டு சூராக்களையும் ஓதுவார்கள். சில சமயங்களில் சில வசனங்கள் மட்டும் ஓதுவார்கள். முதல் ரக்அத்தை நீட்டியும் பிந்திய இரண்டு ரக்அத்துக்களில் ‘ஃபாத்திஹா சூரா‘ மட்டும் ஓதுவார்கள் என அபூகதாதா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

308 நாங்கள் லுஹா மற்றும் அஸர் தொழுகைகளில் நபி(ஸல்) அவர்களது தொழுகையை (நேரத்தை) கணித்திருக்கின்றோம். அவர்கள் லுஹர் தொழுகையின் முந்திய இரண்டு ரக்அத்களில் ‘அலிஃப் லாம் மீம் தன்ஸீல்‘ ஸஜ்தா சூரா ஓதுமளவு நேரம் இருக்கும். பிந்திய இரண்டு ரக்அத்களில் அதில் பாதி (நேரம்) இருக்கும் என்பது எங்களின் கணிப்பாகும். பின்னர் அஸர் தொழுகையின் முந்திய இரண்டு ரக்அத்கள், லஹர் தொழுகையின் பிந்திய ரக்அத்களின் (நேர) அளவும் அஸரின் பிந்திய இரண்டு ரக்அத்கள் அஸரின் முந்திய இரண்டு ரக்அத்களின் பாதி (நேர) அளவும் இருக்கும் என்று அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

309 “ஒருவர் லுஹருடைய முதல் இரண்டு ரக்அத்களை நீட்டியும், அஸரைக் குறைத்தும், மக்ரிபில் சிறிய சூராக்களையும், இஷாவில் நடுத்தரமான சூராக்களையும், சுப்ஹில் நீண்ட சூராக்களையும் ஓதுகிறார்“ என்று நான் கூறியதற்கு, “அல்லாஹ்வின் தூதருடைய தொழுகைக்கு இதை விட அதிகமாக ஒப்பான ஒரு தொழுகையை வேறவர் பின்னாலும் நான் தொழுததில்லை“ என்று அபூஹுரைரா(ரலி) கூறியதாக சுலைமான் இப்னு யஸார் அறிவிக்கிறார். இது நஸாயீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

310 நபி(ஸல்) அவர்கள் மக்ரிப் தொழுகையில் ‘சூரத்துத் தூர்‘ ஓத நான் கேட்டுள்ளேன் என்று இப்னு ஜுபைர் இப்னு முத்இம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

311 நபி(ஸல்) அவர்கள் வெள்ளிக்கிழமை ஃபஜ்ர் தொழுகையில் ‘அலிஃப் லாம் மீம் தன்ஸீல்‘ ஸஜ்தா சூராவும் ‘ஹல் அதா அலல் இன்ஸானி‘ சூராவும் ஓதுவார்கள் என்று அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

312 இப்னு மஸ்வூத் வாயிலாக தப்ரானீயில் இடம் பெறுள்ள ஹதீஸில், “நபி(ஸல்) அவர்கள் எப்போதும் அவ்வாறு தான் செய்து வந்தார்கள்“ என்று உள்ளது.

313 நான் நபி(ஸல்) அவர்களுடன் தொழுதேன். இறைக்கருணை குறித்த வசனங்கள் ஓதப்படும் இடத்தை அவர்கள் கடந்து சென்றால் அங்கு நின்று துஆ செய்வார்கள். மேலும், அவர்கள் இறைத்தண்டனை குறித்த வசனங்கள் ஓதப்படும் இடத்தைக் கடந்து சென்றால் அவர்கள் (அதிலிருந்து அல்லாஹ்விடம்) பாதுகாப்புக் கோருவார்கள் என ஹுதைஃபா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

314 “அறிந்து கொள்ளுங்கள்! நான் ருகூஃ மற்றும் ஸுஜூதுகளில் குர்ஆன் ஓத வேண்டாமென தடுக்கப்பட்டுள்ளேன். நீங்கள் ருகூஃவில் இறைவனைப் பெருமைப்படுத்துங்கள்! இன்னும் ஸஜ்தாவில், மன்றாடி துஆ கேளுங்கள். அது (இறைவனால்) ஏற்றுக் கொள்ளத் தக்கதாயிருக்கும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

315 நபி(ஸல்) அவர்கள் தமது ருகூஃவிலும், தமது ஸுஜூதிலும் “எங்கள் இரட்சகனே! உன்னைப் புகழ்ந்த நிலையில் உன் தூய்மையை நான் எடுத்துரைக்கிறேன். இறைவா! எனக்கு மன்னிப்பை அருள்வாயாக!“ என்று பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

316 நபி(ஸல்) அவர்கள் தொழுகைக்காக நிற்கும் போது, ‘அல்லாஹு அக்பர்‘ என்று கூறுபவர்களாக இருந்தார்கள். பின்னர் ருகூஃ செய்யும் போது ‘அல்லாஹு அக்பர்‘ என்று கூறுவார்கள். பின்னர் தமது முதுகை ருகூஃவிலிருந்து உயர்த்தும் போது, ‘ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா‘ என்று கூறுவார்கள். பின்னர் அவர்கள் நின்ற

நிலையில், ‘ரப்பனாவ லகல் ஹம்து‘ என்று கூறுவார்கள். பின்னர் ஸஜ்தா செய்யும்போது ‘அல்லாஹு அக்பர்‘ என்று கூறுவார்கள், பின்னர் (ஸஜ்தாவிலிருந்து) தன்னுடைய தலையை உயர்த்தும் போது ‘அல்லாஹு அக்பர்‘ என்று கூறுவார்கள், பின்னர் தொழுகை முழுவதும் இவ்வாறே செய்வார்கள். மேலும், இரண்டு ரக்அத்களுக்குப் பின் அமர்ந்து விட்டு எழும் போதும், ‘அல்லாஹு அக்பர்‘ என்று கூறுவார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

317 நபி(ஸல்) அவர்கள் ருகூஃவிலிருந்து தம் தலையை உயர்த்தியதும், ‘அல்லாஹு ம்ம ரப்பனா லக்கல் ஹம்து‘ இறைவா! வானங்கள் நிறைய, பூமி நிறைய, இன்னும் எதை நீ நாடுகிறாயோ, அது நிறைய உனக்கே புகழனைத்தும்! நீயே உயர்வு மற்றும் புகழுக்குரியவன்! இன்னும் நாங்கள் ஒவ்வொருவரும் உனக்கு அடிமை என்று கூறுவதே அடிமைகளுக்குப் பொருத்தமானது. எங்கள் இறைவா! நீ எதைக் கொடுக்கின்றாயோ அதை யாரும் தடுக்க முடியாது. நீ எதைத் தடுக்கின்றாயோ அதை யாரும் கொடுக்க முடியாது. இன்னும் நீயே தேவையற்றவன். தேவையற்ற வேறு எவனும் எந்த பலனும் அளிக்க முடியாது.“ என்று கூறுவார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

318 “ஏழு எலும்புகளின் மீது ஸஜ்தா செய்யுமாறு நான் கட்டளையிடப்பட்டுள்ளேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு நெற்றியின் மீது தம்முடைய மூக்கு, தம்முடைய கரங்கள், தம்முடைய முட்டிக் கால்கள், தம்முடைய கால்கள் ஆகியவற்றை தமது கரத்தால் சுட்டிக் காண்பித்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

319 நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தா செய்யும் போது தமது ஆக்குள்களின் வெண்மை தெரியும் அளவிற்கு தமது கரங்களுக்கிடையில் இடைவெளி விடுவார்கள் என இப்னுபுஹைனா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

320 “நீ ஸஜ்தா செய்தால் உன்னுடைய உள்ளங்கைகளைத் தரையில் வைத்து முழங்கைகளை உயர்த்திக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என பரா இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

321 நபி(ஸல்) அவர்கள் ருகூஉ செய்யும் போது தம்முடைய விரல்களை ஸஜ்தா செய்யும் போது தம்முடைய விரல்களை இணைத்தும் வைத்திருப்பார்கள் என வாயில் இப்னு ஹு ஜ்ர்(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி

322 நபி(ஸல்) அவர்கள் சம்மணமிட்டுத் தொழுததை நான் பார்த்தேன் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். நஸாயீ

இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

323 நபி(ஸல்) அவர்கள் இரண்டு ஸஜ்தாவிற்கிடையே “இறைவா! என்னை மன்னிப்பாயாக! எனக்குக் கருணை காட்டுவாயாக! எனக்கு வழி காட்டுவாயாக! எனக்கு நிவாரணமளிப்பாயாக! எனக்கு வாழ்வாதாரங்களை நல்குவாயாக!“ என்று கூறுவார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், திர்மிதீ மற்றும் இப்னுமாஜா

இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

324 நபி(ஸல்) அவர்கள் தொழுததை நான் பார்த்தேன். அவர்கள் ஒற்றை ரக்அத்தில் முதலவாது மற்றும் ஸஜ்தாவிலிருந்து எழும்போது) சரியாக அமராதவரை எழமாட்டார்கள் என மாலிக் இப்னு அல் ஹுவைரிஸ்(ரலி) அறிவிக்கிறார். இப்னு குஸைமா

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சஅத் இப்னு தாரிக் தம்முடைய தந்தையிடம் “என் தந்தையே! தாங்கள், நபி(ஸல்) அவர்கள் அபூ பக்ர்(ரலி), உமர்(ரலி) உஸ்மான்(ரலி), அலீ(ரலி) ஆகியோரின் பின் (நின்று) தொழுதுள்ளீர்கள். அவர்கள் ஃபஜ்ர் தொழுகையில் குனூத் ஓதினார்களா?“ என்று கேட்டதற்கு, “என்னுடைய மகனே! இது புதிதாக உண்டாக்கப்பட்ட செயல்“ என்று பதில் கூறினார் என சஅத் இப்னு தாரிக்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ, நஸயீ மற்றும் இப்னு மாஜா.

329 நான் வித்ருடைய குனூத்தில் ஓதுவதற்காக, “இறைவா! நீ நேர்வழி காட்டியவர்களுடன் சேர்த்து எனக்கும் நேர்வழி காட்டுவாயாக! நீ ஆரோக்கியம் அளித்தவர்களுடன் சேர்த்து எனக்கும் ஆரோக்கியம் அளிப்பாயாக! நீ பொறுப்பேற்றுக் கொண்டவர்களுடன் சேர்த்து எனக்கும் பொறுப்பேற்றுக் கொண்டோயோ அவர், இழிவடையமாட்டார். எங்கள் இரட்சகனே! நீ வளம் பொருந்தியவன் உயர்ந்தவன்“ என்ற வாக்கியங்களை நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள் என ஹஸன் இப்னு அலீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ,

திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

தப்ரானி மற்றும் பைஹகீயில் “நீ யாரை இழிவு படுத்தி விட்டாயோ! அவரை கண்ணியப்படுத்துபவர் யாரும் இல்லை!“ என்றுள்ளது. நஸாயீயுடைய மற்றோர் அறிவிப்பில், “அல்லாஹு தஆலா நபி(ஸல்) அவர்கள் மீது சாந்தி ஏற்படுத்துவானாக!“ என்றுள்ளது.

330 நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு ஒரு துஆ கற்றுக் கொடுத்தார்கள். நாங்கள் அதை ஃபஜ்ர் தொழுகையில் ஓதிக் கொண்டிருந்தோம் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ. இது ளயீஃப் எனும் தரத்தில் உள்ளதாகும்.

331 “நீங்கள் ஸஜ்தா செய்யும் போது ஒட்டகம் அமர்வது போல் அமர வேண்டாம் உங்கள் முழங்கால்களை (தரையில்) வைப்பதற்கு முன்பாக உங்கள் கரங்களை (தரையில்) வைப்பதற்கு முன்பாக உங்கள் கரங்களை வையுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ மற்றும் திர்மிதீ

332 நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தா செய்யும் போது (தரையில்) முட்டுக்கால்களை வைப்பதற்கு முன்னதாக தமது இரு கரங்களையும் வைத்ததை நான் பார்த்தேன் என (அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இப்னு உமர்(ரலி) அவர்களது ஹதீஸ் முதல் ஹதீஸிற்கு சான்றாக உள்ளது. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்திலும், புகாரீயில் முஅல்லக், மவ்கூஃப் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

333 நபி(ஸல்) அவர்கள் தஷஹ்ஹுதில் (பெரும் இருப்பில்) அமர்ந்தால் தமது வலக் கையை வலது முழங் காலின் மீதும், இடக் கையை இடது முழங்காலின் மீதும் வைத்து அதை ஐம்பத்தி மூன்று போல் ஆக்கி தமது சுட்டு விரலால் சமிக்ஞை செய்வார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில், எல்லா விரல்களையும் மடக்கிப் பிடித்துக் கொண்டு கட்டை விரலை அடுத்த (சுட்டு) விரலால் சமிக்ஞை செய்தார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

334 நபி(ஸல்) அவர்கள் எங்களை நோக்கி, “உங்களில் ஒருவர் தொழும் போது, “(அத்தஹிய்யாத்து....) எல்லாவிதமான காணிக்கைகளும், தொழுகைகளும், ஏனைய நல்லறங்களும் அல்லாஹ்விற்கே உரித்தானவை. நபியே! உம்மீது சாந்தியும் இறைவனின் கருணையும், அபிவிருத்தியும் உண்டாகட்டும்! இன்னும் எங்கள் மீதும் இறைவனின் ஏனைய நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகட்டும்! ‘நிச்சயமாக வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை‘ அவன் தனித்தவன். அவனுக்கு இணையுமில்லை, துணையுமில்லை‘ என்று நான் சாட்சி கூறுகிறேன். இன்னும் முஹம்மத்(ஸல்) அவர்கள் அவனுடைய நல்லடியராகவும், தூதராகவும் உள்ளார்‘ என நான் சாட்சி கூறுகிறேன் என்று ஓதிக் கொண்டு, பின்னர் அவர் துஆக்களில் தான் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துப் பிரார்த்திக்கட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீ மற்றும் நஸாயீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் “எல்லா விரல்களையும் மடக்கிப்பிடித்துக் கொண்டு கட்டை விரலை அடுத்த (சுட்டு) விரலால் சமிக்ஞை செய்தார்கள்“ என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

நபி(ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத்(ரலி) அவர்களுக்கு தஷஹ்ஹுதைக் கற்றுக் கொடுத்தார்கள். இன்னும் அதை மக்களுக்குக் கற்றுத் தருமாறு கட்டளையிட்டார்கள் என்று அஹ்மதில் இடம் பெற்றுள்ளது.

335 முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு “அத்தஹிய்யாத்துல் முபாரகாத்துஸ் ஸலவாத்துத் தைய்யிபாத்து லில்லாஹி அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹி! ஸாலிஹீன் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூ லுல்லாஹ்“ எனும் தஷஹ்ஹுதைக் கற்றுக் கொடுத்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக இடம் பெற்றுள்ளது.

336 அல்லாஹ்வைப் புகழாமலும், நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறாமலும் ஒரு மனிதர் தம்முடைய தொழுகையில் துஆ செய்ததை நபி(ஸல்) அவர்கள் செவியேற்று, “இவர் அவசரப்பட்டு விட்டார்“ என்று கூறினார்கள். பின்னர் அவரை அழைத்து, “நீங்கள் தொழும் போது தம்முடைய இரட்சகனைப் புகழ்ந்தும், போற்றியும் ஆரம்பியுங்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத் கூறுங்கள். அதற்குப் பின் நீங்கள்

விரும்பியதைக் கேட்டுக் கொள்ளுங்கள்“ என்று அவர்கள் கூறினார்கள் என ஃபளாலா இப்னு உபைத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, மற்றும் திர்மிதீ

இது திர்மிதீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

337 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் மீது ஸலவாத் கூறுமாறு இறைவன் கட்டளையிட்டுள்ளானே, தங்கள் மீது நாங்கள் எவ்வாறு ஸலவாத் கூறுவது?“ என்று பஷீர் இப்னு ஸஃத்(ரலி) கேட்டார். அப்போது நபி(ஸல்) அவர்கள் (சிறிது) அமைதியாக இருந்துவிட்டு “எங்கள் இரட்சகனே! இப்ராஹீம்(அலை) அவர்கள் மீதும் அருள் புரிந்தது போன்று முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் அருள் புரிவாயாக! இன்னும் அம்லத்தார் அனைவரிலும் நீ இப்ராஹீம்(அலை) அவர்கள் மீதும் அருள்வளத்தைப் பொழிந்தது போன்று முஹம்மத்(ஸல்) அவர்கள் மீதும் அருள்வளத்தைப் பொழிவாயாக! நிச்சயமாக நீ புகழப்பட்டவனாக இருக்கிறாய்!“ என்று கூறிக்கொள்ளுங்கள். இன்னும் “உங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது போன்று ஸலாம் கூறிக் கொள்ளுங்கள்“ என்று பதிலளித்தார்கள் என அபூமஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

“நாங்கள் எங்கள் தொழுகையில் தங்கள் மீது ஸலாவத் கூறினால் எப்படிக் கூறுவது?“ என்று கேட்டதாக இப்னு குஸைமாவில் உள்ளது.

338 உங்களில் ஒருவர் இறுதித் தஷஹ்ஹு தில் அமர்ந்தால் நான்கு விஷயங்களிலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொள்ளட்டும். “எங்கள் இரட்சகனே! நரக வேதனையிலிருந்தும், வாழ்வு, மரணம் ஆகியவற்றின் சோதனையிலிருந்தும், தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று கூறட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் ‘உங்களில் ஒருவர் இறுதித் தஷஹ்ஹு தை முடித்துக் கொண்டால்‘ என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது.

339 “நான் என்னுடைய தொழுகையில் ஓதிக் கொள்வதற்காக எனக்கு ஒருதுஆ கற்றுக் கொடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்களிடம் நான் கேட்டதற்கு “எங்கள் இரட்சகனே! எனக்கு நானே நிறைய அநியாயம் செய்து கொண்டேன்! பாவங்களை மன்னிக்கக் கூடியவன் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை! எனவே, உன் தரப்பிலிருந்து என்னுடைய பாவங்களை மன்னிப்பாயாக! எனக்குக் கருணை புரிவாயாக! நீயே மன்னிக்கக் கூடியவன் மற்றும் கிருபையாளன், என்று கூறிக்கொள்“ என்று அவர்கள் கூறினார்கள் என அபூ பக்ர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

340 நான் நபி(ஸல்) அவர்களுடன் தொழுதிருக்கிறேன். அப்போது அவர்கள் தம்முடைய வலப்பக்கம் ‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு ‘ என்றும், தம்முடைய இடப் பக்கம் ‘அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு என்றும் ஸலாம் கொடுப்பார்கள் என வாயில் இப்னு ஹு ஜ்ர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

341 நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு ஃபர்ளுத் தொழுகைக்குப் பின்பும் “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை! அவன் தனித்தவன்! அவனுக்கு இணை, துணை எதுவுமில்லை! அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியது! இன்னும் புகழனைத்தும் அவனுக்கே உரியது! மேலும் அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன்! எங்கள் இரட்சகனே! நீ கொடுப்பதைத் தடுப்பவர் எவரும் இல்லை! நீ தடுப்பதைக் கொடுப்பவர் எவரும் இல்லை! மதிப்புடைய எவரும் இல்லை! மதிப்புடைய எவரும் எந்தப் பலனும் அளிக்க மாட்டார் மதிப்பு உன்னிடமே உள்ளது“ என்று ஓதுவார்கள் என முகீரா இப்னு ஷு அபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

342 நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப் பின்பு, இந்தச் சொற்களால் பாதுகாவல் தேடுவார்கள் “இரட்சகனே! கோழைத்தனத்திலிருந்தும், உலோபித்தனத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். தள்ளாத வயது வரை வாழ்வதிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். இவ்வுலகத்தின் குழப்பங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். இன்னும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்“ (என்று கூறுவார்கள்) என ஸஃது இப்னு அபீ வக்காஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

343 நபி(ஸல்) அவர்கள் தொழுகையை முடித்து விட்டால் மூன்று முறை ‘அஸ்தக் ஃபிருல்லாஹ்‘ என்று கூறிவிட்டு

(அல்லாஹு ம்ம அன்தஸ்....) “இரட்சகனே! நீ எல்லாக் குறைகளிலிருந்தும் பாதுகாப்பானவன். உன்னிடமிருந்தே பாதுகாப்பு கிடைக்கின்றது. மதிப்பும், மகத்துவமும் மிக்கவனே! நீ உயர்ந்து விட்டாய்!“ என்றும் கூறுவார்கள் என ஸவ்பான்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

344 “ஒவ்வொரு ஃபர்ளு தொழுகைக்குப் பின்பும் 33 முறை ஸு ப்ஹானல்லாஹ், மேலும் 33 முறை அல்ஹம்துலில்லாஹ், மேலும் 33 முறை அல்லாஹு அக்பர். இவை மொத்தம் 99 ஆகிறது. இவற்றைக் கூறிக் கொண்டு நூறை நிவர்த்தி செய்வதற்காக ‘வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை துணை இல்லை. அரசாட்சி அனைத்தும் அவனுக்கே இணை துணை இல்லை. அரசாட்சி அனைத்தும் அவனுக்கே உரியன! புகழனைத்தும் அவனுக்கே உரியது! அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன்‘‘ என்று எவர் கூறுகிறாரோ, அவருடைய பாவங்கள் கடல் நுரையளவு இருப்பினும் அவை மன்னிக்கப்படுகின்றன“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில் “அல்லாஹு அக்பர்‘ என்பது 34 முறை“ என்றும் உள்ளது.

345 “முஆதே! ஒவ்வொரு பர்ளு தொழுகைக்கும் பின்பு நீ இதைக் கூறாமல் இருக்க வேண்டாம் என உனக்கு நான் உபதேசிக்கிறேன். (அது) “என் இரட்சகனே! உன்னை நினைவு கூருவதற்கும், உனக்கு நன்றி செலுத்துவதற்கும், உன்னை அழகிய முறையில் வணங்குவதற்கும், எனக்கு உதவுவாயாக! (என்பதாகும்)“ என நபி(ஸல்) அவர்கள் தன்னிடம் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸாயீ

346 “ஒவ்வொரு ஃபர்ளுத் தொழுகைக்கு பின்பு எவர் ‘ஆயத்துல் குர்ஸி“ ஓதுகிறாரோ, அவர் சொர்க்கம் செல்வதை மரணத்தைத் தவிர வேறு எதுவும் தடுக்காது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ உமாமா(ரலி) அறிவிக்கிறார். நஸாயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. “இன்னும் ‘குல்ஹு வல்லாஹு அஹத் (ஓதுகிறாரோ) என்பதும் தப்ரானீயில் அதிகப்படியாக உள்ளது.

347 “என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மாலிக் இப்ன ஹு வைரிஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ,

348 “நின்று தொழுங்கள்! உங்களால் இயலவில்லை எனில், உட்கார்ந்து தொழுங்கள்! அதுவும் உங்களால் இயலவில்லை எனில் ஒரு பக்கமாக ஒருக்களித்து (படுத்து) தொழுங்கள்! அதுவும் இயலவில்லை எனில் சமிக்ஞை மூலமாவது தொழுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு சைன்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

349 தலையணை ஒன்றின் மீது தொழுதுவிட்டு அதை எறிந்து விட்ட நோயாளி அதை எறிந்து விட்ட நோயாளி ஒருவரை நோக்கி நபி(ஸல்) அவர்கள், “உன்னால் முடிந்தால் தரை மீது தொழுது கொள். முடியாவிட்டால், சமிக்ஞை செய்து தொழுது கொள். உன் ருகூவை விட உன் சுஜூ தை சுருக்கமானதாக்கிக் கொள்“ என்று கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

சஜ்தா சஹ்வு, சஜ்தத்துத் திலாவத், சஜ்தத்துஷ்ஷு க்ரு ஆகியவற்றின் விளக்கம் GO TO CHAPTER INDEX

350 நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு லுஹர் தொழ வைத்தார்கள். முதல் இரு ரக்அத்துகளிலும் நிலையில் நின்றார்கள். இரண்டாவது ரக்அத்தின் முடிவில் உட்காரவில்லை மக்களும் அவர்களுடன் நிலையில் நின்றார்கள். அவர்கள் (நான்காவது ரக்அத்தையும்) தொழுது முடித்தபோது மக்கள் அவர்கள் சலாம் கொடுப்பார்கள் என எதிர்பார்த்திருக்க, அவர்கள் அமர்ந்த படியே தக்பீர் சொல்லி, சலாம் கொடுப்பதற்கு முன்பாக இரு சஜ்தாக்கள் செய்து விட்டு பிறகு சலாம் கொடுத்தார்கள். புகாரீ, முஸ்லிம், அஹ்முத், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ மற்றும் இப்னு மாஜா

“அவர்கள் முதல் (தஷஹ்ஹு த்) இருப்பில் உட்கார மறந்து விட்டதற்குப் பகரமாக, உட்கார்ந்து படியே ஒவ்வொரு சஜ்தாவிற்கும் தக்பீர் கூறி (இரு) சஜ்தா செய்தார்கள். மக்களும் அவர்களுடன் சஜ்தா செய்தார்கள்“ மக்களும் அவர்களுடன் சஜ்தா மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளது.

351 மாலைத் தொழுகைகளில் ஒன்றைத் தொழுவித்த நபி(ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத்திலேயே ஸலாம்

கொடுத்து விட்டார்கள். பின்பு எழுந்து பள்ளிவாசலின் முற்பகுதியில் இருக்கும் மரக்கட்டையின் பக்கம் சென்று அதன் மேல் தம் கையை ஊன்றிக் கொண்டு நின்றார்கள். அங்கே இருந்தவர்களில் அபூ பக்ர்(ரலி) உமர்(ரலி) இருவரும் நபி(ஸல்) அவர்களிடத்தில் அதுபற்றிப் பேசப் பயந்து கொண்டு இருந்த போது பள்ளியிலிருந்து வேகமாக வெளியேறிய மக்கள் 'தொழுகை சுருக்கப்பட்டு விட்டதா?" எனப் பேசிக் கொண்டார்கள்.

அப்போது நபி(ஸல்) அவர்களால் 'துல்யதைன்' (நீண்ட கைகளை உடையவர்) என அழைக்கப்படும் (அவர்களின் தோழர்) ஒருவர், "மறந்து விட்டீர்களா?" அல்லது தொழுகை சுருக்கப்பட்டு விட்டதா?" எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "நான் மறக்கவும் இல்லை. (தொழுகை) சுருக்கப்படவும் இல்லை" என்றவுடன், "இல்லை. நிச்சயமாக தாங்கள் மறந்து விட்டீர்கள்!" என அவர் கூறினார். நபி(ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத் தொழுது பின் ஸலாம் கொடுத்தார்கள். பின்பு தக்பீர் கூறித் தமது வழக்கமான ஸஜ்தாவைப் போன்றோ அல்லது அதைவிட நீண்டதாகவோ ஸஜ்தாச் செய்தார்கள். பிறகு தலையை உயர்த்தி தக்பீர் கூறினார்கள். மீண்டும் தலையை (பூமியில்) வைத்துத் தக்பீர் கூறினார்கள். தமது வழக்கமான ஸஜ்தாவைப் போன்றோ, அல்லது அதைவிட நீண்டதாகவோ ஸஜ்தாச் செய்து பின்புறம் தலையை உயர்த்தியவாறே தக்பீர் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். இங்கு புகாரியின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில், "அஸா தொழுகை" என்று வந்துள்ளது.

352 நபி(ஸல்) அவர்கள், "துல்யதைன் சொன்னது உண்மை தானா?" என்று கேட்க, மக்கள், "ஆமாம்" என்று சைகை செய்தனர்" என்று வந்துள்ளது. புகாரீ முஸ்லிமிலும் இது வந்துள்ளது. ஆனால் அவற்றில் "ஆம்" என்று கூறினர் என வந்துள்ளது.

353 அபூதாவூதின் மற்றோர் அறிவிப்பில், (இரண்டு ரக்அத்துடன் சலாம் சொல்லி விட்டோம் என்ற) உறுதியை அல்லாஹ் ஏற்படுத்திய பின்னர் தான் அவர்கள் சஹ்வு செய்தார்கள்" என்று வந்துள்ளது.

354 நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குத் தொழ வைத்தார்கள். தொழுகையில் மறதிக்கு ஆளாம், (அதற்குப் பரிகாரமாக) இரு சஜ்தாக்கள் செய்தார்கள். பிறகு லாஇலாஹ இல்லல்லாஹ முஹம்மது ரஸூ லுல்லாஹ் என்னும் தஷ்ஹ்ஹு தை ஓதிவிட்டு சலாம் கொடுத்தார்கள் என இம்ரான் பின் ஹு ஸைன்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ

இது திர்மிதியிலும் ஹஸன் தரத்திலும் ஹாம்மில் 'ஸஹீஹ்' தரத்திலும் பதிவாகியள்ளது.

355 "உங்களில் ஒருவருக்கு அவருடைய தொழுகையில் சந்தேகம் ஏற்பட்டு நாம் மூன்று ரக்அத் தொழுதோமா என்று தெரியாமல் போய்விட்டால் சந்தேகமான(ரக்அத்)தை விட்டு விட்டு உறுதியான (மூன்று ரக்அத்) தின் அடிப்படையில் செயல்படட்டும். (மீதமுள்ள ஒரு ரக்அத்தைத் தொழுதுவிட்டு) பிறகு சலாம் கொடுப்பதற்கு முன்பாக இரண்டு சஜ்தாக்கள் செய்து கொள்ளட்டும். (அதன் காரணமாக) அவர் ஐந்து ரக்அத்கள் தொழுது விட்டிருந்தாலும், அந்த இரு சஜ்தாக்களும் (ஒரு ரக்அத்தின் ஸ்தானத்தில் இருந்து) அவருடைய தொழுகையை இரட்டைப் படை (ஆறு ரக்அத்) எண்ணிக்கையுடையதாக ஆக்கி விடும். அவர் (இந்த இரு சஜ்தாக்கள் செய்ததன் மூலம்) தொழுகையை (3 ∴ 1 ஆக) நிறைவு செய்தவராக ஆகிவிட்டிருந்தால் அது ஷைத்தானின் மூக்கை மண்ணாக்கி (அவமானப்படுத்தி) விட்டதாக அமைந்துவிடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூசயீத் அல்குத்ரீ(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். முஸ்லிம்

356 நபி(ஸல்) அவர்கள் தொழுது விட்டு ஸலாம் கொடுத்தார்கள். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தொழுகையில் புதிதாக ஏதோ சேர்த்துள்ளீர்களா?" என்று வினவப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள், "அது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு "தாங்கள் இத்தனை இத்தனை (ரக்அத்கள்) தொழ வைத்தீர்கள்" என்று மக்கள் (குறிப்பிட்டுக்) கூறினார்கள். (உடனே) தம்முடைய கால்களை திருப்பிக் கொண்டு கிப்லாவை முன்னோக்கி இரண்டு ஸஜ்தா செய்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள். பின்னர் மக்களின் பக்கம் திரும்பி, "தொழுகையில் எதுவும் அதிகப்படுத்தப்பட்டால் நான் உங்களுக்கு நிச்சயம் தெரிவித்திருப்பேன். ஆனால் நானும் உங்களைப் போன்று ஒரு மனிதனேயன்றி வேறில்லை. நீங்கள் மறப்பது போன்றே நானும் மறந்துவிடுகிறேன். எப்போது நான் மறந்து விடுகிறனோ, அப்போது நீங்கள் எனக்கு நினைவூட்டுங்கள்! உங்களில் எவருக்கேனும் தொழுகையில் சந்தேகம் வந்தால் அவர் உறுதியானதை ஆராய்ந்து எடுத்துக் கொண்டு மறதிக்காக இரண்டு ஸஜ்தா செய்து கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

357 "தொழுகையைப் பூர்த்தி செய்து விட்டு, பின்னர் ஸலாம் கொடுத்துவிட்டு, (இரண்டு) ஸஜ்தா மறதிக்காகச் செய்யட்டும்" என்று புகாரீயின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

358 முஸ்லிமுடைய அறிவிப்பில் ஸலாம் மற்றும் பேச்சுக்களுக்குப் பின் இரண்டு ஸஜ்தா மறதிக்காகச் செய்தார்கள் என்று உள்ளது.

359 "எவரேனும் தன் தொழுகையில் சந்தேகம் கொண்டால் அவர் ஸலாம் கொடுத்த பின் இரண்டு ஸஜ்தா (மறதிக்காக) செய்து கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அப்துல்லாஹ் இப்னு ஜஅஃபர்(ரலி) வாயிலாக மர்ஃபூஃ எனும் தரத்தில் அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸாயீயில் உள்ளது.

இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

360 உங்களில் ஒருவர் இரண்டு ரக்அத்துக்கள் தொழும் போது (இரண்டாவது ரக்அத்தில்) தஷஹ்ஹுதில் உட்காரமல்) சந்தேகம் கொண்டால், அவர் முழுமையாக எழுந்து விட்டிருந்தால் அப்படியே நின்று விடட்டும். திரும்ப வேண்டாம். அதனால் அவர் (இறுதியில்) இரண்டு ஸஜ்தா செய்ய வேண்டியதில்லை என முகீரா இப்னு ஷுஅபா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், இப்னு மாஜா மற்றும் தாரகுத்னீ

இங்கு தாரகுத்னீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

361 "இமாமிற்குப் பின்னால் நின்று தொழுபவர் மறதிக்கு ஆளானால் அவர் மீது (ஸஜ்தா) ஸஹ்வு இல்லை. இமாம் மறந்து விட்டால் இமாம் மீதும் அவருக்கு பின்னால் இருப்போர் மீதும் ஸஜ்தா ஸஹ்வு கடமையாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது பைஹகீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

362 "(தொழுகையில் ஏற்படும்) ஒவ்வொரு மறதிக்கும் ஸலாமிற்குப் பின் இரண்டு ஸஜ்தா உள்ளது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸவ்பான்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். அபூ தாவூத்

இது இப்னு மாஜாவில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

363 "இதஸ் ஸமாவுன் ஷக்கத்" மற்றும் 'இக்ரஃ பிஸ்மிரப்பிக்கல்லதீ கலக்' ஆகிய சூராக்கள் ஓதப்பட்ட போது நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஸஜ்தா செய்துள்ளோம் உள அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

364 'ஸாத்' எனும் அத்தியாயத்தை ஓதும் போது ஸஜ்தா அவசியமில்லை. (ஆனால்) அதில் நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தாச் செய்ய நான் பார்த்துள்ளேன் என இப்னு அப்பாஸ்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ

365 நபி(ஸல்) அவர்கள் சூரத்துன் நஜ்மில் ஸஜ்தா செய்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

366 நபி(ஸல்) அவர்களிடம் சூரத்துன் நஜ்மை ஓதிக் காட்டிய போது அவர்கள் அதற்காக ஸஜ்தா செய்யவில்லை என ஸைத் இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

367 நபி(ஸல்) அவர்களிடம் சூரத்துன் நஜ்மை ஓதிக் காட்டிய போது அவர்கள் அதற்காக ஸஜ்தா செய்யவில்லை என ஸைத் இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

367 சூரத்துல் ஹஜ்ஜிற்கு இரண்டு ஸஜ்தாக்களைக் கொண்டு சிறப்பு வழங்குப்பட்டுள்ளது என காலித் இப்னு மஅதான்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

368 "எவர் இந்த இரண்டு ஸஜ்தாக்களைச் செய்யவில்லையோ, அவர் இந்த சூராவை ஓதவேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) வாயிலாக அஹ்மத் மற்றும் திர்மிதீயில் மவ்கூல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

369 "மக்களே! நிச்சயமாக நாம் ஸஜ்தாவுக்கான இறைவசனங்களைக் கடந்து செல்கின்றோம். அப்போது எவர் ஸஜ்தா செய்தாரோ அவர் சரியாகச் செய்தார். எவர் (ஸஜ்தா) செய்யவில்லையோ, அவர் மீது பாவமில்லை" என உமர்(ரலி) கூறினார்கள். புகாரீ

"(ஸஜ்தா வசனத்தை ஓதும் போது) விரும்பிச் செய்பவரைத் தவிர மற்றவர் மீது அல்லாஹ் ஸஜ்தாவைக் கடமையாக்கவில்லை என்றும் அவர்கள் கூறினார்கள் என முஅத்தாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

370 நபி(ஸல்) அவர்கள் எங்கள் முன்பு குர்ஆன் ஓதும்போது ஸஜ்தா வசனங்களைக் கடந்து சென்றால் 'அல்லாஹு அக்பர்' என்று கூறி ஸஜ்தாச் செய்வார்கள். நாங்களும் அவர்களுடன் ஸஜ்தாச் செய்வோம் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

இது லய்யின் (ளஃயீப்) எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

371 நபி(ஸல்) அவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி வருமானால், இறைவனுக்கு நன்றி செலுத்துவதற்காக

நிலத்தில் தம் தலையை வைத்து ஸஜ்தா செய்வார்கள் என அபூ பக்ரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

372 நபி(ஸல்) அவர்கள் நீண்ட ஸஜ்தாச் செய்தார்கள். பின்னர் தமது தலையை உயர்த்தி "என்னிடம் ஜிப்ரீல் வந்து எனக்கு நற்செய்தி கூறினார்" (எனவே) அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் வண்ணமாக நான் ஸஜ்தாச் செய்தேன்" என்று அவர்கள் கூறினார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

373 நபி(ஸல்) அவர்கள் அலீ(ரலி) அவர்களை எமன் நாட்டிற்கு அனுப்பினார்கள். (ஹதீஸ் முழுவதும் சொல்லப்பட்டது) அந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்ற செய்தியை, அலீ(ரலி) அவர்கள் (நபி(ஸல்) அவர்களுக்கு) எழுதினார். நபி(ஸல்) அவர்கள் அக்கடிதத்தைப் படித்ததும் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தும் முகமாக ஸஜ்தாவில் விழுந்து விட்டார்கள் என பரா இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

உபரியான தொழுகைகள் GO TO CHAPTER INDEX

374 நபி(ஸல்) அவர்கள் என்னை நோக்கி, 'என்னிடம் (ஏதாவது) கேள்!" என்று கூறினார்கள். அதற்கு நான், "சுவர்க்கத்தில் தங்களது தோழமையை வேண்டுகிறேன்" என்று கூறினேன். "இதுவல்லாமல் (வேறு ஏதும் கேள்!)" என்று அவர்கள் கூறினார்கள். அதற்கு நான், "(எனக்கு) அதுவே (வேண்டும்)" என்று கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "உன் நாட்டம் நிறைவேறிட அதிகம் ஸஜ்தா செய்து எனக்கு உதவி செய்" என்று கூறினார்கள் என ரபீஆ இப்னு மாலிக் அறிவிக்கிறார். முஸ்லிம்

375 லுஹர் தொழுகைக்கு முன்பு இரண்டு ரக்அத்துக்கள், அதற்குப் பின்பு இரண்டு ரக்அத்துக்கள், இன்னும் மக்ரிப் தொழுகைக்குப் பின்பு வீட்டில் இரண்டு ரக்அத்துக்கள், இன்னும் ஸு ப்ஹு விற்கு முன்பு இரண்டு ரக்அத்துக்கள் (ஆகிய சுன்னத் தொழுகைகளை) நான் நபி(ஸல்) அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டேன் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீ, முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் ஜு ம்ஆவிற்குப் பின்பு வீட்டில் இரண்டு ரக்அத்துக்கள் என்பதும் உள்ளது.

376 ஃபஜ்ருடைய நேரம் வந்து விட்டால் நபி(ஸல்) அவர்கள் சுருக்கமான இரண்டு ரக்அத்துக்களைத் தவிர வேறு எதும் (ஃபர்ளைத் தவிர்த்து) தொழ மாட்டார்கள் என முஸ்லிமில் உள்ளது.

377 'லுஹர்' தொழுகைக்கு முன்பு நான்கு ரக்அத்துக்களையும், ஃபஜ்ர்' தொழுகைக்கு முன்பு இரண்டு ரக்அத்துக்களையும் நபி(ஸல்) அவர்கள் (தொழாமல்) விடமாட்டார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

378 ஃபஜ்ருடைய இரண்டு ரக்அத்துக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் ஆர்வம் காட்டிய அளவு வேறு எந்த உபரித் தொழுகைக்கும் ஆர்வம் காட்டியதில்லை என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

379 ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்துகள், உலகம் மற்றும் அதிலுள்ள அனைத்தையும் விடச் சிறந்தவையாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவித்துள்ளனர். முஸ்லிம்

380 "எவர் இரவிலும் பகலிலும் (சுன்னத்தாக உள்ள) பன்னிரெண்டு ரக்அத்துக்கள் தொழுகிறாரோ, அதன் காரணமாக அவருக்கு சுவர்க்கத்தில் ஒரு வீடு, கட்டப்படுகிறது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்முல் முஃமினீன் உம்மு ஹபீபா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில் "சுன்னத்தான தொழுகை" என்று உள்ளது.

381 திர்மிதீயில் 380 வது ஹதீஸ் போன்றே உள்ளது. மேலும் லுஹருக்கு முன்பு நான்கு ரக்அத்துக்கள். அதற்குப் பின் இரண்டு ரக்அத்துக்கள். இன்னும் மக்ரிபிற்குப் பின்பு இரண்டு ரக்அத்துக்கள், இன்னும் இஷாவிற்குப் பின்பு இரண்டு ரக்அத்துக்கள், இன்னும் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு இரண்டு ரக்அத்துக்கள் என்பது அதிகமாக உள்ளது.

382 "எவர் லுஹர் தொழுகைக்கு முன்பு நான்கு ரக்அத்துக்களையும், அதற்குப் பின்பு நான்கு ரக்அத்துகளையும் பேணித் தொழுகின்றாரோ, அல்லாஹ் அவர் மீது நரக நெருப்பை விலக்கி விட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள்

கூறியதாக உம்மு ஹபீபா (ரலி) அறிவிக்கிறார்கள். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

383 அஸரு (தொழுகை) க்கு முன்பு எவர் நான்கு ரக்அத்துக்கள் தொழுகிறாரோ அவருக்கு அல்லாஹ் அருள் செய்யட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் திர்மிதீ

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலும் இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

384 "மக்ரிபிற்கு முன்பு தொழுங்கள! மக்ரிபிற்கு முன்பு தொழுங்கள்!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மூன்றாவது முறை கூறும் போது "விரும்பியவர்" எனக் கூறினார்கள். மக்கள் அதை (கண்டிப்பான) சுன்னத்தாக ஆக்கிக் கொள்வதை விரும்பாமல் தான் அப்படிக் கூறினார்கள்" என்று அப்துல்லாஹ் இப்னு முகஃப்பல் அல்முஸ்னீ (ரலி) அறிவிக்கிறார். புகாரீ

385 இப்னு ஹிப்பானுடைய மற்றோர் அறிவிப்பில் மக்ரிபிற்கு முன்பு நபி (ஸல்) அவர்கள் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவார்கள் என்று உள்ளது.

386 சூரியன் மறைந்ததும் நாங்கள் இரண்டு ரக்அத்துக்கள் தொழுபவர்களாக இருந்தோம். (அதைக் காணும்) நபி (ஸல்) அவர்கள் அவற்றைக் கட்டாயம் தொழுதாக வேண்டும் எனக் கட்டளையிடவுமில்லை தொழக் கூடாதென எங்களுக்கு ஏவுபவர்களாகவும் இல்லை என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள் என முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

387 "சூரத்துல் ஃபாத்திஹா ஓதினார்களா?" என நான் கேட்கும் அளவிற்கு நபி (ஸல்) அவர்கள் சுப்ஹு தொழுகைக்கு முன்புள்ள இரண்டு ரக்அத்துக்களையும் சுருக்கமாகத் தொழுவார்கள் என்று ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

388 நபி (ஸல்) அவர்கள் ஃபஜ்ருடைய (முன் சுன்னத்தான) இரண்டு ரக்அத்துக்களில் 'குல்யா அய்யுஹல் காஃபிரூன்' மற்றும் 'குல் ஹு வல்லாஹு ' ஓதுவார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

389 நபி (ஸல்) அவர்கள் ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்துக்கள் தொழுது விட்டால் வலப் பக்கமாகச் சாய்ந்து விட்டால் வலப்பக்கமாகச் சாய்ந்து படுத்துக் கொள்வார்கள் என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்.

390 "உங்களில் எவரேனும் சுப்ஹு த் தொழுகைக்கு முன்பு இரண்டு ரக்அத்துக்கள் தொழுது விட்டால், வலப் பக்கமாக ஒருக்களித்து (சிறிது நேரம்) படுக்கட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், அஹ்மத் மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

391 "இரவுத் தொழுகை இரண்டிரண்டு ரக்அத்களாகும். எவராவது காலையாகி விடும் என்று அஞ்சினால், அவர் ஒரு ரக்அத் (வித்ரு) தொழுது கொள்ளட்டும். அது அவர் தொழுத தொழுகையை ஒற்றையாக்கி விடும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

392 "இரவு மற்றும் பகல் தொழுகைகள் இரண்டிரண்டு ரக்அத்கள் ஆகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா, நஸயீ.

மேலும் இது இப்னு ஹிப்பானி 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

393 "ஃபர்ளுத் தொழுகைகளுக்குப் பின்பு சிறந்த தொழுகை இரவுத் தொழுகையாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

394 வித்ருத் தொழுகை முஸ்லிம் மீது அவசியமானதாகும். எவராவது ஐந்து ரக்அத்துக்கள் வித்ரு தொழ விரும்பினால் தொழுது கொள்ளட்டும். எவரேனும் மூன்று ரக்அத்துக்கள் தொழ விரும்பினால் தொழுது கொள்ளட்டும். எவரேனும் ஒரு ரக்அத் தொழ விரும்பினாலும் தொழுது கொள்ளட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஅய்யூப் அன்சாரி (ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நஸாயீயில் மவ்கூஃப் எனும் தரம் மேலோங்கியள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

395 வித்ருத் தொழுகை கடமையாக்கப்பட்ட (ஃபர்ளு) தொழுகை போன்றதல்ல. ஆனால், நபி (ஸல்) அவர்களால் நிறுவப்பட்ட சுன்னத் ஆகும் என்று அலீ அப்னு அபீதாலிப் (ரலி) அறிவிக்கிறார். திர்மிதீயில் இது ஹஸன் எனும்

தரத்திலும், நஸாயீ மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

396 நபி(ஸல்) வேர்ள் ரமளான் இரவில் (பள்ளிவாசலில்) நின்று வணங்கினார்கள். பின்னர் அடுத்துவரும் இரவில் மக்கள் அவர்களை எதிர்பார்த்து இருந்தார்கள். ஆனால் அவர்கள் வெளிவரவில்லை. மேலும், "உங்கள் மீது வித்ரு கடமையாக்கப்பட்டு விடுமென நான் அஞ்சுகிறேன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான்

397 "அல்லாஹ் உங்களுக்கு ஒரு தொழுகையை (உங்களின் மற்ற தொழுகைகளுக்கு) வலு சேர்க்கும் விதத்தில் கொடுத்துள்ளான். அது சிவப்பு ஒட்டகங்களை விட உங்களுக்குச் சிறந்ததாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அது எந்தத் தொழுகை?" என்று நாங்கள் வினவினோம். "இஷாவிற்கு, ஃபஜ்ரு நேரம் வருவதற்கும் இடையிலுள்ள வித்ருத் தொழுகை" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என காரிஜா இப்னு ஹு தாஃபா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

398 அம்ர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கும் ஹதீஸ் அஹ்மதில் இடம் பெற்றுள்ளது. அது 397வது ஹதீஸ் போன்றதாகும். அபூ தாவூத். இது லய்யின் (ளஃயீப்) எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

400 அபூஹு ரைரா(ரலி) வாயிலாக அஹமதில் இடம் பெற்றுள்ள ஹதீஸ் 399வது ஹதீஸ் ளயீஃப் என்பதற்குச் சாட்சியாக உள்ளது.

401 நபி(ஸல்) அவர்கள் ரமலான் மாதத்திலும், அதுவல்லாத நாட்களிலும் பதினோரு ரக்அத்திற்கு மேல் தொழுவார்கள். அதனுடைய அழகையும், நீளத்தையும் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பின்னர் நான்கு ரக்அத்துக்கள் தொழுவார்கள். அதனுடைய அழகையும், நீளத்தையும் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பின்னர் நான்கு ரக்அத்துக்கள் தொழுவார்கள். அதனுடைய அழகையும் நீளத்தையும் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பின்னர் மூன்று ரக்அத்துக்கள் தொழுவார்கள். அதனுடைய அழகையும், நீளத்தையும் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பின்னர் மூன்று ரக்அத்துக்கள் தொழுவார்கள். நான் (ஒருமுறை) "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! வித்ருக்கு முன்பு தாங்கள் தூங்குகிறீர்களே!" என்று கேட்டேன். அதற்கு, "ஆயிஷாவே! என்னுடைய இரண்டு கண்களும் தூங்கும். என்னுடைய இதயம் தூங்காது" என்று பதில் கூறினார்களென ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

402 நபி(ஸல்) அவர்கள் இரவில் பத்து ரக்அத்துக்கள் தொழுவார்கள். இன்னும் ஒரு ரக்அத் வித்ருத் தொழுவார்கள். இன்னும் ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்துக்கள் தொழுவார்கள். இவை தாம் பதிமூன்று ரக்அத்களாகும் என்று புகாரீ, முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில் ஆயிஷா(ரலி) வாயிலாக இடம் பெற்றுள்ளது.

403 இன்னும் நபி(ஸல்) அவர்கள் இரவில் பதிமூன்று ரக்அத்துக்கள் தொழுவார்கள். அவற்றில் வித்ரு ஐந்து தொழுவார்கள். இறுதியிலன்றி இடையில் எங்கும் அமர மாட்டார்கள் என்று ஆயிஷா(ரலி) வாயிலாக அறிவிக்கப்பட்டு உள்ளது. புகாரீ, முஸ்லிம்

404 நபி(ஸல்) அவர்கள் இரவு முழுவதும் வித்ருத் தொழுதுள்ளார்கள். அவர்களது வித்ரு சஹ்ரு நேரத்தில் முடிவடையும் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

405 "அப்துல்லாஹ்வே! இரவில் நின்று வணங்கிக் கொண்டிருந்து, பின்னர் இரவில் நின்று வணங்குவதை விட்டு விட்ட இன்னாரைப் போன்று ஆகிவிடாதே!" என்று நபி(ஸல்) அவர்கள் (எச்சரிக்கையாகக்) கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அமர் இப்னி ஆஸ்(ரலி) அறிவிக்கிறார்.

406 "குர்ஆன் வழங்கப்பட்டவர்களே! வித்ருத் தொழுங்கள். (ஏனெனில்) அல்லாஹ் ஒருவன் அவன் ஒற்றையையே விரும்புகிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

407 "வித்ரை இரவில் உங்களுடைய தொழுகைகளில் இறுதியானதாக ஆக்கிக் கொள்ளுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

408 "ஒரே இரவில் இரண்டு வித்ருகள் இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என தல்க் இப்னு அலீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, மற்றும் திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

409 நபி(ஸல்) அவர்கள் வித்ரு தொழுகையில் சப்பிஹிஸ்மரப்பிக்கல் அஃலா, குல்யா அய்யுஹல் காஃபிரூன், குல்ஹுவல்லாஹு அஹத் ஆகிய சூராக்களை ஓதுவார்கள் என உபய இப்னு கஃப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸாயீ

அவற்றின் இறுதியில் தான் ஸலாம் கொடுப்பார்கள் என்பதும் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

410 அபூ தாவூத் மற்றும் திர்மிதீயுடைய (மற்றோர்) அறிவிப்பில் 409வது ஹதீஸ் போன்றே ஆயிஷா(ரலி) வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அதில் ஒவ்வொரு ரக்அத்திற்கும் ஒரு சூராவையும் மற்றும் இறுதி ரக்அத்தில் குல்ஹுவல்லாஹு அஹத் மற்றும் முஅவ்வதத்தைன் சூராவையும் ஓதுவார்கள் (அத்தியாயம் 113, 114) என்றும் உள்ளது.

411 “நீங்கள் காலை பொழுதையடையும் முன்பு வித்ருத் தொழுது விடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

412 “எவரேனும் சுப்ஹை அடைந்தும் வித்ரு தொழவில்லை என்றால் அவருக்கு வித்ரு இல்லை“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று இப்னு ஹிப்பானில் இடம் பெற்றுள்ளது.

413 “எவரொருவர் வித்ருத் தொழாமல் தூங்கிவிட்டாரோ அல்லது அதை மறந்துவிட்டாரோ அவர் சுப்ஹை அடைந்ததும் அல்லது ஞாபகம் வந்ததும் தொழுது கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

414 “இரவின் இறுதிப் பகுதியில் எழ முடியாதென எவர் அஞ்சுகிறாரோ அவர் இரவின் முதல் பகுதியில் வித்ரைத் தொழுது கொள்ளட்டும். எவருக்கு இரவின் இறுதிப்பகுதியில் எழும் நம்பிக்கை உள்ளதோ அவர் வித்ரை இரவின் இறுதிப்பகுதியில் தொழுது கொள்ளட்டும். ஏனெனில், இரவின் இறுதிப் பகுதியின் தொழுகை (இரவு பகல் இரண்டின் வானவர்களாலும்) வருகை தரப்படும். அதுவே சிறந்ததாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரழி) அறிவிக்கிறார். முஸ்லிம்

415 “ஃபஜ்ர் உதித்துவிட்டால் இரவுத் தொழுகை மற்றும் வித்ருடைய எல்லா நேரமும் போய்விட்டது. நீங்கள் ஃபஜ்ர் உதிப்பதற்கு முன்பு வித்ருத் தொழுது விடுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

416 நபி(ஸல்) அவர்கள் ளுஹா தொழுகை நான்கு ரக்அத்துக்கள் தொழுபவர்களாக இருந்தார்கள். இன்னும் அல்லாஹ் நாடிய அளவு அதிகப்படுத்தவும் செய்வார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

417 ஆயிஷா(ரலி) வாயிலாக அவர்களிடம் “அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ளுஹா தொழுவார்களா?“ என்று கேட்கப்பட்டதற்கு, “பயணத்திலிருந்து அவர்கள் திரும்பினால் தவிர (தொழுதது) இல்லை“ என்று முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

418 “நபி(ஸல்) அவர்கள் ளுஹா தொழுகை தொழுததை நான் ஒரு போதும் கண்டதில்லை. நிச்சயமாக இப்போது நான் இந்த (தொழுகையைத்) தொழுகின்றேன்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார் என்று முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

419 “வெயிலின் காரணமாக சூடேறிய மணல் (ஒட்டகக் குட்டிகள் கால் வைக்க முடியாத அளவு வெப்பமாக) உள்ள நேரமே அவ்வாபீன் தொழுகைக்குரிய நேரமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜைத் இப்னு அர்கம்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

420 “எவர் ளுஹாவை பன்னிரெண்டு ரக்அத்துக்களாகத் தொழுதாரோ, அவருக்காக அல்லாஹ் சுவர்க்கத்தில் ஒரு மாளிகையை எழுப்புகின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது கரீப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

421 நபி(ஸல்) அவர்கள் என்னுடைய வீட்டில் நுழைந்தார்கள். பின்னர் எட்டு ரக்அத்துக்கள் ளுஹா தொழுதார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜமாஅத் தொழுகை மற்றும் இகாமத் GO TO CHAPTER INDEX

422 “தனித்துத் தொழுவதை விட ஜமாஅத்தாக தொழுவது இருபத்தி ஏழு மடங்கு சிறப்பானதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

423 புகாரீ, முஸ்லிமில், “இருபத்தைந்து மட்டும் சிறந்ததாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹு ரைரா(ரலி) அவர்களின் அறிவிப்பொன்று இடம்பெற்றுள்ளது.

424 இதே போன்று அபூஸயீத்(ரலி) வாயிலாக புகாரீயில் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

425 “எவனுடைய கரத்தில் என்னுடைய உயிர் இருக்கிறதோ? அவன் மீது ஆணையாக! விறகுக் கட்டைகளை ஒன்று சேர்க்குமாறு கட்டளையிட்டு விட்டு, பின்னர் பாங்கு சொல்லுமாறு கட்டளையிட்டு விட்டு, எவரேனும் ஒருவரை இமாமத் செய்யுமாறு கட்டளையிட்டு விட்டு, தொழுகைக்கு வராதவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களது இல்லங்களைக் கொளுத்தி விட நான் விரும்புகிறேன். என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக! (ஜமாஅத் தொழுகைக்கு வராமலிருக்கும்) அவர்கள் கொழுத்த சதைப்பற்றுள்ள எலும்போ அல்லது அழகான இருகுளம்புக்கறியோ தமக்குக் கிடைக்கும் என்று அறிவார்களாயின் இஷா தொழுகையில் கட்டாயம் கலந்து கொள்வார்கள்“ என்று கூறினார்கள் என அபூ ஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

426 “நயவஞ்சகர்களுக்கு இஷா மற்றும் ஃபஜ்ர் தொழுகைகள் பெரும் சுமையாக உள்ளன. அவை இரண்டிலும் எவ்வளவு நன்மையுள்ளது என்பதை அவர்கள் அறிந்து கொண்டால் (நடக்க முடியாவிட்டாலும்) தவழ்ந்தபடியாவது வருவார்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

427 நபி(ஸல்) அவர்களிடம் பார்வையற்ற ஒரு மனிதர் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னைப் பள்ளிக்குச் அழைத்துச் செல்ல ஒரு வழிகாட்டி இல்லை“ என்று கூறினார். (உடனே) நபி(ஸல்) அவர்கள் அவருக்கு சலுகையளித்து விட்டார்கள். அவர் திரும்பிச் சென்ற போது அவரை (மறுபடியும்) அழைத்தார்கள். பின்னர் “தொழுகைக்கான பாங்கை நீ செவியேற்கிறாயா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கவர், “ஆமாம்“ என்று பதிலளித்தார். “அப்படியானால் அதற்கு பதிலளி (பள்ளிக்கு வா!) என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

428 “பாங்கைக் கேட்டு விட்டு (தவிர்க்க முடியாத) காரணமின்றி எவரேனும் பள்ளிவாசலுக்கு வரவில்லை எனில், அவருக்குத் தொழுகை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா, தாரகுத்னீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்கி.

இது முஸ்லிமுடைய நிபந்தனைகளுக்குட்பட்ட ஹதீஸாகும். இருப்பினும் சிலர் இது மவ்கூஃப் எனும் தரத்தில் உள்ளது என்று கூறியுள்ளனர்.

429 நான் நபி(ஸல்) அவர்களுடன் ஃபஜ்ர் தொழுதேன். நபி(ஸல்) அவர்கள் தொழுகையை முடித்த போது, தொழாமல் இரண்டு மனிதர்கள் நின்றிருந்தார்கள். அவர்கள் இருவரையும் நபி(ஸல்) அவர்கள் அழைத்து வரச் சொன்னார்கள். அவர்கள் இருவரும் இதயம் படபடத்தவர்களாக (பயந்த நிலையில்) வந்தார்கள். அவர்கள் இருவரிடமும், “எங்களுடன் தொழ எது?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவ்விருவரும், “நாங்கள் எங்கள் இல்லத்தில் தொழுது விட்டோம்“ என்று கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “நீங்கள் இருவரும் இவ்வாறு செய்யாதீர்கள். நீங்கள் இருவரும் உங்களது இல்லங்களில் தொழுதுவிட்டு வந்தபின்பு இமாம் தொழுவதைக் காண்பீர்களாயின், அவருடனும் தொழுது கொள்ளுங்கள். அது உங்கள் இருவருக்கும் உபரியானதாம் (நஃபிலாம்) விடும்“ என்று கூறினார்கள் என ய[illegible]த் இப்னு அல் அஸ்வத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத் அபூ தாவூத், நஸாயீ மற்றும் திர்மிதீ

இது இப்னு ஹிப்பான் மற்றும் திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு அஹமதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

430 “பின்பற்றுவதற்காகவே இமாம் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தக்பீர் கூறும்போது, நீங்களும் தக்பீர் சொல்லுங்கள். அவர் தக்பீர் கூறாதவரை, நீங்களும் தக்பீர் கூறாதீர்கள். அவர் ருகூஃ செய்யும் போது நீங்களும் ருகூஃ செய்யுங்கள். அவர் ருகூஃ செய்யாதவரை நீங்களும் ருகூஃ செய்யாதீர்கள். அவர் ‘சமி அல்லாஹு லிமன் ஹமிதா‘ என்று சொன்னால் நீங்கள் ‘அல்லாஹு ம்ம ரப்பனா லகல் ஹமது‘ என்று சொல்லுங்கள். அவர் உட்கார்ந்து தொழும் போது நீங்களும் உட்கார்ந்து தொழுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

இதன் மூலம் புகாரீ, முஸ்லிமில் உள்ளது.

431 தன்னுடைய தோழர்கள் பின்னால் நின்றிருப்பதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், "முன்னால் வாருங்கள், என்னைப் பின்பற்றுங்கள். உங்களுக்குப் பின்னால் (நின்று) இருப்பவர்கள் உங்களைப் பின்பற்றட்டும்" என்று கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

432 நபி(ஸல்) அவர்கள் ஈச்ச ஓலை வேயப்பட்ட ஒரு கூடார அறை அமைத்து அதில் தொழுதார்கள். அப்போது அவர்களைத் தேடி வந்து பின்தொடர்ந்து வந்து சிலர் அவர்களுடன் தொழுதார்கள். (நீண்ட ஹதீஸ்) அதில், "பர்ளு தொழுகையைத் தவிர மற்ற தொழுகையை ஆண்கள் தங்களது வீட்டில் தொழுவதே சிறந்தது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸைத் இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

433 முஆத்(ரலி) தம்முடைய தோழர்களுக்கு இஷா தொழுகை நடத்தும் போது நெடுநேரம் தொழ வைத்தார்கள். (அதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள்,) "முஆதே! நீர் குழப்பத்தை உண்டாக்குபவராக இருப்பதை விரும்புகிறாயா? நீ மக்களுக்கு இமாமத் செய்தால் வஷ்ஷம்ஸி, வளுஹா(91), ஸப்பி ஹிஸ்மரப்பிக்க அஃலா(87) இக்ரஃ பிஸ்மி ரப்பிக்க(96), வல்லைலி இதாயக்ஷா (92) (போன்ற சூராக்களை) ஓதுவீராக!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

434 நபி(ஸல்) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது மக்களுக்கு (இமாமத் செய்து) தொழவைத்ததைப் பற்றிக் கூறுகையில்..... "அப்போது நபி(ஸல்) அவர்கள் வந்து அபூபக்ர்(ரலி) அவர்களுக்கு இடப் பக்கமாக அமர்ந்து கொண்டார்கள். அமர்ந்த படியே மக்களுக்குத் தொழ வைத்தார்கள். அபூ பக்ர்(ரலி) நபி(ஸல்) அவர்களை நின்றவாறு பின் தொடர்ந்தார்கள். மக்கள் அபூ பக்ர்(ரலி) அவர்களைப் பின் தொடர்ந்தார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

435 "உங்களில் எவரேனும் மக்களுக்கு இமாமத் செய்தால் தொழுகையில் (நீண்ட நேரமாக்காமல்) இலேசாக்கிக் கொள்ளட்டும். ஏனெனில், அவர்களில் சிறியவர்களும், வயோதிகர்களும், பலவீனர்களும், தேவையுடையோரும் இருக்கிறார்கள். நீங்கள் தனித்து தொழும் போது விரும்பியவாறு தொழுது கொள்ளுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

436 நான் உண்மையாக நபி(ஸல்) அவர்களிடமிருந்து உங்களிடம் வந்துள்ளேன். அவர்கள், "தொழுகை நேரம் வந்து விட்டால் உங்களில் எவரேனும் ஒருவர் பாங்கு சொல்லுங்கள். இன்னும் உங்களில் குர்ஆனை அதிகம் அறிந்தவர் இமாமத் செய்யுங்கள்" என்று கூறினார்கள் என என்னுடைய தந்தை என்னிடம் கூறினார் என்று அம்ர் இப்னு ஸலமா அறிவிக்கிறார். மேலும், "அப்போது என்னைத் தவிர குர்ஆனை அதிகம் அறிந்தவர் (எங்களில்) எவரும் இல்லை. (எனவே) என்னை இமாமாக முன்னிறுத்துவார்கள். அப்போது (எனக்கு) ஆறு அல்லது ஏழு வயது இருக்கும்" என்றும் அம்ர் இப்னு ஸலமா(ரழி) கூறினார். புகாரீ, அபூ தாவூத் மற்றும் நஸாயீ

437 எவர் குர்ஆனை அதிகம் கற்றுள்ளாரோ, அவா இமாமத் செய்யட்டும். அதில் எல்லோரும் சமமாக இருந்தால் அவர்களில் சுன்னாவை அதிகம் அறிந்தவரும், அதிலும் எல்லோரும் சமமாக இருந்தால் அவர்களில் ஹிஜ்ரத்தில் முந்தியவரும், அதிலும் எல்லோரும் சமமாக இருந்தால், அவர்களில் இஸ்லாத்தை முதலில் ஏற்றவர் (இமாமத் செய்யட்டும்) என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்.

மற்றோர் அறிவிப்பின்படி (அவர்களில் வயது கூடியவர்) என்றும் மேலும் அதிகாரம் பெற்றவர் இருக்கும் நிலையில் மற்றவர் இமாமத் செய்ய வேண்டாம் என்றும் ஒருவருடைய இல்லத்தில் அவருக்கே உரிய படுக்கையில் அவரின் அனுமதியின்றி அமர வேண்டாம் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

438 "பெண் ஆணுக்கும், கிருாமவாசி முஹாஜிருக்கும், பாவி இறை நம்பிக்கையாளனுக்கும் (மூஃமினுக்கும்) இமாமத் செய்ய வேண்டாம் என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர்(ரலி) வாயிலாக இப்னு மாஜாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

439 "உங்கள் வரிசைகளை (ஸஃப்புகளை) சேர்த்துக் கொள்ளுங்கள். இன்னும் அவற்றுக்கிடையில் நெருக்கத்தை ஏற்படுத்துங்கள். இன்னும் கழுத்துக்களை ஒன்றுக்கொன்று நேராக வைத்துக் கொள்ளுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

440 “ஆண்களுடைய சிறந்த வரிசை மறுமைப்பலன் அதிகமாகக் கிடைக்கும் வரிசை (ஸஃப்) முதலில் உள்ளதாகும். இன்னும் அதில் சிறப்பற்றது மறுமைப்பலன் குறைவாகக் கிடைக்கும் வரிசை இறுதியில் உள்ளதாகும். பெண்களுடைய சிறந்த வரிசை (ஸஃப்) இறுதியில் உள்ளதாகும். அதில் சிறப்பற்றது முதலில் உள்ளதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

441 நபி(ஸல்) அவர்களுடன் ஓர் இரவில் தொழுத போது நான் அவர்களுக்கு இடப்பக்கமாக நின்றேன். (அப்போது) நபி(ஸல்) அவர்கள் என் தலையை பின்பக்கமாகப் பிடித்து என்னை அவர்களுக்கு வலப்பக்கமாக ஆக்கினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

442 நபி(ஸல்) அவர்களுடன் தொழுத போது அவர்களுக்குப் பின்னால் நானும் ஓர் அனாதையும் நின்றோம். எங்களுக்குப் பின்னால் (என்னுடைய தாய்) உம்முஸு லைம் நின்றார் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

443 தொழுகையில் நபி(ஸல்) அவர்கள் ருகூஃவில் இருக்கும் போது, வரிசையை (ஸஃப்பை) அடைவதற்கு முன்பே நான் ருகூஃ செய்ததால், “அல்லாஹ் உம் ஆர்வத்தை அதிகப்படுத்தட்டும். இனிமேல் இவ்வாறு செய்யாதீர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ பக்ரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

“ஸஃப்பீல் சேராமலேயே ருகூஃ செய்து, பின்னர் (குனிந்தவாறு) நடந்து (ஓடிச்) சென்று ஸஃப்பில் சேர்ந்தேன்“ என்பது அபூ தாவூதில் அதிகமாக இடம் பெற்றுள்ளது.

444 ஸஃப்பிற்குப் பின்னால் தனியாகத் தொழுது கொண்டிருந்த ஒருவரைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் அவரைத் திரும்பத் தொழுமாறு கட்டளையிட்டாகள் என வாயிலாக இப்னு மஅபத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

445 “ஸஃப்பிற்குப் பின்னால் தனித்து நிற்பவருக்குத் தொழுகை இல்லை“ என்று தல்க் இப்னு அலீ(ரலி) அறிவிக்கிறார். இன்னும் வாபிஸா(ரலி) வாயிலாக, “நீ ஏன் அவர்களுடன் (ஸஃப்பில்) சேரவில்லை?“ அல்லது ஏன் ஒருவரை (பின்னால் உன்னுடன்) இழுத்துக் கொள்ளவில்லை“ என்பது தபரானியில் அதிகமாக உள்ளது.

446 “தொழுகைக்கான இகாமத்தை நீங்கள் செவியேற்றால் அத்தொழுகையின் பக்கம் செல்லுங்கள். இன்னும் அமைதியைக் கடைபிடியுங்கள். மேலும் விரைந்து (ஓடி) வராதீர்கள். மேலும் தொழுகையில் நீங்கள அடைந்த அளவு தொழுது விட்டு பின்னர் அதை (எழுந்து) பூர்த்தியாக்குங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

447 “ஒரு மனிதர் தனித்துத் தொழுவதைவிட மற்றொருவருடன் இணைந்து தொழுவது அதிகம் நன்மையானதாகும். மேலும் ஒரு மனிதர் மற்றொரு மனிதருடன் தொழுவதைவிட இரண்டு மனிதர்களுடன் இணைந்து தொழுவது அதிகம் நன்மையானதாகும். இவ்வாறே எவ்வளவு அதிகமாகிறார்களோ அந்த அளவு அல்லாஹ்விடம் சிறந்ததாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உபய் இப்னு கஅப்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

448 என்னுடைய வீட்டாருக்கு இமாமத் செய்யுமாறு என்னை நபி(ஸல்) அவர்கள் பணித்தார்கள் என உம்மு வரகா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

449 மக்களுக்கு இமாமத் செய்வதற்காக நபி(ஸல்) அவர்கள் இப்னு உம்மி மக்தூம்(ரலி) அவர்களை (மதீனாவின்) பிரதிநிதியாக்கினார்கள். அவர் பார்வையற்றவராக இருந்தார் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத்

450 449வது ஹதீஸ் போன்றே ஆயிஷா(ரலி) வாயிலாக இப்னு ஹிப்பானில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

451 “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை, என்று எவர் சொன்னாரோ? அவருக்குத்

தொழுகை நடத்துங்கள். இன்னும், வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை' என்று எவர் சொன்னரோ அவருக்குப் பின்னால் தொழுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது ளயீ.ஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

452 "உங்களில் எவரேனும் தொழுகைக்கு வந்தால் இமாம் எந்நிலையில் (எவ்வாறு செய்து கொண்டு) இருக்கிறாரோ அவரும் அவ்வாறே செய்யட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ இப்னு அபீ தாலிப்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீ.ஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பயணி மற்றும் நோயாளிகளின் தொழுகை GO TO CHAPTER INDEX

453 முதலில் தொழுகை இரண்டு ரக்அத்துக்கள் தான் கடமையாக்கப்பட்டது. பின்னர் அது பயணத்திற்காக வைத்துக் கொள்ளப்பட்டது முழுத் தொழுகை பயணியல்லாதோருக்காக (நான்காகப்) பூர்த்தியாக்கப்பட்டது என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

454 பின்னர் ஹிஜ்ரத் செய்தவுடன் நான்கு ரக்அத்துக்கள் கடமையாகின. மேலும், பயணிகளுக்கு முதல் அளவு தொழுகையே (கடமையாக) இருந்தது என்று புகாரீயில் இடம் பெற்றுள்ளது.

455 "மக்ரிபைத் தவிர, ஏனெனில், அது பகலின் வித்ராகும். இன்னும் சுப்ஹைத் தவிர, ஏனெனில், அதில் கிராஅத் நீண்டதாகும்" என்பது அஹ்மதில் அதிகப்படியாக இடம்பெற்றுள்ளது.

456 நபி(ஸல்) அவர்கள் பயணத்தில் கஸராகவும், முழுமையாகவும் தொழுவார்கள். நோன்பு, நோற்றும், நோற்காமலும் இருப்பார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். ஆயினும், இது ம.ஃலூல் எனும் தரத்திலுள்ளது.

457 "அல்லாஹ் தனக்கு மாறு செய்வதை எவ்வாறு வெறுக்கிறானோ, அவ்வாறே தான் அளித்த சலுகையை நிறைவேற்றுவதை விரும்புகிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

இது இப்னு குஸைமா மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றோர் அறிவிப்பில், "எவ்வாறு தன்னால் வலியுறுத்தப்பட்டதை விரும்புகிறானோ" என்று உள்ளது.

458 நபி(ஸல்) அவர்கள் மூன்று மைல் அல்லது மூன்று .ஃபர்ஸக்குகள் பயணம் மேற்கொண்டால் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

459 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் மதீனாவிலிருந்து மக்காவிற்குச் சென்றோம். நாங்கள் மதீனா திரும்பும் வரை நபி(ஸல்) அவர்கள் இரண்டு இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

460 ஓர் அறிவிப்பில் நபி(ஸல்) அவர்கள் பத்தொன்பது நாட்கள் தங்கினார்கள். (அவற்றில்) கஸர் செய்தார்கள் என்றும், மற்றோர் அறிவிப்பில் "மக்காவில் பத்தொன்பது நாட்கள்" என்றும் இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

அபூ தாவூதுடைய ஓர் அறிவிப்பின்படி "பதினேழு நாட்கள்" என்றும், மற்றோர் அறிவிப்பில் "பதினைந்து நாட்கள்" என்றும் உள்ளது.

461 நபி(ஸல்) அவர்கள் தபூக்கில் இருபது நாட்கள் தங்கி கஸர் செய்தார்கள் என ஜாபிர்(ரலி) வாயிலாக அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

463 நபி(ஸல்) அவர்கள் சூரியன் உச்சி சாய்வதற்கு முன்பு பயணத்தைத் தொடங்கினால், லுஹர் தொழுகையை அஸர் வரை பிற்படுத்துவார்கள். பின்னர் இறங்கி இரண்டையும் சேர்த்துத் தொழுவார்கள்.

(அவர்கள் பயணம் மேற்கொள்ளும் போது) சூரியன் உச்சி சாய்ந்து விட்டால் லுஹர் தொழுவார்கள். பின்னர் பயணத்தை தொடங்குவார்கள். புகாரீ, முஸ்லிம்

"லுஹர் மற்றும் அஸரைத் தொழுவார்கள். பின்னர் பயணத்தைத் தொடங்குவார்கள்" என்று ஹாம்மில் உள்ளது.

இன்னும் அபூ நயீம் முஸ்தஹ்ரிஜ் முஸ்லிமில்ல, “அவர்கள் பயணத்தில் இருக்கும்போது சூரியன் அடிசாய்ந்து விட்டால் லுஹர் மற்றும் அஸரையும் சேர்த்துத் தொழுவார்கள். பின்னர் பயணத்தைத் தொடங்குவார்கள்“ என்று உள்ளது.

464 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் தபூக் யுத்தத்திற்குச் சென்றோம். (அப்போது) நபி(ஸல்) அவர்கள் ளுஹரையும், அஸரையும் இன்னும் மக்ரிபையும், இஷாவையும் சேர்த்துத் தொழுதார்கள் என்று முஆத்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

465 “நான்கு ‘புர்த்‘துகளுக்குக் குறைந்த தூரத்தில் - மக்காவிலிருந்து உஸ்ஃபான் வரையுள்ள அளவு - கஸர் செய்யாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இது இப்னு குஸைமாவில் மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மவ்கூஃப் என்பதே சரியான கருத்தாகும்.

466 “பாவம் செய்து விட்டால் பாவமன்னிப்புத் தேடிக் கொள்பவர்களும், பயணம் செய்தால் கஸர் செய்து நோன்பை விட்டு விடுபவர்களும் என்னுடைய உம்மத்தில் சிறந்தவர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

இது தபரானீயில் ளயீஃப் எனும் தரத்திலும், ஸயீத் இப்னு முஸய்யபில் முர்ஸல் எனும் தரத்திலும் பைஹகீயில் முக்தஸராகவும் பதிவாகியள்ளது.

467 எனக்கு மூல வியாதி இருந்தது. எனவே, நபி(ஸல்) அவர்களிடம் தொழுகையைப் பற்றிக் கேட்டேன். அதற்கு, “நீ நின்று கொண்டு தொழு! முடியவில்லை என்றால் அமர்ந்து கொண்டு தொழு! அதுவும் முடியவில்லை என்றால் வலப் பக்கமாக ஒருக்களித்துப் படுத்துக் கொண்டு தொழு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இம்ரான் இப்னு ஹுஸைன்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

468 நபி(ஸல்) அவர்கள் ஒரு நோயாளியை நலம் விசாரிக்கச் சென்றார்கள். அந்த நோயாளி தலையணையில் ஸஜ்தா செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். அதைத் தூக்கி எறிந்தார்கள். பின்னர், “முடிந்தால் பூமியில் தொழு. இல்லையென்றால், சமிக்ஞை மூலம் தொழுது கொள்! ருகூஉவை விட ஸஜ்தாவிற்கு சிரத்தைச் சற்றுத் தாழ்த்திக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹுஸைன்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

இது அபூ ஹாதமில் மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

469 நபி(ஸல்) அவர்கள் சம்மணமிட்டுத் தொழுததை நான் பார்த்துள்ளேன் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். நஸாயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜும்ஆத் தொழுகை

GO TO CHAPTER INDEX

470 “மக்கள் (தங்களது) ஜும்ஆத் தொழுகைகளை விட்டு விடுவதைத் தவிர்க்க வேண்டும். இல்லையெனில் அல்லாஹ் அவர்களுடைய இதயங்களில் முத்திரை பதித்து விடுவான். அவர்கள் (பாவத்தில் மூழ்கி) மதி மறந்தவர்களாய் ஆகி விடுவார்கள்“ என நபி(ஸல்) அவர்கள் மிம்பர் கட்டையின் மீது (நின்று) கூற நாங்கள் கேட்டிருக்கிறோம் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) மற்றும் அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

471 நபி(ஸல்) அவர்களுடன் நாங்கள் ஜும்ஆ தொழுது விட்டுத் திரும்புவோம். அப்போது உட்காருவதற்கு சுவரின் நிழல் இருக்காது என்று ஸலமா இப்னு அல் அக்வாஉ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் “நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஜும்ஆ தொழுவோம். அப்போது சூரியன் உச்சி சாய்ந்து விட்டிருக்கும். பின்னர் நாங்கள் திரும்பி, அமர்வதற்கு நிழலைத் தேடுவோம்“ என்று உள்ளது.

472 “நாங்கள் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு தான் மதிய ஓய்வு எடுப்போம் மதிய உணவு அருந்துவோம்“ என்று ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இன்னும் மற்றோர் அறிவிப்பில், “நபி(ஸல்) அவர்களது காலத்தில்“ என்றும் உள்ளது.

473 நபி(ஸல்) அவர்கள் நின்று உரையாற்றிக் கொண்டிருந்தார்கள். அப்போது சிரியா நாட்டிலிருந்து வணிகக் கூட்டம் ஒன்று உள்ளது. மக்கள் எல்லோரும் அதன் பக்கம் சென்றனர். பள்ளிவாயிலில் பனிரெண்டு பேர் மட்டுமே இருந்தனர் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

474 "ஜு ம்ஆ தொழுகையிலோ அல்லது மற்ற தொழுகையிலோ எவர் ஒரு ரக்அத்தை அடைந்து விட்டாரோ அவர் மீதமுள்ளதைப் பூர்த்தியாக்கட்டும். அவருடைய தொழுகை பூர்த்தியாகி விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, இப்னு மாஜா மற்றும் தாரகுத்னீ

இங்கு தாரகுத்னீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. மேலும், இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அபூ ஹாதமில் முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

475 நபி(ஸல்) அவர்கள் நின்று கொண்டு உரையாற்றுவார்கள். பின்னர் (சிறிது நேரம்) அமர்ந்து கொள்வார்கள். பின்னர் எழுந்து நின்று உரையாற்றுவாக்ள். அவர்கள் அமர்ந்து கொண்டு உரையாற்றினார்கள் என்று எவராவது உனக்குச் செய்தி கொடுத்தால் அவர் பொய்யுரைத்தார் என ஜாபிர் இப்னு ஸமுரா(ரலி)(அறிவிக்கிறார். முஸ்லிம்

476 நபி(ஸல்) அவர்கள் உரை நிகழ்த்தும் போது, அவர்களுடைய கண்கள் சிவந்து விடும். சத்தம் உயர்ந்து விடும். கோபம் அதிகரித்து விடும். காலையிலோ, மாலையிலோ தாக்குதல் நடத்த வரும் பகைவர்களைப் பற்றி ஒரு படையை எச்சரிப்பவரைப் பற்றி ஒரு படையை எச்சரிப்பவரைப் போன்று உரையாற்றுவார்கள். பின்னர் "வேதத்தில் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகளில் சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களது வழியாகும். (மார்க்கத்தில்) புதிதாக தோற்றுவிக்கப்படும் ஒவ்வொரு (தீய) செயலும் பித்அத் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழி கேடாகும்" என்று கூறுவார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில், வெள்ளிக்கிழமை உரையில், நபி(ஸல்) அவர்கள் அல்லாஹ்வைப் புகழ்ந்து பாராட்டி, அதற்குப் பின்னர் உரத்த குரலில் பேசுவார்கள் என உள்ளது.

முஸ்லிமின் மற்றோர் அறிவிப்பில், "யாரை அல்லாஹ் நேர்வழிப்படுத்திவிட்டானோ, அவரை வழி கெடுப்பவர் யாரும் இல்லை. இன்னும் யாரை அல்லாஹ் வழி கெடுத்து விட்டானோ, அவரை நேர்வழிப்படுத்துபவர் யாரும் இல்லை" என உள்ளது.

நஸயீயில் "ஒவ்வொரு வழி கேடும் நரகத்தையே சேரும்" என்று உள்ளது.

477 "தொழுகையை நீட்டிக் கொண்டு, உரையைச் சுருக்கிக் கொள்வது மார்க்க அறிவின் அடையாளமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

478 நபி(ஸல்) அவர்கள் கா∴ப்வல் குர்ஆனில் மஜீத் (50வது அத்தியாயம்) என்பதை ஒவ்வொரு ஜு ம்ஆவிலும் மக்களுக்கு உரையாற்றும் போது மிம்பரில் இருந்தபடி ஓதுவார்கள். நான் இதை (அங்கு) அவர்களிடமின்றி வேறு எவரிடமும் கேட்டு மனனம் செய்யவில்லை என்று உம்மு ஹிஷாம் பின்த் ஹாரிஸா இப்னு அன்னு∴மான்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

477 "ஜு ம்ஆ தினத்தில் இமாம் உரையாற்றிக் கொண்டிருக்கும் நிலையில், எவர் பேசுகிறாரோ அவர் புத்தகங்களைச் சுமக்கும் கழுதை போலாவார். மேலும் அவரிடம் 'அமைதியாக இரு!" என்று எவர் கூறினாரோ அவருக்கும் ஜு ம்ஆ இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

இது புகாரீ மற்றும் முஸ்லிமில் மர்∴பூ∴ எனும் தரத்தில் அபூஹு ரைரா(ரலி) வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

480 "ஜு ம்ஆ தினத்தன்று இமாம் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நிலையில் உன்னுடைய நண்பரிடம், "அமைதியாக இரு!" என்று நீர் கூறினால், உன்னுடைய ஜு ம்ஆவை நீ வீணடித்து விட்டாய்"

481 ஜு ம்ஆ தினத்தன்று (பள்ளிவாசலில்) நபி(ஸல்) அவர்கள் உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது ஒரு மனிதர் நுழைந்தார். அவரிடம் "நீர் தொழுது விட்டீரா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு அவர், "இல்லை" என்று சொன்னார். (அதற்கு), "எழு! இரண்டு ரக்அத்துக்கள் தொழு!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

482 நபி(ஸல்) அவர்கள் ஜு ம்ஆத் தொழுகையில் சூரத்துல் ஜு ம்ஆ மற்றும் சூரத்துல் முனா∴பிகீன் ஆகியவற்றை ஓதுபவராக இருந்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

483 நபி(ஸல்) அவர்கள் இரண்டு பெருநாட்கள் மற்றும் ஜு ம்ஆவில் 'ஸப்பிஹிஸ்ம ரப்பிக்கல் அ∴லா, மற்றும் 'ஹல்

அதாக ஹதீஸு ல் காஷியா‘ ஓதுவார்கள் என நு∴மான் இப்னு பஷீர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

484 (பெருநாளும் ஜு ம்ஆ நாளும் ஒரே நாளாக அமைந்து விடும் போது) நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகையை தொழுது விட்டு ஜு ம்ஆவிற்கு சலுகையளித்தார்கள். பின்னர், “எவர் (ஜு ம்ஆ) தொழ விரும்புகிறாரோ அவர் தொழுது விரும்புகிறாரோ அவர் தொழுது கொள்ளட்டும்“ என்று கூறினார்கள் என ஸைத் இப்னு அர்கம்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

485 “உங்களில் எவரேனும் ஜு ம்ஆ தொழுது விட்டால், அதன் பின்னர் நான்கு ரக்அத்துகள் தொழுது கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். முஸ்லிம்

486 “நீ ஜு ம்ஆ தொழுது விட்டால், நீ பேசாத வரை அல்லது வெளியேறாத வரை அதனுடன் வேறு எந்தத் தொழுகையையும் இணைக்காதே! நாங்கள் பேசாத வரை அல்லது வெளியேறாத வரை ஒரு தொழுகையுடன் மற்றொரு தொழுகையை இணைக்கக் கூடாது என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அதனையே எங்களுக்குக் கட்டளையிட்டார்கள் என்பதையும் ஸாயிப் இப்னு ய[illegible]த்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

487 “எவரொருவர் குளித்து விட்டு, பின்னர் ஜு ம்ஆவிற்கு வந்து, அவரால் முடிந்த அளவு தொழுதுவிட்டு, பின்னர் இமாம் உரையை முடிக்கும் வரையிலும் அமைதியாக இருந்து, பின்னர் அவருடன் தொழுகின்றாரோ, அவருடைய அந்த ஜு ம்ஆவுக்கும் இடையில் அவர் செய்யும் பிழைகளும் மேற்கொண்டு மூன்று நாட்களுக்கு அவர் செய்யும் பிழைகளும் அவருக்காக மன்னிக்கப்படுகின்றன“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

488 நபி(ஸல்) அவர்கள் ஜு ம்ஆ நாளைப் பற்றிக் கூறினார்கள். “இதில் ஒரு நேரம் இருக்கிறது. ஒரு முஸ்லிம் அடியான் தொழுதபடி நின்றிருக்கும் நேரம் அதன் நேரத்துடன் ஒத்தமைந்து விடுமாயின் அப்போது அவன் அல்லாஹ்விடம் எதைக் கேட்டாலும் அவன் அதை அவனுக்குக் கொடுக்காமல் இருப்பதில்லை என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். இன்னும் தன்னுடைய கரத்தால் அதன் அளவைக் குறைவாகக் சுட்டிக் காண்பித்தார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“அந்த நேரம் சொற்பமான நேரம்“ என்றும் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

489 “அந்நேரம் இமாம் (மிம்பரில்) அமர்ந்ததிலிருந்து தொழுகையை முடிக்கும் வரை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன். என, அபூ புர்தா தன் தந்தை வாயிலாக அறிவிக்கிறார். முஸ்லிம்

இது அபூ புர்தாவின் கூற்று என தாரகுத்னீ தீர்மானித்துள்ளார்.

490 “அந்நேரம் அஸர் தொழுகையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை“ என அப்துல்லாஹ் இப்னு ஸலாம் வாயிலாக இப்னு மாஜாவில் இடம் பெற்றுள்ளது.

491 “அந்நேரம் அஸர் தொழுகையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை“ என ஜாபிர்(ரழி) வாயிலாக அபூ தாவூத் மற்றும் நஸயீயிலும் இடம் பெற்றுள்ளன.

இது சம்பந்தமாக 40க்கும் மேற்பட்ட கூற்றுகள் புகாரீயின் விரிவுரையில் இடம் பெற்றுள்ளது.

492 நாற்பது அல்லது அதற்கும் அதிகமான நபர்கள் இருந்தாலே ஜு ம்ஆவிலும், மு∴மினான தொழுகை உண்டு என்பது சுன்னத்தாக இருந்தது என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

தாரகுத்னீ

இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

493 நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு ஜு ம்ஆவிலும், மு∴மினான ஆண்களுக்கும், பெண்களுக்கும் இருந்தார்கள் என, ஸமுரா இப்னு ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார். பஸ்ஸார். இது லய்யின் (ளயீ∴ப்) எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

494 நபி(ஸல்) அவர்கள் (குத்பா) உரையில் குர்ஆன் வசனங்கள் சிலவற்றை ஓதுவார்கள். மேலும், மக்களுக்கு உபதேசம் செய்வார்கள் என ஜாபிர் இப்னு ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

495 “அடிமைகள், பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் ஆகிய நான்கு நபர்களைத் தவிர்த்து ஜு ம்ஆ தொழுகை, ஜமாஅத்துடன் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்“ என்று நபி(ஸல்)

அவர்கள்கூறினார்கள் என தாரிக் இப்னு ஷிஹாப் அறிவிக்கிறார்.

அபூ தாவூத் இதை தாரிக் நபி(ஸல்) அவர்களிடமிருந்து செவியேற்கவில்லை என்று அபூ தாவூத் குறிப்பிட்டுள்ளார். ஹாம்மில் மேற்சொன்ன தாரிக் அபூ மூஸா(ரலி) வாயிலாக இந்த ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

496 "பயணி மீது ஜு ம்ஆ (கடமை) இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். தபரானீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

497 நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் நின்றுவிட்டால், நாங்கள் எங்கள் முகங்களை அவர்களை நோக்கி வைத்துக் கொள்வோம் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

498 497வது ஹதீஸிற்கு சாட்சியாக பராஉ(ரலி) வாயிலாக இப்னு குஸைமாவில் இடம் பெற்றுள்ளது.

499 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஜு ம்ஆவில் பங்கேற்றோம். அப்போது நபி(ஸல்) அவர்கள் தடி அல்லது வில்லைப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள் என, ஹகீம் இப்னு ஹஸன்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

அச்சத்தின் போது தொழும் தொழுகை

GO TO CHAPTER INDEX

500 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் தாத்துர் ரிகாஃ யுத்தத்தின் போது ஸலாத்துல் கவ்ஃப் (அச்சத் தொழுகை) தொழுதோம். அப்போது ஸஹாபாக்களின் ஒரு கூட்டம் ஸஃபை சரி செய்தது. மற்றொரு கூட்டம் எதிரிகளுடன் போராடிக் கொண்டிருந்தது. நபி(ஸல்) அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு ஒரு ரக்அத் தொழுகை நடத்தினார்கள். பின்னர் அவர்கள் நின்றே இருந்தார்கள். பின்னர் அந்தக் கூட்டம் எழுந்து நின்று அவர்களாக மீதித் தொழுகையை நிறைவு செய்தார்கள். பின்னர், அவர்கள் எதிரிகள் முன்பு அணியாக நின்றார்கள். பின்னர், இரண்டாவது அணி தொழுகைக்கு வந்தது. அவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் (முன்புள்ளவர்களுக்குத் தொழுகை நடத்தியது போன்றே) ஒரு ரக்அத் தொழ வைத்தார்கள். பின்னர் அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் தங்களது தொழுகையைப் பூர்த்தியாக்கிய பின்னர் நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்தார்கள் என ஸாலிஹ் இப்னு கவ்வாத்(ரலி) மற்றொரு ஸஹாபியிடமிருந்து அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. ஸாலிஹ் இப்னு கவ்வாத்(ரலி) தன் தந்தையின் வாயிலாக இதை அறிவிப்பதாக இப்னு மன்தஹ் எனம் நூலில் 'மஃதாபுல் மஅரிஃபா' எனும் பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

501 நஜ்து கூட்டத்தாருடன் நடந்த போரில் நபி(ஸல்) அவர்களோடு நான் பங்கு கொண்டேன். அப்போது நாங்கள் எதிரிகள் முன்பு நேருக்கு நேர் அணிவகுத்து நின்றோம். அப்போது நபி(ஸல்) அவர்கள் எழுந்து நின்று எங்கள் அணிக்குத் தொழுகை நடத்தினார்கள். மற்றோர் அணி எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டிருந்தது. நபி(ஸல்) அவர்கள் தம்முடன் (தொழுகையில்) நின்றோருக்கு ஒரு ருகூஃ மற்றும் இரண்டு ஸஜ்தாக்களை நிறைவேற்றினார்கள். பின்னர் அந்த அணியினர் அதுவரை தொழாமலிருந்த அணியினரின் இடத்திற்குச் சென்று விட்டனர். அடுதத அணியினர் வந்தனர். நபி(ஸல்) அவர்கள் அவர்களுக்கு ஒரு ருகூஉ மற்றும் இரண்டு ஸஜ்தாக்களை நிறைவு செய்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள். பின்னர் அவர்கள் எழுந்து நின்று தனித்தனியாக ஒரு ருகூஃ மற்றும் இரண்டு ஸஜ்தாக்கள் செய்து தொழுகையை நிறைவு செய்தனர் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம்பெற்றுள்ளது.

502 நபி(ஸல்) அவர்களுடன் நான் அச்சத் தொழுகையில் பங்கு கொண்டேன். அப்போது நாங்கள் இரண்டு அணிகளை அமைத்தோம். ஒன்று நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் நின்றது. அப்போது எதிரிகள் கிப்லாவிற்கும் எங்களுக்கும் இடையில் இருந்தனர். நபி(ஸல்) அவர்கள், 'அல்லாஹு அக்பர்' என்று கூறினோம். பின்னர் நபி(ஸல்) அவர்கள் ருகூஃ செய்தார்கள். நாங்களும் ருகூஃ செய்தோம். பின்னர் அவர்கள் தம் தலையை உயர்த்தினார்கள். நாங்களும் தலையை உயர்த்தினோம். பின்னர் அவர்களும் அவர்களையடுத்திருந்த அணியினரும் ஸஜ்தா செய்தார்கள். மற்றோர் அணியினர் எதிரிகளின் நெஞ்சிற்கு முன் நின்றிருந்தனர். ஸஜ்தா முடிந்தவுடன் நபி(ஸல்) அவர்களுடனிருந்த அணியினர் எழுந்தனர் என்று ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) மற்றோர் அறிவிப்பின் படி பின்னர் நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தா செய்தார்கள். முதல் அணியினரும் ஸஜ்தா செய்தனர். மற்றோர் அணியினர் எதிரிகளின் நெஞ்சிற்கு முன் நின்றிருந்தனர். ஸஜ்தா முடிந்தவுடன் நபி(ஸல்) அவர்களுடனிருந்த அணியினர் எழுந்தனர் என்று ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) மற்றோர்

அறிவிப்பின்படி பின்னர் நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தா செய்தார்கள். முதல் அணியினரும் ஸஜ்தா செய்தனர். அந்த முதல் அணியினர் எழுந்தவுடன் இரண்டாவது அணியினர் ஸஜ்தா செய்தனர். பின்னர், முதல் அணியினர் (தொழுகைக்காகப்) பின்தங்கிட இரண்டாவது அணி (போருக்காக) முன்னால் சென்றனர். அறிவிப்பாளர் இவ்வாறே அறிவித்தார். பின்னர் இறுதியில் நபி(ஸல்) அவர்கள் ஸலாம் கொடுத்தார்கள். நாங்களும் ஸலாம் கொடுத்தார்கள். முஸ்லிம்

503 அபூ அய்யாஷ் அஸ்ஸு ரகீ(ரலி) வாயிலாக அபூதாவூதில் 502வது ஹதீஸ் போன்றே இடம் பெற்றுள்ளது. அந்தத் தொழுகை உஸ்ஃபான் எனும் இடத்தில் நடந்தது எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

504 ஜாபிர்(ரலி) வாயிலாக நஸயீயில் நபி(ஸல்) அவர்கள் தம்முடைய தோழர்களில் ஒரு அணியினருக்கு இரண்டு ரக்அத்துக்கள் தொழவைத்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள். பின்னர் இரண்டாவது அணியினருக்கும் இரண்டு ரக்அத்துகள் தொழவைத்து விட்டு ஸலாம் கொடுத்தார்கள் என்று பதிவாகியள்ளது.

505 அபூ தாவூதில் 504வது ஹதீஸ் போன்றே அபூ பக்ரா(ரலி) அவர்கள் வாயிலாக இடம் பெற்றுள்ளது.

506 நபி(ஸல்) அவர்கள் அச்சத் தொழுகையை ணரு அணியினருக்கு ஒரு ரக் அத் தொழ வைத்தார்கள். மற்றோர் அணியினருக்கும் ஒரு ரக்அத் தொழ வைத்தார்கள். அவர்கள் தங்களது தொழுகையை (அதற்கு) மேல் பூர்த்தியாக்கவில்லை என ஹு தைஃபா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

507 இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக 506வது ஹதீஸ் போன்றே இப்னு குஸைமாவில் இடம் பெற்றுள்ளது.

508 “அச்சநிலைத் தொழுகை என்பது அத்திசை நோக்கியாவது ஒரு ரக்அத் தொழுவதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். இது பஸ்ஸாரில் ‘ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

509 “அச்சநிலைத் தொழுகையில் ஸஜ்தா ஸஹ்வு இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) வாயிலாக மர்ஃபூஃ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தாரகுத்னீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இருபெருநாட்கள் தொழுகை

GO TO CHAPTER INDEX

510 “எந்த நாளில் மக்கள் நோன்பை நிறைவு செய்து இஃப்தர் செய்கிறார்களோ, அதுவே ஈதல் ஃபித்ருடைய நாளாகும். எந்த நாளில் மக்கள் குர்பானி கொடுக்கிறார்களோ அதுவே குர்பானிப் பெருநாளாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்.

511 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு சிறு பயணக் கூட்டத்தினர் வந்து தாங்கள் நேற்று இரவு பிறை தாங்கள் நேற்று இரவு பிறை பார்த்தாகச் சொன்னார்கள். எனவே, நபி(ஸல்) அவர்கள் நோன்பை விட்டுவிடுமாறும், மறுநாள் காலை தொழுமிடம் செல்லுமாறும் மக்களுக்குக் கட்டளையிட்டார்கள் என, அபூ உமைர் இப்னு அனஸ் இப்னு மாலிக்(ரலி) நபித்தோழர்களாகத் திகழ்ந்த தன்னுடைய சிறிய, பெரிய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத்

இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது. மேலும் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

512 நபி(ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளில் பேரீச்சம் பழங்கள் சிலவற்றை சாப்பிடாமல் (பெருநாள் தொழுகைக்குக்) காலையில் செல்ல மாட்டார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

மற்றோர் அறிவிப்பின்படி இது முஅல்லக் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் அவர்கள் உண்ணும் (பேரீச்சம்பழம்) ஒற்றைப்படையாக இருக்கும் என்று அஹ்மதில் உள்ளது.

513 நபி(ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாளன்று சாப்பிடாமல் (தொழுகைக்காக) வெளியேற மாட்டார்கள். குர்பானிப் பெருநாளில் தொழாதவரை சாப்பிட மாட்டார்கள் என்று இப்னு புரைதா தன் தந்தையின் வாயிலாக அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

514 பருவமடைந்த மற்றும் மாதவிலக்கான (அனைத்துப்) பெண்களையும் பெருநாள் தொழுகைக்கு வெளியே

அனுப்புமாறு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். நற்பணிகளில் மற்றும் முஸ்லிம்களுடைய துஆவில் அவர்கள் பங்கு பெறுவதற்காக. ஆனால், மாத விலக்கான பெண்கள், தொழும் இடத்தின் ஓரப்பகுதியில் இருக்க வேண்டும். என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

515 நபி(ஸல்) அவர்கள், அபூ பக்ர்(ரலி) மற்றும் உமர்(ரலி) ஆகியோர் உரை நிகழ்த்துவதற்கு முன்பு இரு பெருநாள்களிலும் தொழுது வந்தார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

516 நபி(ஸல்) அவர்கள் பெருநாளன்று இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். அதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ (எதுவும்) தொழவில்லை என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, நஸயீ, திர்மிதீ மற்றும் முஸ்னத் அஹ்மத்

517 நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகையை பாங்கு மற்றும் இகாமத் இன்றி தொழுதார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

518 நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தொழுகைக்கு முன்பு எதுவும் தொழ மாட்டார்கள். அவர்கள் தமது இல்லத்திற்குத் திரும்பி விட்டால் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவார்கள் என அபூ ஸயீத்(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

519 நோன்புப் பெருநாளிலும், குர்பானிப் பெருநாளிலும் நபி(ஸல்) அவர்கள் தொழுகை மைதானத்திற்கு செல்வார்கள். முதன் முதலில் தொழுகையைத் தான் தொடங்குவார்கள். பின்னர் எழுந்து, மக்களுக்கு முன்பு நிற்பார்கள். இன்னும் மக்கள் தங்களது வரிசையிலேயே அமர்ந்திருப்பார்கள். அப்போது அவர்களுக்கு உரை நிகழ்த்தி கட்டளை இடுவார்கள் என, அபூ ஸயீத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

520 “நோன்புப் பெருநாள் தொழுகையில் முதல் ரக்அத்தில் ஏழு தக்பீரும் இரண்டாவது ரக்அத்தில் ஐந்து தக்பீரும் உள்ளது. அவை இரண்டிற்கும் பின்னரும் கிராஅத் (குர்ஆனை ஓதுதல்) உண்டு“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ரு இப்னு ஷு ஐப் தம் தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். இந்த ஹதீஸ் புகாரீயில் உள்ளது. இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

521 நபி(ஸல்) அவர்கள் நோன்புப் பெருநாள் மற்றும் குர்பானிப் பெருநாளில் ‘கா∴ப்‘ மற்றும் ‘இக்தரபாத்‘ ஆகிய அத்தியாயங்களை ஓதுவார்கள் என, அபூவாகித் அல் லைஸி(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

522 நபி(ஸல்) அவர்கள் பெருநாளின் போது (செல்லும்) போதும், திரும்பும் போதும்) வெவ்வேறு வழிகளில் சென்று வருவார்கள் என ஜாபிர்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ

523 இப்னு உமர் வாயிலாக அபூதாவூதில் 522-வது ஹதீஸ் போன்றே அறிவிக்கப்பட்டுள்ளது.

524 நபி(ஸல்) அவர்கள் மதீனா வந்ததும் அவர்களுக்கு இரண்டு நாட்கள் இருந்தது. அதில் அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, “அல்லாஹ் அவை இரண்டிற்கும் பதிலாக அவ்விரண்டையும் விடச் சிறந்தவற்றை அளித்து விட்டான். அவை குர்பானிப் பெருநாள் மற்றும் நோன்புப் பெருநாளாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

525 பெருநாள் தொழுகைக்கு நடந்து செல்வது சுன்னத்தாகும் எ அலீ(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

526 ஒரு பெருநாளில் மழை பொழிந்து, அன்று நபி(ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் தொழ வைத்தார்கள் என, அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது லய்யின் (ளயீ∴ப்) எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிரகணத் தொழுகை GO TO CHAPTER INDEX

527 நபி(ஸல்) அவர்களது காலத்தில் (அவர்களது மகன்) இப்ராஹீம் அவர்கள் மரணமடைந்த நாளன்று சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது, “இப்ராஹீமுடைய மரணத்தால் சூரிய கிரகணம் ஏற்பட்டு விட்டது“ என்று மக்கள் கூறலாயினர். அதற்கு, “சூரியனும், சந்திரனும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் இரண்டு அத்தாட்சிகளில் இரண்டு

அத்தாட்சிகளாகும். யாருடைய மரணத்திற்காகவும், வாழ்விற்காகவும் கிரகணம் ஏற்படுவதில்லை. அதை நீங்கள் கண்டுவிட்டால், அது உங்களை விட்டு விலக்கும் வரை அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் தொழுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முகீரா இப்னு ஷு அபா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீயுடைய மற்றோர் அறிவிப்பில், "அது வெளிச்சமாகும் வரை" என்று இடம் பெற்றுள்ளது.

528 "அது உங்கள் முன்பிருந்து தூரமாகும் வரை தொழுங்கள். இன்னும் துஆ செய்யுங்கள்" எனும் வாசகம் அபூபக்ரா(ரலி) வாயிலாக புகாரீயில் உள்ளது.

529 நபி(ஸல்) அவர்கள் கிரகணத் தொழுகையில் சப்தமிட்டு ஓதினார்கள். இரண்டு ரக்அத்தில் ஓதினார்கள். இரண்டு ரக்அத்தில் நான்கு ருகூஃவுகள் மற்றும் நான்கு ஸஜ்தாக்கள் செய்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமுடைய வாசகம் இடம் பெற்றுள்ளது. மற்றோர் அறிவிப்பில் "நபி(ஸல்) அவர்கள் ஓர் அழைப்பாளரை அனுப்பினார்கள். அவர் 'ஜமாஅத் தொழுகை' உள்ளது என்று அழைப்பு விடுத்தார்" என்று உள்ளது.

530 நபி(ஸல்) அவர்களது காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் (அது நீங்குவதற்காக) தொழுதார்கள். சூரத்துல் பகரா ஓதும் அளவுள்ள நேரம் வரை நீண்ட நேரம் நின்றார்கள். பின்னர் ஒரு நீண்ட ருகூஃ செய்தார்கள். பின்னர் தலையை உயர்த்தி நீண்டநேரம் நின்றார்கள். அது முதலில் நின்றது போல் (நீண்டு) இருந்தது. பின்னர் ஸஜ்தா செய்தார்கள். பின்னர் எழுந்து நீண்ட நேரம் நின்றார்கள். அது முதலில் நின்ற நேரத்துக்கும் குறைவானதாக இருந்தது. பின்னர் நீண்டதொரு ருகூஃ செய்தார்கள். அது ருகூஃ உடைய நேரத்தை விடக் குறைவானதாக இருந்தது. பின்னர் தலையை உயர்த்தி நீண்ட நேரம் நின்றார்கள். அது முதலில் நின்ற நேரத்தை விடக் குறைவானதாக இருந்தது. பின்னர் நீண்டதொரு ருகூஃ செய்தார்கள். அது முதல் ருகூஃவுடைய நேரத்தை விடக் குறைவானதாக இருந்தது. பின்னர் தம் தலையை உயர்த்தி, பின்னர் ஸஜ்தா செய்தார்கள். பின்னர் முடித்துக் கொண்டார்கள். அப்போது சூரியன் வெளிச்சமாம் இருந்தது. அப்போது நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரியீன் வாசகம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் சூரிய கிரகணம் ஏற்பட்ட போது "நபி(ஸல்) அவர்கள் எட்டு ருகூஃவுகளுடனும், நான்கு ஸஜ்தாக்களுடனும் தொழுதார்கள் என்று உள்ளது.

531 அலீ(ரலி) வாயிலாக 530 வது ஹதீஸ் போன்றே அறிவிக்கப்பட்டுள்ளது.

532 ஆறு ருகூஃவுகளுடனும் தொழுதார்கள் என ஜாபிர்(ரலி) வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

533 நபி(ஸல்) அவர்கள் ஐந்து ருகூவுடகளுடனும் நான்கு ஸஜ்தாக்களுடனும் தொழுதார்கள். இரண்டாவது ரக்அத்திலும் அவ்வாறே செய்தார்கள் என உபய்இப்னு கஅப்(ரலி) வாயிலாக அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது.

534 பலத்த காற்று வீசும் போது நபி(ஸல்) அவர்கள், மண்டியிட்டு அமர்ந்து கொண்டு , "யா அல்லாஹ்! இதை (எங்களுக்குக்) கருணையாக ஆக்கியருள்! தண்டனையாக ஆக்கிவிடாதே!"என்று பிரார்த்திப்பார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அமர்ந்து கொண்டு, "யா அல்லாஹ்! இதை (எங்களுக்குக்) கருணையாக ஆக்கியருள்! தண்டனையாக ஆக்கிவிடாதே!" என்று பிரார்த்திப்பார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஷ்ஷாஃபிஈ, தப்ரானீ

நபி(ஸல்) அவர்கள் நில நடுக்கத்தின் போது இரண்டு ரக்அத்திலும், ஆறு ருகூவுகளுடனும் தொழுதார்கள். இன்னும், அத்தாட்சிகளுக்கான தொழுகை இவ்வாறு தான்" என்று கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

மேற்கண்டவாறே அலீ இப்னு அபீ தாலிப் வாயிலாக ஷாஃபிஈயில் இடம் பெற்றுள்ளது. அதில் கடைசி வாசகம் மட்டும் இல்லை.

மழை வேண்டித் தொழுகை

GO TO CHAPTER INDEX

535 நபி(ஸல்) அவர்கள் எளிய உடையணிந்து, பணிவானவர்களாக, நிதானமான நடையுடன், இறைவனிடம் மன்றாடியவர்களாக (மதீனா நகரை விட்டு) வெளியே சென்றார்கள். மேலும், பெருநாள் தொழுகை தொழுவது

போன்று (மழை வேண்டி பிரார்த்தித்தவர்களாக) இரண்டு ரக்அத்துகள் தொழுதார்கள். உங்களது இந்த உரை போன்று உரையாற்றவில்லை என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீ, அபூ அவானா மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

536 நபி(ஸல்) அவர்களிடம் மக்கள் மழை பொழியாதிருப்பதைப் பற்றி எடுத்துரைத்தனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தொழுமிடத்திலுள்ள மிம்பருக்கு அனைவரையும் மறுநாள் ஒன்று சேர்க்குமாறு கட்டளையிட்டார்கள். இன்னும் மக்கள் மறுநாள் வெளியேற வேண்டுமென நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். சூரியன் ஓரத்தில் வெளிப்பட்டதும் நபி(ஸல்) அவர்கள் வெளியேறினார்கள். நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் அமர்ந்தார்கள். பின்னர் தக்பீர் கூறினார்கள். இறைவனைப் புகழ்ந்தார்கள். பின்னர், “மக்களே! நீங்கள் உங்கள் நகரத்தின் வறட்சியைப் பற்றி முறையிட்டீர்கள். அல்லாஹ் அவனிடம் துஆ கேட்குமாறு உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அவன் உங்கள் வேண்டுதலை அங்கீகரித்துக் கொள்வான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், “அனைத்துப் புகழும் இறைவனுக்கே! அவன் அம்லங்களின் இரட்சகனாவான். அளவற்ற அருளாளன். நிகரில்லாக் கிருபையுடையவன். தீர்ப்பு நாளின் அதிபதி. வணக்கத்திற்குரியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. அவன் நாடியதைச் செய்வான். எங்கள் இரட்சகனே! நீயே அல்லாஹ்! வணக்கத்திற்குரியவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. நீயோ தேவையற்றவன். நாங்களோ (உன்பக்கம்) தேவையுடையவர்கள். எங்கள் மீது மழையைப் பொழியச் செய்வாயாக! நீ எங்கள் மீது இறக்கக் கூடியதை எங்களுக்கு சக்தியாகவும், முழுமையானதாகவும் ஆக்குவாயாக!“ என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், தமது இரு கரங்களையும் உயர்த்தினார்கள். அவர்களது அக்குளின் வெண்மை தெரியும் அளவு அது மெதுவாக உயர்ந்து கொண்டே போனது. பின்னர். மக்களின் பால் தமது முதுமைகத் திருப்பிக் கொண்டு தம்முடைய போர்வையைத் திருப்பிப் போட்டார்கள். அப்போதும் அவர்கள் தமது இரு கரங்களையும் உயர்த்தியே வைத்திருந்தார்கள். பின்னர், மக்களின் பால் திரும்பி, மிம்பரை விட்டு இறங்கினார்கள். பின்னர் இரு ரக்அத்துக்ள் தொழ வைத்தார்கள். அப்போது அல்லாஹ் வானத்தில் மேகத்தை உண்டாக்கினான். அதில் இடியுடன் சேர்ந்த மின்னலுமிருந்தது. பின்னர் மழை பொழியத் தொடங்கியது என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

537 அப்துல்லாஹ் இப்னு ஸைத் அவர்கள் அறிவித்துள்ள ஸஹீஹ் புகாரீயின் ஹதீஸில போர்வை மாற்றிப் போட்ட சம்பவம், “நபி(ஸல்) அவர்கள் துஆ செய்தவர்களாக கிப்லாவை முன்னோக்கினார்கள். பின்னர், இரண்டு ரக்அத்துக்கள் சத்தமிட்டு ஓதித் தொழ வைத்தார்கள்“ என்று உள்ளது.

538 அபூ ஜஅஃபர் அல் பாம்ர்(ரலி) வாயிலாக தாரகுத்னீயில் “அவர்கள் தமது போர்வையை பஞ்சம் மாற வேண்டும் என்பதற்காகத் திருப்பிப் போட்டார்கள்“ என்று முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

539 வெள்ளிக்கிழமையன்று நபி(ஸல்) அவர்கள் நின்று உரையாறிக் கொண்டிருந்த போது பள்ளிவாசலினுள் ஒரு மனிதர் நுழைந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சொத்துக்கள் நாசமடைந்து விட்டன. வழிகள் அடைக்கப்பட்டு விட்டன. தாங்கள் துஆ செய்யுங்கள்! அல்லாஹ் எங்கள் மீது மழையை இறக்கட்டும்!“ என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள் தமது இரு கரங்களையும் உயர்த்தினார்கள். பின்னர், “அல்லாஹ்வே! எங்கள் மீது மழையைப் பொழிவாயாக! இரட்சகனே! எங்கள் மீது மழை பொழிவாயாக! என்று கூறினார்கள்“ என, அனஸ்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸின் சுருக்கம்) இதில் மழையை நிறுத்தும்படிப் பிரார்த்தித்ததும் இடம் பெற்றுள்ளது என அறிவிப்பாளர் கூறுகிறார். புகாரீ, முஸ்லிம்

540 உமர்(ரலி) அவர்களது காலத்தில் பஞ்சம் ஏற்பட்டால் அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப்(ரலி) அவர்களை மழைக்கு துஆ செய்யுமாறு உமர்(ரலி) அவர்கள் வேண்டுவார்கள். இன்னும், “அல்லாஹ்வே! நபி(ஸல்) (அவர்களது காலத்தில்) அவர்களின் துஆ மூலம் உன்னிடம் மழையை வேண்டுவோம். நீ எங்களுக்கு மழை பொழிவாய்! இப்போது நாங்கள் நபி(ஸல்) அவர்களின் சிறிய தந்தை வாயிலாகக் கேட்கிறோம் எங்கள் மீது மழையைப் பொழிவாயாக!“ என்றும் கூறுவார்கள். “அப்போது எங்கள் மீது மழை பொழியப்படும்“ என, அனஸ்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ

541 மழை பொழிந்த போது நாங்கள் நபி(ஸல்) அவர்களுடனிருந்தோம். அப்போது அவர்கள் தமது (மேல்) ஆடையைக் களைந்தார்கள். அவர்களது உடலில் நீர் பட்டது. மேலும், “இது அல்லாஹ்வுடைய புதிய அன்பாளிப்பாகும்“ என்றும் கூறினார்கள் என அனஸ்(ரழி) அறிவிக்கிறார்கள். முஸ்லிம்

542 நபி(ஸல்) அவர்கள் மழை பொழிவதைக் கண்டால், “அல்லாஹ்வே! எங்களுக்குப் பலன் தரக்கூடிய மழையைப்

பொழிவாயாக!“ என்று கூறுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள்.

புகாரீ, முஸ்லிம்

543 நபி(ஸல்) அவர்கள் மழைக்காகப் பிரார்த்தனை செய்யும் போது, “இரட்சகனே! எங்களுக்காக அடர்த்தியான, இடி இடிக்கக் கூடிய, விரைந்து வரக் கூடிய, சிரித்தவாறு (ரஹ்மத்தாக) வரக் கூடியதைக் கொண்டு வருவாயாக! அதன் மூலம் இலேசான, நீர் அதிகம் வரக் கூடிய மழையைப் பொழியச் செய்வாயாக! நீயே கண்ணியமிக்கவன், கொடையாளன்“ என்று கூறினார்கள் என ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். அபூ அவானா

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

544 சுலைமான்(அலை) அவர்கள் மழை பொழிய வேண்டுவதற்காக நகரை விட்டு வெளியேறினார்கள். அப்போது ஓர் எறும்பு மல்லாக்காகப்படுத்துக் கொண்டு தன்னுடைய கால்களை வானத்தின் பால் தூக்கிய நிலையில், “இரட்சகனே! நாங்கள் உன்னுடைய படைப்புகளில் ஒரு படைப்பாக உள்ளோம். உன் மழை எங்களுக்கு அவசியம் தேவை“ என்று கூறிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். பின்னர், “நீங்கள் எல்லோரும் திரும்பிச் செல்லுங்கள். நீங்கள் அல்லாத ஒருவரது துஆவினால் நீர் புகட்டப்பட்டு விட்டீர்கள்“ என்று சுலைமான்(அலை) அவர்கள் கூறியதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். அஹ்மத்

இது ஹாம்மில் ‘ஸஹீஹ்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

545 நபி(ஸல்) அவர்கள் மழைக்காக துஆ செய்த போது வானத்தை நோக்கித் தமது பின்னங் கால்களை உயர்த்தினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

ஆடைகள்

GO TO CHAPTER INDEX

546 “என்னுடைய சமுதாயத்தில் சில கூட்டத்தார், வெட்கத்தலத்தையும், பட்டாடையையும் ஹலால் (அனுமதிக்கப்பட்டது) என எண்ணுவர். (ஆனால், அவையோ விலக்கப்பட்டவை)“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஆமிர் அல் அஷ் அரீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

547 நாங்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களில் உண்ண வேண்டாமென்றும், பருக வேண்டாமென்றும், பட்டாடைகள் அணிய வேண்டாமென்றும், அதன் மீது நாங்கள் உட்கார வேண்டாம் என்றும் நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குத் தடை விதித்தார்கள் என ஹு தைபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

548 இரண்டு விரற்கடை அல்லது மூன்று அல்லது நான்கு விரற்கடைகள் அளவு பட்டுத்துணி சேர்ந்த மற்ற துணிகளைத் தவிர (முழுக்க முழுக்க)பட்டினால் ஆன ஆடைகளையணிவதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

549 ஒரு பயணத்தில் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் மற்றும் ஸு பைர்(ரலி) ஆகிய இருவருக்கும் நோய் இருந்த காரணத்தினால் பட்டுச்சட்டை அணிவதற்கு நபி(ஸல்) அவர்கள் சலுகையளித்தார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

550 நபி(ஸல்) அவர்கள் எனக்கு ஒரு பட்டாடை கொடுத்தார்கள். நான் அதை அணிந்து கொண்டு வெளியில் வந்தபோது நபி(ஸல்) அவர்களது முகத்தில் கோபத்தின் அறிகுறியைக் கண்டேன். உடனே நான் அதைக் கிழித்து என் வீட்டுப் பெண்களுக்குப் பங்கிட்டு விட்டேன் என அலீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

551 “தங்கமும், பட்டும் என்னுடைய சமுதாயத்தின் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கு விலக்கப்பட்டுள்ளன“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூமூஸா(ரழி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

552 “அல்லாஹ் தன்னுடைய அடியான் மீது அருள்செய்தால், அவனிடம் அந்த அருளின் அடையாளத்தைக் காண விரும்புகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு ஸைன்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

553 (எகிப்து மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் தயாரிக்கக் கூடிய) ஒருவகைப் பட்டாடையையும், காவி நிற ஆடையையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

554 நபி(ஸல்) அவர்கள் என்னுடைய உடலில் இரண்டு காவியாடைகளைக் கண்டதும் (கோபத்தால்), “இதை அணிவதற்கு உன்னுடைய தாயா உனக்குக் கட்டளையிட்டாள்?“ என்று கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

555 (சட்டையிலுள்ள) பை மற்றும் காலரில் பட்டுத் துணியால் இரண்டு ஒட்டுப் போடப்பட்டிருந்த நபி(ஸல்) அவர்களது ஜிப்பா ஒன்றை அஸ்மா பின்த்து அபீபக்ர்(ரலி) எடுத்தார்கள். அபூதாவூத்

இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

அது ஆயிஷா(ரலி) அவர்களிடமிருந்தது. அவர் இறந்தபின் நாங்கள் அதைப் பெற்றுக் கொண்டோம். அதை நபி(ஸல்) அவர்கள் அணிவார்கள். அதை நாங்கள் நோய் நிவாரணம் தேடுவதற்காகத் தண்ணீரில் அலசிக் கொள்வோம் என்றும் அஸ்மா பின்த்து அபீபக்ர்(ரலி) வாயிலாகவே முஸ்லிமில் உள்ளது.

“அவர்கள் அதை வெள்ளிக் கிழமையன்றும், தூதுக் குழுவினர் எவரேனும் வரும் போதும் அணிந்து கொள்வார்கள்“ என புகாரீ தனது அல் அதபுல் முஃப்ரத் எனும் நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - ஜனாஸா சட்டங்கள்

556 “விருப்பங்களை (எல்லாம்) அகற்றக் கூடிய மரணத்தை அதிகம் நினைவு கூருங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ, நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ‘ஸஹீஹ்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

557 “தனக்கேற்படும் தீங்கின் காரணமாக உங்களில் எவரும் மரணத்தை விரும்ப வேண்டாம். எவரேனும் நிர்பந்தத்திற்குள்ளானால் “இறைவா! நான் உயிர் வாழ்வது எதுவரை எனக்கு நல்லதாக இருக்குமோ அதுவரை எனக்கு வாழ்க்கையளிப்பாயாக! மேலும், எப்போது மரணமே எனக்கு நல்லதாக இருக்குமோ அப்போது என்னை உலகிலிருந்து எடுத்துக் கொள்வாயாக! என்று கூறட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

558 “இறை நம்பிக்கையாளன் நெற்றி வேர்வையுடன் இறக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புரைதா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ மற்றும் திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

559 “இறக்கும் தருவாயில் இருப்பவனுக்கும் ‘வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவருமில்லை“ என்ற உறுதியை ஊட்டுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் மற்றும் அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னுமாஜா.

560 “உங்களில் இறக்கும் தருவாயில் இருப்போரிடம் யா[illegible]ன் (சூரா) ஓதுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மஃகில் இப்னு யஸார்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத் நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

561 நபி(ஸல்) அவர்கள் அபூஸலமா(ரலி) அவர்களுடைய மரண நேரத்தில் அங்கு வந்தார்கள். அவருடைய கண் திறந்தவாறு இருந்தது. அவருடைய கண்ணை நபி(ஸல்) அவர்கள் மூடிவிட்டார்கள். பின்னர், “உயிர் கைப்பற்றப்பட்டு விட்டால் பார்வை அதைப் பின் தொடர்கிறது“ என்று கூறினார்கள். அப்போது அவருடைய குடும்பத்தாரில் சிலர் அழ ஆரம்பித்தார்கள். அதற்கு, “உங்கள் உயிர்களுக்கு நல்லதைத் தவிர வேறு எதையும் கேட்காதீர்கள். ஏனெனில், (இப்போது) மலக்குகள் நீங்கள் சொல்வதற்கெல்லாம் ஆமீன் கூறுகிறார்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், “யா அல்லாஹ்! அபூ ஸல்மாவை மன்னித்து விடு! நேர்வழி பெற்றவர்களில் அவருடைய நிலையை உயர்த்தியருள்! அவருடைய கப்ரை அவருக்கு விசாலமாக் கியருள்! மேலும், அதில் வெளிச்சத்தை உண்டாக்கியருள்! அவருடைய அடிச்சுவட்டில் (அவரைப் பின்பற்றிப்) பணியாற்றுவரை நியமி“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

562 “நபி(ஸல்) அவர்கள் இறந்தவுடன் அவர்கள் மீது ‘ஹிப்ரா‘ எனும் (யமன் நாட்டின் ஒரு வகை) சால்வை போட்டு மூடப்பட்டது“ என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

563 அபூபக்ர்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களை இறந்த பின்னர் முத்தமிட்டார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

564 “இறை நம்பிக்கையாளனின் உயிர் (அவன் கடன்பட்டவனாக இருப்பின்) அவனுடைய கடன் அடைக்கப்படும் வரை அதனுடன் தொங்கிக் கொண்டிருக்கும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

565 “அவரை இலந்தை இலை கலந்த தண்ணீரில் குளிப்பாட்டுங்கள். மேலும் அவருடைய (இஹ்ராமின்) இரு துணிகளினால் அவருக்குக் கஃபனிடுங்கள்“ என்று (ஹஜ்ஜின் போது) ஒட்டகத்திலிருந்து விழுந்து இறந்தவர்

தொடர்பாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

566 நபித்தோழர்கள் நபி(ஸல்) (அவர்கள் மரணமடைந்த பின்) அவர்களைக் குறிப்பாட்ட நாடிய போது, “நாங்கள் மற்ற மனிதர்களின் ஆடைகளைப் போன்று அவிழ்ப்பதா, அல்லது அப்படியே விட்டுவிடுவதா என்பதை அல்லாஹ்வின் மீது ஆணையாக, நாங்கள் அறிய மாட்டோம்“ என்று கூறினர் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) அஹ்மத், அபூ தாவூத்

567 நபி(ஸல்) அவர்களுடைய (இறந்துவிட்ட) மகளை நாங்கள் குளிப்பாட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் வந்தார்கள். இன்னும், “நீங்கள் அவரை மூன்று அல்லது ஐந்து முறை அல்லது உங்களுக்குச் சரியாகப்படும் வரை அதற்கும் அதிகமான முறைகள் குளிப்பாட்டுங்கள். இன்னும் இலந்தை இலை கலந்த தண்ணீரினால் குளிப்பாட்டுங்கள். இறுதியில் கற்பூரம் உபயோகியங்கள்“ என்று கூறினார்கள். நாங்கள் முடித்துக் கொண்டு நபி(ஸல்) அவர்களுக்குத் தகவல் கொடுத்தோம். அவர்கள் தமது கீழங்கியைக் கொடுத்து “அதை உள்ளாடையாக ஆக்கிக் கொள்ளுங்கள்“ என்று கூறினார்கள். புகாரீ, முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பின்படி அவரின் (குளிப்பாட்டுதலை) வலது புறம் மற்றும் உளூ செய்யக்கூடிய பகுதிகளைக் கொண்டு தொடங்குங்கள் என்று உள்ளது. புகாரியின் மற்றோர் அறிவிப்பின்படி நாங்கள் அவரது கேசத்தை மூன்று சடையாக பிண்ணி அவருக்கு பின்னால் போட்டோம் என்றும் உள்ளது.

568 பருத்தியால் ஆன வெள்ளைத் துணியால் நபி(ஸல்) அவர்களுக்கு கஃபனிடப்பட்டது அதில் சட்டையோ தலைப்பாகையோ இல்லை என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

569 (நயவஞ்சகர்களின் தலைவன்) அப்துல்லாஹ் இப்னு உபை இறந்ததும் அவனுடைய மகன் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “தாங்கள் தங்களது ஆடையைக் கொடுங்கள். நான் அதில் அவருக்குக் கஃபனிட்டுக் கொள்கிறேன்“ என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள் கொடுதது விட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

570 “நீங்கள் வெள்ளை ஆடை அணியுங்கள். ஏனெனில் அதுவே உங்கள் ஆடைகளில் சிறந்ததாகும். உங்களுடைய மய்யித்துகளுக்கும் (இறந்ததோருக்கும்) வெள்ளை ஆடையில் கஃபனிடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

571 “உங்களில் எவரேனும் தன்னுடைய (முஃமினான) சகோதரனுக்குக் கஃபனிட்டால், அதை நல்ல முறையில் செய்யட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

572 உஹத் யுத்தத்தில் ஷஹீதான இரண்டு ஆண் மய்யித்துக்களை ஒரே கஃபனில் ‘நபி(ஸல்) அவர்கள் இணைத்தார்கள். “இவர்களில் குர்ஆனை அதிகம் அறிந்தவர் யார்?“ என்று கேட்டு அவரை குழிக்குள் முதலாவதாக வைத்தார்கள். இந்த ஷஹீத்களில் எவருக்கும் குளிப்பாட்டப்படவில்லை. தொழுகையும் நடத்தப்படவில்லை என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

573 “கஃபன் துணிகளில் அதிக விலை போடாதீர்கள். ஏனெனில், அது அதிவிரைவில் பிடுங்கப்படும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

574 “நீ எனக்கு முன்னால் இறந்துவிட்டால் நான் உன்னைக் குளிப்பாட்டுவேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

575 என்னை அலீ(ரலி) குளிப்பாட்ட வேண்டும் என்று ஃபாத்திமா(ரலி) வஸிய்யத் (மரண சாசனம்) செய்தார் என அஸ்மாபின்த்து உமைஸ் அறிவிக்கிறார். தாரகுத்னீ

576 புரைதா(ரலி) அவர்கள், காமிதீ குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில், நபி(ஸல்) அவர்கள் அவளுடைய விபச்சாரக் குற்றத்திற்காக அவளைக் கல்லேறிந்து கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள். பின்னர் அவளுக்குத் தொழுகை நடத்துமாறும் கட்டளையிட்டார்கள். அவளுக்குத் தொழுகை நடத்தப்பட்டது. அவள் அடக்க(மு)ம் செய்யப்பட்டாள் என்று குறிப்பிட்டார். முஸ்லிம்

577 தற்கொலை செய்யப்பட்ட ஒருவருடைய ஜனாஸா நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. நபி(ஸல்)

அவர்கள் அதற்குத் தொழுகை நடத்த வில்லை என்று ஜாபிர் இப்னு ஸம்ரா(ரலி) அறிவிக்கிறார்.

578 பள்ளிவாசலைக் கூட்டி (பெருக்கி)க் கொண்டிருந்த ஒரு பெண்ணின் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில், நபி(ஸல்) அவர்கள் (ஸஹாபாக்களிடம்) அப்பெண்ணைக் குறித்து விசாரித்தார்கள். அதற்கு அவர்கள் “அவர் இறந்து விட்டார்“ என்று கூறினார்கள். அதற்கு “நீங்கள் ஏன் எனக்கு செய்தி சொல்லவில்லை?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அந்த விஷயத்தைப் பற்றி அவர்கள் பெரிதாகக் கருதவில்லை. பின்னர் “அவளுடைய மண்ணறையை எனக்குக் காண்பியுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதை அவர்கள் நபி(ஸல்) அவர்களுக்குக் காட்டினார்கள். அவளுக்காக நபி(ஸல்) அவர்கள் தொழுதார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

பிறகு, “இந்த மண்ணறைகள் அதிலிருப்பவர்களுக்கு இருள் நிரம்பியதாக உள்ளன. நிச்சயமாக (ஜனாஸா பாவமன்னிப்புத்) தொழுகையின் காரணமாக இவற்றில் வெளிச்சத்தை அவர்களுக்கு அல்லாஹ் உண்டாக்குகின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்பதும் முஸ்லிமில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

579 மரணச் செய்தியை விளம்பரம் செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என ஹுதைஃபா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

580 நஜாஷி மன்னருடைய மரணச் செய்தி அவருடைய மரண தினத்தன்றே நபி(ஸல்) அவர்களுக்குச் சொல்லப்பட்டது. (அப்போது) நபி(ஸல்) அவர்கள் தங்கள் தோழர்களுடன் ஜனாஸா தொழுதும் இடம் சென்று அணிவகுப்பைச் சரி செய்தார்கள். இன்னும் அவருக்காக நான்கு தக்பீர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

581 முஸ்லிமான ஒரு மனிதர் இறந்து, அல்லாஹ்விற்கு ஒரு போதும் இணைவைக்காத நாற்பது நபர்கள் அவருடைய ஜனாஸாவிற்காக சேர்ந்து (தொழ) நின்றால் அவருக்காக அவர்களுடைய பரிந்துரையை அல்லாஹ் ஏற்கின்றான் என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

582 நிஃபாஸுடைய நாட்களில் இறந்து போன ஒரு பெண்ணுக்காக நபி(ஸல்) அவர்கள் தொழுகை நடத்துகையில் நான் அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுதேன். அப்போது அவர்கள் அதன் (மையத்தின்) நடுவில் நின்றிருந்தார்கள் என்று ஸமுரா பின் ஜுன்துப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

583 அல்லாஹ்வின் மீது ஆணையாக! நபி(ஸல்) அவர்கள் ‘பைதா‘ எனும் பெண்ணுடைய இரண்டு மகன்களின் (ஜனாஸா) தொழுகையை பள்ளிவாயிலில் தொழ வைத்தார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

584 ஸைத் இப்னு அர்கம்(ரலி) எங்களுக்கு ஜனாஸாத் தொழ வைக்கும் போது நான்கு தக்பீர்கள் கூறுவார்கள். ஒரு ஜனாஸாவில் ஐந்து தக்பீர் கூறிவிட்டார்கள். (இது பற்றி) நான் அவர்களிடம் கேட்டபோது நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு தக்பீர் கூறியுள்ளார்கள் என பதிலளித்தார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு அபீ லைலா அறிவிக்கிறார். முஸ்லிம், அபூதாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

585 ஸஹ்ல் இப்னு ஹுனைஃப்(ரலி) அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்துகையில் அலி(ரலி) அவர்கள் ஆறு தக்பீர் கூறினார்கள். பின்னர் “அவர் பத்ருத் தோழர்“ என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஸயீத் இப்னு மன்ஸூர்(ரலி) இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

586 நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாக்களுக்கு தொழும் போது நான்கு தக்பீர் கூறுவார்கள். மேலும், முதல் தக்பீரில் சூரத்துல் ஃபாத்திஹா ஓதுவார்கள் என்று ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஷ்ஷாஃபிஈ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

587 நான் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களுக்குப் பின்னால் நின்று ஜனாஸாத் தொழுகை தொழுதேன். அப்போது அவர்கள் சூரத்துல் ஃபாத்திஹா ஓதினார்கள். பின்னர், அறிந்து கொள்ளுங்கள்! இது சுன்னத்தாகும்“ என்று கூறினார்கள் இப்னு அவ்ஃப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

588 “இரட்சகனே! இவரை மன்னித்தருள்வாயாக! மேலும் இவர் மீது கருணை புரிவாயாக! மேலும் இவரது பிழையைப் பொறுத்து, சுகம் அளிப்பாயாக! இவர் செல்லும் இடத்தை சங்கைக்குரியதாக்குவாயாக! மேலும், இவர் புகும் இடத்தை (கப்ரை) விசாலமாக்குவாயாக! தண்ணீராலும், பனிக்கட்டியாலும், ஆலங்கட்டியாலும் (இவரது

பாவங்களைக்) கழுவித் தூய்மைப்படுத்துவாயாக! அழுக்கிலிருந்து வெள்ளை ஆடையை சுத்தப்படுத்துவது போன்று பிழைகளிலிருந்து இவரை சுத்தப்படுத்துவாயாக! மேலும்! இங்குள்ள குடும்பத்தாரை விட சிறந்த குடும்பத்தாரை இவருக்கு ஏற்படுத்துவாயாக! மேலும், இங்குள்ள குடும்பத்தை விட (மனைவியை விட) சிறந்த குடும்பத்தை ஏற்படுத்துவாயாக! மேலும், இவரை சுவர்க்கத்தில் புகுத்துவாயாக! மேலும், இவரை மண்ணறையின் சோதனையிலிருந்தும் மற்றும் நரக நெருப்பின் வேதனையிலிருந்தம் காத்தருள்வாயாக!" என்று நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாத் தொழுகையின் போது ஓதுவார்கள். நான் அதை மனனம் செய்து கொண்டேன்" என அவ்ஃப் இப்ன மாலிக்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

589 "இரட்சகனே! எங்களில் உயிரோடிருப்போரையும், மரணித்தவர்களையும் இங்கு வந்திருப்போரையும், சிறியவர்களையும் வெரியவர்களையும் ஆண்களையும், பெண்களையும் மன்னித்தருள்வாயாக! இரட்சகனே! எங்களில் உயிரோடு இருப்போரை இஸ்லாத்தின் அடிப்படையில் வாழச் செய்வாயாக! இன்னும் எங்களில் இறப்பவர்களை இறைநம்பிக்கை உள்ள நிலையில் இறக்கச் செய்வாயாக! இரட்சகனே! இவருக்குரிய (நற்) கூலியை (நாங்கள் அவருக்காக உன்னிடம் கேட்டும் அதை) எங்களுக்குத் தடுத்துவிடாதே! என்று நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாத் தொழுகையின் போது ஓதுபவர்களாக இருந்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம், அபூதாவூத் நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

590 "நீங்கள் ஜனாஸாத் தொழுகை தொழுதால் அதற்காகத் தூய்மையான எண்ணத்தோடு (இறைவனிடம்) பிராத்தனை செய்யுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னுஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

591 "ஜனாஸாவை விரைவாக எடுத்துச் செல்லுங்கள். ஏனெனில், அது நல்ல(செயல் செய்த)தாக இருந்தால் நல்லது. அதை அதன் இடம் எடுத்துச் செல்பவராவீர்கள். அவ்வாறில்லையெனில், அது தீயது. அதை உங்களை தோளை விட்டு வேகமாக இறக்கி விட்டவராவீர்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

592 "எவர் ஒருவர் ஒரு ஜனாஸாவில் கலந்து கொண்டு அதற்கு தொழுகை நடத்தும் வரை இருக்கிறாரோ அவருக்கு ஒரு கீராத் நன்மையுண்டு. என நபி(ஸல்) அவர்கள் கூறிய போது 'இரு கீராத்துக்கள்' என்றால் என்ன? என்று வினவப்பட்டது. அதற்கு, "இரண்டு பெரும் மலையை போன்றவை (நன்மைகள்)" என நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

அது அடக்கம் செய்யப்படும் வரை என்பதற்கு பதிலாக "அது கப்ரில் வைக்கப்படும் வரை" எனும் வாசகம் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

593 அபூஹுரைரா(ரலி) வாயிலாக புகாரீயில் "எவர் ஒருவர் இறை நம்பிக்கையோடும், நன்மையை நாடியவராகவும் ஒரு முஸ்லிமின் ஜனாஸாவைப் பின் தொடர்கிறாரோ, மேலும் அதறகு தொழுகை நடத்தி அடக்கம் செய்து முடிக்கும் வரை அதனுடன் இருக்கிறாரோ அவர் இரண்டு கீராத்துகள் நன்மையுடன் திரும்புகிறார். ஒவ்வொரு கீராத்தும் உஹது மலை போன்றதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உள்ளது.

594 நபி(ஸல்) அவர்கள் அபூபக்ர்(ரலி), உமர்(ரலி) ஆகியோர் ஜனாஸாவிற்கு முன்பாகச் சென்றதை, தான் பார்த்துள்ளதாக ஸாலிம் தம்முடைய தந்தை இப்னு உமர்(ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும், நஸயீயில் மஃலூல் எனும் தரத்திலும் மற்றும் ஒரு குழுவிடம் 'முர்ஸல்' எனும் தரத்திலும் இடம் பெற்றுள்ளது.

595 ஜனாஸாவைப் பின் தொடர்ந்து செல்வது எங்களுக்குத் தடை செய்யப்பட்டது. ஆயினும், எங்களுக்கு அது கடுமையாக தடை செய்யப்படவில்லை என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

596 "நீங்கள் ஜனாஸாவைப் பார்த்து விட்டால் எழுந்து நில்லுங்கள். எவர் அதைப் பின்தொடர்கிறாரோ, அது கீழே வைக்கப்படும் வரை அவர் அமர வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஸயீத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

597 அப்துல்லாஹ் இப்னு ஸைத்(ரலி) மய்யித்தை மண்ணறையில் கால் பக்கமாக இறக்கி, "இது சுன்னத்தாகும்" என்று கூறினார்கள் என அபூ இஸ்ஹாக்(ரஹ்) அறிவிக்கிறார். அபூதாவூத்

598 " நீங்கள் உங்களில் இறந்தவர்க மய்யித்துக்களை மண்ணறைகளில் வைக்கும் போது பிஸ்மில்லாஹி வஅலா மில்லத்தி ரஸு லில்லாஹி என்று கூறுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் நஸாயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும், தாரகுத்னீயில் மவ்கூ.:ப் மற்றும் ம.:லூல் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

599 "மய்யித்துடை எலும்புகளை உடைப்பது உயிருள்ளவருடைய எலும்புகளை உடைப்பது போன்றதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது முஸ்லிமின் நிபந்தனைகளுக்குட்பட்ட ஹதீஸாகும்.

600 உம்மு ஸலமா(ரலி) வாயிலாக, "பாவங்களில் உள்ளதாகும்" எனும் வாக்கியத்தை இப்னு மாஜா அதிகமாக பதிவு செய்துள்ளது.

601 எனக்காக கப்ரை உட்புறமாகத் தோண்டி, நபி(ஸல்) அவர்களுக்கு வைக்கப்பட்டது போன்று சுடப்படாத செங்கல்லை உள்ளே வையுங்கள் என ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரலி) கூறினார். முஸ்லிம்

602 ஜாபிர்(ரலி) வாயிலாக மேற்கண்ட ஹதீஸ் போன்றே பைஹகீயில் உள்ளது. இன்னும் அதில் அவருடைய மண்ணறை தரையிலிருந்து ஓர் அங்குலம் உயர்த்தப்பட்டிருந்தது" என்றும் உள்ளது. இது இப்னுஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

603 நபி(ஸல்) அவர்கள் கப்ருக்கு சுண்ணாம்பு பூசுவதையும், அதன் மீது உட்காருவதையும், அதன் மீது கட்டிடம் கட்டுவதையும் தடுத்தார்கள் எனும் ஹதீஸ் ஜாபிர்(ரலி) வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

604 நபி(ஸல்) அவர்கள் உஸ்மான் இப்னு மழ்ஊனுக்குத் தொழுகை நடத்தினார்கள். இன்னும் (அவரது) மண்ணறைக்கும் வந்தார்கள். பின்னர் நின்றபடியே மூன்று கைப்பிடி மண் எடுத்து அதில் போட்டார்கள். அப்போது அவர்கள் நின்று இருந்தார்கள் என ஆமிர் இப்னு ரபீஆ(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

605 நபி(ஸல்) அவர்கள் மய்யித்தை அடக்கி முடித்து விட்டால் அங்கு நின்று கொண்டு "நீங்கள் உங்களுடைய சகோதரனுக்காக பாவமன்னிப்புக் கோருங்கள். அவருக்கு உறுதியை அளிக்கும்படி அல்லாஹ்விடம் கேளுங்கள். ஏனெனில் இப்போது அவர் கேள்வி கேட்கப்படுவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, உஸ்மான்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

606 கப்ரில் மய்யித்தை வைத்து விட்டு அதைச் சமப்படுத்தி செல்வதற்கு முன்பு "இன்னாரே! 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று மூன்று முறை கூறுவீராக! என்று கூறுவதை முஸ்தஹப் என நாங்கள் கருதிக் கொண்டிருந்ததோம் என ளம்ரா இப்னு ஹபீப்(ரலி) கூறியதாக தாபியீன்களில் ஒருவர் அறிவிக்கிறார். அபூதாவூத்

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

606 கப்ரில் மய்யித்தை வைத்து விட்டு அதைச் சமப்படுத்தி செல்வதற்கு முன்பு "இன்னாரே! "லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று மூன்று முறை கூறுவீராக! மேலும், என்னுடைய மார்க்கம் இஸ்லாம், என்னுடைய தூதர் முஹம்மத்(ஸல்) என்றும் கூறுவீராக!" என்று கூறுவதை முஸ்தஹப் என நாங்கள் கருதிக் கொண்டிருந்ததோம் என ளம்ரா இப்னு ஹபீப்(ரலி) கூறியதாக தாபியீன்களில் ஒருவர் அறிவிக்கிறார்.

இது ஸயீத் இப்னு மன்ஸூ ர் உடைய நூலில், மவ்கூ.:ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

607 மேற்கண்ட ஹதீஸ் போன்று அபூ உமாமா(ரலி) வாயிலாக மர்.:பூஉ எனும் தரத்தில் தாரகுத்னீயில் நீண்டதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

608 "நான் உங்களை கப்ரு ஸியாரத்தை விட்டு தடுத்திருந்தேன். இப்போது நீங்கள் ஸியாரத் செய்யுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புரைதா இப்னு அல்ஹுஸைப் அல் அஸ்லமி(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

"நிச்சயமாக அது மறுமையை நினைவு கூரக்கூடியதாக உள்ளது" என்பதும் திர்மிதீயில் இடம் பெற்றுள்ளது.

609 இப்னு மஸ்வூத்(ரலி) வாயிலாக "இது உலக வாழ்க்கையின் மோகத்தைப் போக்குகிறது" என்பதும் இப்னு மாஜாவில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

610 கப்ருகளை ஸியாரத் செய்யும் பெண்களை நபி(ஸல்) அவர்க்ள சபித்தார்கள் என, அபூஹுரைரா(ரலி)

அறிவிக்கிறார். திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

611 நபி(ஸல்) அவர்கள் ஒப்பாரி வைத்து அழுபவர்களையும் அதைக் கேட்டுக் கொண்டு (தடுக்காமல்) இருப்பவர்களையும் சபித்துள்ளார்கள் என அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்கள். அபூதாவூத்

612 ஒப்பாரி வைக்கக் கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் வாக்குறுதி வாங்கினார்கள் என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

613 “ஒப்பாரி வைப்பதால் கப்ரில் மய்யித் வேதனை செய்யப்படுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

614 முகீரா இப்னு ஷு அபா(ரலி) வாயிலாக 613வது ஹதீஸ் போன்றே புகாரீ மற்றும் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

615 நபி(ஸல்) அவர்களது மகள் (உம்மு குல்ஸூ ம்) அடக்கம் செய்யப்படும் போது நான் இருந்தேன். நபி(ஸல்) அவர்கள் மண்ணறை அருகில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அவர்களின் இரண்டு கண்களும் கண்ணீர் வடித்ததை நான் பார்த்தேன் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

616 “நீங்கள் நிர்பந்தத்திற்குள்ளானால் தவிர மய்யித்துகளை இரவில் அடக்கம் செய்யாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்றிார். இப்னு மாஜழ

இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது. ஆனால், பாதி இரவில் தொழுகை நடத்தாமல் அடக்கம் செய்வதையும் கண்டித்தார்கள் என்றுள்ளது.

617 ஜஅ∴பர்(ரலி) அவர்கள் மூத்தா போரில் சொல்லப்பட்டு ஷஹீதான செய்தி வந்த போது “அவருடைய குடும்பத்தினருக்காக நீங்கள் உணவு தயார் செய்யுங்கள். ஏனெனில் அவர்கள் வேறு விசயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஜா∴பர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

618 அவர்கள் மண்ணறைகளின் பால் சென்றால், “மு∴மினான முஸ்லிமான மண்ணறை வாசிகளே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்! அல்லாஹ் நாடினால், நாங்களும் உங்களிடம் வரவிருக்கின்றோம். உங்களுக்கும் எங்களுக்கும் அல்லாஹ்விடமும் நாங்கள் சுகத்தை வேண்டுகின்றோம்“ என்று கூறுமாறு நபி(ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள் என சுலைமான் இப்னு புரைதா தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். முஸ்லிம்

619 “மண்ணறைவாசிகளே! உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்! அல்லாஹ் உங்களையும் எங்களையும் மன்னிக்கட்டும்! நீங்கள் சென்று விட்டீர்கள். நாங்கள் பின்னர் வருவோம்“ என்று நபி(ஸல்) அவர்கள் மதீனாவின் கப்ருகளைக் கடந்து செல்லும் போது மண்ணறைகளின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார் திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

620 “இறந்தவர்களைப் பற்றிய குறைகளைச் சொல்லித் திரியாதீர்கள். ஏனெனில், அவர்கள் செய்த செயல்களின் பால் அவர்கள் சென்று விட்டார்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

621 முகீரா(ரலி) வாயிலாக 620 வது ஹதீஸ் போன்றே திர்மீதியில் இடம் பெற்றுள்ளது. ஆனால், அதில், “நீங்கள் உயிருள்ளவர்களை நோவினை செய்வீர்கள்“ எனும் வாசகம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - ஜகாத்

- ஜகாத்
- நோன்புப் பெருநாள் தர்மம்
- உபரியான தர்மங்கள்
- தர்மம் பொருட்களின் பங்கீடு

ஜகாத் GO TO CHAPTER INDEX

622 நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரலி) அவர்களை யமன் தேசத்திற்குப் அனுப்பினார்கள். (அறிவிப்பாளர் ஹதீஸ் முழுவதையும் கூறினார்) அதில் உள்ளதாவது: அவர்களில் செல்வந்தர்களிடமிருந்து பெற்று தேவையுள்ள (ஏழை) மக்களிடம் திருப்பி விடும் ஜகாத்தை அவர்களின் செல்வத்தில், அல்லாஹ் அவர்கள் மீது கடமையாக்கியள்ளான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

623 அபூ பக்ர்(ரலி) அவர்கள் அனஸ்(ரலி) அவர்களுக்கு ஜகாத் கடமை பற்றி ஒரு செய்தி எழுதினார்கள். இது முஸ்லிம்கள் மீது நபி(ஸல்) அவர்கள் கடமையாக்கிய ஜகாத் தர்மம் ஆகும். இது அல்லாஹ் தனது நபிக்கு இட்ட கட்டளையாகும். “இருபது அல்லது இருபத்தி நான்கு ஒட்டகங்களுக்குள் ஒவ்வொரு ஐந்து ஒட்டகங்களுக்கும் ஒரு ஆடு (ஜகாத் ஆகும்). ஒட்டகங்களின் எண்ணிக்கை 25லிருந்து 35வரை ஆகிவிட்டால், அவற்றில் ஓர்வருடம் பூர்த்தியான ஒட்டகை ஜகாத் கொடுக்க வேண்டும். அவற்றின் எண்ணிக்கை 35லிருந்து 45வரை ஆகிவிட்டால், இரண்டு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகம் ஜகாத் தர வேண்டும். அவற்றின் எண்ணிக்கை 46லிருந்து 60வரை ஆகிவிட்டால் மூன்று வருடங்கள் பூர்த்தியான ஒட்டகம் ஜகாத் ஆகும். அவற்றின் எண்ணிக்கை 61லிருந்து 75வரை ஆகிவிட்டால், அவற்றிற்கு இரணடு வரடுங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் ஜகாத் ஆகும். அவற்றின் எண்ணிக்கை 91லிருந்து 100வரை ஆகிவிட்டால், பெருக்கும் தன்மையுடைய மூன்று வருட ஒட்டகங்கள் இரண்டு ஜகாத் ஆகும். அவற்றின் எண்ணிக்கை 120க்கு மேல் ஆகிவிட்டால் ஒவ்வொரு நாற்பது ஓட்டகங்களுக்கும் இரண்டு வருட ஒட்டகம் அல்லது ஒவ்வொரு ஐம்பதுக்கும் மூன்று வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் உள்ள எவருக்கும் ஜகாத் இல்லை. ஆனால், அதன் உரிமையாளர் விருப்பப்பட்டு கொடுக்கலாம். காடுகளில் மேயும் ஆடுகள் 40 முதல் 120 வரை இருக்குமாயின், அவற்றிற்கு ஒரு ஆடு ஜகாத் ஆகும். அவை 120லிருந்து 200 வரை ஆகிவிட்டால், அவற்றிற்கு இரண்டு ஆடுகள் ஜகாத் ஆகும். அவற்றின் எண்ணிக்கை 200லிருந்து 300 வரையாகி விட்டால், மூன்று ஆடுகள் ஜகாத் ஆகும். அவற்றின் எண்ணிக்கை 300ஐக் கடந்து விட்டால் ஒவ்வொரு நூறுக்கும் ஓர் ஆடு (என்ற விம்தத்தில்) ஜகாத் ஆகும். எவரிடத்திலேனும் மேயக்கூடிய ஆடுகள் நாற்பதுக்கு ஒன்று குறைவாக இருந்தால், அவற்றிற்கு அதன் உரிமையாளர் விரும்பி கொடுத்தால் தவிர ஜகாத் இல்லை. தனித்தனியாக இருக்கும் பொருட்களை மொத்தம் சேர்க்க வேண்டாம். இன்னும் மொத்தமாக இருக்கும் பொருட்களை ஜகாத் கொடுப்பதற்கு பயந்து பிரித்துக் கொள்ளுதல் வேண்டாம். எந்தச் சொத்து கூட்டு முறையில் உள்ளதோ, அதனுடைய அளவுப்படி அதற்குரிய ஜகாத்தை கொடுத்து விட வேண்டும். ஜகாத் பொருட்கள் பல் உடைந்ததாகவோ, குறைபாடு உள்ளதாகவோ, ஒதுக்கப்பட்டதாகவோ, இருக்கக் கூடாது. வாங்குபவர் அதை விரும்பிக் கேட்டால் தவிர, ஜகாத் கடமை இல்லை. எவரிடத்திலேனும் நான்கு வருட ஒட்டகம் ஜகாத் கொடுப்பதற்கு இல்லை எனில், அவரிடமிருந்து மூன்று வருடம் பூர்த்தியான ஒட்டகங்கள் பெற்றுக் கொள்ளலாம். அதனுடன் இரண்டு ஆடுகள் அல்லது இருபது திர்ஹம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அதேபோன்று எவருக்கேனும் மூன்று வருடங்கள் பூர்த்தியான ஒட்டகை

ஜகாத் கடமையாக இருக்கும் நிலையில் அவரிடம் நான்கு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகை இருப்பின் ஜகாத் பெறுபவர் அதன் உரிமையாளரிடம் அதைப் பெற்றுக் கொண்டு இரண்டு ஆடுகள் அல்லது இருபது திர்ஹம் கொடுக்க வேண்டும் என்று அபூபக்ர்(ரலி) அவர்கள் ஜகாத் கடமை பற்றி தனக்கு செய்தி எழுதினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

624 நபி(ஸல்) அவர்கள் தம்மை யமன் நாட்டிற்கு அனுப்பிய போது “ஒவ்வொரு முப்பது மாடுகளுக்கும் ஜகாத்தாக ஒரு வருடக் காளை அல்லது பசு வாங்க வேண்டும். வயது வந்த ஒவ்வொருவரிடமிருந்தும் ஒரு தீனார் ஜகாத்தாக வாங்க வேண்டும் அல்லது அதன் விலை மதிப்புள்ள துணி வாங்க வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் தமக்குக் கட்டளையிட்டார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இங்கு அஹ்மதின் வாசகம் இடம் பெற்றுள்ளது. திர்மிதீயில் இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மவ்ஸூல் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும், ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

625 “முஸ்லிம்களிடமிருந்து அவர்களுடைய தண்ணீருக்கும் ஜகாத் வாங்க வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷுஐபு தம்முடைய தந்தையிடமிருந்தும் அவர் தம்முடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அஹ்மத்

“அவர்களுடைய ஜகாத்தை அவர்களுடைய வீடுகளிலிருந்து பெற வேண்டும்“ என்று அபூதாவூதில் உள்ளது.

626 “எந்த ஒரு முஸ்லிம் மீதும் அவன் (சவாரிக்காக) வைத்திருக்கும் குதிரை மற்றும் அவனுடைய அடிமைக்காக ஜகாத் செலுத்துவது கடமையல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

“அடிமையின் மீது ஸதக்கத்துல் ஃபித்ரைத் தவிர்த்து எந்த ஜகாத்தும் கடமை இல்லை“ என்றும் முஸ்லிமில் பதிவாகியள்ளது.

627 “காடுகளில் மேய்ந்து கொள்ளும் ஒட்டகங்களில் ஒவ்வொரு நாற்பதிற்கும் இரண்டு வருடங்கள் பூர்த்தியான ஒரு பெண் ஒட்டகம் ஜகாத் ஆகும். இதைக் கணக்கிட்டு (ஜகாத் கொடுக்காதிருக்க) அவர்கள் அவற்றைப் பிரித்துக் கொள்ளக் கூடாது. எவர் ஜகாத்தை இறைவனிடம் நற்கூலியை எதிர்பார்த்து கொடுக்கின்றாரோ, அவர் அதற்கான கூலியைப் பெற்றுக் கொள்வார். எவர் ஜகாத் கொடுக்கவில்லையோ, அவரிடமிருந்து நாம் அதைக் கண்டிப்பாக வாங்குவோம். அவருடைய சொத்தின் ஒரு பகுதி நம் இறைவனால் வலியுறுத்தப்பட்ட விஷயங்களில் ஒன்றாகும். அதில் இருந்து எதுவுமே முஹம்மதின் குடும்பத்தாருக்கு அனுமதிக்கப்பட்டதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, பஹஜ் இப்னு ஹகீம் தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். முஸ்னத் அஹ்மத், அபூதாவூத், நஸயீ

நஸாயீ மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும், ஷாஃபிஈயில் முஅல்லக் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

628 “உன்னிடம் இருநூறு திர்ஹம் இருந்து, அவற்றின் மீது வருடம் ஒன்று கழிந்து விட்டால், அவற்றிலிருந்து ஐந்து திர்ஹம் ஜகாத்(கடமை) ஆகும். உன்னிடம் இருபது தீனார்கள் வரும் வரை நீ ஜகாத் கொடுக்க வேண்டியது இல்லை. இருபது தீனார்கள் மட்டும் இருந்து, அவற்றின் மீது வருடம் ஒன்று கழிந்து விட்டால், அரை தீனார் அவற்றிலிருந்து ஜகாத் ஆகும். அதற்கு மேல் எவ்வளவு அதிகமானலும் அதைக் கணக்கிட்டு ஜகாத் கொடுப்பது கடமையாகும். வருடம் ஒன்று கழியாத எந்த ஒரு சொத்தின் மீதும் ஜகாத் கடமை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மர்ஃபூஃ எனும் தரத்தைப் பெற்றுள்ளதா? என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

629 “ஒருவர் ஒரு சொத்தைப் பெற்ற பின்பு அதன் மீது வருடம் ஒன்று கழியாமல் ஜகாத் இல்லை“ என்று திர்மிதீயில் இடம் பெற்றுள்ளது.

இது மவ்கூஃப் எனும் தரத்தில் உள்ளது என்று கணிக்கப்பட்டுள்ளது.

630 “வேலை வாங்கப்படும் காளை மாடுகளில் மீது ஜகாத் கடமை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அலீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், தாரகுத்னீ

இது மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

631 “அநாதையுடைய சொத்துக்கு எவர் பொறுப்பேற்றுள்ளாரோ அவர் அதை வியாபாரம் (தொழில்) செய்து பெருக்கிக் கொள்ளட்டும். ஜகாத் அதை விழுங்கும் அளவிற்கு விட்டு விட வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அம்ர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) வாயிலாக அறிவிக்கிறார். திர்மிதீ, தாரகுத்னி

632 மக்கள் ஜகாத்தை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து கொடுக்கும் போது “யா அல்லாஹ்! இவர்களுக்கு கருணை செய்வாயாக!“ என்று அவர்கள் கூறுவார்கள் என, அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

633 அப்பாஸ்(ரலி) அவர்கள் தம்முடைய ஜகாத்தை அதன் நேரம் வரும் முன்பே செலுத்துவது சம்பந்தமாக கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள் அவருகளுக்கு அவ்வாறு செய்ய அனுமதி வழங்கினார்கள் என்று அலி(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ, ஹாகீம்

634 “இருநூறு திர்ஹத்திற்கும் குறைவாக வெள்ளி இருப்பின் அதன் மீது ஜகாத் இல்லை. ஒட்டகங்கள் ஐந்திற்கும் குறைவாக இருப்பின், அவற்றின் மீதும் ஜகாத் இல்லை. ஐந்து வஸக்கிற்குக் குறைவாக உள்ள பேரீச்சம் பழத்தின் மீதும் ஜகாத் இல்லை. என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

635 முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் “ஐந்து வஸக் அளவிற்கும் குறைவாக உள்ள பேரீச்சம்பழம் மற்றும் தானியங்களுக்கு ஜகாத் இல்லை“ என்று அபூசயீத்(ரலி) அவர்கள் அறிவித்ததாக புகாரீ முஸ்லிம் உள்ளது.

636 “மழைத்தண்ணீர், ஊற்றுத் தண்ணீர் ஆகியவற்றால் பாசனம் செய்யப்படும் நிலம் அல்லது ஈரத் தன்மையுள்ள நிலத்தின் மூலம் செய்யப்படும் வேளாண்மையில் பத்தில் ஒரு பங்கு ஜகாத் கடமையாகும். தண்ணீர் இறைத்துப் பாசனம் செய்யப்படும் நிலத்திலிருந்து வரும் வேளாண்மையில் இருபதில் ஒரு பங்கு ஜகாத் (கடமை) ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸாலிம் இப்னு அப்துல்லாஹ் தம் தந்தை இப்னு உமர்(ரலி) வாயிலாக அறிவிக்கிறார். புகாரீ

தானாக விளையும் வேளாண்மைக்குப் பத்தில் ஒரு பங்கும், சால்(பை) அல்லது கால்நடைகள் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படும் நிலத்தின் வேளாண்மையில் இருபதில் ஒரு பங்கும் ஜகாத் கடமை என்று அபூ தாவூதில் இடம் பெற்றுள்ளது.

637 “தானியங்களில் வாற்கோதுமை, கோதுமை, திராட்சை, பேரீச்சை ஆகியவற்றைத் தவிர்த்து வேறு எந்த வேளாண்மைக்கும் ஜகாத் வாங்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூமூஸா அல் அஷ்அரீ(ரலி) மற்றும் முஆத்(ரலி) அறிவிக்கின்றனர்.

தப்ரானி, ஹாம்கி

638 வெள்ளரிக்காய், தர்பூசணிப்பழம், மாதுளை மற்றும் ‘கஸப்‘ எனும் ஒரு வகைப் புல் ஆகியவற்றிற்கு (ஜகாத் இல்லை) என நபி(ஸல்) அவர்கள் சலுகை அளித்ததாக முஆத்(ரலி) வாயிலாக தாரகுத்னீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

639 “நீங்கள் (ஜகாத்தை) மதீப்பிடு செய்ய (வசூலிக்கச்) சென்றால், மூன்றில் ஒரு பகுதியை விட்டு, விட்டு (மற்றவற்றில் ஜகாத்தைப்) பெற்றுக் கொள்ளுங்கள். மூன்றில் ஒரு பங்கை விடாவிட்டால் நான்கில் ஒரு பங்கை(யாவது) விட்டு விடுங்கள்“ என்று கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு அபீ ஹஸ்மா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ மற்றும் திர்மிதீ

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

640 பேரீச்சம் பழத்தில் ஜகாத் மதிப்பீடு செய்து (வசூலிப்பது) போன்றே திராட்சையிலும் ஜகாத் மதிப்பீடு செய்து (வசூலித்துக்) கொள்ளுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அப்போது அதற்குரிய ஜகாத் காய்ந்த திராட்சை (ம்ஸ்மிஸ்) ஆக வாங்கப்பட்டது என அத்தாப் இப்னு அ[illegible]த்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது முன்கதிஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

641 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு பெண்மணி வந்தார். அவருடன் கையில் அவருடைய மகள் இருந்தாள்.

அவளுடைய கையில் இரண்டு தங்க வளையங்கள் இருந்தன. நபி(ஸல்) அந்தப் பெண்மணியிடம் "நீ இதற்கு ஜகாத் கொடுத்துவிட்டாயா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "இல்லை" என்றார். "மறுமையில் அல்லாஹ் இதற்குப் பதிலாக நெருப்பினால் ஆன இரண்டு வளையங்கள் அணிவிப்பதை விரும்புகிறாயா?" என்று கேட்டார்கள். (இதைக் கேட்டவுடன்) அவர் அவற்றைக் கழற்றிக் கொடுத்து விட்டார் என்று அமீர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அபூ தாவூத், நஸாயீ மற்றும் திர்மிதீ

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

642 தங்கத்தால் செய்யப்பட்டிருந்த ஒருவகை நகையை நான் அணிந்திருந்தேன், அல்லாஹ்வின் தூதர் அவர்கள், "இதுவும் (சேகரித்துப் பதுக்கி வைக்கும்) புதையல் ஆகுமா?" என்று அதைப் பற்றிக் கேட்டேன். அதற்கு, "அதனுடைய ஜகாத் செலுத்தப்பட்டிருந்தால் அது புதையல் ஆகாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், தாரகுத்னீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

643 நாங்கள் வியாபாரத்திற்காகத் தயாரிக்கும் பொருட்களிலிருந்து ஜகாத்தை எடுத்துச் கொடுக்குமாறு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள் என, ஸமுரா இப்னு ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

644 "புதையலில் (மற்றும் சுரங்கப் பொருட்களில்) ஐந்தில் ஒரு பகுதி ஜகாத் ஆகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

645 பாழடைந்த ஓர் இடத்திலிருந்து ஒருவருக்குக் கிடைத்த புதையலைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் கூறுகையில், "அதை நீ மக்கள் வசிக்கும் பகுதியிலிருந்து பெற்றிருந்தால் (யாருடையது எனக் கேட்டு) அதை அறிவிப்புச் செய்! மக்கள் வசிக்காத பகுதியிலிருந்து அதைப் பெற்றிருந்தால் அதன் ஐந்திலொரு பங்கு ஜகாத் ஆகும்" என்று கூறினார்கள் என, அம்ர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். இப்னு மாஜா. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

646 'கபலிய்யா' எனும் சுரங்கத்திலிருந்து நபி(ஸல்) அவர்கள் ஜகாத் வாங்கினார்கள் என பிலால் இப்னு ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

நோன்புப் பெருநாள் தர்மம்

GO TO CHAPTER INDEX

647 முஸ்லிம்களிலுள்ள அடிமை, சுதந்திரமானவர், ஆண், பெண், சிறியவர், பெரியவர் ஆகிய அனைவர் மீதும் ஒரு 'ஸாவு' பேரீத்தம்பழத்தை அல்லது ஒரு 'ஸாவு' வாற்கோதுமையை 'ஜகாத்துல் ஃபித்ர்' (பெருநாள் தர்மம்) என, நபி(ஸல்) அவர்கள் கடமையாக்கினார்கள். மேலும் மக்கள் தொழுகைக்கு வெளியேறும் முன்பே அதைக் கொடுக்குமாறு கட்டளையிட்டார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

648 "அந்த நாளில் ஏழைகள் (உணவில்லாமல்) அலைந்து திரிவதைப் போக்கி விடுங்கள்" என, இப்னு அதீ எனும் நூலிலும் தார குத்னீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

649 நாங்கள் நபி(ஸல்) அவர்களது காலத்தில் பெருநாள் தர்மமாக உணவு பொருட்களில் ஒரு 'ஸாவு' அல்லது வாற்கோதுமையில் ஒரு 'ஸாவு' அல்லது காய்ந்த திராட்சையில் ஒரு 'ஸாவு' கொடுத்துக் கொண்டிருந்தோம் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்.

புகாரீ, முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பின்படி அல்லது ஒரு ஸாவு பால் கட்டி என்று உள்ளது. "நபி(ஸல்) அவர்கள் காலத்தில் நான் எதைக் கொடுத்துக் கொண்டிருந்தேனோ, அதையே கொடுத்து கொண்டிருப்பேன்" என்று அபூ ஸயீத் கூறினார். அபூதாவூதின் அறிவிப்பில் நான் ஒருபோதும் ஒரு ஸாவுவைத் தவிர கொடுக்க மாட்டேன் என்று உள்ளது.

650 நபி(ஸல்) அவர்கள் பெருநாள் தர்மத்தைக்க கடமையாக்கி, "நோன்பாளிகளின் வீண் மற்றும் ஆபாசப் பேச்சுகளைத் தூய்மைப்படுத்தும் முகமாகவும், ஏழைகளின் உணவாகவும் (பெருநாள் தர்மம்) உள்ளது. எவர் அதைப் பெருநாள் தொழுகைக்கு முன்பே செலுத்துகிறாரோ, அது ஏற்றுக் கொள்ளப்பட்ட தர்மமாகும். எவர் அதைத் தொழுகைக்கு முன்பே செலுத்துகிறாரோ, அது ஏற்றுக் கொள்ளப்பட்ட தர்மமாகும். எவர் அதைத் தொழுகைக்குப் பின்பு செலுத்துகிறாரோ, அது தர்மங்களில் ஒரு தர்மமாகும்" என்று கூறினார்கள் என இப்னு

அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத், இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உபரியான தர்மங்கள்

GO TO CHAPTER INDEX

651 “இறைவனுடைய நிழலைத் தவிர வேறு நிழலே இல்லாத அந்த (மறுமை) நாளில் அல்லாஹ் தன்னுடைய நிழலில் ஏழு நபர்களுக்கு இடம் அளிப்பான். (ஹதீஸ் முழுவதும் சொல்லப்பட்டது) அவர்களில் ஒருவர் தன்னுடைய வலக் கை செய்யும் தர்மத்தை தனது இடக் கை அறியாதவாறு இரகசியமாக தர்மம் செய்தவர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

652 “(மறுமையில்) மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கப்படும் வரை ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய தர்மத்தின் நிழலில் இருப்பான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டேன் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான், ஹாம்கி

653 “எந்த முஸ்லிம் ஆடையற்றிருக்கும் தன்னுடைய முஸ்லிம் சகோதரனுக்கு ஆடை அணியச் செய்கின்றாரோ, அல்லாஹ் அவருக்கு சுவனத்தின் பச்சை நிற ஆடையை அணிவிப்பான். எந்த முஸ்லிம் பசியுடனிருக்கும் தன்னுடைய முஸ்லிம் சகோதரனுக்கு உணவளிக்கின்றாரோ அல்லாஹ் அவரை சுவனத்தின் பழவகைகளை உண்ணச் செய்வான். எந்த முஸ்லிம் தாகித்திருக்கும் தன்னுடைய முஸ்லிம் சகோதரனுக்கு நீர் புகட்டுகின்றாரோ, அல்லாஹ் (சுவர்க்கத்தில்) அவருக்கு ‘அர்ரஹீக்குல் மக்தூம்‘ எனும் பானத்தை புகட்டுவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இதன் அறிவிப்புத் தொடர் பலஹீனமானது

654 மேலிருக்கும் கை கீழிருக்கும் கையை விடச் சிறந்தது. மேலும், நீ தர்மத்தை உன்னுடைய சொந்தபந்தங்களிலிருந்து தொடங்கு தேவைக்குப் போக (மீதம்) உள்ளதை தர்மம் செய்வதே சிறந்ததாகும். எவர் (பிறரிடம் தர்மம் கேட்காமல்) தன் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறாரோ, அல்லாஹ்வும் அவனுடைய சுயமரியாமையைப் பாதுகாக்கின்றான். எவர் (ம்டைத்ததை வைத்துப்) போதுமென்ற மனத்துடன் (தர்மத்தை ஏற்காமலேயே) இருந்து வருகிறாரோ, அல்லாஹ்வும் அவருக்குப் போதுமென்ற மனத்தையளிக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஹக்கீம் இப்னு ஹிஜாம்(ரலி) அறிவிக்கிறார்.

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

655 “தர்மத்தில் சிறந்தது எது?“ என்று மக்கள் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, “குறைந்த செல்வமே உள்ளவர் அதிலிருந்து தர்மம் செய்வது. நீங்கள் உங்கள் தர்மத்தை உங்கள் வீட்டாரிலிருந்து தொடங்குங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், அஹ்மத்

இப்னு ஹிப்பான், இப்னு குஸைமா மற்றும் ஹாம்மில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

656 “தர்மம் செய்யுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் (ஒருநாள்) கூறினார்கள். அப்போது ஒரு மனிதர், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் ஒரு தீனார் உள்ளது?“ என்று கூறினார். அதற்கு, நீ அதை உனது செலவுக்கு வைத்துக் கொள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் மற்றுமொன்றுள்ளது“ என்று கூறினார். அதற்கு, “நீ உன்னுடைய பிள்ளைகளுக்கு செலவிடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் மற்றொன்றுமுள்ளது“ என்றார். அதற்கு, நீ அதை என்னுடைய ஊழியர்களுக்குச் செலவிடு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் மற்றொன்றும் உள்ளது“ என்றார். அதற்கு, “அதைப் பற்றி நீயே தீர்மானித்துக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

657 “தன் வீட்டு உணவை வீணடிக்காமல் செலவு செய்யும் பெண்ணுக்கு அதைச் செலவிட்ட அளவுக்கு நன்மை உண்டு. அதை சம்பாதித்ததற்காக அவளுடைய கணவனுக்கும் நன்மையுண்டு. அதைப் பாதுகாக்கும் கருவூலக் காப்பாளருக்கும் அதே போன்ற நன்மை உண்டு. இது போன்றே மற்ற செலவினங்களிலும் நன்மை உண்டு. இவர்களில் எவர் காரணத்தாலும் மற்றவருக்குரிய நன்மை குறைக்கப்பட்டது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

658 இப்னு மஸ்வூத்(ரலி) அவர்களின் மனைவி ஜைனப்(ரலி) நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தர்மம் செய்யுமாறு இன்று தாங்கள் கட்டளையிட்டார்கள். என்னிடம் சில நகைகள் இருந்தன. அவற்றை தர்மம் செய்வதை விட நான் விரும்பினேன். ஆனால் இப்னு மஸ்வூத்(ரலி) அவர்களோ (நான் செலவிட விரும்புவோரை விட) அவருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் அதற்கு உரிமையுண்டு என்று கூறிவிட்டார்.“ (நான் என்ன செய்வது) என்று கேட்டார். அதற்கு, மஸ்வூத் உண்மையே சொன்னார். நீ செலவிட விரும்புவோரை விட, உன்னுடைய கணவன் மற்றும் உன் பிள்ளைகள் தாம் அதிகம் உரிமை பெற்றவர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

659 “எவன் மக்களிடம் (தன் தேவைகளை) எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கின்றானோ, அவன் மறுமை நாளில் தனது முகத்தில் மாமிசத்தின் சிறு துண்டு கூட இல்லாமல் மாமிசத்தின் சிறு துண்டு கூட இல்லாமல் (எலும்புக் கூடாக) வருவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

660 “தன்னுடைய செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக மக்களின் பொருட்களை எவன் யாசித்துக் கொண்டே இருக்கின்றானோ, அவன் நெருப்புக்கங்கையோ கேட்கின்றனர். இனி விரும்பியவர் கூட்டியோ, குறைத்தோ வாங்கி கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

661 “உங்களில் ஒருவர் ஒரு கயிற்றை எடுத்து (விறகுக் கட்டைகளை கட்டி, அதை தன் முதுகில் சுமந்து கொண்டு வந்து, விற்பனை செய்கிறார். அது மக்களிடம் யாசிப்பதை விட்டும் அவரைத் தடுத்து விடுகிறதெனில், அதுவே மக்களிடம் கேட்பதை விட அவருக்குச் சிறந்ததாகும். மக்கள் கொடுத்தாலும் சரி. கொடுக்காவிட்டாலும் சரி“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜு பைர் இப்னு அல் அவ்வாம்(ரலி) அறிவிக்கிறார்.

662 “அதிகாரம் உள்ளவரிடமும் தவிர்க்க முடியாத விஷயத்திற்காகவும் தவிர மற்ற யாசகங்கள், ஒரு மனிதன் தன் முகத்தில் தானே ஏற்படுத்திக் கொள்ளும் வடுவாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என சமுரா இப்னு ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தர்மம் பொருட்களின் பங்கீடு GO TO CHAPTER INDEX

663 “(இங்கு இடம் பெறும்) ஐந்து நபர்களைத் தவிர ஜகாத் பொருட்களைப் பெறும் தகுதி எந்த செல்வந்தருக்கும் இல்லை. 1 ஜகாத் பொருட்களைச் சேகரிக்க உழைப்பவர் 2 தன்னுடைய பொருளைப் பகரமாகக் கொடுத்து ஜகாத் பொருளை வாங்குபவர் 3. கடன் பெற்றிருப்பவர் 4. அல்லாஹ்வின் பாதையில் போரிடுபவர் 5. ஜகாத்தைப் பெற்ற ஏழையிடமிருந்து அன்பளிப்புப் பெற்றவர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

664 “நாங்கள் இருவரும் நபி(ஸல்) அவர்களிடம் ஜகாத்திலிருந்து (உதவி) வாங்குவதற்காகச் சென்றோம். அப்போது நபி(ஸல்) அவர்க்ள எங்களின் பால் பார்வையைத் திருப்ப எங்களை வளமானவர்களாகக் கண்டு, “நீங்கள் விரும்பினால், நான் உங்களுக்குத் தருகிறேன். ஆனால், இது செல்வந்தர் மற்றும் சம்பாதிக்கும் சக்தி பெற்றவர்களுக்கு உரிய தன்று“ என்று கூறினார்கள் என இருநபர்கள் தன்னிடம் கூறியதாக உபைதுல்லாஹ் இப்னு அதீ இப்னு அல் கியார்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸாயீ

இதன் அறிவிப்பாளர் பலமானவர்.

665 (தன் வேலைகளை) கேட்பது மூன்று மனிதர்களைத் தவிர்த்து வேறு எவருக்கும் ஹலால் அனுமதிக்கப்பட்டது) இல்லை. 1. எவர் பிணைப் பொறுப்பேற்று (மாட்டிக்) கொண்டாரோ, அவர் அதை, நிவர்த்தி, செய்யும் அளவு கேட்டுக் கொண்டு நிறுத்திக் கொள்ளவும். 2. ஏதோ ஆபத்து ஏற்பட்டு தன்னுடைய உடமைகள் எல்லாம் இழந்து நிற்பவர் தன்னுடைய சொந்தக் காலில் நிற்கும் வரை கேட்கலாம். 3. ஒருவருக்கு பஞ்சம் ஏற்பட்டு விட்டது என்று சாட்சியளிக்க முன்வந்தால் அவருடைய பஞ்சம் தீரும் வரை, தர்மம் கேட்பது அவருக்கு அனுமதிக்கப்பட்டதாகும்.

கபீஸாவே! மேற்கண்ட மூன்று நிலைகளைத் தவிர்த்து யாசிப்பது விலக்கப்பட்டதாகும். அதனை (யாசித்து) உண்டால் அது ஆகுமானதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என கபீஸா(ரலி) அறிவிக்கிறார்.

முஸ்லிம், அபூதாவூத், இப்னு குஸைமா மற்றும் இப்னு ஹிப்பான்.

666 “முஹம்மதின் குடும்பத்தினருக்கு ஜகாத் தேவையற்றது. ஏனெனில் அது மக்களின் அழுக்கேயன்றி வேறில்லை“ (மற்றோர் அறிவிப்பின்படி) “முஹம்மதுக்கும், முஹம்மதின் குடும்பத்தாருக்கு ஜகாத் ஹலால் (அனுமதிக்கப்பட்டது) அல்ல“ என்றும் உள்ளது என அப்துல் முத்தலிப் இப்னு ரபீஆ இப்னு அல்ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

667 நானும் உஸ்மான் இப்னு அஃப்பான்(ரலி) இருவரும் நபி(ஸல்) அவர்களிடம் சென்று! “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கைபருடைய குமுஸிலிருந்து (ஐந்தில் ஒரு பகுதியிலிருந்து) அப்துல் முத்தலிபுடைய சந்ததியினருக்கு அளித்தீர்கள் தங்களுடன் இருவருடைய பந்தமும் ஒரே மாதிரியானதாக இருந்தும் கூட எங்களை விட்டு விட்டீர்களே“ என்று கேட்டோம். அதற்கு, “முத்தலிப் மற்றும் பனூ ஹாஷிமின் மக்கள் இரு சாராரும் ஒன்றே என்பதைத் தவிர்த்து வேறு எதுவும் (காரணம்) அல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜுபைர் இப்னு முத்இம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

668 தர்மப் பொருட்களுக்காக பனூ மக்ஸூம் கூட்டத்திலிருந்து ஒருவரை நபி(ஸல்) அவர்கள் நியமித்தார்கள் “நீயும் என்னுடன் சேர்ந்து கொள்! அதனால் நீ (பலன்) பெறுவாய்!“ என்று அவர் அபூராஃபிஉவிடம் கூறினார். அதற்கவர் “நபி(ஸல்) அவர்களிடம் வந்து (இதைப் பற்றிக்) கேட்டார். அப்போது, “அடிமையாக இருந்து விடுதலை செய்யப்பட்டவர் விடுதலை செய்த கூட்டத்தைச் சேர்ந்தவராவார். நிச்சயமாக நமக்கு ஜகாத் ஹலால் (அனுமதிக்கப்பட்டது) அல்ல என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ராஃபிவு(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ இப்னு மாஜா மற்றும் இப்னு ஹிப்பான்

669 நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுத்த போது, “என்னை விடத் தேவையுடையவருக்கு இதைக் கொடுங்கள்!“ என்று உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு, “நீங்கள் இதை வாங்கிக் வைத்துக் கொள்ளுங்கள்.

இதை உங்களுக்காக எடுத்துக் கொள்ளுங்கள். அல்லது தர்மம் செய்து விடுங்கள். இந்த (குமுஸ்) செல்வத்திலிருந்து நாங்களாக ஆசைப்படாமலும் நீங்களாகக் கேட்காமலும் உங்களுக்குக் கிடைப்பதை எடுத்துக் கொள்ளுங்கள். தானாக வராததை நீங்களாகத் தேடிச் செல்லாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸாலிம் இப்னு அப்தில்லாஹ் இப்னு உமர் தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். முஸ்லிம்

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - நோன்பு

- நோன்பு
- உபரியான நோன்பு மற்றும், நோன்பு தடை செய்யப்பட்ட நாட்கள்
- இ.:திகாப் மற்றும் ரமளான் இரவுகளில் நின்று வணங்குதல்.

நோன்பு GO TO CHAPTER INDEX

670 “ஓரிரு நாட்கள் நோன்புடன் ரமளானை எதிர் கொள்ளாதீர்கள். எவரேனும் வேறு நோன்பு நோற்பவராக இருப்பின் அவர் நோற்றுக் கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

671 “சந்தேகத்திற்குரிய நாளில் எவர் நோன்பு நோற்றாரோ, அவர், அபுல் காஸிமுக்கு (எனக்கு) மாறு செய்தார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அம்மார் இப்னு யாஸிர்(ரலி) அறிவிக்கிறார்.

இது புகாரீயில் ‘முஅல்லக்‘ எனும் தரத்திலும், மவ்ஸூல் எனும் தரத்திலும், இப்னு குஸைமா, அஹ்மத், அபீதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா, நஸாயீ ஆகிய நூல்களில் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

672 “பிறையைப் பார்த்து நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள். இன்னும் பிறையைப் பார்த்து நோன்பை முடித்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது மேகம் சூழ்ந்திருந்தால் அதற்காக (நாட்களைக்) கணக்கிட்டுக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“உங்களுக்கு மேகமூட்டதால் சந்தேகம் ஏற்படுமாயின் அதற்காக முப்பது (நாட்களைக்) கணக்கிட்டுக் கொள்ளுங்கள்“ என்று முஸ்லிமிலும், “முப்பது நாட்களை பூர்த்தியாக்கிக் கொள்ளுங்கள்“ என்று புகாரீயிலும் உள்ளது.

673 புகாரீயுடைய மற்றோர் அறிவிப்பில், அபூஹுரைரா(ரலி) வாயிலாக, “ஷஅபானுடைய முப்பது நாட்களைக் பூர்த்தியாக்கிக் கொள்ளுங்கள்“ என்று உள்ளது.

674 மக்கள் பிறையைப் பார்த்தார்கள். நபி(ஸல்) அவர்களிடம் நானும் பார்த்தாகச் செய்தி கொடுத்தேன். (அதனால்) நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்றார்கள். மக்களையும் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

675 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு நாட்டுப் புறத்தார் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் பிறையைப் பார்த்து விட்டேன்“ என்று கூறினார். அதற்கு, “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என, நீ சாட்சி கூறுகிறாயா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு குஸைமா மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

676 “.:பஜ்ர் தொழுகைக்கு முன்னர் எவர் நோன்பிற்கான நிய்யத் (எண்ணம்) கொள்ளவில்லையோ அவருக்கு நோன்பு இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹ.:ப்ஸா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

திர்மிதீ மற்றும் நஸயீயில் இது மவ்கூ.:ப் எனும் தரத்தைப் பெற்றுள்ளது. இப்னு குஸைமா மற்றும் இப்னு

ஹிப்பானில் மர்ஃபூஃ ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. “இரவில் எவர் (நோன்பிற்கான) நிய்யத் செய்யவில்லையோ, அவருக்கு நோன்பு இல்லை‘ எனும் வாசகம் தாரகுத்னீயில் இடம் பெற்றுள்ளது.

677 ஒருநாள் நபி(ஸல்) அவர்கள் என் வீட்டில் நுழைந்து “(உண்பதற்கு) ஏதாவது உள்ளதா?“ என்று கேட்டார்கள். நாங்கள் “இல்லை“ என்றோம். அப்போது அவர்கள், “நான் நோன்பாளியாக உள்ளேன்“ என்று கூறினார்கள். பின்னர் மறுநாள் நபி(ஸல்) அவர்கள் வந்தார்கள். “அன்பளிப்பாக மாவு கொஞ்சம் வந்துள்ளது“ என்று நான் கூறினேன். “அதைக் கொண்டு வாருங்கள். நான் நோன்பாளியாக காலை நேரத்தை அடைந்தேன் என்று கூறினார்கள். பின்னர் அதை உண்டார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

678 “நோன்பு துறப்பதை விரைவுபடுத்தும் வரை மக்கள் நன்மையில் நிலைத்திருப்பார்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு சவுத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

679 “ஆரம்பநேரத்தில், (விரைவாக) நோன்பைத் துறப்பவனே என்னுடைய அடியார்களில் என்னிடம் அதிக அன்பிற்குரியவன் ஆவான்“ என்று அல்லாஹ் கூறுகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

680 “ஸஹர் செய்யுங்கள் (சாப்பிடுங்கள்) ஏனெனில், அதில் பரக்கத் (அருள்வளம்) உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

681 “உங்களில் எவரேனும் நோன்பைத் துறந்தால், அவர் பேரீச்சம்பழத்தைக் கொண்டு நோன்பு துறக்கட்டும். அது அவருக்குக் கிடைக்கவில்லை எனில், தண்ணீரைக் கொண்டு நோன்பு துறக்கட்டும். ஏனெனில், அது தூய்மையானது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என சுலைமான் இப்னு ஆமிர் அள்ளப்பிய்யி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸாயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் இது ஸஹீஹ் என்னும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

682 அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் தொடர் நோன்பு நோற்க வேண்டாமெனத் தடை செய்தார்கள். அப்போது முஸ்லிம்களில் ஒருவர், “நீங்கள் தொடர் நோன்பு நோற்கிறீர்களே, அல்லாஹ்வின் தூதரே!“ என்று கேட்டதற்கு, “உங்களில் யார் என்னைப் போன்றுள்ளார்? என் இறைவன் எனக்கு உணவளிக்கின்றான். நீர் புகட்டுகின்றான்“ என்று சொன்னார்கள். தொடர் நோன்பைக் கைவிட அவர்கள் மறுத்த போது அவர்களுடன் சேர்ந்து ஒரு நாள் தொடர் நோன்பு நோற்றார்கள். மறுநாளும் நோற்றார்கள். பின்னர் பிறையைக் கண்டார்கள். பின்னர் பிறையைக் கண்டார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள், “பிறை தெரியத் தாமதமாம் இருந்தால் நான் இன்னும் அதிகமாக உங்களை நோன்பு நோற்கச் செய்திருப்பேன்“ என்று அவர்கள் தொடர் நோன்பை கைவிட மறுத்ததைக் கண்டிப்பது போல் கூறினார்கள். புகாரி, முஸ்லிம்

683 “எவர் பொய் சொல்வதையும், அதன்படி செயல்படுவதையும், செயல்படுவதையும், முட்டாள் தனத்தையும் விட்டுவிடவில்லையோ் அவர் உண்ணுவதையும், பருகுவதையும் விட்டு விடுவது அல்லாஹ்விற்குத் தேவை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, அபூ தாவூத்

இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

684 நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்ற நிலையில் (தம் மனைவியை) முத்தமிடுவார்கள். மேலும், நோன்பு நோற்ற நிலையில் கட்டியணைப்பார்கள். ஆனால், அவர்கள் தம் இச்சையைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தியுடையவராக இருந்தார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

685 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டிய நிலையில் இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டார்கள். இன்னும் நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்றிருந்த நிலையில் இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டார்கள் என்று இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

686 நபி(ஸல்) அவர்கள் பகீஃ எனும் இடத்தில் ரமளான் மாதத்தில் இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டிருந்த ஒரு மனிதரிடம் வந்து “இரத்தம் குத்தி எடுப்பவரும், எடுக்கப்படுபவரும் நோன்பை முறித்துக் கொண்டார்“ என்று கூறினார்கள் என, ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸாயீ, மற்றும் இப்னுமாஜா

அஹ்மத், இப்னு குஸைமா, இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

687 ஜஃபர் இப்னு அபீதாலிப் அவர்கள். நோன்பு நோற்ற நிலையில் இரத்தம் குத்தி எடுக்கும் போது, நபி(ஸல்) அவர்கள் அவரைக் கடந்து செல்கையில், “இருவரும் நோன்பை முறித்துக் கொண்டனர்“ என்று கூறினார்கள்.

(அப்போது இரத்தம் குத்தி எடுப்பது தடுக்கப்பட்டிருந்தது). அப்போது தான் நான் நோன்பாளி இரத்தம் குத்தி எடுத்துக் கொள்வது, விரும்பத் தகாததாக ஆக்கப்பட்ட முதல் சந்தர்ப்பமாகும். பின்னர் நபி(ஸல்) அவர்கள் நோன்பாளிகளுக்கு இரத்தம் குத்தி எடுத்துக் கொள்ள சலுகை அளித்து விட்டார்கள். மேலும், நோன்பு நோற்ற நிலையில் அனஸ்(ரலி) அவர்கள், இரத்தம் குத்தி எடுத்துக் கொள்வார்கள் என்று அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். தாரகுத்னி

இது பலமான அறிவிப்பாளர்களைக் கொண்ட ஹதீஸாகும்.

688 நபி(ஸல்) அவர்கள் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்ற நிலையில் சுர்மா போட்டுக் கொண்டார்கள் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா

இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான எந்த ஒரு ஹதீஸு ம் ஸஹீஹ் எனும் தரத்தில் இல்லையென திர்மிதீயில் உள்ளது.

689 எவர் நோன்பிருக்கும் நிலையில் மறதியாக உண்ணுகிறாரோ, பருகுகிறாரோ அவர் தம்முடைய நோன்பைப் பூர்த்தியாக்கிக் கொள்ளட்டும். (நோன்பை முறித்து விட வேண்டாம்). ஏனெனில், அல்லாஹ்வே அவரை உண்ணச் செய்தான் பருகச் செய்தான் என நபி(ஸல்) கூறியதாக அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

690 "எவர் ரமளான் மாதத்தில் மறதியாக நோன்பை முறித்து விட்டாரோ, அவர் மீது களாவும் இல்லை பரிகாரமும் இல்லை" என்று ஹாம்மில் இடம் பெற்றுள்ளது. மேலும் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

691 எவருக்கு (நோன்பு நோற்ற நிலையில்) அவரையும் மீறி வாந்தி வந்ததோ அவர் மீது (நோன்பு)களா இல்லை. இன்னும் எவர் (நோன்பு நோற்ற நிலையில் வேண்டுமென்றே வாந்தி எடுத்து விட்டாரோ, அவர் மீது (நோன்பு)களாவாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

அஹ்மதில் இது 'மஃலூல்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தாரகுத்னீயில் 'பலமானது' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

692 நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றி கொண்ட ஆண்டில் ரமளான் மாதத்தில் மக்காவை நோக்கி வெளியேறினார்கள். அப்போது 'குரா உல் கமீம்' எனும் இடத்தை அடையும் வரை நோன்பு நோற்றார்கள். மக்களும் நோன்பு நோற்றார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வரச் செய்து அதை உயர்த்தினார்கள். மக்களனை வரும் அதைப் பார்த்தனர். நபி(ஸல்) அவர்கள் அதனைக் குடித்து விட்டார்கள். அதற்குப் பின்னரும் சிலர் நோன்பு நோற்றவர்களாகவே உள்ளனர் நோன்பு நோற்றவர்களாகவே உள்ளனர் என்ற செய்தி அவர்களிடம் சொல்லப்பட்டது. அதற்கு "அவர்கள் பாவிகள்! அவர்கள் பாவிகள்!" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார்.

693 (அப்போது) நிச்சயமாக அந்த மக்களுக்கு நோன்பு நோற்பது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள், (நபியாகிய) தாங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நபி(ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. உடனே, நபி(ஸல்) அவர்கள் அஸர் தொழுகைக்குப் பின் அதைக் குடித்தார்கள் என்று முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

694 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் பயணத்திலும் நோன்பு நோற்க சக்தி பெற்றவனாக இருக்கிறேன். அதனால் என் மீது குற்றமாகுமா?" என்று நான் கேட்டதற்கு, "இது அல்லாஹ்விடம் இருந்து வந்துள்ள சலுகையாகும். எவர் அதை எடுத்துக் கொண்டாரோ அவர் சிறப்படைந்தார். இன்னும் எவர் நோன்பு நோற்க விரும்பினாரோ அவர் மீது குற்றமில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஹம்ஸா இப்னு அம்ர் அல் அஸ்லமீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

ஹம்ஸா இப்னு அம்ர்(ரலி) கேட்டதாக ஆயிஷா(ரலி) வாயிலாக புகாரீ, முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

695 ஒவ்வொரு நோன்பிற்கும் பகரமாக, ஓர் ஏழைக்கு ஸஹர் மற்றும் இப்தார், உணவு உண்ணச் செய்ய வேண்டும். களா செய்ய வேண்டியது இல்லை என்று வயோதிகர்களுக்கு நபி(ஸல்) அவர்களால் சலுகை அளிக்கப்பட்டது என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னி, ஹாம்கி

இரண்டிலும் இது "ஸஹீஹ்" எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

696 ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அழிந்து விட்டேன்"

என்று கூறியதற்கு, “எது உன்னை அழித்தது?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். “ரமளானில் என் மனைவியுடன் உறவு கொண்டு விட்டேன்“ என்று கூறினார். “உன்னால் ஓர் அடிமையை விடுதலை செய்ய இயலுமா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், “இயலாது“ என்றார். “அப்படியானால், அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க இயலுமா?“ என்று கேட்டார்கள். அதற்கும் “இயலாது“ என்றார்.

பின்னர் (அங்கேயே) அமர்ந்து கொண்டார். அப்போது நபி(ஸல்) அவர்களிடம் ஒரு தட்டு கொடுக்கப்பட்டது. அதில் பேரீச்சம் பழங்கள் இருந்தன. (அதை அவரிடம் வழங்கி) “இதை தர்மம் செய்வீராக!“ என்றனர். அதற்கவர், “எங்களை விட ஏழைகளுக்கா? இந்த மதீனாவிற்குள் எங்களை விட ஏழைகள் எவரும் இல்லையே?“ என்றார். அதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள் தமது கடைவாய்ப் பற்கள் தெரியுமளவிற்குச் சிரித்தார்கள். “நீர் சென்று உமது குடும்பத்தாருக்கு இதை வழங்குவீராக!“ என்றும் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், புகாரீ, முஸ்லிம், அபூ தாவூத், நஸயீ, திர்மிதி, மற்றும் இப்னு மாஜா.

இங்கு முஸ்லிமின் வாசம் இடம் பெற்றுள்ளது.

697 நபி(ஸல்) அவர்கள் உடலுறவு கொண்டு, குளிப்பு கடமையான நிலையில் காலை நேரத்தை அடைந்து பின்னர் குளிப்பார்கள். மேலும் நோன்பு நோற்பார்கள் என்று ஆயிஷா மற்றும் உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார் புகாரீ, முஸ்லிம்

‘அவர்கள் களாச் செய்யமாட்டார்கள்‘ எனும் வாசகம் உம்மு ஸலமா(ரலி) வாயிலாக முஸ்லிமில் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

698 “தன் மீது நோன்பு கடமையாக இருக்கும் நிலையில் எவர் இறந்து விடுகிறாரோ அவருடைய நோன்பை அவருடைய பொறுப்பாளர் நோற்கட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

உபரியான நோன்பு மற்றும், நோன்பு தடை செய்யப்பட்ட நாட்கள்

GO TO CHAPTER INDEX

699 அரஃபா தின நோன்பு பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, “அது கடந்த வருடத்தின் மற்றும் வரக்கூடிய வருடத்தின் பாவத்தை மன்னித்து விடும்“ என்று கூறினார்கள். இன்னும் ஆஷூராதின நோன்பு பற்றி கேட்கப்பட்டதற்கு, நோன்பு பற்றி கேட்கப்பட்டதற்கு, “கடந்த வருடத்தின் பாவங்களை மன்னித்து விடு“ என்று கூறினார்கள். இன்னும் அவர்களிடம் திங்கள் கிழமை நோன்பு பற்றி கேட்கப்பட்டதற்கு, “அந்நாளில் தான் நான் பிறந்தேன். அதில் நான் (நபியாக) அனுப்பப்பட்டேன். அதில் தான் என் மீது (குர்ஆன்) அருளப்பட்டது“ என்று அவர்கள் கூறினார்கள் என, அபூகத்தாதா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

700 “ரமளான் மாதத்தின் நோன்பை நோற்ற ஒருவர், “பின்னர் அதைத் தொடர்ந்து ஷவ்வால் மாதத்தின் ஆறு நோன்பை நோற்பாரானால், அவ்வருடம் முழுவதும் அவர் நோன்பு நோற்றவர் போன்றாவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஅய்யூப் அல் சன்சாரி (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

701 “எவர் அல்லாஹ்வுடைய பாதையில் ஒருநாள் நோன்பு நோற்கிறாரோ, அவருடைய முகத்தை நரக நெருப்பை விட்டு எழுபதாண்டு கால அளவுக்கு தூரமாக்காமல் அல்லாஹ் விடுவதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரி, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

702 நபி(ஸல்) அவர்கள் நோன்பு நோற்காமலிருக்க மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவிற்கு அவர்கள் நோன்பு நோற்பார்கள். இன்னும் அவர்கள் நோன்பு நோற்க மாட்டார்கள் என்று நாங்கள் கூறுமளவிற்கு நோன்பு நோற்காமலும் இருப்பார்கள். ரமளான் மாதம் தவிர்த்து மற்ற மாதங்களில் முழுமையாக நோன்பு நோற்றவராக நபி(ஸல்) அவர்களை நான் பார்க்கவில்லை. இன்னும் அவர்கள் ஷஅபான் மாதத்தில் நோன்பு நோற்ற அளவு மற்ற மாதத்தில் நோன்பு நோற்று நான் பார்த்ததில்லை என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இங்கு இடம் பெற்றுள்ளது.

703 மாதத்தின் 13, 14, 15 ஆகிய மூன்று நாட்கள் நோன்பு நோற்குமாறு நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டார்கள் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

704 “கணவன் இருக்கும் நிலையில் அவனுடைய அனுமதியில்லாமல் ஒரு பெண் (நஃபிலான) நோன்பு நோற்பது ஆகுமானதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரியின் வாசகம் இடம் பெற்றுள்ளது. “ரமளானைத் தவிர“ எனும் வாசகம் அபூ தாவூதில் அதிகப்படியாக உள்ளது.

705 “யவ்முல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) ஆகிய இரு நாட்களில் நோன்பு நோற்பதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என்று அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

706 “அய்யாமுத் தஷ்ரீக் (ஹஜ் பெருநாளுக்குப் பின்புள்ள மூன்று நாட்கள்) உண்பதற்கும், பருகுவதற்கும், அல்லாஹ்வை நினைவு கூர்வதற்கும் உள்ள நாட்களாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என நுபைஷா அல்ஹுஃ தலிய்யீ (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

707 பலிப்பிராணி கிடைக்காத நபரைத் தவிர்த்து மற்றவர்கள் அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் நோன்பு நோற்க அனுமதி இல்லை என இப்னு உமர்(ரலி) மற்றும் ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரி

708 “வெள்ளிக்கிழமை இரவன்று நின்று வணங்குவதற்கு ஏனைய இரவுகளை விட முக்கியத்துவம் அளிக்க வேண்டாம். வழக்கமாக (தொடர்ந்து) நோன்பு நோற்பவரைத் தவிர, வேறு எவரும் மற்ற தினங்களை விட வெள்ளிக்கிழமை நோன்பு நோற்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

709 “உங்களில் எவரும் வெள்ளிக்கிழமை (மட்டும்) நோன்பு நோற்காதீர்கள். அதற்கு முன்பு ஒருநாள் அல்லது அதற்குப் பின்பு ஒருநாள் நோன்பு நோற்பதைத் தவிர“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

710 “ஷஅபான் மாதத்தின் பாதிப்பகுதியை அடைந்துவிட்டால் நோன்பு நோற்காதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

711 கடமையாக்கப்பட்ட நோன்பைத் தவிர்த்து உங்களில் எவரும் சனிக்கிழமை (மட்டும்) நோன்பு நோற்க வேண்டாம். உங்களில் எவரேனும் (அன்று எதுவும் கிடைக்கப் பெறாமல்) திராட்சைத் தோலையோ அல்லது ஏதேனும் மரக்குச்சியையோ பெற்றுக் கொண்டால், அதை (யாவது) மென்று கொள்ளவும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸம்மா பின்த்து புஸ்ர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது மாலிக்கில் முன்கர் மற்றும் அபூதாவூதில் மன்ஸூக் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

712 நபி(ஸல்) அவர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் அதிக நோன்பு நோற்பவராக இருந்தார்கள். “இவை இரண்டும் இணை வைப்பாளர்களின் பெருநாட்கள். நான் அவர்களுக்கு மாறு செய்ய விரும்புகிறேன்“ என்று கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு இப்னு குஸைமாவின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

713 அரஃபா தினத்தன்று அரஃபா மைதானத்தில் (ஹாஜிகள்) நோன்பு நோற்பதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு குஸைமாவிலும் ஹாம்மிலும் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

714 “எவர் காலமெல்லாம் நோன்பு நோற்றாரோ அவர் நோன்பு நோற்கவே இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரி, முஸ்லிம்

715 அபூகதாதா(ரலி) வாயிலாக, “அவர் நோன்பு நோற்கவும் இல்லை. நோன்பு நோற்காமல் இருக்கவுமில்லை“ எனும் வாசகம் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

இஃதிகாப் மற்றும் ரமளான் இரவுகளில் நின்று வணங்குதல்.

GO TO CHAPTER INDEX

716 “இறை நம்பிக்கையோடும், நன்மையை நாடியும் எவர் ரமளானில் (இரவுகளில்) நின்று வணங்குகிறாரோ அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என,

அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

717 நபி(ஸல்) அவர்கள் (ரமளானுடைய இறுதிப் பத்து நாட்களை) அடைந்து விட்டால், வரிந்து கட்டிக் கொண்டு இரவு முழுவதும் விழித்திருப்பார்கள். தம்முடைய குடும்பத்தார்களையும் எழுப்பி விடுவார்கள்“ என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

718 நபி(ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் மரணத்தை அளிக்கும் வரை ரமளானுடைய இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருந்தார்கள். அவர்கள் மரணமடைந்த பின்பு அவர்களுடைய மனைவிமார்கள் இஃதிகாஃப் இருந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

719 நபி(ஸல்) அவர்கள் இஃதி காஃப் இருக்க விரும்பினால், ஃபஜ்ர் தொழுவார்கள். பின்னர் இஃதிகாஃபில் நுழைந்து விடுவார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

720 நபி(ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருக்கும் நிலையில் என் பக்கம் தம் தலையை நீட்டுவார்கள். நான் தலையை சீவி விடுவேன். அவர்கள் இஃதிகாஃப் இருக்கும் போது தம்முடைய சுய தேவைக்காகவே தவிர வீட்டினுள் நுழைய மாட்டார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரியின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

721 “நோயாளியை நலம் விசாரிக்கச் செல்லாமலும், ஜனாஸாவில் கலந்து கொள்ளாமலும், பெண்ணைத் தொடாமலும், அவளைக் கட்டியணைக்காமலும், தன்னுடைய முக்கியத் தேவைக்கன்றி வேறு எதற்காகவும் பள்ளிவாசலை விட்டு வெளியில் வராமலும் இருப்பது இஃதிகாஃப் இருப்பவர் மீது சுன்னத்தாகும். இன்னும் நோன்பில்லாமல் இஃதிகாப் இல்லை. மேலும் தொழுகைக்காக மக்கள் கூடுகின்ற பள்ளிவாசலில் தவிர வேறு எங்கும் இல்லை“ என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

722 “தனக்குத் தானே விதித்துக் கொண்டதைத் தவிர இஃதிகாஃப் இருப்பவர் மீது வேறு எந்த நோன்பும் இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ, ஹாம்கி

இதில் மவ்கூஃப் எனும் தரம் மேலோங்கியுள்ளது.

723 நபித்தோழர்களில் சிலருக்கு லைலத்துல் கத்ரு பிந்திய இரவில் (இருப்தாக) கனவில் காண்பிக்கப்பட்டது. இதைப் பற்றி நபி(ஸல்) அவர்கள், “உங்கள் கனவுகள் எல்லாம் (ரமளானில்) கடைசி ஏழு நாட்களிலேயே சேர்ந்து அமைந்திருப்பதை நான் காண்கிறேன். எவராவது அதைத் தேடுபவராக இருப்பின் கடைசி ஏழு நாட்களில் தேடிக் கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

724 லைலத்துல்கத்ர் இரவைப் பற்றிக் குறிப்பிடுகையில், “அது 27வது இரவு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆவியா இப்னு அபீஸுஃப்யான்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது இது சம்பந்தமாக ஃபத்ஹுல் பாரீ(புகாரியின் விரிவிரை)யில் 40 கருத்துகள் இடம் பெற்றுள்ளன.

725 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! லைலத்துல் கத்ர் எதுவென அறிந்து கொண்டால் நான் என்ன கூறுவது?“ என்று கேட்டதற்கு, “யா அல்லாஹ்! நிச்சயமாக நீ மன்னிக்க கூடியவன் மன்னிப்பை விரும்புபவன் என்னை மன்னிப்பாயாக! என்று கூறவும்“ என நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

726 “மஸ்ஜிதுல்ஹராம் என்னுடைய இந்த மஸ்ஜித் மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று மஸ்ஜிதுகளை தவிர்த்து வேறு எந்தப் பள்ளிவாசலுக்கும் செல்ல (விசேஷ) பயணத் தயாரிப்புகளை மேற்கொள்ளாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - ஹஜ் கடமையாக்கப்பட்டவர்களும் அதன் சிறப்புகளும்

- ஹஜ் கடமையாக்கப்பட்டவர்களும் அதன் சிறப்புகளும்
- மினா எல்லை
- இஹ்ராமுடைய தன்மைகள் மற்றும் அதன் வகைகள்
- இஹ்ராம் தொடர்பான விளக்கங்கள்
- ஹஜ்ஜின் ஒழுங்குகள், மக்கா பிரவேசம்
- ஹஜ் பயணம் தவறி விடுதல் அல்லது ஹஜ் செய்ய விடாமல் தடுக்கப்படுதல்

ஹஜ் கடமையாக்கப்பட்டவர்களும் அதன் சிறப்புகளும் GO TO CHAPTER INDEX

727 “உம்ராவானது, மறு உம்ரா வரையிலான பாவங்களின் பரிகாரமாகும். பாவங்கள் கலக்காத ஹஜ்ஜுடைய கூலி சுவர்க்கத்தைத் தவிர வேறில்லை!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

728 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெண்கள் மீது ஜிஹாத் உண்டா?“ என்று நான் கேட்டதற்கு, “ஆம்! நீ பெண்கள் மீது ஜிஹாத் உண்டு. போர் இல்லை. அது ஹஜ் மற்றும் உம்ரா ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், இப்னு மாஜா

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு இப்னு மாஜாவின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

729 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு நாட்டுப் புறத்தார் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு உம்ராவைப் பற்றிக் கூறுங்கள். அது கடமையா?“ என்று கேட்டதற்கு, இல்லை! நீ உம்ரா செய்தால் உனக்குச் சிறப்பு என்று கூறினார்கள் என, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ

இதில் மவ்கூஃப் எனும் தரம் மேலோங்கியள்ளது. இப்னு அதீ உடைய மற்றோர் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மற்றோர் அறிவிப்பின்படி ஜாபிர்(ரலி) வாயிலாக, ‘ஹஜ் மற்றும் உம்ரா கடமைகள் என்று மர்ஃபூஃ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

730 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஸபீல் என்றால் என்ன? (எதைக் குறிக்கும்?)“ என்று பதிலளித்தார்கள் என, அனஸ்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் உள்ளது இன்னும் முர்ஸல் எனும் தரமே இதில் மேலோங்கியள்ளது.

731 இப்னு உமர்(ரலி) வாயிலாக திர்மிதீயில் இடம் பெறும் ஹதீஸ் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

732 (மதீனாவிற்கு அருகில் உள்ள) ரவ்ஹா எனும் இடத்தில் நபி(ஸல்) அவர்கள் ஒரு பயணக் கூட்டத்தைச் சந்தித்த போது, “நீங்கள் யார்?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கவர்கள், “நீங்கள் யார்?“ என்று கேட்டனர். “நான் அல்லாஹ்வின் தூதர்“ என்று நபி(ஸல்) அவர்கள் பதில் கூறினார்கள். அப்போது ஒரு பெண் பிள்ளையை நபி(ஸல்) அவர்களின் பால் கொண்டு வந்து, “இதற்கு ஹஜ் இருக்கிறதா?“ என்று கேட்டார்.

“ஆமாம்! அதன் கூலி உனக்காகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

733 ஃப்ழ்ல் இப்னு அப்பாஸ் சவாரியில் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தார். அப்போது கஸ்அம் கோத்திரத்திலிருந்து ஒரு பெண்மணி வந்தார். உடனே ஃபழ்ல் அந்தப் பெண்ணைப் பார்த்தார். அந்தப் பெண்ணும் அவரைப் பார்க்கலானாள். நபி(ஸல்) அவர்கள் ஃபழ்ல் உடைய முகத்தை வேறு திசையில் திருப்பலானார்கள். அப்போது, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அடியார்கள் மீது ஹஜ் அல்லாஹ்வின் கடமையாக உள்ளது. என்னுடைய தந்தை மிகவும் வயோதிகராம் விட்டார். அவரால் வாகனத்தில் அமர முடியாது. (எனவே) அவர் சார்பாக நான் ஹஜ் செய்யலாமா?“ என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “ஆம்! (செய்யலாம்) என்றார்கள். இது ஹஜ்ஜத்துல்வதாவில் நிகழ்ந்தது“ என்று இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரி, முஸ்லிம்

இங்கு புகாரியின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

734 ஜுஹைனா கோத்திரத்திலிருந்து ஒரு பெண்மணி நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “(அல்லாஹ்வின் தூதர் அவர்களே!) என்னுடைய தாய் ஹஜ் செய்வதாக நேர்ச்சை செய்திருந்தார். ஆனால் ஹஜ் செய்யாமலேயே இறந்துவிட்டார். அவருக்காக நான் ஹஜ் செய்யலாமா?“ என்று கேட்டார். (அதற்கு) “ஆமாம் நீ அவருக்காக ஹஜ் செய்! உன்னுடைய தாய் மீது கடனிருந்தால், அதை நீ தீர்ப்பாயல்லவா? அல்லாஹ்வுடைய கடனைத் தீருங்கள். நமது வாக்கை நிறைவேற்றித் தர அல்லாஹ்வே மிகவும் அருகதையானவன் என்று நபி(ஸல்) அவர்கள் பதில் அளித்தார்கள். இதை இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம் புகாரி

735 “எவர் சிறுவராக இருக்கும் போது ஹஜ் செய்து விட்டாரோ, அவர் இளமையடைந்து விட்டாரோ, அவர் இளமையடைந்து விட்டால் மற்றொரு ஹஜ் செய்ய வேண்டும். எவர் அடிமையாக இருக்கும் போது ஹஜ் செய்து விட்டாரோ, அவர் விடுதலையடைந்து விட்டால் மற்றொரு ஹஜ் செய்ய வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். இப்னு அபீ ஷைபா, பைஹக்கீ

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள் இது மர்ஃபூஃ எனும் தரத்தில் உள்ளதா? என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. மவ்கூஃப் எனும் தரமே இதில் மேலோங்கியள்ளது.

736 “எந்த ஒரு பெண்ணுடனும் அவளை மணம் புரிவது தடை செய்யப்பட்ட ஒருவர் இல்லாமல் அவளுடன் எவரும் தனித்திருக்க வேண்டாம். இன்னும் எந்த பெண்ணும் திருமண பந்தம் தடை செய்யப்படாத ஓர் ஆணுடன் தனித்துப் பயணம் செய்ய வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் உரை நிகழ்த்த நான் கேட்டுள்ளேன். அப்போது ஒருவர் எழுந்து “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய மனைவி தனியாக ஹஜ் செய்யச் சென்றுள்ளார். நானோ இன்ன இன்ன யுத்தங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளேன்“ என்று கூறினார். அதற்கு, “நீ சென்று உன்னுடைய மனைவியுடன் ஹஜ்ஜை மேற்கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமுடைய வாசகம் இடம் பெற்றுள்ளது.

737 ஒரு மனிதர் (ஹஜ் செய்யும் போதும்), “ஷுப்ருமாவின் சார்பாக நான் ஆஜராகியள்ளேன்... என்று சொல்வதை செவியுற்ற நபி(ஸல்) அவர்கள், “ஷுப்ருமா யார்?“ என்று கேட்டார்கள். அதற்கு அவர் “என்னுடைய சகோதரன்“ என்றோ, “எனக்கு நெருக்கமானவர்“ என்றோ கூறினார். (அதற்கு) “முதலில் உனக்காக ஹஜ் செய்து கொள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பா!(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மவ்கூஃப் எனும் தரமே மேலோங்கியள்ளதாக அஹ்மதில் உள்ளது.

738 நபி(ஸல்) அவர்கள் ஒருமுறை எங்களுக்கு உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது, “அல்லாஹ் உங்கள் மீது ஹஜ்ஜை விதியாக்கியள்ளான்“ என்று கூறினார்கள். அப்போது அக்ரஉ இப்னு ஜாபிஸ்(ரலி) எழுந்து நின்று “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது ஒவ்வொரு வருடமுமா?“ என்று கேட்டார். (அதற்கு) “நான் அப்படிச் சொன்னால் அது கடமையாகி விடும். ஹஜ் என்பது ஒருமுறை தான். அதற்கு மேல் செய்வது உபரியாகி விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்,அபூ தாவூத், நஸாயீ, மற்றும் இப்னுமாஜா

739 இதன் (738வது ஹதீஸின்) மூலம் அபூஹுரைரா(ரலி) வாயிலாக முஸ்லிமிலும் உள்ளது.

மினா எல்லை

GO TO CHAPTER INDEX

740 மதீனா வாசிகளுக்கு துல்ஹுு லை.:பா எனும் இடத்தையும் சிரியா வாசிகளுக்கு ஜு ஹ்.:பா எனும் இடத்தையும், நஜ்த் வாசிகளுக்கு கர்ன் அல்மனாஸில் எனும் இடத்தையும் இன்னும் யமன் வாசிகளுக்கு கர்ன் அல்மனாஸில் எனும் இடத்தையும் இன்னும் யமன் வாசிகளுக்கு 'யலம்லம்' எனும் இடத்தையும் இஹ்ராம் கட்டுமிடமாக நபி(ஸல்) அவர்கள் ஆக்கினார்கள். இவை அவர்களுக்கும் இவற்றின் வழியாக யார் ஜழைகிறார்களோ, அவர்களுக்கும் அங்கு இஹ்ராம் கட்டும் இடங்களாகும். மக்காவாசிகள் இஹ்ராம் கட்டுமிடம் மக்காவே ஆகும் என, இஹ்ராம் கட்டுமிடத்தை நபி(ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள். புகாரீ, முஸ்லிம்

741 இராக் வாசிகளின் இஹ்ராம் கட்டுமிடம் 'தாத்து' 'இர்க்' எனும் மலைக்குன்று அருகே என நபி(ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அபூதாவூத், நஸயீ

742 ஹதீஸ் 741 உடைய மூலம் ஜாபிர்(ரலி) அவர்கள் வாயிலாக முஸ்லிமில் உள்ளது. அதனுடைய அறிவிப்பாளர் அதற்கு மர்.:பூ.: எனும் தரம் உள்ளதா என சந்தேம்க்கிறார்.

743 உமர்(ரலி) அவர்கள்,தாம், தாத்து இர்க் என்னும் இடத்தை இஹ்ராம் கட்டுமிடமாக ஆக்கினார்கள் என, புகாரீயில் உள்ளது.

744 நபி(ஸல்) அவர்கள், கீழை நாட்டவர்களின் இஹ்ராம் கட்டுமிடமாக 'அகீக்' எனும் இடத்தை ஆக்கினார்கள் என்று இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக அஹ்மத், அஹ்மத், திர்மிதீயில் உள்ளது.

இஹ்ராமுடைய தன்மைகள் மற்றும் அதன் வகைகள்

GO TO CHAPTER INDEX

745 ஹஜ்ஜதுல் வதா ஆண்டில் நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் சென்றோம். அப்போது எங்களில் சிலர் உம்ராவுக்காக இஹ்ருாம் கட்டினார்கள். மற்றும் சிலர் ஹஜ்ஜு க்காக இஹ்ராம் கட்டினார்கள். நபி(ஸல்) அவர்கள் ஹஜ்ஜு க்காக இஹ்ராம் கட்டினார்கள் எவர்கள் உம்ராவுக்காக இஹ்ருாம் கட்டினார்களோ, அவர்கள் மக்காவை அடைந்தவுடன் (உம்ரா செய்து) இஹ்ராமைக் கலைந்து விட்டார்கள். எவர்கள் ஹஜ்ஜு க்காக இஹ்ருாம் கட்டினார்களோ அல்லது ஹஜ் உம்ரா இரண்டையும் ஒன்று சேர்த்து கிரானுடைய ஹஜ்ஜு க்கு இஹ்ராம் கட்டினார்களோ, குர்பானியுடைய நாள் வரும் வரை அது (இஹ்ராமைக் கலைதல்) ஆகுமானதல்ல. புகாரீ, முஸ்லிம்

இஹ்ராம் தொடர்பான விளக்கங்கள்

GO TO CHAPTER INDEX

746 துல்ஹு லை.:பா இடத்திலுள்ள மஸ்ஜிதைத் தவிர்த்து நபி(ஸல்) அவர்கள் வேறெங்கும் இஹ்ராம் கட்டியது இல்லை என்று இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

747 என்னிடம் ஜிப்ரீல்(அலை) அவர்கள் வந்து என்னுடைய தோழர்கள். அவர்களுடைய லப்பைக் முழக்கத்தை உயர்த்தும்படி கட்டளையிட வேண்டுமாறு எனக்குக் உத்தரவிட்டார்கள் என்று நபி(ஸல்) கூறினார்கள் என, கல்லாத் இப்னு அஸ்ஸாயிபு தம்முடைய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

748 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டும்போது தம்முடைய ஆடைகளைக் களைந்து குளித்தனர்.

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

749 "இஹ்ராம் கட்டுபவர்கள், எத்தகைய ஆடை அணிய வேண்டும்? என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, "சட்டை, தலைப்பாகை மற்றும் காலுறை மற்றும் தலையில் முடிய நீண்ட அங்கி ஆகியவற்றை அணியவேண்டாம். எவரிடமேனும் காலணி இருப்பின் அவர் காலுறை அணிந்து கொள்ளட்டும். ஆனாலும், அதை கரண்டைக் காலுக்குக் கீழ் கத்தரித்துக் கொள்ளட்டும். காவி (அல்லது குங்குமப்பூச்சாயம்) மேலும், 'வர்ஸ்' எனும் செடியின் இலையின் சாயம் பூசப்பட்ட ஆடைகளை அணிய வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

750 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டுவதற்கு முன்பும் கஅபத்துல்லாஹ்வை வலம் வருவதற்கு முன்பு இஹ்ராமைக் கலையும் போதும் நான் அவர்களுக்கு நறுமணம் பூசினேன் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

751 இஹ்ராம் கட்டியவர் நிக்காஹ் (திருமணம்) செய்யவோ திருமணம் செய்து வைக்கவோ, இன்னும் அதற்காக உரை நிகழ்த்தவோ கூடாது என்று நபி(ஸல்) கூறினார்கள் என உஸ்மான் இப்னு அஃப்பான்(ரலி) அறிவிக்கிறார்கள். முஸ்லிம்

752 தான் இஹ்ராம் கட்டாத நிலையில் இருக்கும் போது காட்டுக் கழுதையை வேட்டையாடிய சம்பவம் பற்றி அபூ கதாதா அன்சாரி(ரலி) அறிவிக்கிறார். இஹ்ராம் கட்டிய தம்முடைய தோழர்களைப் பார்த்து, (இதற்காக) உங்களில் எவரேனும் கட்டளையிட்டாரா? அல்லது சமிக்ஞை செய்தாரா? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, அவர்கள், "இல்லை" என்று சொன்னார்கள். "(அதன்பின்) மீதமிருக்கும் அதன் கறியை உண்ணுங்கள்" என சொன்னார்கள். புகாரீ, முஸ்லிம்

753 நபி(ஸல்) அவர்களுக்கு அப்வா அல்லது வத்தான் எனும் இடத்தில் இருக்கும் போது ஒரு காட்டுக் கழுதையை அன்பளிப்பாகக் கொடுத்தேன். அதை அவர்கள் என்னிடமே திருப்பிக் கொடுத்து விட்டு, நாங்கள் இஹ்ராம் கட்டியிருப்பதால் தான் இதைத் திரும்பத் தருகிறோம்" என்று கூறினார்கள் என ஸஅப் இப்னு ஜஸ்ஸலாமா அல் லைஸி(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

754 மிகத் தீய ஐந்து உயிரினங்களை இஹ்ராம் கட்டியிருக்கும் நிலையிலும் சொல்ல வேண்டும். அவை 1 தேன் 2. பருந்து 3. காகம் 4. எலி 5. வெறிநாய் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

755 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டியிருக்கும் நிலையில், இரத்தம் குத்தி எடுத்துக் கொண்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

756 நான் நபி(ஸல்) அவர்களிடம் தூக்கி வரப்பட்டேன். அப்போது என்னுடைய முகத்தில் பேன்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. "நான் உன்னை இப்போது பார்க்கும் அளவுக்கு உனக்கு நோய் இருக்கும் என்று நான் கருத வில்லை" என்று கூறிவிட்டு "உன்னிடம் ஆடு எதுவும் இருக்கிறதா?" என்று கேட்டார்கள். அதற்கு நான் "இல்லை" என்று சொன்னேன். "அப்படியானால், நீ மூன்று தினங்கள் நோன்பு நோற்றுக் கொள்! அல்லது ஆறு ஏழைகளுக்கு (நபர் ஒன்றுக்கு) அரை ஸாவு அளவு உணவளித்திடு!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என கஅப் இப்னு உஜ்ரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

757 அல்லாஹ் தனது தூதருக்கு மக்கா வெற்றியை அளித்ததும் அவர்கள் எழுந்து நின்று, அல்லாஹ்வைப் புகழ்ந்து போற்றி விட்டு, அல்லாஹ் யானைகளை மக்காவை விட்டுத் தடுத்து விட்டான். இன்னும் தனது தூதர் மற்றும் முஸ்லிம்களுக்கு அதன் மீது வெற்றியைக் கொடுத்தான். நிச்சயமாக மக்காவில் போர் புரிவது எனக்கு முன்பு எவருக்கும் அனுமதிக்கப்படவில்லை. நிச்சயமாக எனக்குப் பின்னரும் மக்காவில் போர்புரிவது எவருக்கும் அனுமதிக்கப்படாது. அதன் வேட்டைப் பிராணிகளை விரட்டக் கூடாது. அதில் முள் மரங்களையும் வெட்டக் கூடாது. அங்கு கீழே விழும் பொருளை பொது அறிவிப்புச் செய்பவர் தவிர, வேறு யாரும் எடுக்கக் கூடாது. கொலை செய்யப்பட்டவனின் சாராருக்கு (ஈட்டுத் தொகை வாங்கிக் கொள்ளும் அல்லது பழிதீர்க்கும்) இரண்டு உரிமைகளில் சிறந்தது ஒன்று தரப்பட்டுள்ளது. அப்போது "நம்முடைய இல்லங்கள், அடக்க ஸ்தலங்களில் நாம் பயன்படுத்தக் கூடிய இத்கிர் எனும் புல்லில் மட்டும் சலுகை அளியுங்கள். அல்லாவின் தூதர் அளியுங்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே!" என்று அப்பாஸ்(ரலி) அவர்கள் கேட்டதற்கு "இத்கிரைத் தவிர" என்று நபி(ஸல்) பதிலளித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

758 இப்ராஹீம் (அலை) அவர்கள் மக்கா வைப் புனித நகராக அறிவித்து அதில் வாழும் மக்களுக்காக துஆ செய்தார்கள். மக்காவை இப்ராஹீம் புனிதமாக்கியது போன்று நானும் மதீனாவைப் புனிதமாக்குகிறேன். மேலும், அதன் 'முத்'திலும் 'ஸாஉ' விலும் அருள்வளம் வழங்கும்படி இப்ராஹீம்(அலை) அவர்கள் மக்காவாசிகளுக்காக பிரார்த்தித்ததைப் போன்றே மதீனாவாசிகளுக்காகப பிரார்த்தித்தேன். புகாரி, முஸ்லிம்

759 "மலையிலிருந்து 'ஸ்வர்' மலை வரையுள்ள மதீனாவின் மலை வரையுள்ள மதீனாவின் நிலப்பரப்பு புனிதமானது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ இப்னு அபீதாலீப்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

ஹஜ்ஜின் ஒழுங்குகள், மக்கா பிரவேசம் GO TO CHAPTER INDEX

760 நபி(ஸல்) அவர்கள் ஹஜ் செய்த போது நாங்கள் அவர்களுடன் சென்றோம். நாங்கள் துல்ஹுு லைஃபா எனும் இடத்தை அடைந்த போது அஸ்மா பின்த்து உமைஸ் குழந்தை பெற்றெடுத்தார். "குளித்து விட்டு ஏதாவது துணியை இடுப்பில் (கோவணம்) கட்டிக் கொள்! இன்னும் இஹ்ராம் கட்டிக் கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் பள்ளியில் தொழுது விட்டு, தம்முடைய கஸ்வா எனும் தமது ஒட்டகத்தில் எறினார்கள். 'பைதா' எனும் இடத்தை அடைந்ததும் அவர்கள் ஏகத்துவ முழக்க மிடலானார்கள். "யா அல்லாஹ்! நான் ஆஜராம் விட்டேன். உனக்கு இணை எதுவும் இல்லை. நான் ஆஜராம் விட்டேன். உண்மையில் அனைத்துப் புகழும், அருளும் இன்னும் ஆட்சியதிகாரம் அனைத்தும் உன் கைவசமே. இன்னும் உனக்கு இணை எதுவும் இல்லை" என்று கூறினார்கள். இதற்கிடையில் நாங்கள் பைத்துல் லாஹ்வில் நுழைந்தோம். நபி(ஸல்) அவர்கள் ஹஜ்ருல் அஸ்வத்தை முத்தமிட்டார்கள். பின்னர் மூன்று சுற்றுக்கள் ஓட்டமாகவும், நான்கு சுற்றுகள் நடையாகவும் தவாஃப் செய்தார்கள். பின்னர் மகாமெ இப்ராஹீம் எனும் இடத்திற்கு வந்து தொழுதார்கள். பின்னர் ஹரமுயை வாயிற் கதவு வழியாக ஸஃபா விற்குச் சென்றார்கள். ஸஃபா, மர்வா இரண்டும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் உள்ளவை என்ற வசனத்தை ஓதினார்கள். அல்லாஹ் தொடங்கிய இந்த இடத்திலிருந்து தொங்கோட்டத்தைத் தொடர்கிறேன் என்று கூறிவிட்டு, கஅபா தெரியும் அளவுக்கு ஸஃபாவில் ஏறினார்கள். பின்னர், கிப்லாவை முன்னோக்கி அல்லாஹ் ஒருவன் என எடுத்துரைத்து அவனது பெருமையை எடுத்தோதினார்கள். "வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் தனித்தவன், அவனுக்கு இணை துணை இல்லை. ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது. புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் அனைத்துப் பொருட்கள் மீதும் சக்தி வாய்ந்தவன். வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தன்னுடைய வாக்குறுதியை முழுமையாக்கினான். இன்னும் தன்னுடைய அடியாருக்கு உதவினான். இறை மறுப்பாளர்களின் கூட்டத்தை அவனே தனித்து நின்று (வெற்றி கண்டான்) தோல்வியடையச் செய்தான். பின்னர் இதற்கு நடுவில் துஆ செய்தார்கள். மூன்று முறை இதே போன்று சொன்னார்கள். பின்னர் ஸஃபாவிலிருந்து இறங்கி மர்வாவின் பக்கம் சென்றார்கள். தம் இரண்டு கால்களையும் பள்ளத்தில் பதித்து மர்வாவின் ஏறும் வரை ஓடினார்கள் ஸஃபாவில் தாம் செய்ததையே மர்வாவிலும் செய்தார்கள். தர்வியா தினம்: (துல்ஹஜ் எட்டாம் நாள்) அன்று மக்கள் மினாவுக்குத் திரும்பினார்கள். மேலும் நபி(ஸல்) அவர்கள் தம் சவாரியில் ஏறினார்கள். பின்னர் அங்கு சென்றதும் லுஹர் மற்றும் அஸர் தொழுதார்கள். பின்னர், மக்ரிப் மற்றும் இஷா தொழுதார்கள். பின்னர், அங்கு சூரியன் உதயமாகும் வரை சிறிது நேரம் தங்கினார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு முஸ்தலிஃபா வழியாக அரஃபா மைதானம் வந்தார்கள். அங்கு 'நமிரா' எனும் இடத்தில் நபி(ஸல்) அவர்களுக்காக ஒரு கூடாரம் அடிக்கப்பட்டிருந்தது. அங்கு அவர்கள் இறங்கினார்கள். சூரியன் உச்சி சாய்ந்தவுடன் தம்முடைய 'கஸ்வா' எனும் ஒட்டகத்தின் மீது பயண இருக்கையை வைக்குமாறு கட்டளையிட்டார்கள். அதில் அவர்கள் ஏறி அரஃபா பள்ளத்தாக்கிற்கு வந்தார்கள். அங்கு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். பின்னர் பாங்கும், இகாமத்தும் சொல்லப்பட்டது. பிறகு லுஹர் தொழுகையை நிறைவேற்றினார்கள். பின்னர் (மறுபடியும்) இகாமத் சொல்லச் செய்து அஸர் தொழுகையை நிறைவேற்றினார்கள். அவை இரண்டிற்குமிடையில் எத்தொழுகையும் தொழவில்லை. பின்னர் தம் சவாரியில் ஏறி இருப்பிடம் வந்தார்கள். பின்னர் தம் கஸ்வா எனும் ஒட்டகத்தின் வயிறு ஸகராத் எனும் இடத்தை நோக்கியும், ஹப்லு முஷாத்தை தமக்கு முன்பாக்கியம், கிப்லாவை எதிர்நோக்கியம் நபி(ஸல்) அவர்கள் இருந்தார்கள். சூரியன் சற்று மஞ்சள் நிறத்தை அடைந்து மறையும் வரை நின்றே இருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் ஒட்டகத்தின் (வேகத்தை குறைப்பதற்காக அதன் தலை, நெஞ்சோடு ஒன்றிணையும் அளவிற்கு கடிவாளத்தை பிடித்து இழுத்துவாறு அங்கிருந்து புறப்பட்டார்கள். "மக்களே! மிதமாக செல்லுங்கள்! மிதமாகச் செல்லுங்கள்" என்று தமது வலக்கரத்தால் சைகை செய்தார்கள். மணற் குன்றுகளில் ஒட்டகம் ஏறும் போதெல்லாம் அதன் கடிவாளத்தை விட்டவாறே, முஸ்தலிஃபா வந்தடைந்தார்கள். அங்கு, ஒரு பாங்கு, இரு இகாமத்துடன் மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை நிறைவேற்றினார்கள். அவ்விரண்டு தொழுகைக்குமிடையில் வேறு எந்த தொழுகையும் தொழவில்லை. பின்னர் கிழக்கு வெளுக்கும் வரை சாய்ந்து விட்டு, பாங்கு இகாமத் கூறி ஃபஜர் தொழுதார்கள். பின்பு தமது கஸ்வாவில் அமர்ந்து முஸ்தலிஃபாவில் உள்ள மஷ் அருல் ஹராம் எனும் இடத்திற்கு வந்தார்கள். அங்கு கிப்லாவை முன்னோக்கி, பிரார்த்தித்து, தக்பீர், தஹ்லீல் கூறியவாறு நன்கு விடியும் வரை அங்கேயே நின்றிருந்தார்கள். பின்னர் சூரியன் உதயமாகும் முன்பு அங்கிருந்து புறப்பட்டு சற்று விரைந்து பத்னு முஹஸ்ஸர் எனும் இடத்தை வந்தடைந்தார்கள். பின்னர் அங்கிருந்து ஜம்ரத்துல் குப்ரா சென்றடையும் தரீகுல் உஸ்தா வழியாக ஜம்ராவை

வந்தடைந்தார்கள். அங்கு ஏழு கற்களை (ஒவ்வொரு கல்லிற்கும்) தக்பீர் சொல்லிக் கொண்டே பத்னுல் வாத் எனும் பள்ளத்தாக்கிலிருந்து எறிந்தார்கள். ஒவ்வொரு கல்லும பட்டாணிக் கடலைக்கும் சிறியதாக இருந்தது. பின்னர் குர்பானி கொடுக்குமிடம் திரும்பிச் சென்று குர்பானி கொடுத்தார்கள். பின்னர் வாகனத்தில் அமர்ந்து, கஅபத்துல்லாஹ் சென்று தவா∴புல் இ∴பாளவை முடித்து விட்டு மக்காவில் லுஹர் தொழுதார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

இது நீண்ட ஹதீஸாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

761 நபி(ஸல்) அவர்கள் தல்பிய்யா சொல்லி முடித்தவுடன் அல்லாஹ்விடம் “அவனது திருப்தியையும், சுவர்க்கத்தையும் வேண்டுவார்கள். இன்னும் அவனுடைய கருணையைக் கொண்டு நரகத்திலிருந்து பாதுகாப்புத் தேடுவார்கள்“ என்று குஸைமா இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். ஷா∴பிஈ

இது ளயீ∴ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

762 “நான் இந்த இடத்தில் குர்பானி கொடுத்தேன். மினாவில் எல்லா இடங்களிலும் குர்பானி கொடுக்கலாம். நீங்கள் உங்களுடைய இருப்பிடங்களில் குர்பானி கொடுத்துக் கொள்ளுங்கள். நான் இங்கு தங்கினேன். அர∴பா மைதானம் எல்லாம் தங்குமிடம் தான். நான் இங்கு தங்கினேன். முஸ்தலி∴பா எல்லாமே தங்குமிடம் தான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

763 “நபி(ஸல்) அவர்கள் மக்காவில் அதன் மேல் திசையில் நுழைந்து கீழ்த்திசை வழியாக வெளியேறினார்கள்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

764 மக்காவில் தான் நுழையும் போதெல்லாம் ‘தூத்துவா‘ எனும் இடத்தில் தங்கி இரவைக் கழித்து விட்டு காலையானதும் குளித்து விட்டு, பின்னரே மக்காவில் நுழைந்ததாகவும், அதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கூறியதாகவும் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

765 நபி(ஸல்) அவர்கள் ஹஜருல் அஸ்வதை முத்தமிட்டார்கள். இன்னும் அதன் மீது தலையை வைத்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

இது ஹாம்மில் மர்∴பூ∴ எனும் தரத்திலும் மற்றும் பைஹகீயில் மவ்கூ∴ப் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

766 (கஅபாவை தவா∴ப் செய்யும் போது) மூன்று முறை விரைவாகவும், ஹஜருல் அஸ்வத்திற்கும், ருக்னெயமானீக்கும் நடுவில் நான்கு முறை சாதாரணமாக நடந்தும் வலம் வருமாறும் நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குக் கட்டளையிட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

767 நபி(ஸல்) அவர்கள் தவா∴ப் செய்யும் போது முதல் மூன்று முறை வேகமாகவும், பின்னர் நான்கு முறை சாதாரணமாகவும் நடந்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

மற்றோர் அறிவிப்பின்படி, ஹஜ் மற்றும் உம்ராவில். நபி(ஸல்) அவர்களை தவா∴ப் செய்கையில் நான் பார்த்தேன். அவர்கள் முதல் மூன்று முறை வேகமாகவும், பின்னர் நான்கு முறை சாதாரணமாகவும் நடந்தார்கள் என்றுள்ளது. புகாரீ, முஸ்லிம்

768 நபி(ஸல்) அவர்கள் ஹஜ்ருல் அஸ்வதைத் தவிர வேறு எதையும் முத்தமிட நான் பார்க்கவில்லை என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

769 நிச்சயமாக உமர்(ரலி) அவர்கள் ஹஜ்ருல் அஸ்வத்தை முத்தமிட்ட போது, “நீ கல் என்பதை நான் நன்றாகவே அறிவேன். உன்னால் தீங்கும் செய்ய முடியாது. பலனும் தரமுடியாது. நபி(ஸல்) அவர்கள் உன்னை முத்தமிட நான் பார்க்கவில்லை என்றால் நான் உன்னை முத்தமிட மாட்டேன்“ என்று கூறினார்கள். புகாரீ, முஸ்லிம்

770 நபி(ஸல்) அவர்கள் பைத்துல்லாஹ்வை வலம் வரும் போது அங்குள்ள கல்லை முததமிட்டத்தை நான் பார்த்தேன் என அபூது∴பைல்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

771 நபி(ஸல்) அவர்கள் ஒரு பச்சை நிறப் போர்வையை இடத்தோளை மூடியபடி வலப்பக்க அக்குளில் நுழைந்து வலத் தோள் தெரிய தவா∴ப் செய்தார்கள் என, ய∴லா இப்னு உமையா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

772 எங்களில் தஹ்லீல் சொல்பவர்கள் தஹ்லீலும், தக்பீர் சொல்பவர்கள் தக்பீரும் கூறிக் கொண்டிருந்தார்கள். அதற்காக அவர்கள் கண்டிக்கப்படவில்லை என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

773 நபி(ஸல்) அவர்கள் பயணச்சுமைகளுடன் (அதனைப் பராமரிக்க) அல்லது பலவீனர்களுடன் முஸ்தலி∴பா இரவன்று என்னை அனுப்பி வைத்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

774 நபி(ஸல்) அவர்களுக்கு முன்னதாகத் திரும்புவதற்கு முஸ்தலி∴பா இரவில் ஸவ்தா(ரலி) அனுமதி கேட்டார். ஏனெனில், அவர் மிகவும் கனமாகவும் தடித்தவராகவும் (நின்று நின்று செய்பவராகவும்) இருந்தார். எனவே, நபி(ஸல்) அவர்களுக்கு சலுகை அளித்து விட்டார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

775 "சூரியன் உதயமாகாத வரை கல் எறியாதீர்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது 'முன்கதி' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

776 உம்முல் மு∴மினீன் உம்மு ஸலமா(ரலி) அவர்களை நபி(ஸல்) அவர்கள் குர்பானி(துல்ஹஜ் 10ன்) இரவன்று அனுப்பினார்கள். அவர் ∴பஜ்ருக்கு முன்னதாக கல் எறிந்தார். பின்னர் சென்று அவர் தவா∴ப் செய்தார் என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார். அபூ தாவூத்

இது முஸ்லிமின் நிபந்தனைகளுக்குட்பட்டு தரமாக உள்ளது.

777 எவர் முஸ்தலி∴பாவில் நம்முடன் தொழுதாரோ அவர் நாம் அர∴பா சென்று இரவு அல்லது பகல் தங்கும் வரை நம்முடன் தங்க வேண்டும். அவ்வாறு தங்குபவருடைய ஹஜ் பூர்த்தியாகி விட்டது. அவர் தம்முடைய அழுக்குகளைப் போக்கிக் கொண்டார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உர்வா இப்னு முனர்ரஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ மற்றும் இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

778 இணைவைப்பாளர்கள் சூரியன் உதயமாகாதவரை திரும்பமாட்டார்கள். பின்னர் அவர்கள், "ஸபீர் மலை ஒளிரட்டும்" எனக் கூறுவார்கள். ஆனால், நபி(ஸல்) அவர்கள், அவர்களுக்கு மாறாக சூரியன் உதயமாகும் முன்பே திரும்பி விடுவார்கள் என, உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

779 நபி(ஸல்) அவர்கள் (ஜம்ரத்துல் அகபா) கல் எறியும் வரை தொடர்ந்து, "லப்பைக்" முழங்குபவர்கள் என்று இப்னு அப்பாஸ்(ரலி) மற்றும் உஸாமா(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ

780 அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத் அவர்கள் கஃபத்துல்லாஹ் தனக்கு இடப்புறமாகவும் மினாவை தனக்கு வலப்புறமாகவும் ஆக்கிக் கொண்டு நின்று, ஜம்ராவின மீது ஏழு கற்களை எறிந்தார்கள். பின்னர் "இது சூரத்துல் பகரா இறக்கியருளப்பட்டவர் நிற்கும் இடமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

781 நபி(ஸல்) அவர்கள் குர்பானி தினத்தன்று சூரியன் உயர்ந்து முற்பகல் நேரம், அதன் பின் சூரியன் உச்சி சாய்ந்ததும் ஜம்ராவின் மீது கல் எறிந்தார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

782 நபி(ஸல்) அவர்கள் முதல் ஜம்ராவில் ஏழு கற்களை எறிவார்கள். ஒவ்வொரு கல் எறிந்த பின்பும் 'அல்லாஹு அக்பர்' என்று கூறுவார்கள். பின்னர் முன்னால் வந்து கிப்லாவை முன்னோக்கி நீண்ட நேரம் சமதளத்தில நின்று தம் கரங்களை உயர்த்தி துஆ செய்வார்கள். பின்னர் நடுவிலிருக்கும் ஜம்ராவின் மீது கல் எறிவார்கள். பின்னர் இடப்பக்கமாகச் சென்று கிப்லாவை முன்னோக்கி, தம் கரங்களை உயர்த்தி, நீண்ட நேரம் சமதளத்தில நின்று துஆ செய்தார்கள். பின்னர் ஜம்ரத்துல் அக்பா'வின் மீது கணவாயில் நின்று கல் எறிந்து விட்டடு அங்கு நிற்காமல் சென்று விடுவார்கள். நபி(ஸல்) அவர்கள் இவ்வாறே செய்ய நான் பார்த்துள்ளேன் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

783 "மொட்டையடித்துக் கொள்பவர்கள் மீது அல்லாஹ் கிருபை செய்வானாக!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய போது "முடியை குறைத்துக் கொள்பவர்கள் மீது" என்று மக்கள் கேட்டார்கள். அதற்கு அவர்கள் மூன்றாவது முறை, "இன்னும் முடியை வெட்டிக் கொள்பவர்கள் (மீதும் அல்லாஹ் கிருபை செய்வானாக!) என்று கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

784 நபி(ஸல்) அவர்கள் ஹஜ்ஜத்துல் வதா∴வில் நின்றிருந்தார்கள். (அப்போது) அவர்களிடம் மக்கள் கேள்வி

கேட்க ஆரம்பித்தார்கள். “எனக்குத் தெரியவில்லை, நான் குர்பானி கொடுக்கும் முன் மொட்டையடித்துக் கொண்டு விட்டேன்“ என்று ஒரு மனிதர் குற்றத்தைக் கூறினார். அதற்கு, “குர்பானி கொடுங்கள் ஒன்றும் குறைவாகாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் மற்றொருவர் வந்து “எனக்குத் தெரியவில்லை. நான் கல் எறியும் முன்பே குர்பானி கொடுத்து விட்டேன்“ என்று கூறினார். அதற்கு, “இப்போது எறிந்து கொள் குற்றமில்லை!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். முன்னும், பின்னும் செய்யப்பட்ட பல விஷயங்கள் அன்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டன. அவர்கள், குற்றமில்லை என்றே கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

785 நபி(ஸல்) அவர்கள் மொட்டையடித்துக் கொள்வதற்கு முன்பு குர்பானி கொடுத்தார்கள். அவ்வாறே தமது தோழர்களுக்கும் கட்டளையிட்டார்கள் என மிஸ்வர் இப்னு மக்ரமா(ரலி) அறிவிக்கிறார்.

786 “நீங்கள் கல் எறிந்து விட்டு, மொட்டையடித்துக் கொண்டால், பெண்ணை (உறவு கொள்வதைத்) தவிர்த்து நறுமணம் உட்பட அனைத்தும் ஹலால் ஆகிவிடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத்

இது ளயீஃப் எனும் தரத்தில பதிவு செய்யப்பட்டுள்ளது.

787 “பெண்கள் மீது மொட்டையடித்துக் கொள்வது (கடமை) இல்லை. அவர்கள் முடியைக் குறைத்துக் கொண்டால் மட்டும் போதும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

788 மக்களுக்கு ஜம்ஜம் தண்ணீர் புகட்டுவதற்காக மினாவின் இரவன்று மக்காவில் தங்குவதற்கு நபி(ஸல்) அவர்களிடம் அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப்(ரலி) அவர்கள் அனுமதி கேட்க நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

789 மினாவை விட்டு வேறிடத்தில இரவைக் கழிப்பதற்கும், குர்பானீ தினத்தன்று கல் எறிவதற்கும், இரண்டாம் மற்றும் மூன்றாம் நாள் பின்னர் பதி மூன்றாம் நாள் கல்லை எறிவதற்கும், ஒட்டகம் மேய்ப்பவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள் என ஆஸிம் இப்னு ஆதீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

790 நபி(ஸல்) அவர்கள் குர்பானி தினத்தன்று எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள் என அபூபக்ரா (ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

791 தலையை மழிக்கும் நாளன்று நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு உரை நிகழ்த்தினார்கள். அப்போது, “இது அய்யாமுத்தஷ்ரீக்கின் நடு நாளில்லையா?“ என்று கூறினார்கள் என, ஸர்ரா பின்த்து நப்ஹான்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) அபூதாவூத்

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

792 “நீ இறையில்லம கஅபாவை வலம் வருவதும், ஸஃபா மர்வாவுக்கிடையே ஓடுவதும், உன்னுடைய ஹஜ் மற்றும் உம்ராவிற்குப் போதுமானது“ என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

793 நபி(ஸல்) அவர்கள் ஏழு முறை தவாஃபுல்ஸியாரத் செய்த போது விரைவாகச் செல்லவில்லை என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, மற்றும் இப்னுமாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

794 நபி(ஸல்) அவர்கள் முஹஸ்ஸப் எனும் இடத்தில் லுஹர், அஸர், மக்ரிப் மற்றும் இஷா தொழுதார்கள். இன்னும் அங்கு சிறிதும் நேரம் தூங்கினார்கள். பின்னர், தம் வாகனத்தில் ஏறி கஅபத்துல்லாஹ் சென்று தவாஃப் செய்தார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

795 “ஆயிஷா(ரலி) அவர்கள் முஹஸ்ஸபில் இறங்க மாட்டார்கள்“ இது நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனா புறப்படத் தோதுவான இடம் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அதனால் தான் நபி(ஸல்) அவர்கள் அங்கு இறங்கினார்கள் என ஆயிஷா(ரலி) அவர்களே கூறினார்கள். முஸ்லிம்

796 இறுதியாக கஅபத்துல்லாஹ்வைச் சந்தித்து வர வேண்டுமென கட்டளையிடப்பட்டது. ஆனால் மாதவிடாய்ப்

பெண்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டது என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

797 “என்னுடைய இந்தப் பள்ளியில் (மஸ்ஜிதுன்னபவி) தொழுவது, மஸ்ஜித் ஹராமைத் தவிர மற்ற பள்ளிகளில் தொழும் ஆயிரம் தொழுகைகளை விடச் சிறந்தது. இன்னும் மஸ்ஜித் ஹராமில் தொழுவது என்னுடைய இந்தப் பள்ளியில் தொழும் நூறு தொழுகைகளை விடச் சிறந்தது“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு ஜுபைர் (ரலி) அறிவிக்கிறார். அஹ்மத். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹஜ் பயணம் தவறி விடுதல் அல்லது ஹஜ் செய்ய விடாமல் தடுக்கப்படுதல் GO TO CHAPTER INDEX

798 நபி (ஸல்) அவர்கள் (உம்ராவிற்குச் செல்லும் போது) தடுக்கப்பட்டார்கள். அப்போது அவர்கள் தலைமழித்துக் கொண்டார்கள். மேலும், தம்முடைய மனைவியருடன் கூடினார்கள். மேலும், தன்னுடைய குர்பானியை அறுத்தார்கள். பின்னர் மறுவருடம் உம்ரா செய்தார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ

799 ளபாஆ பின்த் ஜுபைர் இப்னி அப்தில் முத்தலிபிடம் நபி (ஸல்) அவர்கள் சென்றார்கள். அவர் “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் ஹஜ் செய்ய விரும்புகிறேன். ஆனால், நான் நோயாளியாக உள்ளேன்?“ என்று கூறினார்கள். “(இறைவா!) நீ எங்கு விரும்புகிறாயோ, அது உன்னுடைய இஹ்ராம் உடையைக் களையுமிடமாகும் என்ற நிபந்தனையுடன் ஹஜ் செய்!“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

800 “(இஹ்ராம் கட்டிய நிலையில்) எவருடைய காலேனும் ஒடிக்கப்பட்டால் அல்லது நொண்டியாகி விட்டால் அவர் இஹ்ராமை விட்டு வெளியாகி விட்டார். மறுவருடம் ஹஜ் செய்வது அவர் மீது கடமையாகும்“ என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஜ்ஜாஜ் இப்னு அம்ரிடமிருந்து இக்ரிமா (ரலி) அறிவிக்கிறார். மேலும் இது பற்றி அபூஹுரைரா (ரலி) மற்றும் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம் தான் கேட்டதற்கு ஹஜ்ஜாஜ் உண்மை சொன்னார் என்று கூறியதாகவும் அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - வியாபாரம்

- வியாபாரத்தின் நிபந்தனைகளும் அதில் தடை செய்யப்பட்டவையும்
- வியாபாரத்தை முறித்துக் கொள்ளும் உரிமை
- வட்டி
- அராயாவில் அளிக்கப்பட்டுள்ள சலுகை
- முன் பணம், கடன் மற்றும் அடகு
- சமாதான ஒப்பந்தம்
- வியாபாரத்தில் கூட்டு மற்றும் வக்காலத்து
- ஒப்புதல் வாக்குமூலம் அளித்தல்
- இரவல்
- அபகரிப்பு
- ஷு ஃப்ஆ (வாங்குவதில் முன்னுரிமை)
- கிராள்
- விவசாய ஒப்பந்தம் மற்றும் கூலி
- தரிசு நிலத்தை உழவு செய்து உயிராக்குதல்
- வக்ஃப் (தானம்)
- அன்பளிப்பு, உகிறா, ருக்பா
- கண்டெடுக்கும் பொருள்
- பாகப் பிரிவினை
- மரண சாசனம் (உயில்)

வியாபாரத்தின் நிபந்தனைகளும் அதில் தடை செய்யப்பட்டவையும்

GO TO CHAPTER INDEX

801 “எவ்வகை சம்பாத்தியம் மிகத் தூய்மையானது?“ என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு , “மனிதன் தன் கையினால் உழைத்துச் சம்பாதிக்கும் சம்பாத்தியமும், ஏமாற்றமில்லாமல் (நியாயமாகச்) செய்யும் வியாபார(த்தின் மூலம் கிடைக்கும் லாப)மும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ரிஃபாஆ இப்னுராஃபி ஃ(ரலி) அறிவிக்கிறார். பஸ்ஸார். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

802 “மதுபானம், தானாக இறந்தவை, பன்றி மற்றும் சிலைகள் ஆகியவற்றை விற்பனை செய்வதை இறைவன் தடுத்து விட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள் மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டில் மக்காவில் இருக்கும் போது கூறினார்கள். அப்போது “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாமாக இறந்தவையின் கொழுப்பைப் பற்றிக் கூறுங்கள். ஏனெனில், அதைக் கொண்டு படகுகளை வழவழப்பாக்கவும், தோல்களைப் பதப்படுத்தவும். செய்கிறார்கள். இன்னும் மக்கள் அதன் மூலம் விளக்கும் எரிக்கின்றனர்“ என்று கேட்கப்பட்டது. அதற்கு,

“கூடாது. அதுவும் ஹராமாகும்“ என்று கூறிவிட்டு, “யூதர்களை அல்லாஹ் நாசமாக்கட்டும்! அல்லாஹ் அவர்களுக்கு (தானாக இறந்த) அதன் கொழுப்புகளைத் தடை செய்த போது, அவர்கள் அதை உருக்கி விற்றார்கள், அதன் கிரயத்தை உண்டார்கள்.. என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

803 “விற்பனை செய்பவர் மற்றும் வாங்குபவருக்கு இடையில் பிரச்சனைகள் ஏற்பட்டு, அதற்கான எந்தவித ஆதாரமும் இல்லை என்றால், பொருளுக்குரியவருடைய பேச்சே ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும் அல்லது அந்தப் பொருளை விட்டுவிட வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

804 நாயின் கிரயத்தையும், விபச்சாரியின் சம்பாத்தியத்தையும் குறிகாரனின் தட்சிணையையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என அபூமஸ்வூத் அல் அன்ஸாரி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“நான் எனது ஒட்டகத்தில் அமர்ந்திருந்தேன். ஒட்டகம் களைத்து விட்டது. நான் அதை விட்டுவிட விரும்பினேன்.“ அதே நேரத்தில் நபி(ஸல்) அவர்கள் என்னை வந்தடைந்தார்கள். பின்னர் எனக்காகப் பிரார்த்தித்து விட்டு, ஒட்டகத்தை அடித்தார்கள். உடனே அது இதற்கு முன்னர் செல்லாத அளவு (வேகமாகச்) செல்ல ஆரம்பித்தது. அப்போது நபி(ஸல்) அவர்கள், “அதை என்னிடம் ஒரு ஊக்கியாவிற்கு விற்றுவிடு“ என்று கூறினார்கள். நான் “இல்லை“ என்று சொன்னேன். பின்னரும் நபி(ஸல்) அவர்கள், “என்னிடம் விற்று விடு!“ என்று கூறினார்கள். இதில் நான் என்னுடைய வீடு வரை சவாரி செய்து கொள்வேன் என்று நிபந்தனையிட்டு நான் அதை ஒரு ஊக்கியாவிற்கு விற்று விட்டேன். நான் வீடு சென்றதும் ஒட்டகத்தை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு சென்றேன். அவர்கள் அதன் கிரயத்தை என்னிடம் கொடுத்து விட்டார்கள். நான் (அதைப் பெற்றுக் கொண்டு) திரும்பினேன். அப்போது எனக்குப் பின்னால் ஆள் அனுப்பினார்கள். இன்னும் “உன்னுடைய ஒட்டகத்தை எடுத்துக் கொள்ள நான் உனக்குத் குறைந்த விலை கொடுத்து விட்டேன் என, எண்ணுகிறாயா? உன்னுடைய ஒட்டகத்தையும் திர்ஹம்களையும் வாங்கிக் கொள். அது உனக்கே உரியது“ என்று கூறினார்கள் என, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார்.

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

806 எங்களில் ஒருவர் தன்னுடைய அடிமையிடம், “என்னுடைய மரணத்திற்குப் பின்பு விடுதலை பெற்றுக் கொள்“ என்று கூறியிருந்தார். (ஆனால், அவர் கடன்பட்டிருந்தார். எனவே) நபி(ஸல்) அவர்கள் அந்த அடிமையை அழைத்து வரச் செய்து அவனை விற்பனை செய்து விட்டார்கள் என, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார்.

807 நெய்யில் எலி விழுந்து இறந்து விட்டது. அதைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. (அதற்கு) நபி(ஸல்) அவர்கள், “அதையும் அதைச் சுற்றியுள்ள நெய்யையும் (வெளியில்) எடுத்து எறிந்து விட்டுச் சாப்பிடுங்கள்“ என்று கூறினார்கள் என நபி(ஸல்) அவர்களது துணைவியார் மைமூனா(ரலி) அறிவிக்கிறார்.

அஹ்மத் மற்றும் நஸயீயில் உறைந்த நெய்யில் எனும் வாசகமும் இடம் பெற்றுள்ளது.

808 “நெய்யில் எலி விழுந்து விட்டால், அது உறைந்ததாக இருந்தால் அதையும் அதைச் சுற்றி உள்ளதையும் (எடுத்து) எறிந்து விடுங்கள். (மீதத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்) அது உறையாததாக இருப்பின் அதை நெருங்காதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

809 பூனை மற்றும் நாயின் கிரயத்தைப் பற்றி நான் ஜாபிர்(ரலி) அவர்களிடம் கேட்டதற்கு அதைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் கண்டித்துள்ளார்கள் என்று கூறினார் என, அபூ ஜு பைர்(ரலி) அறிவிக்கிறார்.

“வேட்டை நாயைத் தவிர“ என்பது நஸயீயில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

810 பரீரா என்னிடம் வந்து, “நான் என்னுடைய எஜமானனிடம் ஒன்பது ஊக்கியாவின் பேரில் விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டேன். வருடம் ஒன்றுக்கு ஒரு ஊக்கியோ வீதம் நான் செலுத்த வேண்டும். எனவே, எனக்கு உதவி செய்யுங்கள். எனவே, எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறினார். “உன்னுடைய எஜமானன் விரும்பினால், ஒன்பது ஊக்கியாவையும் ஒட்டு மொத்தமாக நான் செலுத்தி விடுகிறேன். ஆனால் உன்னுடைய ‘வலா‘ (ஏனைய உரிமைகள்) எனக்குரியதாக இருக்க வேண்டும். (அப்படியானால்) “நான் (விடுதலை) செய்கிறேன்“ என்று நான் கூறினார். பரீரா தன்னுடைய எஜமானர்களிடம் சென்று இதைக் கூறினார். ஆனால்,

அவர்கள் அதை ஏற்க மறுத்து விட்டார்கள். அவர்களிடமிருந்து (பரீரா) என்னிடம் (மீண்டும்) வந்தார். அப்போது என்னுடன் நபி(ஸல்) அவர்களும் அமர்ந்திருந்தார்கள். அவர் (பரீரா), “இதை நான் அவர்களிடம் கூறியதற்கு அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ‘வலா‘ அவர்களுக்கே உரியது என்று கூறுகின்றனர்“ என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள் அதைக் கேட்டு விட்டார்கள். ஆயிஷா(ரலி) அவர்களும் நபி(ஸல்) அவர்களிடம் செய்தியைக் கூறினார்கள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “அவரைப் பெற்றுக் கொண்டு, ‘வலா‘ உனக்கே உரியது என்று நிபந்தனையிடு. ஏனெனில், எவர் அடிமையை விடுதலை செய்கிறாரோ, அவருக்கே ‘வலா‘ உரியதாகும்“ என்று கூறினார்கள். ஆயிஷா(ரலி) அவ்வாறே செய்தார்கள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு உரை நிகழ்த்த எழுந்தார்கள். அல்லாஹ்வைப் புகழ்ந்து விட்டு, “மக்களுக்கு என்னவாகி விட்டதோ? அவர்கள் அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாதவற்றையெல்லாம் நிபந்தனைகளாக முன் வைக்கின்றனர். அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகள் இருப்பினும் சரியே! அல்லாஹ்வுடைய தீர்ப்பு தான் ஏற்கத் தகுந்ததாகும். இன்னும் அல்லாஹ்வின் நிபந்தனை தான் கட்டுப்படுத்தக் கூடியதாகும். இன்னும் ‘வலா‘ (அடிமைகளை) விடுதலை செய்பவருக்கே உரியது“ என்று கூறினார்கள்.

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. “அவரை வாங்கிக் கொள்! விடுதலை செய்துவிடு! இன்னும் ‘வலா‘ உனக்கே உரியது என அவர்களிடம் நிபந்தனையிடு!“ என்று முஸ்லிமில் உள்ளது.

811 “குழந்தை பெற்றுள்ள அடிமைப் பெண்ணை விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். “அவள் விற்கப்படவும் மாட்டாள், ஹிபா (அன்பளிப்பாக) கொடுக்கப்படவும் மாட்டாள், வாரிசு உரிமையும் பெறமாட்டாள். அவளிடமிருந்து முறையான பலன்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும். எப்போது (அவளது எஜமான்) இறந்து விடுகிறாரோ, அப்போது அவள் விடுதலை பெற்றவளாவாள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

அறிவிப்பாளர்கள் சிலர் இதை மாஃபூஉ என்று கூறியுள்ளனர். இது பிரமை ஆகும்.

812 நபி(ஸல்) அவர்கள் உயிருடனிருக்க நாங்கள் எங்கள் அடிமைப் பெண்களை அவர்கள்

குழந்தை பெற்றிருக்கும் நிலையில் விற்பனை செய்துள்ளோம். அதை அவர்கள் குற்றமாகக் கருதவில்லை. என்று ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, இப்னு மாஜா, தாரகுத்னீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

813 (தேவைக்குப் போக) மீதமுள்ள தண்ணீரை விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லஹ் (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில், ஒட்டகத்தைச் சினைக்கு விடுவதற்காகக் கிரயம் பெறுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என்பதும் உள்ளது.

814 நபி(ஸல்) அவர்கள் (கால் நடைகளைச் சினைக்கு விடும் போது) ஆண்வர்க்கத்திற்குக் கிரயம் பெறுவதைத் தடை செய்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரி

815 ஒட்டகத்தின் வயிற்றில் உள்ள குட்டியை விலை பேசுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். அறியாமைக் காலத்தில் (மக்கள்) இவ்வாறு செய்து வந்தனர். அவர்கள் அறுக்கக் கூடிய ஒட்டகையை அதன் வயிற்றிலிருக்கும் குட்டியை ஈன்றெடுக்கும் காலம் வரையும் அதை விலைக்கு வாங்குவார். அது அதை ஈன்றெடுக்கும் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

816 நபி(ஸல்) அவர்கள் ‘வலா‘ உரிமையை விற்பனை செய்வதையும் அதை அன்பளிப்புச் செய்வதையும் தடை செய்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ முஸ்லிம்

817 நபி(ஸல்) அவர்கள் முனாபதா மற்றும் மோசடி வியாபாரத்தை தடை செய்தார்கள். என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

818 “உங்களில் எவரேனும் உணவுப் பொருள் வாங்கினால், அதை அளக்காத வரையில் விற்பனை செய்யாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

819 ஒரு வியாபாரத்தில் இரண்டு வியாபாரங்கள் செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

இது திர்மிதீயில் மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

820 “ஒரு வியாபாரத்தில் இரண்டு வியாபாரங்களை எவர் செய்கிறாரோ அவர் இரண்டிலும் குறை செய்ய நேரிடும். அது வட்டியாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது.

821 “சலஃப் அனுமதிக்கப்பட்டதல்ல. இன்னும் ஒரு வியாபாரத்தில் இரண்டு நிபந்தனைகள் கூடாது. (பொருட்கள் தனது) பொறுப்பில் வராதிருக்கும் போது அதன் லாபம் கூடாது. உன்னிடம் இல்லாத ஒரு பொருளில் வியாபாரம் இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மீதி மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ, இப்னு குஸைமா மற்றும் ஹாம்மில் ஹஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உலூமுல் ஹதீஸ் எனும் நூலில் அபூஹனீஃபா அறிவிப்பில் இடம் பெறும் ஹதீஸில் அம்ர் இப்னு ஷு ஐப் இடம் பெறுகிறார். அதில், நிபந்தனை வியாபார முறையைத் தடுத்தார்கள் என்று உள்ளது. இதே போன்று தபரானீயுடைய ‘அவ்ஸத்‘ எனும் நூலில் கரீப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

822 நபி(ஸல்) அவர்கள் உர்யான்வியாபாரம் எனும் வியாபாரத்தைத் தடை செய்துள்ளார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு(ரலி) அறிவிக்கிறார்.

823 நான் கடைவீதியில் ஜைத்தூன் எண்ணை வாங்கினேன். வியாபாரம் உறுதி செய்யப்பட்டதும் மற்றொருவர் வந்து அதற்கு நல்ல (அதிகமான) லாபம் கொடுத்து என்னிடம் கேட்டார். அதை நான் அப்போதே அவரது கரத்தில் விற்று விட நாடினேன். அப்போது எனக்குப் பின்னாலிருந்து என்னை ஒருவர் பிடித்தார். நான் திரும்பிப் பார்த்த போது அவர் ஸைத் இப்னு ஸாபித்(ரலி) அவர்களாக இருந்தார். அவர், “இதை உங்கள் வீட்டிற்குக் கொண்டு செல்லாத வரை வாங்கிய இடத்திலேயே விற்பனை செய்யாதீர்கள். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் வியாபாரிகள் தங்கள் பொருளை வீட்டிற்கு கொண்டு சென்று வைக்காதவரை, பொருட்கள் எங்கு வாங்கப்படுகின்றனவோ அங்கேயே (அந்தப் பொருள்) விற்கப்பட வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என்று கூறினார் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இங்கு அபூதாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

824 அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் பகீயில் ஒட்டகம் விற்கின்றேன். அந்த வியாபாரத்தை தீனார்களுக்கு பதிலாகச் செய்கின்றேன். ஆனால், திர்ஹம் வாங்கி விடுகின்றேன். இன்னும் சில நேரங்களில் திர்ஹம்களுக்கு பதிலாக வியாபாரம் செய்கிறேன். ஆனால் தீனார்களை வாங்கிக் கொள்கிறேன். நான் இதிலிருந்து அதை எடுக்கிறேன். இன்னும் அதிலிருந்து இதைக் கொடுக்கிறேன் என்று நான் கேட்டதற்கு, “அதே நாளின் விலைக்கு எடுத்துக் கொண்டால், மீதம் ஏதும் வைத்துக் கொள்ளாமல், கொடுக்கல் வாங்கலைச் சரி செய்து கொண்டு பிரிந்து விட்டால் எந்த குற்றமும் ஆகாது“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

825 பொருளை வாங்கும் நோக்கமில்லாமல் விலையை கூட்டிவிடுவதற்காக, விலை ஏற்றிக் கேட்பதை (தனாஜு ஷ்) நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

828 வியாபாரம் செய்வதற்காக வரும் வணிகக் கூட்டத்தைச் சென்று (இடையில்) சந்திக்க வேண்டாம். இன்னும் நகரவாசி கிராமவாசியிடம் வியாபாரம் செய்ய வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார். (அப்போது) நகரவாசி, கிராம வாசியிடம் வியாபாரமே செய்யக்கூடாது என்பது தான் இதன் விளக்கமா?“ என்று நான் கேட்டதற்க “நரகவாசி கிராமவாசிக்கு இடைத்தரகராக செயல்படக்கூடாது“ என்று பதிலளித்தார் என தாவூஸ் அறிவிக்கிறார்.

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

829 தானியம் (வணிகப் பொருட்களை) கொண்டு வருவோரை (வியாபாரச் சந்தைக்கு வருமுன்) இடையில் சென்று சந்திக்க வேண்டாம். அப்படியே எவரேனும் சந்தித்தால் அவர் சந்தைக்கு வரும் வரை வியாபாரம் செய்ய வேண்டாம். அதுவும் அவருடைய விருப்பத்தில் உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

830 நகரவாசி, கிராமவாசியிடம் வியாபாரம் செய்வதையும், பொருளை வாங்காமல் விலையை மட்டும் அதிகமாக்கி

விடுவதையும், ஒரு முஸ்லிம் சகோதரன், செய்யும் வியாபாரத்தை வேண்டுமென்றே முறித்து தான் வியாபாரம் செய்வதையும், முஸ்லிம் சகோதரனுடைய திருமண ஒப்பந்தத்தில் குறுக்கிடுவதையும், பாத்திரத்தில் உள்ளதைக் கொட்டி வீணடிப்பது போன்று தன்னுடைய சகோதரிக்கு (சக்களத்திக்கு) ஒரு பெண் தலாக் கேட்டு வாங்குவதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரி, முஸ்லிம்

முஸ்லிமில் “ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமுக்குப் போட்டியாக விலைபேச வேண்டாம்“ என்று உள்ளது.

831 எவர் (இந்த உலகில்) தாய்க்கும், பிள்ளைக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்துகிறாரோ, அவருக்குப் அவருக்குப் பிரியமானவர்களுக்கிடையில் அல்லாஹ் மறுமை நாளில் பிரிவினையை ஏற்படுத்துகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ அய்ஃப் அல் அன்ஸாரி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

இது திர்மிதீ, மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

832 சகோதரர்களாக இருந்த இரண்டு அடிமைகளை விற்று விடுமாறு நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கட்டளையிட்டார்கள். நான் அவர்களை விற்பனை செய்தேன். அவர்களுக்கிடையில் பிரிவை ஏற்படுத்தியும் விட்டேன். பின்னர் அதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “திரும்பச் சென்று அவர்கள் இருவரையும் திரும்பப் பெற்றுக் கொள் இருவரையும் இணைத்து அல்லாது விற்பனை செய்ய வேண்டாம்“ என்று கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார்.

இதில் ‘ஸகாத்‘ உள்ளது. இது இப்னுஸ் ஜாரூத்,இப்னு ஹிப்பான், ஹாம்கி, தபரானி மற்றும் இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது பலமானது. இது இப்னு ஜாரூது, இப்னு ஹிப்பான், ஹாம்கி, தபரானி மற்றும் இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

833 நபி(ஸல்) அவர்களது காலத்தில் பொருட்களின் விலைவாசி உயர்ந்து விட்டது. (அதனால்) மக்கள் நபி(ஸல்) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! விலைவாசிகள் உயர்ந்து விட்டன. எனவே, மக்களுக்காக விலை நிர்ணயம் செய்யுங்கள்“ என்று கேட்டனர்.

அதற்கு, விலைவாசிகளை உயர்த்துவதும், குறைப்பதும், (உணவில்) நெருக்கடி ஏற்படுத்துவதும், விசாலமாக்குவதும், தேவையானதைக் கொடுப்பதும் அல்லாஹ் தான். இன்னும் அல்லாஹ்வை நான் சந்திக்கும் போது என்னிடம் இரத்தம் மற்றும் சொத்துக்களின் உரிமையைத் தேடுவதை நான் விரும்பவில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

834 “குற்றமிழைப்பவனைத் தவிர வேறு யாரும் உணவுப் பொருட்களைப் பதுக்க மாட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மஃமர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

835 ஒட்டகம் மற்றும் ஆடு (போன்ற) கால் நடைகளில் விற்பனை செய்வதற்காக அதன் பாலை (கறக்காது) தடுத்து நிறுத்தி (அவற்றின் மடியை கனக்கச் செய்து அதிகமாக பால் தருவது போன்று) காண்பித்து விடாதீர்கள். எவரேனும் இவ்வாறுள்ள கால் நடைகளை வாங்கினால் அதை (பால் கறந்து பார்த்து) நன்கு ஆய்வு செய்த பின்பு, அவர் விரும்பியதைச் செய்ய உரிமையுள்ளது. அதாவது, அவர் விரும்பினால் அதை வைத்துக் கொள்ளலாம். அல்லது ஒரு ஸாவு பேரீச்சம் பழத்துடன் அதைத் திருப்பிக் கொடுத்து விடலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

“அந்த உரிமை அவருக்கு மூன்று நாள் வரை உள்ளது“ என்பதும் முஸ்லிமில் உள்ளது.

“ஒரு ஸாவு உணவுப் பொருளுடன் அதைத் திரும்பத் தரவேண்டும். வெள்ளை (விளையாத) கோதுமையாக அது இருக்கக் கூடாது“ என்று புகாரீயுடைய மற்றொரு அறிவிப்பில் முஅல்லக் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அறிவிப்புகளில் பேரீச்சம்பழம் தான் அதிகமாக சொல்லப்பட்டுள்ளது“ என்று இமாம் புகாரீ குறிப்பிட்டுள்ளார்.

836 “எவர் பால் தரும் ஆட்டை விலைக்கு வாங்கி விட்டு பின்னர் அதைத் திரும்பக் கொடுக்கிறாரோ, அவர் அதனுடன் ஒரு ஸாவு (உணவுப் பொருள்) கொடுக்கட்டும்“ என்று இப்னு மஸ்வூத்(ரலி) கூறினார். புகாரி

இஸ்மாயீலிய்யி எனும் நூலில் “(ஒரு ஸாவு) பேரீச்சம் பழம்“ என்று உள்ளது.

837 நபி(ஸல்) அவர்கள் ஒரு உணவுக் குவியலைக் கடந்து சென்றார்கள். அப்போது அதனுள் தமது கையை நுழைத்தார்கள். அவர்களது கையில் ஈரம்பட்டது. ''உணவுக் காரரே! இது என்ன?'' என்று கேட்டார்கள். அதற்கவர், ''அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மழை பொழிந்து விட்டது'' என்று கூறினார். அதற்கு, ''மக்கள் பார்க்கும் விதமாக அதை நீ மேலே போட்டிருக்க வேண்டமா?'' (என்று கூறிவிட்டு) ''எவர் ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவரல்லர்'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

838 ''நன்கு தெரிந்து கொண்டே அறுவடைக் காலத்தில் திராட்சையைப் பதுக்கி வைத்து விட்டுப் பின்னர் மது தயாரிக்கும் நபருக்கு அதை விற்பனை செய்பவர் நரகத்தில் புகுகிறார்'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அப்துல்லாஹ் இப்னு புரைதா(ரலி) அறிவிக்கிறார். தப்ரானி. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது?

839 ''வருமானம் பொறுப்பாளரையே சாரும்'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது புகாரீ மற்றும் அபூதாவூதில் ளயீஃப் என்றுள்ளது. திர்மிதீ, இப்னு குஸைமா, இப்னுல் ஜாரூத், இப்னு ஹிப்பான், ஹாம்கி மற்றும் இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

840 ''குர்பானிக்காக கால்நடை அல்லது ஆடு வாங்குவதற்கு நபி(ஸல்) அவர்கள் என்னிடம் ஒரு தீனார் கொடுத்தார்கள். நான் அதில் இரண்டு ஆடுகள் வாங்கி விட்டேன். பின்னர் அவற்றில் ஒன்றை ஒரு தீனாருக்கு விற்பனை செய்து விட்டேன். பின்னர் நபி(ஸல்) அவர்களிடம் (மீதமுள்ள) ஓர் ஆட்டையும், தீனாரையும் கொண்டு வந்தேன். அப்போது என்னுடைய வியாபாரத்தில் அருள்வளம் கிடைத்திட நபி(ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். நான் அதில் மண்ணை வாங்கி இருந்தாலும் லாபம் கிடைத்திருக்கும்'' என்று உர்வா அல் பாக்கி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இந்த ஹதீஸ் புகாரீயிலும் உள்ளது. ஆனால், முழு வாசகமாக இல்லை.

841 மேற்கண்ட ஹதீஸிற்குச் சான்றாக ஹகீம் இப்னு ஹிஸாம் அவர்களின் ஒரு ஹதீஸ் திர்மிதீயில் இடம் பெற்றுள்ளது.

842 கால்நடைகளின் வயிற்றிலுள்ள குட்டியை அது ஈன்றெடுக்காதவரை விலை பேசுவதையும், மடுவிலிருக்கும் பாலை விலை பேசுவதும், ஓடிவிட்ட அடிமையை விலை பேசுவதையும், பிரித்தளிக்கப்படாத கனீமத் பொருட்களை விலை பேசுவதையும், கைக்குவராத தர்மப் பொருட்களையும், (தண்ணீரில்) மூழ்கி (பொருட்களை) எடுப்பவர் (இன்னும் மூழ்கியெடுக்காத பொருளுக்கு) விலை பேசி மூழ்குவதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என ஆபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா, பஸ்ஸார் மற்றும் தராகுத்னீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

843 ''தண்ணீரிலிருக்கும் மீனை விலை பேசாதீர்கள்'' ஏனெனில் அது ஏமாற்றுவதாகும்'' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத். இது மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

844 (சாப்பிடும் அளவுக்கு) நன்றாகப் பழுக்காதவரை பழத்தை விற்பனை செய்வதையும், ரோமத்தை அது (ஆட்டின்) முதுகில் இருக்கும் போது விற்பனை செய்வதையும், மடுவில் இருக்கும் பாலை விற்பனை செய்வதையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

இது இக்ரிமா(ரலி) வாயிலாக முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இதனுடைய அறிவிப்பாளர் தொடர் பலமானது.

845 ஒட்டகத்தில் வயிற்றில் இருப்பவற்றையும் மற்றும் ஒட்டகத்தின் முதுகில் இருப்பவற்றையும் விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

846 ''எவர் ஒருவர் ஒரு முஸ்லிமோடு தான் செய்து கொண்ட வியாபாரத்தை 'இகாலா' செய்கிறாரோ, அதாவது செய்து முடிக்கப்பட்ட வியாபார ஒப்பந்தத்திற்குப் பின்பு விற்பவரோ அல்லது வாங்குபவரோ சிக்கலின் காரணமாக அவ்வொப்பந்தத்தைத் திரும்பப் பெறும்படி கோரியதால், அதை திரும்பப் பெறுகிறாரோ அல்லாஹ் (மறுமையில்) அவரின் சிக்கலை நீக்குகிறான் என்று'' நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வியாபாரத்தை முறித்துக் கொள்ளும் உரிமை

GO TO CHAPTER INDEX

847 இரண்டு பேர் வியாபாரக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டால், ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து செல்லாமல் ஒன்று சேர்ந்திருக்கும் வரை அவர்களில் ஒவ்வொருவருக்கும் வியாபாரத்தை முறித்துக் கொள்ள உரிமையுண்டு. வாங்குபவர் விற்பவர் இருவரில் ஒருவர் மற்றவருக்கு வியாபாரத்தை முறித்துக் கொள்ள உரிமை வழங்கி, அதைப் பயன்படுத்தாமல் இருவரும் வியாபார ஒப்பந்தம் செய்து கொள்வார்களேயானால், வியாபாரம் உறுதிப்பட்டு விடும் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டு இருவரில் யாருமே ஒப்பந்தத்தை முறிக்காமல் பிரிந்து சென்று விட்டால், அப்போதும் வியாபாரம் உறுதிப்பட்டு விடும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

848 “விற்பவரும் வாங்குபவரும் ஒருவர் மற்றவரை விட்டுப்பரிந்து செல்லாதவரை வியாபாரத்தை முறித்துக் கொள்ளும் உரிமை பெற்றுள்ளனர், முறித்துக் கொள்ள உரிமை வழங்கப்பட்ட ஒப்பந்தமாயிருந்தாலே தவிர! எங்கே ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுவாரோ என்று (அவசர அவசரமாகப்) பிரிந்து செல்வது அனுமதிக்கப்பட்டதல்ல என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ரு பின் ஷு ஐப்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, நஸயீ, தாரகுத்னீ மற்றும் இப்னு குஸைமா

849 தன்னுடைய வியாபாரத்தில் ஏமாற்றம் ஏற்படுகிறது என்று நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் கூறிய போது “நீ (என்னுடன்) வியாபாரம் செய்தால் நான் ஏமாற்ற மாட்டேன். (எனவே நீயும் என்னை ஏமாற்றாதே!) என்று கூறிவிடு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

வட்டி

GO TO CHAPTER INDEX

850 வட்டியை உண்பவரையும், அதை உண்ணக் கொடுப்பவரையும், அதற்காக எழுதுபவரையும், அதற்கு சாட்சி சொல்பவர்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்து விட்டு, “அவர்கள் (குற்றத்தில்) சமமானவர்கள்“ என்றும் கூறினார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

851 850-ம் எண் ஹதீஸ் போன்றே புகாரீயில் அபூஜு ஹை.:பா (ரலி) வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

852 வட்டிக்கு 73 வாசல்கள் உள்ளன. அதில் இலேசானது (கடைசித் தரம்) தன்னுடைய தாயையே திருமணம் செய்து கொள்வதைப் போன்றதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்.

இது ஹாம்மில் முழுவதுமாக அறிவிக்கப்பட்டு ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

853 “தங்கத்திற்கு பதிலாக தங்கத்தை சமமான அளவில் அல்லாது விற்பனை செய்ய வேண்டாம். அவற்றில் ஒன்றின் மீது மற்றொன்றை அதிகப்படுத்த வேண்டாம். இன்னும் வெள்ளிக்கு பதில், வெள்ளியை ஒன்றுக்கொன்று சமமான அளவில் அல்லாது விற்பனை செய்ய வேண்டாம். அவற்றில் ஒன்றை மற்றொன்றைவிட அதிகப்படுத்த வேண்டாம். மேலும், அவற்றில் இருப்பதை இல்லாததைக் கொண்டு விற்பனை செய்யாதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்.

854 “தங்கத்திற்குத் தங்கம், வெள்ளிக்கு வெள்ளி, மணிக்கோதுமைக்கு மணிக்கோதுமை, வாற் கோதுமைக்கு வாற் கோதுமை, பேரீச்சம் பழத்திற்குப் பேரீச்சம் பழம், உப்புக்கு உப்பு ஒரே தரத்தில், சம அளவில் (உடனுக்குடன் விற்பனை செய்து கொள்வது குற்றமில்லை. இந்த இனங்கள் மாறுபடும் போது உடனுக்குடன் என்றால்) நீங்கள் விரும்பியவாறு விற்பனை செய்து கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உபாதா இப்னு ஸாமித்(ரலி) அறிவிக்கிறார்.

855 “தங்கத்திற்கு பதிலாக தங்கத்தை எடைக்கு எடை ஒரே தரத்தில், இன்னும் வெள்ளிக்கு பதிலாக வெள்ளியை எடைக்கு எடை, ஒரே தரத்தில் (விற்பனை செய்து கொள்ளுங்கள்). எவர் இதில் அதிகமாக வாங்குகிறாரோ, அல்லது கொடுக்கிறாரோ அது தான் வட்டியாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

856 நபி(ஸல்) அவர்கள் ஒரு நபரைப் பணியாளராக நியமித்து கைபருக்கு அனுப்பினார்கள். அவர் (கைபரின்) உயர்தரமான பேரீச்சம் பழங்களைக் கொண்டு வந்தார். (அதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள்) "கைபரின் எல்லாப் பேரீச்சம் பழங்களும் இவ்வாறு தான் உள்ளனவா?" என்று கேட்டார்கள். அதற்கவர், "இல்லை! அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக நாங்கள் இரண்டு ஸாவுக்கு பதிலாக இந்த ஒரு ஸாவுவை வாங்குகிறோம். இன்னும் (சில நேரங்களில்) மூன்று ஸாவுக்குப் பதிலாக இரண்டு ஸாவு வாங்குகிறோம்" என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "இவ்வாறு செய்யாதீர்கள். பலதரப்பட்ட பேரீச்சம் பழங்களையும் சில திர்ஹம்களுக்குப் பதிலாக விற்பனை செய்து விட்டுப் பின்னர் சில திர்ஹம்களுக்குப் பதிலாக உயர்தரமான பேரீச்சம் பழங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். இன்னும் (தராசு) நிலையிலும் இது போன்றே என்று அறிவிப்பாளர் கூறினார். புகாரீ, முஸ்லிம்

"தராசிலும் இவ்வாறே" எனும் வாசகம் முஸ்லிமில் உள்ளது.

857 "அளவு தெரியாத பேரீச்சம் பழக்குவியலைக் குறிப்பிட்ட அளவுள்ள பேரீச்சம் பழக்குவியலுக்குப் பதிலாக விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்" என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

858 "உணவுப்பதார்த்தற்திற்கு பதிலாக உணவுப்பதார்த்தம் ஒரே தரத்தில் கொடுத்துக் கொள்ள வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். எங்களது அன்றைய உணவுப்பதர்த்தம் கோதுமையாக இருந்தது என, மஃமர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

859 நான் கைபர் தினத்தன்று பன்னிரண்டு தீனாருக்கு ஒரு சங்கிலியை விலைக்கு வாங்கினேன். அதில் தங்கம் மற்றும் கோர்க்கப்பட்ட கற்கள் இருந்தன. நான் அவற்றை(த் தனித்தனியாகப்) பிரித்தேன். அப்போது அதில் பன்னிரண்டு திர்ஹத்தை விட அதிகத் தங்கத்தை நான் பெற்றேன். பின்னர் அதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் நான் கூறினேன். அதற்கு, "அதைப் பிரித்தெடுக்காத வரை விற்பனை செய்யாதே!" என ஃபுளாலா இப்னு உபைதில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

860 "கால்நடைக்கு பதிலாக கால்நடையை தவணைக்கு (பிறகு பெற்றுக் கொள்வதாக) விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள்" என, ஸமுரா இப்னு ஜு ன்தப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீ மற்றும் இப்னுல் ஜாரூதில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

861 "நீங்கள் மாடுகளின் வால்களைப் பிடித்துக் கொண்டு மேய்க்கச் சென்றால், நாணயத்தின் வாயிலாக வியாபாரம் செய்து அதாவது விலையைப் பெற்றுக் கொள்வதாக சொல்லி விற்ற பொருளை அப்பொருளுக்கான விலையைப் பெறும் முன்பே ரொக்கப் பணம் கொடுத்து வாங்கினால், விவசாயத்தில் மூழ்கி ஜிஹாதை விட்டுவிட்டால் நீங்கள் உங்களது மார்க்கத்தின் பால் திரும்பும் வரை அல்லாஹ் உங்கள் மீது இழிவைத் திணித்து விடுவான் அது வரை அதை நீக்கவே மாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

நாஃபிஉ வாயிலாக அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்களிடமிருந்து அபூதாவூதில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனுடைய அறிவிப்புத் தொடரில் ஆட்சேபனை உள்ளது. இது போன்று அதா வாயிலாக அஹ்மதிலும் உள்ளது. அதன் அறிவிப்பாளர் பலமானவர். இது இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

862 "எவரேனும் தன்னுடைய சகோதரனுடைய பரிந்துரை செய்து, அதற்காக அவருக்கு அன்பளிப்பு அனுப்பப்பட்டு, அதை அவர் பெற்றுக் கொண்டால் நிச்சயமாக அவர் வட்டியின் பெரும் வாசலுக்குச் சென்று (நுழைந்து) விட்டார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ உமாமா (ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இதன் ஸனதில் ஆட்சேபனை உள்ளது.

863 "லஞ்சம் வாங்குபவரையும் லஞ்சம் கொடுப்பவரையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அமர் (ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

864 (புனிதப் போர் புரிய அனுப்பவிருந்த) படையொன்றுக்குத் தேவையான (உணவு, உடை, வாகனங்கள் மற்றும்

தளவாடப்) பொருட்களை தயார் செய்து கொடுத்தனுப்பும்படி எனக்குக் கட்டளையிட்டார்கள். ஒட்டகங்கள் தீர்ந்து போய் விட்டன. உடனே நபி(ஸல்) அவர்கள் ஜகாத்துடைய (வாலிபப்பெண்) ஒட்டகங்களை எடுத்துக் கொள்ளும்படி எனக்குக் கட்டளையிட்டார்கள் என்று அப்துல்லாஹ் இப்னு அம்ரு(ரலி) அறிவிக்கிறார். (மேலும்) ஜகாத்துடைய ஒட்டகங்கள் வந்த பின்னர் இரண்டு ஒட்டகங்களுக்குப் பதிலாக ஒரு ஒட்டகம் தான் நான் வாங்கினேன் என்றும் கூறினார். ஹாம்கி, பைஹம்

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

865 நபி(ஸல்) அவர் முஸாபனா (எனும் வியாபார) முறையைத் தடுத்தார்கள். அதாவது பேரீச்சம் பழம் மரத்தில் இருக்கும் போதே அளக்கப்பட்ட பேரீச்சம பழத்திற்குப் பதிலாக அதை விற்பது, இன்னும் திராட்சை கொடியில் இருக்கும் போதே அளக்கப்பட்ட கிஸ்மிஸ் பழத்திற்குப் பதிலாக அதை விற்பது, இன்னும் நிலத்திலுள்ள பயிரை அதற்குப்பதிலாக (ஏனைய) அளக்கப்பட்ட உணவுப் பொருள்களை விற்பனை செய்வது, இவை 'அனைத்தையும் நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ முஸ்லிம்

866 உலர்ந்த பேரீச்சம் பழத்திற்குப் பதிலாக ஈரப்பதமான பேரீச்சம் பழத்தை வாங்குவது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது "ஈரப்பதமான பேரீச்சம்பழம் காய்ந்து விட்டால் அளவு குறைந்து விடுமா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு மக்கள் "ஆமாம்" என்றனர். பின்னர் அதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என ஸஅத் இப்னு அழு வக்காஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது இப்னு அல்மதீனீ, திர்மிதீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

867 (கடனைக் கொடுக்காத) தாமதக்காரரைக் கொண்டு (அதே போன்ற) தாமதக்காரர் செய்யும் வியாபாரத்தை, அதாவது கடனுக்குப் பதிலாக கடனைக் கொண்டு வியாபாரம் செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். இல்ஹாக், பஸ்ஸார். இது ளயீ.ஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அராயாவில் அளிக்கப்பட்டுள்ள சலுகை

GO TO CHAPTER INDEX

868 குத்துமதிப்பாகக் கணக்கிடப்பட்ட பேரீச்சம் பழத்தின் மதிப்பை அளவையில் கணக்கிட்டு விற்றுக் கொள்வதற்கு நபி(ஸல்) அவர்கள் சலுகை அளித்தார்கள் என ஸைத் இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

வீட்டார் சாப்பிடுவதற்குப் பதமான பேரீச்சம் பழத்தை நிறுவையில் மதிப்பிட்டுக்கொள்ள சலுகையளித்தார்கள் எனும் வாசகம் முஸ்லிமில் உள்ளது.

869 'அராயா' பேரீச்சம் பழங்களைக் குத்துமதிப்பாகக் கணக்கிட்டு அது ஐந்து பஸக்குகள் அல்லது அதற்கும் குறைவாக உள்ள பட்சத்தில் காய்ந்த பேரீச்சம் பழங்களுக்குப் பகரமாக விற்பனை செய்து கொள்ள நபி(ஸல்) அவர்கள் சலுகை அளித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

870 பழங்கள் நன்றாக பழுக்காதவரை விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். நன்றாகப் பழுத்தல் என்பது எதைக் குறிக்கிறது? என்று ஒருவர் கேட்டார். அதற்கு, "சிவப்பாகவும், மஞ்சளாகவும் ஆம் விடுவதாகும்" என நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம்பெற்றுள்ளது.

872 திராட்சை கறுப்பாகாதவரையும் தானியம் நன்றாக விளையாதவரையும் அவற்றை விற்பனை செய்வதை நபி(ஸல்) அவர்கள்தடை செய்தார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா, மற்றும் அஹ்மத் இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

873 நீ உன் சகோதரனுக்குப் பழங்களை விற்று, அதில் ஏதாவது கேடு ஏற்பட்டு விட்டால் அந்த முஸ்லிம் சகோதரனிடமிருந்து எதுவும் வாங்குவது அனுமதிக்கப்பட்டதல்ல. ஏனெனில், தன்னுடைய சகோதரனின் பொருளை எதற்குப் பதிலாக அவர் வாங்குவார்?" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் “நஷ்டத்தை ஈடுகட்ட வேண்டுமென கட்டளையிட்டார்கள்“ என்று உள்ளது.

874 “மகரந்தச் சேர்க்கை செய்த பின் பேரீச்சை மரத்தை வாங்குபவர் விளைச்சல் எனக்கே சேரும் என்று நிபந்தனை வைக்கவில்லை என்றால் அதன் பழம் விற்பவரையே சேரும். “என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

முன் பணம், கடன் மற்றும் அடகு GO TO CHAPTER INDEX

875 நபி(ஸல்) அவர்கள் மதீனா வந்த போது அங்குள்ளவர்கள் பழங்களுக்காக ஒரு வருடம், இரண்டு வருடம் முன் பணம் (ஸலஃப்) பெற்றுக் கொண்டிருந்தனர். அப்போது “எவர் பழங்களுக்காக முன்பணம் பெறுகிறாரோ, அவர் குறிப்பிட்ட அளவையில், குறிப்பிட்ட நிலுவையில் குறிப்பிட்ட தவணைக்கு பெற்றுக்கொள்ளட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ முஸ்லிம்

புகாரீயில் “எவரேனும் ஒரு பொருளுக்கு முன் தொகை செலுத்தினால் என்று உள்ளது.

876 நாங்கள் நபி(ஸல்) அவர்களிடம் கனீமத் பொருட்களைப் பெற்றுக் கொண்டிருந்தோம். அப்போது சிரியா தேசவணிகக் கூட்டத்திலிருந்து ஒரு கூட்டம் வந்தது. நாங்கள் அவர்களிடம் கோதுமை, மைதா, கிஸ்மிஸ் பழம் ஆகியவற்றை முன் தொகையாகக் கொடுப்போம் என அப்துர் ரஹ்மான் இப்னு அப்ஸா(ரலி) மற்றும் அப்துர் ரஹ்மான் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) ஆகியோர் அறிவிக்கின்றனர். புகாரீ

(புகாரீயிலேயே மற்றோர் அறிவிப்பில்) “நாங்கள் குறிப்பிட்ட காலம் வரை ஜைத்தூன் எண்ணையும் கொடுப்போம்“ என இருவரும் கூற, (அப்போது) அவர்களிடம் விவசாய நிலம் இருந்ததா?“ என்று கேட்கப்பட்டதற்கு, “நாங்கள் அதைப் பற்றி அவர்களிடம் கேட்டதில்லை“ என்று பதிலளித்தாக உள்ளது.

877 “மக்களது பொருளை அவர்களிடம் திரும்பச் செலுத்தி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் எவர் வாங்குகிறாரோ அவருக்காக அல்லாஹ் அதைச் செலுத்துகிறான். அதை அழிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் வாங்குபவருக்கு, அல்லாஹ் அதை அழித்து விடுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

878 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இன்னாருக்கு ஸிரியா நாட்டிலிருந்த பருத்தித்துணி வந்துள்ளது. நீங்கள் அவரிடம் ஆள் அனுப்பினால் தங்களிடமிருந்து பணம் பெறும் வரை இரண்டு துணிகளைக் கடனுக்கு வாங்கலாம்“ என்று கூறினேன். நபி(ஸல்) அவர்களும் அவரிடம் ஆள் அனுப்பினார்கள். ஆனால் அவர் கொடுக்கவில்லை“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

879 “அடமானம் வைக்கப்பட்ட கால்நடையில் அதன் செலவிற்குத் தக்கவாறு சவாரி செய்யலாம். இன்னும் பால் தரும் கால்நடையிடமிருந்து, அதன் செலவிற்குத் தக்கவாறு பால் (கறந்து) அருந்தலாம். இந்தச் செலவு சவாரி செய்பவர் மற்றும் பால் அருந்துபவரையே சாரும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

880 “அடமானம் வைக்கப்பட்ட பொருள் அதன் எஜமானனை விட்டு (லாபம்) அடைக்கப்பட்டதல்ல. அதன் லாபம் அவனுக்கே உரியது அதன் இழப்பும் அவனுக்கே உரியது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ, ஹாம்கி

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். இது முர்ஸல் எனும் தரத்தை விட்டும் காக்கப்பட்டது என்று அபூதாவூதில் உள்ளது.

881 நபி(ஸல்) அவர்கள் ஒருவரிடம் இளவயது ஒட்டகம் ஒன்றைக் கடனாகப் பெற்றார்கள். அதற்குப் பின் அவர்களிடம் ஜகாத் ஒட்டகங்கள் வந்தன. (உடனே) அந்த நபருக்கு இளவயது ஒட்டகம் ஒன்றைக் கொடுக்குமாறு என்னிடம் கட்டளையிட்டார்கள். “அதைவிட நல்ல ஒட்டகம் தான் உள்ளது“ என்று நான் கூறினேன். (அதற்கு) “அதையே அவருக்குக் கொடுத்து விடு! ஏனெனில், அழகிய முறையில் கடனை அடைப்பவர்களே மக்களில் சிறந்தவர்களாகவர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூராஃபிஃ(ரலி) அறிவிக்கிறார்.

882 “லாபம் ஈட்டித் தரும் ஒவ்வொரு கடனும் வட்டியாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி, இப்னு அபீ உஸாமா

இதன் அறிவிப்பாளர் வரிசைத் தொடர் விடுபட்டுள்ளது.

883 பைஹகீயில் ளயீ.்ப் எனும் தரத்தில் மேற்கண்ட ஹதீஸிற்குச் சான்றாக ்.பளாலா இப்னு உபைத் வாயிலாக ஒர் அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

884 புகாரீயில் மவ்கூ.்ப் எனும் தரத்தில் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் வாயிலாக மற்றொரு ஹதீஸ் உள்ளது.

திவாலாகுதல் திவாலானவரின் பொருளாதார நடவடிக்கைகளைத் தடை செய்தல்

885 திவால் ஆனவரிடம் ஒருவர் தன்னுடைய சொத்தை அப்படியே கண்டால் (அதை எடுத்துக் கொள்ள) அவரே மற்ற அனைவரையும் விட உரிமை பெற்றவராவார்" என நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என்று அபூஹுரைரா(ரலி) கூற அபூபக்ர் இப்னு அப்திர் ரஹ்மான் அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

886 ஒருவர் ஒரு பொருளை விற்பனை செய்திருந்து அதை வாங்கியவர் அதன் விலையைச் சிறிதும் கொடுக்காத நிலையில் திவாலாம் விட்டாரெனில் அவரிடம் அப்பொருளை அப்படியே கண்டாரெனில், அதை எடுத்துக் கொள்ள விற்றவரோ, அதிக உரிமையுடையவராவார் வாங்கியவர் இறந்து விட்டால் பொருளின் உரிமையாளர் ஏனைய கடன்காரர்களைப் போலாவார்" என்று அபூபக்ர் இப்னு அப்திர் ரஹ்மான் வாயிலாக, அபூதாவூத் மற்றும் மாலிக்கில் முர்ஸல் எனும் தரத்தில் உள்ளது.

இது பைஹகீயில் ளயீ.்ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

887 எங்களில் ஒருவர் திவாலாம் விட்டதால் அவர் விஷயமாக நாங்கள் அபூஹுரைரா(ரலி) அவர்களிடம் (சட்டம் கேட்கச்) சென்றோம். நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளிப்பளித்தவாறே உங்கள் விஷயத்தில் நான் தீர்ப்பளிப்பேன்" என்று அபூஹுரைரா(ரலி) கூறி, "மற்றொருவருடைய பொருளைக் கிரயம் பெறாமல் (கடனாக) எவரேனும் (வாங்கி அவர்) திவாலாம் விட்டாலோ அல்லது இறந்து விட்டாலோ அப்பொருளை எடுத்துக் கொள்ள விற்பனை செய்தவரே அதிக உரிமை பெற்றவர்" என்று கூறினார்கள் என்று அம்ர் இப்னு கலதா வாயிலாக அபூதாவூத் மற்றும் இப்னு மாஜாவில் உள்ளது.

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும், அபூதாவூதில் மரணத்தைப் பற்றிய செய்தி மட்டும் ளயீ.்ப் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

888 "வசதியுள்ளவர் (கடனைத் திருப்பித் தராமல்) தள்ளிப் போடுவாராயின் அவரது மானம் போகும்படி அவரைக் கண்டிப்பதும் அவரைத் தண்டிப்பதும் அனுமதிக்கப்பட்டதாம் விடுகின்றது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷர்யத் தன்னுடைய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அபூதாவூத் நஸயீ

இது புகாரீயில் முஅல்லக் எனும் தரத்திலும், இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

889 நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஒருவர் வாங்கிய உணவுப் பொருள் (சேதமடைந்து) அவருக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது. (அதனால்) அவருக்குக் கடன் அதிகமாம் அவர் திவாலாம் விட்டார். எனவே, "அவருக்குத் தர்மம் செய்யுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்களும் அவருக்கு தர்மம் செய்தனர். இருப்பினும் அத்தொகை அவரது கடனை அடைப்பதற்குப் போதுமானதாக இல்லை. அதனால் நபி(ஸல்) அவர்கள் கடன்காரர்களிடம், "ம்டைப்பதைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதைத் தவிர வேறேதும் உங்களுக்கு இல்லை" என்று கூறினார்கள் என அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

890 நபி(ஸல்) அவர்கள் முஆத்(ரலி) அவர்களது சொத்தை (விற்கவிடாமல்) நிறுத்தி, அவரது கடனை அடைப்பதற்காக விற்பனை செய்து விட்டார்கள் என கஅப் இப்னு மாலிக் அறிவிக்கிறார். தாரகுத்னீ

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும், அபூ தாவூதில் முர்ஸல் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் முர்ஸல் எனும் தரமே மேலோங்கியள்ளதாகவும் அபூதாவூதில் உள்ளது.

891 உஹத் போரின் போது நான் நபி(ஸல்) அவர்கள் முன் நிறுத்தப்பட்டேன். அப்போது எனக்குப் பதினான்கு வயதாக இருந்தது. (எனவே போரில் கலந்து கொள்ள) எனக்கு அனுமதியளிக்கப்படவில்லை. பின்னர் நான் அகழ் யுத்தத்தின் போது அவர்கள் முன்பு நிறுத்தப்பட்டேன். அப்போது எனக்குப் பதினைந்து வயது. (எனவே போரில் கலந்து கொள்ள) எனக்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

"நான் பருவமடையும் வரை எனக்கு அனுமதி அளிக்கப்படவில்லை" என்று பைஹகீயின் மற்றோர் அறிவிப்பில்

உள்ளது. இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

892 பனுகுறைழா போரின் போது (யூதர்களான) நாங்கள் நபி(ஸல்) அவர்களின் முன்பு நிறுத்தப்பட்டோம். (எங்களில்) அடிவயிற்று முடி வளர்ந்தவர் கொல்லப்பட்டார். முடி வளராதவர் உயிர் பிழைத்துக் கொள்ள விட்டுவிடப்பட்டார். நான் (அடிவயிற்றில்) முடிவளராதவனாயிருந்தேன். எனவே என்னை உயிரோடு விட்டு விட்டார்கள் என்று அதிய்யா அல் குரழீ(ரலி) அவர்கள் அறிவித்தார்கள்.

893 “கணவனின் அனுமதி இல்லாமல் ஒரு பெண் அன்பளிப்பு (நன்கொடை தருமம்) எதுவும் செய்யக் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனாரிடமிருந்து அறிவிக்கிறார்.

மற்றோர் அறிவிப்பில், “கணவன் அவளது பொறுப்பை ஏற்றிருக்கும் பொழுது பெண்ணுடைய சொத்தில் அவளது எந்த நடவடிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது“ என்று உள்ளது.

இதை அபூதாவூத் இப்னுமாஜா, திர்மிதீ, அஹ்மத் அனைவரும் பதிவு செய்துள்ளனர். மேலும், இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

894 மூன்று நபர்களைத் தவிர்த்து மற்றவர்கள் பிறரிடம் (தம் தேவைகளைக்) கேட்பது அனுமதிக்கப்பட்டதல்ல. (1. ஒரு கடனுக்குப்) பொறுப்பேற்றுக் கொண்டு (அதைக் கொடுக்க முடியாமல் தவிக்கும்) ஒருவர் அதை அடையும் வரை (பிறரிடம்) கேட்பது அனுமதிக்கப்பட்டதாகும். பிறகு கேட்பதை அவர் நிறுத்திக் கொள்வார். (2) ஒருவருக்கு அழிவேதும் ஏற்பட்டு, அதனால் அவர் நாசமடைந்திருந்தால் அவரது செல்வம் தன் வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ளும் அளவுக்குக் கேட்பது அனுமதிக்கப்பட்டதாகும். (3) ஒருவருக்குப் பஞ்சம் (பெரும் நஷ்டம்) ஏற்பட்டு அவருடை சமூகத்தார் மூவர், “உண்மையில் அவருக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது“ என்று சாட்சி சொன்னால் அவருடைய பஞ்சம் தீரும் வரை தர்மம் கேட்பது அவருக்கு அனுமதிக்கப்பட்டதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என கபீஸா இப்னு முகாரிக்(ரலி) அறிவிக்கிறார்.

சமாதான ஒப்பந்தம்

GO TO CHAPTER INDEX

895 “அனுமதிக்கப்பட்டதை விலக்கப்பட்டதென்றும், விலக்கப்பட்டதை அனுமதிக்கப்பட்டதென்றும் ஆக்காதவரை முஸ்லிம்கள் தம்மிடையே ஒப்பந்தம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டதாகும். அவ்வாறே அனுமதிக்கப்பட்டதை விலக்கப்பட்டதாகவும், விலக்கப்பட்டதை அனுமதிக்கப்பட்டதாகவும் ஆக்காத மற்ற நிபந்தனைகளில் முஸ்லிம்களில் தம்மிடையே ஒப்பந்தம் செய்து கொள்வது அனுமதிக்கப்பட்டதாகும். அவ்வாறே அனுமதிக்கப்பட்டதை விலக்கப்பட்டதாகவும், விலக்கப்பட்டதை அனுமதிக்கப்பட்டதாகவும் ஆக்காத மற்ற நிபந்தனைகளில் முஸ்லிம்கள் நிலைத்திருக்கவும் வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு அவ்ஃப் முஸனீ(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் அறிவிப்புத் தொடரில் க[illegible]ர் இப்னு அப்தில்லாஹ் இப்னி அம்ர் இப்னி அவ்ஃப் எனும் பலவீனமானவர் இடம் பெறுவதால் (அறிஞர்களில்) பலர் இதை ஸஹீஹ் என்று ஏற்றுக் கொள்ளவில்லை. இருப்பினும் அதிகமான வழிகளில் இது அறிவிக்கப்படுவதால் திரிமிதீயில் ஸஹீஹ் என்றே உள்ளது.

896 மேற்கண்ட ஹதீஸே அபூஹுரைரா(ரழி) வாயிலாக ஸஹீஹ் எனும் தரத்தில் இப்னு ஹிப்பானில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

897 “ஓர் அண்டை வீட்டார் மற்றோர் அண்டை வீட்டாரின் சுவரில் கழியைப் பதிப்பதை தடுக்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவித்து விட்டு, “இது என்ன நிலை? இதனால் நீங்கள் முகம் திருப்பிக் கொள்வதை நான் காண்கிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த சுன்னத்தை நான் உங்களது தோள்களின் மீது ஏற்றுவேன்“ என்று கூறினார். புகாரீ, முஸ்லிம்

வார்த்தை மாற்றத்துடன் (அதே பொருளில்) இது அஹ்மதிலும் இடம் பெற்றுள்ளது.

900 ஒருவர் இறந்து விட்டார். நாங்கள் அவரைக் குளிப்பாட்டி, நறுமணம் பூசி, கபன் ஆடையிட்டு நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்து அவருக்கு (ஜனாஸா) தொழுகை நடத்துமாறு கூறினோம். அவர்கள் ஒரு அடி (முன்) எடுத்து வைத்துவிட்டு, “இவர் மீது கடன் ஏதும் உள்ளதா?“ என்று கேட்டார்கள். நாங்கள், “இரண்டு தீனார் கடன் உள்ளது“ என்று கூறினோம். (இதைக் கேட்டவுடன்) அவர்கள் திரும்பிச் செல்லலாயினர். அப்போது அபூ கதாதா அந்தக் கடனைத் தன்னுடைய பொறுப்பில் எடுத்துக் கொண்டு, “அந்த இரண்டு தீனாருக்கும் நான்

பொறுப்பேற்கிறேன்" என்று கூறினார். பின்னர் நபி(ஸல்) அவர்கள், "கடன்காரருக்கு உரிமை கிடைத்து விட்டது! இந்த மையித்தும் அதை விட்டு விலம்க் கொண்டது" என்று கூறினார்கள். அதற்கவர், 'ஆமாம்' என்றார். உடனே நபி(ஸல்) அவர்கள் அதற்கு (ஜனாஸா) தொழுகை நடத்தினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் நஸயீ

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

901 கடனாளியாக உள்ள எவருடைய ஜனாஸாவேனும் நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டால், "இவர் தன்னுடைய கடனைப் பூர்த்தி செய்ய ஏதேனும் விட்டுச் சென்றிருக்கிறாரா?" என்று கேட்பார்கள். அவர் விட்டுச் சென்றது கூறப்பட்டால் அவருக்குத் தொழுகை நடத்துவார்கள். இல்லையெனில், "உங்கள் நண்பருக்கு நீங்கள் தொழுகை நடத்திக் கொள்ளுங்கள்" என்று கூறி விடுவார்கள். பின்னர் அல்லாஹ் நபி(ஸல்) அவர்களுக்க பல வெற்றிகளைக் கொடுத்தபின் "நான் முஸ்லிம்களின் உயிர்கள் மீது அதிக உரிமை பெற்றவன். எவரேனும் இறந்து விட்டு அவருக்குக் கடன் இருந்தால் அதைத் தீர்ப்பது என்னுடைய பொறுப்பாகும்" என்று கூறினார்கள். என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீயின் மற்றோர் அறிவிப்பில் "எவர் இறந்து தன்னுடைய கடனை அடைக்க எதுவும் விட்டுச் செல்ல வில்லையோ (அவருக்கு நான் பொறுப்பேற்கிறேன்)" என்று உள்ளது.

902 "தண்டனையில் பொறுப்பேற்க அனுமதியில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷுஐபு தம்முடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். இது பைஹகீயில் 'ளயீஃப்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வியாபாரத்தில் கூட்டு மற்றும் வக்காலத்து

GO TO CHAPTER INDEX

903 "ஒருவருக்கொருவர் எதுவரை மோசடி செய்யாமல் இருக்கிறார்களோ, அதுவரை இரண்டு பங்குதாரர்களுக்கிடையே நான் மூன்றாமவனாக இருப்பேன். அதில் எவரேனும் ஒருவர் மோசடி செய்தால், அவர்களிடையேயிருந்து நான் விலம்க் கொள்வேன்" என்று அல்லாஹ் கூறுகிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

904 'நான் நபி(ஸல்) அவர்களுடன் மக்கா வெற்றிக்கு முன்பு (வியாபாரத்தில்) பங்கு தாரராக இருந்தேன். நான் மக்கா வெற்றியன்று நபி(ஸல்) அவர்களிடம் வந்ததும், "என்னுடைய சகோதரரே! என்னுடைய பங்கு தாரரே! வருக!" என்று கூறினார்கள் என அஸ் ஸாயிப் அல் மக்ஸூமி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் இப்னுமாஜா

905 "நான், அம்மார் மற்றும் ஸஅத் ஆகியோர் பத்ரு தினத்தன்று கிடைத்த (கனீமத்)தில் கூட்டாக இருந்தோம்" என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) நஸயீ

906 நான் கைபர் செல்ல நாடிய போது நபி(ஸல்) அவர்களிடம் சென்றேன். அப்போது, "நீ கைபர் சென்றால், அங்கு என்னுடைய பொறுப்பாளரிடம் பதினைந்து வஸக் பேரீச்சம்பழம் வாங்கிக் கொள்!" என்று கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

907 தமக்காக ஒரு தீனாருக்கு குர்பானிப் பிராணி வாங்கி வருமாறு என்னை நபி(ஸல்) அவர்கள் அனுப்பினார்கள் என உர்வா அல்பாரிக்கீ(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ

908 நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களை ஜகாத் வசூலிக்க நியமித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

909 நபி(ஸல்) அவர்கள் அறுபத்து மூன்று ஒட்டகங்களை அறுத்து விட்டு மீதத்தை அறுக்கும்படி அலீ(ரலி) அவர்களுக்கு கட்டளையிட்டார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

910 பணியாள் விபச்சாரம் செய்ததைப் பற்றிக் கூறுகையில், "உனைஸே! இவரது மனைவியிடம் செல்! அவள் (தன் குற்றத்தை) ஒப்புக் கொண்டால், கல் எறிந்து (கொன்று) விடு!" என்று கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

ஒப்புதல் வாக்குமூலம் அளித்தல் GO TO CHAPTER INDEX

911 "நீர் உண்மையையே பேசு அது (எவருக்கும்) கசப்பாக இருப்பினும் சரி" என்று என்னிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரவல் GO TO CHAPTER INDEX

912 "பிறரிடமிருந்து ஒரு பொருளை வாங்கியவர் அதைத் திரும்பக் கொடுக்காதவரை அவரே அதற்குப் பொறுப்பாளியாவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா இப்னு ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத் அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

913 " உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருளை உங்களிடம் ஒப்படைத்தவரிடமே கொடுத்து விடுங்கள். உங்களுக்கு மோசடி செய்தவருக்கும் கூட நீங்கள் மோசடி செய்து விடாதீர்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

இது அபூதாவூதில் ஹஸன் எனும் தரத்திலும், ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும், அபூஹாதமில் முன்கர் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

914 "உன்னிடம் என்னுடைய தூதர்கள் வந்தால் அவரிடம் நீ முப்பது கேடயங்களைக் கொடுத்தனுப்பு" என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான், "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த இரவலுக்கு விலை கொடுக்கப்படுமா? அல்லது இது திரும்பக் கொடுக்கப்படும் இரவலா?" என்று நான் கேட்டதற்கு, "திரும்பக் கொடுக்கப்படும் இரவல் தான்" என்று பதிலளித்தார்கள் என யஃலா இப்னு உமையா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

915 ஹு னைன் போரின் போது நபி(ஸல்) அவர்கள் சில கேடயங்களைத் தன்னிடம் இரவல் வாங்கிய போது, "முஹம்மதே! இது (போரின்) கொள்ளைப் பொருளா? அல்லது இரவலா?" என்று கேட்டதற்கு, "இல்லை! (திரும்பக் கொடுத்து விடுவதாகப்) பொறுப்பேற்றுக் கொண்ட இரவல்" என்று நபி(ஸல்) அவர்கள் தன்னிடம் கூறியதாக ஸஃப்வான் இப்னு உமையா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், அஹ்மத் மற்றும் நஸயீ. இது ஹாம்மில் 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

916 "மேற்கண்ட ஹதீஸிற்குச் சான்றாக இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக ளயீஃப் எனும் தரத்தில் ஹதீஸ் ஒன்றை ஹாம்கி பதிவு செய்துள்ளார்.

அபகரிப்பு GO TO CHAPTER INDEX

917 "எவன் அநியாயமாக (பிறரது) பூமியில் ஓர் அங்குலத்தை எடுத்துக் கொள்கிறானோ, மறுமையில் அல்லாஹ் ஏழு பூமிகளை அவனது கழுத்தில் மாலையாகப் போட்டு விடுவான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸயீத் இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

918 நபி(ஸல்) அவர்கள் தம்முடைய மனைவியர்களில் ஒருவருடன் இருந்த போது, அவர்களது மற்றொரு மனைவி தனது பணிப்பெண்ணிடம் ஒரு தட்டில் அவர்களுக்காக உணவு கொடுத்தனுப்பினார். அதை அவர் (நபியின் மனைவி) கையால் தட்டி விட்டார். அதனால் அந்தத் தட்டு உடைந்து விட்டது. நபி(ஸல்) அவர்கள் அந்தத் தட்டை ஒன்று சேர்த்து, உணவை அதில் போட்டு "இதைச் சாப்பிடு!" என்றார்கள். பின்னர் கொண்டு வந்தவரிடம் ஒரு நல்ல தட்டைக் கொடுத்து விட்டு உடைந்த தட்டை வைத்துக் கொண்டார்கள். புகாரீ, திர்மிதீ

திர்மிதீயில் "உடைத்தவர் ஆயிஷா(ரலி) என்றும் "உணவுக்குப் பதில் உணவு, பாத்திரத்திற்குப் பதில் பாத்திரம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்றும் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

919 "எவர் பிறரது பூமியில் (நிலத்தில்) அவரது அனுமதியின்றிப் பயிரிடுகிறாரோ, அவருக்கு அதிலிருந்து எதுவும் கொடுக்கப்படாது. அவர் செலவிட்டுள்ள அளவு மட்டுமே கொடுக்கப்படும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ராஃபிஉ இப்னு கதீக்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரீ இதை ளயீஃப் என்று குறிப்பிட்டுள்ளார்.

920 இரண்டு நபர்கள் ஒரு நிலம் தொடர்பாக நபி(ஸல்) அவர்களிடம் வழக்கு கொண்டு வந்தனர். அவர்களில், ஒருவர் மற்றொருவருக்குச் சொந்தமான பூமியில் பேரீச்சை மரம் பயிரிட்டு விட்டார். நிலத்தை அதனுடைய உரிமையாளரும், விளைச்சலை அதைப் பயிரிட்டவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என கட்டளையிட்டுத் தீர்ப்பளித்தார்கள். பின்னர் "அநியாயக்காரனுக்கு நிலத்திலுள்ள எதற்கும் உரிமை கிடையாது" என்று நபி(ஸல்) கூறினார்கள் என நபித்தோழர்களில் ஒருவர் கூறியதாக உர்வா இப்னு ஜு பைர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

921 மற்றோர் அறிவிப்பில் ஸு னன்களிடம் உர்வா மற்றும் ஸயீத் இப்னு ஸைத் வாயிலாக உள்ள ஹதீஸ் மவ்ஸூ ல் மற்றும் முர்ஸல் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. ஏனெனில், அறிவித்த ஸஹாபி யாரெனத் தெரியவில்லை.

922 "உங்கள் இரத்தம், உங்களது சொத்துக்கள், உங்களது இந்த நாளில், உங்களது இந்த மாதத்தில், உங்களது இந்த நகரத்தில் விலக்கப்பட்டுள்ளது போன்று (எப்போதும்) விலக்கப்பட்டதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூபக்ரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

ஷு ஃப்ஆ (வாங்குவதில் முன்னுரிமை) GO TO CHAPTER INDEX

923 "பிரித்தளிக்கப்படாத (தனக்குச் சேர வேண்டிய) ஒவ்வொரு பொருளிலும் ஷு ஃப் ஆவிற்கு நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள். ஆனால் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு பாதைகள் மாற்றப்பட்டு விட்டால் அதில் ஷு ஃஆ இல்லை" என, ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

924 "நிலத்திலிருப்பினும், வீடு அல்லது நான்கு சுவர்களுக்கு மத்தியிலிருப்பினும் ஒவ்வொரு கூட்டிலும் ஷு ஃஆ உள்ளது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக முஸ்லிமுடைய மற்றொரு அறிவிப்பில் உள்ளது.

"தன்னுடைய பங்குதாரரிடம் சமர்ப்பிக்காதவரை வியாபாரம் கூடாது" என்று மற்றோர் அறிவிப்பில் "உள்ளது.

"தன்னுடைய பங்குதாரரிடம் சமர்ப்பிக்காதவரை வியாபாரம் கூடாது" என்று மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு பொருளிலும் ஷு ஃப் ஆவிற்கு அனுமதியளித்தார்கள் என தஹாவியில் உள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

925 "அண்டை வீட்டுக்காரரே (ஒரு வீட்டை வாங்கிட) அதிக உரிமையுடையவர் ஆவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மஃலூல் எனும் தரத்திலும் உள்ளது.

926 "பக்கத்து வீட்டை வாங்கிட அண்டை வீட்டாரே அதிகம் உரிமை பெற்றவர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ராஃபிஉ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, ஹாம்கி

இது நீண்ட சம்பவத்திலுள்ள ஒரு பகுதியாகும்.

927 "ஷு ஃப்ஆவில் அண்டை வீட்டாரே அதிகம் உரிமை பெற்றவராவார். அவர் ஊரில் இல்லாவிட்டாலும் அவர் வரும் வரை காத்திருந்து, பிறகு தான் விற்க வேண்டும். இருவரின் (வீட்டுப்) பாதையின் ஒன்றாக இருக்கும் வரை தான் இந்த நிபந்தனை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

928 "ஷு ஃப்ஆ என்பது (ஒட்டகத்தைக் கட்டவிழ்த்து விடுவது போன்று வியாபாரத்தில்) கட்டவிழ்த்து விடுவதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். இப்னுமாஜா, பஸ்ஸார்

"ஊரில் இல்லாதவருக்கு ஷு ப்ஆவின் உரிமை இல்லை" என்று மற்றொரு அறிவிப்பும் உள்ளது. இது ளயீஃப் எனும் தரம் பெற்றதாகும்.

கிராள் GO TO CHAPTER INDEX

929 குறிப்பிட்ட கால அவகாசத்துடன் வியாபாரம் செய்தல், முகாரளா மற்றும் வியாபாரத்திற்கு அல்லாது வீட்டில் கோதுமையுடன் வாற் கோதுமையைக் கலந்து விடுதல் ஆகிய மூன்றில் அருள் வளம் உள்ளது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸு ஹைப்(ரலி) அறிவிக்கிறார். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

930 என்னுடைய செல்வத்தை உயிருள்ளவற்றில் (முதலீடு) செய்வதோ, கடல் மார்க்கமாக எடுத்துச் செல்வதோ, அல்லது (வேறு) நீர் நிலை வழியாக எடுத்துச் செல்வதோ கூடாது. அப்படிச் செய்தால் நீயே என்னுடைய செல்வத்திற்கும் பொறுப்பாளியாவாய் என்ற நிபந்தனையுடன் தான் (தனது) செல்வத்தைக் கொடுத்தாக ஹகீம் இப்னு ஹிஸாம்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்

அலா இப்னு அப்திர் ரஹ்மான் இப்னி யஃகூப் தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனாரிடமிருந்து "லாபம் இருவருக்கும் உரியது" என்ற நிபந்தனையுடன் உஸ்மான்(ரலி) இவ்வாறு (முகாரளா) செய்துள்ளார்கள் என ஸஹீஹ் மவ்கூஃப் எனும் தரத்தில் முஅத்தாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய ஒப்பந்தம் மற்றும் கூலி

GO TO CHAPTER INDEX

931 நபி(ஸல்) அவர்கள் கைபர்வாசிகளுடன் பேரீச்சை அல்லது மற்ற பயிர்களில் ஒரு பகுதியைக் கொடுத்துவிட வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீ, முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், "அவர்கள் தங்களுக்கு தங்களின் உழைப்புக்குப் பகரமாக விளைச்சலின் ஒரு பகுதியை வேண்டினார்கள். அதாவது அரைப்பங்கு தங்களுக்கென வேண்டினார்கள். அதற்கு, "நாங்கள் விரும்பும் வரை உங்களுக்கு நீங்கள் கேட்டதையே நிர்ணயிக்கின்றோம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர்களை உமர்(ரலி) அவர்கள் நாடு கடத்தும்வரை அதே அளவு பங்கைப் பெற்று வந்தார்கள் என்று உள்ளது.

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் 'கைபர் யூதர்களிடம், கைபர் பேரீச்சைத் தோட்டங்களையும், கைபர் நிலத்தையும் தங்களது செல்வத்தால் விவசாயம் செய்து அதில் அவர்கள் அடைகிற மகசூலில் அரைப்பாங்கு (மட்டும்) அவர்களுக்கு என நபி(ஸல்) அவர்கள் நிர்ணயித்தார்கள் என்று உள்ளது.

932 தங்கம் மற்றும் வெள்ளிக்கு பதிலாக நிலத்தைக் குத்தகைக்கு வாங்குவது பற்றி ராஃபிஉ இப்னு கதீஜ்(ரலி) அவர்களிடம் நான் கேட்டதற்கு, "நபி(ஸல்) அவர்களது காலத்தில் அப்போது நீர்நிலைகளைச் சுற்றியுள்ள நிலங்கள் மற்றும் நதிக்கரைகளில் உள்ள நிலங்களிலும் நிலத்தின் சில பகுதிகளிலும் சில சமயம் நஷ்டம் அடைந்து விடும். இதைத் தவிர வேறு எதிலும் மக்கள் குத்தகை வைத்துக் கொள்ளவில்லை. இதனால், இதை நபி(ஸல்) அவர்கள் கண்டித்தார்கள். இன்னும் குறிப்பிட்ட அளவு பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் செய்தார்கள் என ஹன்ளலா இப்னு கைஸ்(ரலி) அறிவிக்கிறார்.

புகாரி மற்றும் முஸ்லிம் இருவரும் இணைந்து வழங்கிய ஹதீஸில் பொதுவாக நிலக்குத்தகை தடை செய்யப்பட்டுள்ளதாக உள்ளதற்கு மேற்கண்ட ஹதீஸில் தடுக்கப்பட்டதற்கான விளக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

933 "நபி(ஸல்) அவர்கள் முஸாராஅத்தை தடை செய்து குத்தகை முறையைப் பின்பற்றும்படி கட்டளையிட்டார்கள் என ஸாபித் இப்னு ளஹ்ஹாக்(ரலி) அறிவிக்கிறார்.

934 நபி(ஸல்) அவர்கள் இரத்தம் குத்தி எடுத்ததற்காக இரத்தம் குத்தி எடுத்தவருக்கு கூலி கொடுத்தார்கள். இந்தக் கூலி விலக்கப்பட்டது என்றால், நபி(ஸல்) அவர்கள் கொடுத்திருக்கமாட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

935 "இரத்தம் குத்தி எடுப்பவனுடைய சம்பாத்தியம் அசுத்தமானது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ராஃபிஉ இப்னு கதீஜ்(ரலி) அறிவிக்கிறார்.

936 "என்னுடைய பெயரால் வாக்குறுதியளித்து விட்டு மாறு செய்பவன் சுதந்திரமாகத் திரிபவனை (அடிமையாக) விற்பனை செய்து அதன் கிரயத்தை உண்பவன் இன்னும் பணியாளரிடம் முழுக்க முழுக்க வேலை வாங்கிக் கொண்டு, அவனுக்குரிய கூலியைக் கொடுக்காதவன் ஆகிய மூன்று நபர்களுக்கு எதிராக மறுமையில் நான்

வாதிடுவேன்“ என்று அல்லாஹ் கூறுகிறான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

937 “நீங்கள் ஊதியம் பெறுவதற்கு அதிக உரிமையுடையது அல்லாஹ்வின் வேதமேயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

938 “தொழிலாளியின் வியர்வை உலரும் முன்பு அவனுக்குரிய கூலியைக் கொடுத்து விடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

939 மேற்கண்ட ஹதீஸ் அபூஹுரைரா(ரலி) வாயிலாக அபூயஃலா மற்றும் பைஹகியில் இடம் பெற்றுள்ளது.

940 ஜாபிர்(ரலி) வாயிலாக தபரானியிலும் இடம் பெற்றுள்ளது.

இவை அனைத்தும் ளயீஃப் எனும் தரத்தில் உள்ளவையாகும்.

941 “பணியாளனை நியமிப்பவர் (அப்போதே) அவருக்கான கூலியையும் நிர்ணயித்துக் கூறட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அப்துர் ரஸ்ஸாக்

இது முன்கதிஃ எனும் தரத்தில் உள்ளது. மவ்ஸூல் எனும் தரத்தில் அபூஹனிஃபா வாயிலாக பைஹகீயிலும் உள்ளது.

தரிசு நிலத்தை உழவு செய்து உயிராக்குதல் GO TO CHAPTER INDEX

942 “எவருக்கும் சொந்தமில்லாத (புறம்போக்கு) நிலத்தை எவர் (சீர் செய்து) உயிர்ப்பிக்கின்றாரோ, அது அவருக்கே உரியது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அவர்களிடமிருந்து உர்வா(ரஹ்) அறிவிக்கிறார். “உமர்(ரலி) அவர்களது தமது ஆட்சிக் காலத்தில் இதன் அடிப்படையில் தீர்ப்பளித்தார்கள் எனவும் உர்வா(ரஹ்) கூறினார். புகாரீ

943 “இறந்த (தரிசு) நிலத்தை எவர் உயிர்ப்பிக்கின்றாரோ, அது அவருக்குரியதே“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸயீத் இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ, மற்றும் நஸயீ

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ‘முர்ஸல்‘ எனும் தரம் பெற்றது என்றும் திர்மிதீ குறிப்பிட்டுள்ளார். அறிவித்த தோழர்(பெயர்) ஜாபிர்(ரலி) என்றும், ஆயிஷா(ரலி) என்றும், அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) என்றும் கருத்து வேறுபாடுள்ளது. இருப்பினும் முதல் கூற்றே பலமானது.

944 “பிரத்தியேகமான மேய்ச்சல் நிலம் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மட்டுமே உரியதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்ற செய்தியை ஸஅப் இப்னு ஜஸ்ஸாமா அல்லைஸி அறிவித்தார் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

945 “பிறருக்கு நட்டம் ஏற்படுத்துவதும், நட்டம் ஏற்படுத்தப்படுதலும் அனுமதிக்கப்பட்டது அல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், இப்னுமாஜா

946 அபூ ஸயீத்(ரலி) வாயிலாக மேற்கண்ட ஹதீஸ் போன்றே இப்னுமாஜாவிலும் உள்ளது. இன்னும் அது ‘முர்ஸல்‘ எனும் தரத்தில் முஅத்தாவிலும் உள்ளது.

947 “எவரொருவர் (யாருக்கும் சொந்தமில்லாத) நிலத்தில் (நன்கு) வேலிகளைப் போட்டுக் கொள்கிறாரோ, அது அவருக்கே உரியது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா இப்னு ஜுன்துப்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது இப்னுல் ஜாரூதில் ஸஹிஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

948 “எவர் (பிறருக்குச் சொந்தமில்லாத) ஓர் இடத்தில் கிணறு தோண்டியுள்ளாரோ, அவர் தம்முடைய கால்நடைகள் நீரருந்தி ஓய்வெடுக்கும் இடமாக வைத்துக் கொள்ள (அதைச் சுற்றியுள்ள இடத்தில்) நாற்பது முழம் இடம் அவருக்கே உரியதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு முகஃப்பல்(ரலி) அறிவிக்கிறார். இது இப்னுமாஜாவில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

949 நபி(ஸல்) அவர்கள் ‘ஹளராமவ்த்‘ எனும் இடத்தில் உள்ள நிலத்தை எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்கள் என அல் கமா இப்னு வாயில் தம்முடைய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

950 நபி(ஸல்) அவர்கள் ஸுபைர்(ரலி) அவர்களுக்கு அவரது குதிரை ஓடிய தூரம் வரை நிலத்தை மானியமாகக்

கொடுத்தார்கள். ஸுபைர்(ரலி) அவர்கள் தம்முடைய குதிரையை அது நிற்கும் வரை ஓட்டிச் சென்றார்கள். அது ஓடி நின்ற பின் தமது சாட்டையை வீசினார்கள். அதற்காக அந்த சாட்டை சென்றடைந்த அளவு தூரமுள்ள நிலத்தை அவருக்குக் கொடுக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது 'ளயீஃப்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

951 நான் நபி(ஸல்) அவர்களுடன் ஒரு போரில் இருந்த போது "புல், தண்ணீர், நெருப்பு ஆகிய மூன்று பொருட்களில் (அனைத்து) மக்களும் பங்குதாரர்களாவர். (இதை யாரும் யாருக்கும் தடை செய்யக்கூடாது)" என்று அவர்கள் கூறினார்கள் என நபித்தோழர்களில் ஒருவர் அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

வக்ஃப் (தானம்) GO TO CHAPTER INDEX

952 "நிலையான தர்மம், பயன் தரக்கூடிய கல்வி, தனக்காகப் பிரார்த்தனை செய்யக் கூடிய வாரிசு ஆகிய இவை மூன்றைத் தவிர மற்ற அனைத்து செயல்களும் மனிதன் இறந்து விட்டால் அவனை விட்டு நின்று விடுகின்றன" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

953 உமர்(ரலி) அவர்களுக்கு கைபரில் சிறிது நிலம் கிடைத்தது. அதைப் பற்றிக் கேட்பதற்கு அவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கைபரில் எனக்குக் கொஞ்சம் நிலம் கிடைத்துள்ளது. இதைவிடச் சிறந்ததாக ஒரு சொத்தை நான் எப்போதும் பெற்றதில்லை" என்று கூறினார். அதற்கு, "நீ விரும்பினால் அடிநிலத்தை உன்னிடமே வைத்துக் கொண்டு, அதில் கிடைப்பவற்றை தர்மம் செய்து விடு!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகவே, உமர்(ரலி) அவர்கள் அந்த நிலத்தை விற்கவோ, அன்பளிப்பாக அளிக்கவோ, வாரிசுரிமையாகப் பெறவோ முடியாது. அதை ஏழைகளுக்கும், உறவினர்களுக்கும், அடிமைகளுக்கும், அல்லாஹ்வின் பாதையில் போர்புரியச் செல்வோருக்கும், வழிப்போக்கர்களுக்கும் மற்றும் விருந்தினர்களுக்கும் செலவிட வேண்டும். அதைத் தன்னுடைய சொத்தாக ஆக்கிக் கொள்ளாத நிலையில் அதன் பொறுப்பாளர்களும், அவர்களது நண்பர்களும் அதில் உண்பது பாவமாகாது என்னும் நிபந்தனையின் பேரில் அதன் வருமானத்தை பேரில் அதன் வருமானத்தை தர்மம் செய்து விட்டார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. புகாரீயுடைய மற்றோர் அறிவிப்பில், "அந்த நிலத்தை வக்ஃப் செய்து விடுங்கள். அதை விற்பனை செய்யவோ, அன்பளிப்பாக அளிக்கவோ கூடாது. ஆனால், அதன் விளைச்சலை இறைவழியில் செலவிட வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உள்ளது.

954 நபி(ஸல்) அவர்கள் உமர்(ரலி) அவர்களை தர்மப் பொருட்களை வசூலிக்க நியமனம் செய்தார்கள். (நீண்ட ஹதீஸ்) காலித் தன்னுடைய உருக்குச் சட்டைகளையும், ஆயுதங்களையும் இறைவழியில் வக்ஃப் செய்துவிட்டார் என்பதும் அதில் உள்ளது. புகாரீ, முஸ்லிம்

அன்பளிப்பு, உம்ரா, ருக்பா GO TO CHAPTER INDEX

955 என்னுடைய தந்தை என்னை நபி(ரலி) அவர்களிடம் அழைத்துச்சென்று, "என்னுடைய இந்த அடிமையை என்னுடைய இந்த மகனுக்குக் கொடுத்துவிட்டேன்" என்று கூறியதற்கு நபி(ஸல்) அவர்கள், "உன்னுடைய ஒவ்வொரு மகனுக்கும் இவ்வாறே செய்துள்ளாயா?" என்று கேட்டார்கள். அவர், "இல்லை" என்றார். அதற்கு, "அப்படியானால் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்" என்று அவர்கள் கூறினார்கள் என நுஃமான் இப்னு பஷீர்(ரலி) அறிவிக்கிறார்.

மற்றோர் அறிவிப்பில், "என்னுடைய தந்தை எனக்கு (அன்பளிப்பாக அடிமையை) அளித்ததற்கு நபி(ஸல்) அவர்களை சாட்சியாக்குவதற்காக அவர்களிடம் சென்றார். அதற்கு "நீர் உம்முடைய பிள்ளைகளி எல்லோருக்கும் இவ்வாறு செய்துள்ளீரா?" என்று அவர்கள் கேட்டார்கள். என் தந்தை "இல்லை" என்றார். அதற்கு "அல்லாஹ்வைப் பயந்து கொள்! உன்னுடைய பிள்ளைகளுக்கிடையே நியாயமாக நடந்துகொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் என்னுடைய தந்தை அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்று உள்ளது. புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் "நீ என்னைத் தவிர்த்து மற்றவரை சாட்சியாக்கிக் கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் என்னுடைய தந்தை அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்று உள்ளது.

புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் “நீ என்னைத் தவிர்த்து மற்றவரை சாட்சியாக்கிக் கொள்!“ என்று கூறிவிட்டு பின்னர், “அவர்கள் அனைவருமே உன்னுடன் நல்லவிதமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை நீ விரும்புகிறாயா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, ‘ஏனில்லை‘ என்றார். அதற்கு “ அப்படியானால் நீ இவ்வாறு செய்யாதே!“ என்றும் உள்ளது.

956 “தன்னால் அன்பளிப்புச் செய்யப்பட்டதை எவர் (அதைத் திருப்பித் தருமாறு கேட்டு) திரும்பப் பெறுகிறாரோ அவர் வாந்தி எடுத்துவிட்டு மறுபடியும் அதை தின்னும் நாயைப் போன்றவர் ஆவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“நாய் வாந்தி எடுத்து விட்டு பின்னர் அதைத் திரும்பத் தின்றுவிடுவது போன்று எவன் தான் அன்பளிப்புச் செய்ததைத் திரும்பப் பெறுகிறானோ, அதைப் போன்றதொரு தீய செயல் நம்மில் (வேறு எதுவும்) இல்லை“ என்று புகாரீயின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

957 “தன்னுடைய மகனுக்குத் தந்தை கொடுத்த அன்பளிப்பைத் தவிர்த்து பிறருக்குத் தானளித்த அன்பளிப்பைத் திரும்பப் பெறுவது முஸ்லிமான எந்த ஓர் ஆணுக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர் மற்றும் இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கின்றனர். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா,

இது திர்மிதீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

958 நபி(ஸல்) அவர்கள் அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டும், அதற்குக் கைம்மாறு செய்து கொண்டுமிருந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

959 நபி(ஸல்) அவர்களுக்கு ஒருவர் ஓர் ஒட்டகத்தை அன்பளிப்புச் செய்தார். அதற்காக அவருக்கு நபி(ஸல்) அவர்கள் கைம்மாறு செய்து, “மகிழ்வுற்றாயா?“ என்று கேட்டார்கள். அவர், “இல்லை“ என்றார். நபி(ஸல்) அவர்கள் அவருக்கு இன்னும் அதிகப் படியாகக் கொடுத்து, அதிகப் படியாகக் கொடுத்து, “மகிழ்வுற்றாயா?“ என்று கேட்டார்கள். அவர், “இல்லை“ என்றார். நபி(ஸல்) அவர்கள் அவருக்கு இன்னும் அதிகமாகக் கொடுத்து, “(இப்போது) மகிழ்வுற்றாயா?“ என்று கேட்டதற்கு, அவர், “ஆம்“ என்றார் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்.

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

960 “எவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதோ, அவருக்கே “உம்ஹா“ உரியதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், “நீங்கள் உங்களுக்காக உங்கள் சொத்துக்களை இருப்பில் (வைத்து)க் கொள்ளுங்கள். அதை வீணடித்து விடாதீர்கள். ஏனெனில், எவருக்கேனும் ‘உகிறா‘ கொடுக்கப்பட்டால் அவர் உயிருள்ள வரை அது அவருக்கும், இறந்த பின்னர் அவரது சந்ததியினருக்கு உரியதாகும்“ என்று உள்ளது.

மற்றோர் அறிவிப்பின்படி, “இது உனக்கும் உன் சந்ததினருக்குமாகும்“ என்று சொல்லி அன்பளிப்புச் செய்யும் உகிறாவைத்தான் நபி(ஸல்) அவர்கள் அனுமதித்தார்கள். “நீ உயிர் வாழும் காலம் வரை இது உனக்குரியது என்று ஒருவர் சொல்லி அன்பளிப்புச் செய்வாராயின் அது உரிமையாளரிடமே திரும்பப் போய் சேர்ந்து விடும்.

அபூதாவூத் மற்றும் நஸயீயின் மற்றோர் அறிவிப்பின்படி “நீங்கள் ருக்பா, உகிறா, செய்யாதீர்கள். ஏனெனில் ருக்பா, உகிறா‘ செய்யக்கூடிய பொருள் எவருக்கு (அன்பளிப்புச்)செய்யப்படுகிறதோ, அவரது சந்ததியினருக்குரியதாகும்“ என்று உள்ளது.

961 அல்லாஹ்வின் பாதையில் அவர் சவாரி செய்து கொள்வதற்காக ஒருவருக்கு நான் குதிரை ஒன்றைக் கொடுத்தேன். ஆனால், அவர் அதை வீணடித்து (குறைந்த விலைக்கு விற்க முற்பட்டு) விட்டார். அவர் அதைக் குறைந்த விலைக்கு விற்று விடுவார் என நான் எண்ணியதால் அதை நானே வாங்கிக் கொள்வது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, “அவர் ஒரு திர்ஹத்திற்கேனும் அதை விற்றாலும் அதை நீ வாங்காதே!“ என்று கூறினார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்.

962 “ நீங்கள் ஒருவருக் கொருவர் அன்பளிப்புச் செய்து, உங்களுக்கிடையே அன்பை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்.

இது புகாரீயின் ‘அல் அதபுல் முப்ஃரத்‘‘ எனும் நூலிலும் பதிவாகியள்ளது. ‘அபூ யஃலா‘ எனும் நூலில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

963 ‘‘நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பளிப்புச் செய்து கொள்ளுங்கள். ஏனெனில், அது உங்கள் மனக்குறைகளை அகற்றி விடும்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். பஸ்ஸார். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

964 ‘‘முஸ்லிம் பெண்களே! ஒருவருக்கு அவருடைய அண்டை வீட்டார் ஆட்டு குழம்பைக் கொடுத்தாலும் அதை இழிவாகக் கருதாதீர்கள்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கின்றார். புகாரீ, முஸ்லிம்

965 ‘‘ எவரேனும் அன்பளிப்புச் செய்தால் அவருக்கு பதிலளிக்கப் படாதவரை (அவரிடத்தில்) அவர் (அன்பளிப்புச் செய்தவர்) அதிகம் உரிமை பெற்றவராவார்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி. இது ஸஹீஹ் எனும் தரத்தில் உள்ளது.

கண்டெடுக்கும் பொருள்

GO TO CHAPTER INDEX

966 நபி(ஸல்) அவர்கள், வழியில் ஒரு பேரீச்சம் பழத்தைக் கடந்து சென்ற போது, ‘‘இது தர்மப் பொருளாக இருக்கக் கூடும் என்று நான் அஞ்சவில்லை என்றால் இதை நான் புசித்திருப்பேன்‘‘ என்று கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

967 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து கண்டெடுக்கும் பொருட்களைப் பற்றி வினவினார். அதனுடைய பை மற்றும் சுருக்கிடும் கயிற்றை அறிவிப்புச் செய்து விட்டு, பின்னர் ஒரு வருட காலம் காத்திரு. அந்தப் பொருளுக்குரியவர் வந்து விட்டால் அது அவருக்கே உரியதாகும். இல்லையெனில், அதை நீ பயன் படுத்திக் கொள்!‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர் ‘‘காணாமல் போன ஆடு?‘‘ என்று கேட்டார் ‘‘அது உனக்கு அல்லது உன்னுடைய சகோதரனுக்கு அல்லது ஓநாய்க்குரிய தாகும்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர் ‘‘காணாமல் போன ஒட்டகம்?‘‘ என்று கேட்டார். அதற்கு ‘‘உனக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? அதனுடன் அதன் வயிறும் கால்களும் இருக்கின்றன. அதை அதனுடைய எஜமானன் காணும் வரை அது தண்ணீரைப் பருகிக் கொண்டும், மரங்களைத் தின்று கொண்டும் திரியும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸைத் இப்னு காலித் அல் ஜு ஹனீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

968 ‘‘எவரேனும் காணாமல் போன கால்நடைக்கு அபயமளித்தால், அவர் அதை அறிவிக்காத வரை வழிகேட்டில் உள்ளவராவார்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸைத் இப்னு காலித் அல் ஜு ஹனீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

969 ‘‘எவரேனும் ஒரு பொருளைக் கண்டெடுத்தால், அவர் அதற்கு நீதியான இரண்டு சாட்சிகளை நியமனம் செய்து கொள்ளட்டும். இன்னும் அதன் பை மற்றும் கயிற்றை நினைவில் வைக்கட்டும். அதை அவர் மறைக்கவோ - ஒளிக்கவோ கூடாது. அதன் உரிமையாளர் வந்துவிட்டால், அவரே அதில் அதிக உரிமை பெற்றவராவார். இல்லையெனில், அது அல்லாஹ்வின் சொத்தாகும். அவன் அதை விரும்பியவருக்கு அளிக்கின்றான்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இயாள் இப்னு ஹிமார்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு குஸைமா, இப்னு அல் ஜாரூத் மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

970 ஹாஜிகள் தவறவிட்டபொருட்களை பிறர் எடுப்பதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு உஸ்மான்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

971 ‘‘அறிந்து கொள்ளுங்கள்! மிருகங்களில் கோரைப் பற்களுடையவையும், நாட்டுக் கழுதையும் இஸ்லாமிய அரசின் கீழ் ஒப்பந்தம செய்து வாழ்பவரின் காணாமல் போன பொருள் அவனுக்குத் தேவையில்லை என்கிற பட்சத்திலே தவிர மற்றவை விலக்கப்பட்டதாகும்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மிக்தாம் இப்னு மஃதீ கரிப்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

பாகப் பிரிவினை GO TO CHAPTER INDEX

972 “வாரிசுகளுக்கு அவர்களுக்குரிய பங்கை கொடுத்து விடுங்கள். அதில் மீதம் இருப்பவற்றை நெருங்கிய உறவுக்கார ஆணுக்குக் கொடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

973 “எந்த முஸ்லிமும் இறை நிராகரிப்பாளனுக்கு வாரிசாக மாட்டான்(அவ்வாறே) இறை நிராகரிப்பாளன் எவனும் முஸ்லிமிற்கு வாரிசாக மாட்டான்.“ என்று நபி(ஸல்) அவர்கள். கூறினார்கள். என உஸாமா இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

974 மகளுக்கு அரைப் பங்கையும், மகனுடைய மகளுக்கு (பேத்தி) ஆறில் ஒரு பங்கையும், மூன்றில் ஒரு பங்கு பூர்த்தியாக்குவதற்காகக் கொடுக்க வேண்டும். இன்னும் அதில் மீதமுள்ளது சகோதரிக்குரியதாகும் என நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்ததாக இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

975 “இரு வேறுபட்ட மதத்தினர் ஒருவருக்கொருவர் வாரிசாக முடியாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

உஸாமா(ரலி) வாயிலாக ஹாம்மிலும், நஸயீயிலும் இந்த ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

976 ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “என்னுடைய பேரன் இறந்து விட்டான். அவனது சொத்தில் எனக்குரிய பங்கு என்ன?“ என்று கேட்டதற்கு, “ஆறிலொரு பங்கு உன்னுடையது“ என்று என்று நபி(ஸல்) அவர் திரும்பிச் சென்ற போது அவரை (மறுபடியும்) அழைத்து, “உனக்கு மற்றுமொரு ஆறிலொரு பங்கு உண்டு“ என்று கூறினார்கள். பின்னர் (அவர் மறுபடியும்) திரும்பிச் சென்றார். நபி(ஸல்) அவர்கள் அவரை (மறுபடியும்) அழைத்து, “இந்த மற்றோர் ஆறிலொரு பங்கு உனக்கு ஆறிலொரு பங்கு உனக்கு அதிகப்படியாக கிடைப்பதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு சைன்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஹஸன் பஸரீ வாயிலாக இம்ரானிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

977 (இறந்தவருக்குத்) தாய் இல்லை எனில் பாட்டிக்கு ஆறிலொரு பங்கை நபி(ஸல்) அவர்கள் (உரிமை) ஆக்கினார்கள் என புரைதரா(ரலி) தம்முடைய தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ.

இது இப்னு குஸைமா மற்றும் இப்னு அல் ஜாரூதில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளது. இப்னு அதீ இதை பலமான ஹதீஸ் என்று கூறியுள்ளார்.

978 “வாரிசு இல்லாதவருக்கு அவரது தாய்மாமன் வாரிசாவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அல்மிக்தாம் இப்னு மஃதீ கருப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா

இது அபூ ஸரஆ அர்ரா எனும் நூலில் ஹஸன் எனும் தரத்திலும், ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹிஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

979 “எவருக்குப் பொறுப்பாளர் இல்லையோ, அவருக்கு அல்லாஹ்வும், அவனது தூதரும் பொறுப்பாளராவர். இன்னும் வாரிசு இல்லாதவருக்கு அவரது மாமன் வாரிசாவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூ உபைதா(ரலி) அவர்களுக்கு உமர்(ரலி) எழுதினார்கள் என, அபூஉமாமா இப்னு ஸஹ்ல்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலும், இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

980 “பிறந்த குழந்தை (அழுது) சத்தம் எழுப்பி விட்டால் அது வாரிசுரிமை பெற்றதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

981 “கொலைகாரனுக்கு (கொலை செய்யப்பட்டவனிடமிருந்து) சொத்துரிமை எதுவும் இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தமது தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். நஸயீ, தாரகுத்னீ

இது இப்னு அப்தில் பர் எனும் நூலில் பலமானது என்றும், நஸயீயில் மஃலூல் எனும் தரத்திலும் இடம் பெற்றுள்ளது. இது மவ்கூஃப் எனும் தரத்திலும் உள்ளது.

982 “தந்தை அல்லது பிள்ளைகள் வீட்டிற்கு எதைக் கொண்டு வந்தாலும் அதில் (வீட்டிலுள்ள) உறவினர் ஒவ்வொருவருக்கும் உரியதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு அல் மதீனீ மற்றும் அப்துல் பர் ஆகிய நூல்களில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

983 “வலா எனும் உரிமையின் தொடர்வு நெருங்கிய உறவினர்களின் தொடர்பைப் போன்றது. அது விற்கப்படவோ, அன்பளிப்பாக அளிக்கப்படவோ கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

முஹம்மத் இப்னு அல் ஹஸன் அபூ ஃசுஃபிடமிருந்து அஷ்ஷாஃபிஈ வழியாக ஹாம்மில் இது பதிவு செய்யப் பட்டுள்ளது. இன்னும் இது இப்னு ஹிப்பானில் ‘ஸஹீஹ்‘ எனும் தரத்திலும், பைஹகீயில் மஃலூல் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

984 “உங்களில் வாரிசுரிமைச் சட்டத்தைப் பற்றி அதிகம் அறிந்தவர் ஜைது இப்னு ஸாபித் அவர்கள் தாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) வாயிலாக அபூ கிலாபா அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மரண சாசனம் (உயில்) GO TO CHAPTER INDEX

985 “எதைப் பற்றியேனும் மரண சாசனம் எழுத விரும்பி, அந்த மரண சாசனம் எழுதப் படாமலேயே இரண்டு இரவுகளைக் கழிப்பது முஸ்லிமான எந்த ஓர் ஆணுக்கும் சரியானதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லீம்

986 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் செல்வம் உள்ளது. எனக்கு வாரிசாக என்னுடைய ஒரே பெண்ணைத் தவிர வேறுயாருமில்லை. எனவே நான் என்னுடைய சொத்தில் மூன்றில் இரண்டு பங்கை தர்மம் செய்து விடட்டுமா?“ என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, அவர்கள் “கூடாது“ என்றார்கள். பின்னர் நான் “அரைப் பங்கை கேட்க அதற்கும் அவர்கள், “கூடாது“ என்றார்கள். பின்னர் நான் “மூன்றில் ஒரு பங்கை தர்மம் செய்து விட்ட்டுமா?“ என்று கேட்டதற்கு, “மூன்றில் ஒரு பகுதி (சரிதான்), (இருப்பினும்) அதுவும் அதிகம் தான். உண்மையில் நீ உன்னுடைய வாரிசுகளை தேவையுள்ள வராகவும், மக்களிடம் யாசிப்பவராகவும் விட்டுச் செல்வதைவிட செல்வந்தர்களாக விட்டுச் செல்வதே சிறந்ததாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என சஅத் இப்னு அபீ வக்காஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

987 ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய தாய் திடீர் என மரணமடைந்து விட்டார். மரண சாசனம் எதுவும் செய்யவில்லை. அவர்(மரண சாசனமாக) ஏதாவது பேசியிருந்தால் தர்மம் செய்திருப் பார் என நான் எண்ணுகிறேன். எனவே, அவர் சார்பாக நான் தர்மம் செய்தால் அவருக்கு (அதற்கான) கூலியுண்டா?“ என்று கேட்டதற்கு “ஆம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

988 “நிச்சயமாக அல்லாஹ் உரிமையுடையவர் ஒவ்வொருக்கும் அவருக்குரிய உரிமையை வழங்கி விட்டான். எனவே, இனி எந்த வாரிசுக்கும் (மற்ற வாரிசை விட அதிகப் படியாக) மரண சாசனம் எதையும் எழுதக் கூடாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ உமாமா அல் பாஹிலி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னுமாஜா.

இது அஹ்மத் மற்றும் திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலும் இப்னு குஸைமா மற்றும் இப்னு அல்ஜாரூதில் பலமானது என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

989 இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக தாரகுத்னியின் அறிவிப்பின் இறுதியில், “வாரிசுகள் நாடினால் தவிர“ எனும் வாசகம் அதிகமாக இடம் பெற்றுள்ளது .இது ஹஸன் எனும் தரத்திலும் உள்ளது.

990 “நீங்கள் மரணிக்கும் போது உங்களது நன்மையை அதிகமாக ஆக்குவதற்காக உங்களது சொத்தின் மூன்றில் ஒரு பகுதியை (தர்மம் செய்யும் உரிமையை) இறைவன் உங்களுக்கு வழங்கியள்ளான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

991 மேற்கண்ட ஹதீஸ் அபூஹு ரைரா(ரலி) வாயிலாக இப்னு மாஜாவிலும் இடம் பெற்றுள்ளது. இவையனைத்தும் ‘ளயீ.ஃப்‘ எனும் தரத்தில் உள்ளன. ஆனாலும் இந்த அறிவிப்புகளில் ஒன்று மற்றொன்றை பலப்படுத்துகின்றது என்றும் கூறியுள்ளனர். அல்லாஹ்வே மிக அறிந்தவன்.

993 “எவரிடத்தில் ஒரு பொருள் (பொறுப்பு) ஆக வைக்கப்படுகிறதோ அதற்கு அவர், பிணை ஏற்க வேண்டியதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தமது தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார்.

இது இப்னு மாஜாவில் ளயீ.ஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - திருமணச் சட்டங்கள்

- திருமணச் சட்டங்கள்
- சமத்துவம் மற்றும் விருப்பம் (தேர்வு)
- பெண்களுடன் உறவு
- மஹர் தொகை
- வலீமா விருந்து
- பங்கீடு
- குல்வு சட்டம்
- ‘தலாக்‘ (விவாகரத்து)
- விவாகாரத்தைத் திரும்ப பெறுதல்
- ஈலா, ளிஹார் மற்றும் அதற்குரிய பரிகாரம்
- ‘லிஆன்‘ சட்டம்
- இத்தா விதவை அனுஷ்டிக்கும் துக்கம், கருப்பைச் சோதனை முதலியன
- பால்குடிச் சட்டம்
- செலவிடுதல்
- பொறுப்பேற்றல்

திருமணச் சட்டங்கள் GO TO CHAPTER INDEX

994 “இளைஞர் கூட்டமே! உங்களில் எவரேனும் திருமணம் செய்து கொள்ளும் தகுதி பெற்றிருந்தால் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில் திருமணம் பார்வையைத் தாழ்த்தக் கூடியதாகவும், வெட்கத் தலத்தைப் பாதுகாப்புதாகவும் உள்ளது. இன்னும் எவர் (தாம்பத்ய வாழ்க்கைக்கான தேவைகளை நிறைவு(செய்ய) சக்தியற்றவராய் இருக்கின்றாரோ அவர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும். ஏனெனில், நோன்பு இச்சையை அடக்கக் கூடியதாக உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார்.

995 “நபி(ஸல்) அவர்கள் இறைவனைப் போற்றிப் புகழ்ந்துவிட்டு (சிறிது நேர உரைக்குப்பின்) “ஆனால், நான் தொழுகிறேன். மேலும் தூங்குகிறேன், மேலும் நோன்பும் நோற்கிறேன். நோன்பு நோற்காமலுமிருக்கிறேன். நான் பெண்களைத் திருமணமும் செய்கிறேன். எவர் தன்னுடைய வழிமுறையைப் புறக்கணிக்கிறாரோ, அவர் என்னைச் சேர்ந்தவரல்லர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என அனஸ் இப்னு மாலிக் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

996 திருமணத்திற்குச் செலவிடுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். திருமணம் செய்யாமலிருப்பதை வன்மையாகத் தடை செய்தார்கள். மேலும், “அதிகம் குழந்தை பெறுகிற அதிக அன்புநிறைந்த பெண்களைத்

திருமணம் செய்து கொள்ளுங்கள். (ஏனெனில்) நிச்சயமாக மறுமை நாளில் நீங்கள் அதிக எண்ணிக்கையிலிருப்பது குறித்து மற்ற நபிமார்களிடம் பெருமையுடன் பேசுவேன். மற்ற (உம்மத்) விட நான் உங்களை அதிகமாகக் காண்பேன்" என்றும் கூறுவார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத்

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

997 ம∴கில் இப்னு யஸார் வாயிலாக அபூதாவூத், நஸயீ மற்றும் இப்னு ஹிப்பானில் இதற்கு சான்றாக ஹதீஸ் உள்ளது.

998 "பெண் நான்கு காரணங்களுக்காகத் திருமணம் செய்யப்படுகிறாள்: 1. அவளது சொத்துக்காக 2. அவளது குலச்சிறப்புக்காக 3. அவளது அழகுக்காக 4. அவளது மார்க்கத்திற்காக உனது இருகரங்களும் மண்ணாகட்டும்! மார்க்கமுடையவளை மணம் புரிந்து வெற்றியடைந்து கொள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரி, முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா மற்றும் நஸயீ

999 எவரேனும் திருமணம் செய்தால் (அவருக்காக) "அல்லாஹ் உனக்கு வளத்தை அளிப்பானாக, இன்னும் அருட்பேற்றை உன் மீது பொழிவானாக! இன்னும் நல்ல விஷயத்தில் உங்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைப்பானாக! என்று துஆ செய்வார்கள் என அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ, இப்னு குஸைமா மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1000 நபி(ஸல்) அவர்கள் எங்களுக்கு (நிக்காஹ்) குத்பாவை இவ்வாறு கற்றுக் கொடுத்தார்கள் "நிச்சயமாக புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! நாம் அவனைப் புகழ்கிறோம். மேலும் அவனிடமே உதவி தேடுகிறோம். இன்னும் அவனிடமே பாவமன்னிப்புக் கோருகிறோம். இன்னும் நமது உள்ளங்களில் தோன்றும் தீய எண்ணங்களைவிட்டும் அவனிடமே பாதுகாவல் தேடுகிறோம். அல்லாஹ் யாரை நேர்வழிப்படுத்தி விட்டானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அல்லாஹ் யாரை வழி கெடுத்து விட்டானோ அவரை நேர்வழிப்படுத்துபவர் யாரும் இல்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை என நான் சாட்சி கூறுகிறேன். இன்னும் முஹம்மத்(ஸல்) அவர்கள் அவனது நல்லடியாரும் தூதரும் ஆவார் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்" என்று கூறிவிட்டு, நபி(ஸல்) அவர்கள் அவனது நல்லடியாரும் தூதரும் ஆவார் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்" என்று கூறிவிட்டு, நபி(ஸல்) அவர்கள் (3:102, 4:1, 4:70 ஆகிய) மூன்று வசனங்களை ஓதுவார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது திர்மிதீ மற்றும் ஹாம்மில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1001 "உங்களில் எவரேனும் (திருமணத்திற்காக) பெண் பேசினால் அவளை மணம் புரிந்து கொள்ளத் தூண்டும் அம்சம் எதையேனும் அவளிடமிருந்து அவரால் பார்க்க முடிந்தால், அவ்வாறே பார்த்துக் கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். இன்னும் இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1002 முகீரா வாயிலாக 1001வது ஹதீஸிற்குச் சான்றாக திர்மிதீ மற்றும் நஸயீயில் (ஹதீஸ்) உள்ளது.

1003 முஹம்மத் இப்னு மஸ்லமா வாயிலாக இப்னு மாஜா மற்றும் இப்னு ஹிப்பானில் இந்த (1001வது) ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

1004 ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய நாடிய ஒருவரிடம், "அவளை நீ பார்த்து விட்டாயா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, அவர் "இல்லை" என்று சொன்னார். (அவரிடம்) "செல்! அவளைப் பார்த்துக் கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1005 "உங்கள் சகோதரர் பெண் பேசும் போது திருமண ஒப்பந்தத்தில் அவர் விட்டு விடாதவரை அல்லது அனுமதியளிக்காதவரை (இடையில் குறுக்கிட்டு) நீங்கள் பெண் பேச வேண்டாம். திருமண ஒப்பந்தம் செய்ய வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1006 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு பெண் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் என்னைத் தங்களுக்கு அர்ப்பணிக்க வந்திருக்கிறேன்" என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள் அவரைப் பார்த்தார்கள், பின்னர் அவரை

மேலும், கீழும் பார்த்தார்கள். பின்னர் தமது தலையைத் தாழ்த்திக் கொண்டார்கள். நபி(ஸல்) அவர்கள் எந்த முடிவும் செய்யவில்லை என்பதைப் பார்த்த அந்தப் பெண் அங்கேயே அமர்ந்து கொண்டார்கள். அப்போது நபித்தோழர்களில் ஒருவர் எழுந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்கு அப்பெண் தேவையில்லையெனில் அவரை எனக்கு மணமுடித்து வையுங்கள்“ என்று கூறினார். (அதற்கு) “உன்னிடம் ஏதாவது இருக்கிறதா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னிடம் எதுவும் இல்லை“ என்று அவர் பதிலளித்தார். (அதற்கு) “நீ உன்னுடைய வீட்டாரிடம் சென்று அங்கு உனக்கு ஏதாவது கிடைக்கிறதா என்று பார்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் சென்றார். பின்னர் திரும்பி வந்து “இல்லை. அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கு எதுவும் கிடைக்கவில்லை“ என்று கூறினார். (அதற்கு) “ஒரு இரும்பு மோதிரமாவது இருக்கிறதா? என்று பார்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் சென்றார். பின்னர் திரும்பி வந்து “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இல்லை! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இரும்பு மோதிரம் இல்லை. ஆனால், என்னிடம் என்னுடைய இந்தக் கீழங்கி உள்ளது. (ஸஹ்ல் தொடர்ந்து கூறினார்). “அவருக்கு மேலாடை இல்லை!“ என்று இதில் அவளுக்குப் பாதியை கொடுத்து விடுகிறேன்“ என்றார். “நீ கீழாடைக்கு என்ன செய்வாய்? நீ உடுத்திக் கொண்டால் அவளுக்கு எதுவும் இல்லாது போய் விடும். இதை அவள் உடுத்திக் கொண்டால் உனக்கு எதுவும் இல்லாது போய்விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர் நீண்ட நேரம் அமர்ந்து விட்டு எழுந்தார். அவர் திரும்பிச் செல்வதைப் பார்த்த நபி(ஸல்) அவர்கள் அவரை அழைத்து வரக் கட்டளையிட்டார்கள். அவர் வந்ததும், “குர்ஆனிலிருந்து உன்னிடம் எது (மனனமாக) உள்ளது?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். “என்னிடம் இன்னின்ன அத்தியாயங்கள் உள்ளன“ என அவர் எண்ணிக் காண்பித்தார். “இவற்றை நீ மனனமாக ஓதுவாயா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் “ஆம்“ என்றார். (அதற்கு) “செல்! குர்ஆனிலிருந்து உன்னிடம் உள்ளவற்றிற்கு பதிலாக அவளை உனக்கு உரியவளாக்கி விட்டேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. மற்றோர் அறிவிப்பில், “திரும்பிச் செல்! அவளை உனக்கு மணமுடித்துக் கொடுத்து விட்டேன். அவளுக்கு குர்ஆனிலிருந்து கற்றுக் கொடு!“ என்று நபி(ஸல்) கூறியதாக உள்ளது. புகாரீயுடைய மற்றோர் அறிவிப்பில் குர்ஆனிலிருந்து உன்னிடம் உள்ளவற்றிற்காக அவளை உனக்குரியவளாக்கி விட்டோம் என்றுள்ளது.

1007 “உனக்கு எது மனனமாகவுள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அவர், “சூரத்துல் பகரா மற்றும் அதற்கு அடுத்த அத்தியாயம்“ என்று கூறினார். “எழு! அவளுக்கு இருபது வசனங்களைக் கற்றுக்கொடு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) வாயிலாக அபூ, தாவூதில் உள்ளது.

1008 “திருமணத்தை அறிவியுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆமிர் இப்னு அப்தில்லாஹ் இப்னு ஸு பைர் தம்முடைய தந்தையின் வாயிலாக அறிவிக்கிறார். அஹ்மத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளது.

1009 “பொறுப்பாளர் (வலி) இல்லாமல் திருமணம் இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ புர்தா இப்னு அபீ மூஸா தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா

இது இப்னு அல் மதீனி, திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளது.

1010 “பொறுப்பாளர் (வலீ) மற்றும் இரண்டு சாட்சிகள் இல்லாமல் திருமணம் இல்லை“என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு சைன் வாயிலாக மர்ஃபூஉ எனும் தரத்தில் அஹ்மத் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1011 எந்தப் பெண் தனது வலீயின் (பொறுப்பாளரின்) அனுமதியின்றி திருமணம் செய்து கொள்கிறாளோ அவளது திருமணம் செல்லாது. அவளது கணவன் இல்லறத்தில் ஈடுபட்டு விட்டால் அவளுடைய மர்மஸ்தானத்தை அவன் ஹலாலாக்கிக் கொண்டதால், அவளுக்கு மஹர் உண்டு. அவர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அப்போது, எவருக்கு வலீ இல்லையோ, அவருக்கு ஆட்சியாளரே வலீயாவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது அபூஹவானா, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1012 “விதவைப் பெண்ணிடம் அவளது கட்டளையைப் பெறாமலும், கன்னிக் பெண்ணிடம் சம்மதம் பெறாமலும்

அவர்களை திருமணம் செய்து வைக்கக் கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவளது சம்மதம் எவ்வாறு? என்று கேட்டதற்கு, "அவள் மௌனமாக இருப்பது" என்று பதில் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1013 "விதவைப் பெண் (தனது திருமணத்தில்) தனது பொறுப்பாளரை (வலீயை விட அதிகம் உரிமை பெற்றவள், மேலும், கன்னிப் பெண்ணிடம் சம்மதம் பெற வேண்டும். அவளுடைய அனுமதி மௌனமாக இருப்பதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில், "விதவைப் பெண்ணுக்கும், வலீ (பொறுப்பாளருக்கும் இடையே எந்தப் அதிகாரமும் இல்லை. இன்னும் அநாதைப் பெண்ணிடம் அவளுடைய அனுமதியைப் பெற வேண்டும்" என்று உள்ளது. அபூதாவூத் நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் என்னும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1014 "எந்தவொரு பெண்ணும் மற்றொரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைக்கக்கூடாது. மேலும் எந்தவொரு பெண்ணும் தானே திருமணம் செய்து கொள்ளக் கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா, தாரகுத்னி. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1015 நபி(ஸல்) அவர்கள் "ஷிகார்" வகைத் திருமணத்தைத் தடை செய்தார்கள் என்று இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். 'உன் மகளை எனக்கு மணமுடித்து வைக்க வேண்டும்' என்னும் நிபந்தனையுடன் ஒருவர் தன் மகளை ஒருவருக்கு மணமுடித்து வைப்பதும் அவர்கள் இருவருமே மஹர் ஏதும் கொடுக்கமாலிருந்து விடுவதும் தான் 'ஷிகார்' ஆகும் என நா∴பிஉ (ரஹ்) அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். புகாரி, முஸ்லிம்

1016 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு கன்னிப் பெண் வந்து, "என்னுடைய தந்தை எனது விருப்பமின்றியே என் திருமணத்தை நடத்தி விட்டார்" என்று கூறினார். அப்போது நபி(ஸல்) அவருக்கு (தேர்வு செய்யும்) உரிமையளித்து விட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூ தாவூத் மற்றும் இப்னு மாஜா. இது முர்ஸல் எனும் தரத்திலுள்ளது.

1017 "எந்தப் பெண்ணை இரண்டு வலீகள் (இரு ஆண்களுக்கு) திருமணம் செய்து வைக்கின்றனரோ, அந்தப் பெண் அவர்களில் முதலாமவருக்கு உரியவளாவாள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹஸன் சமுரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலுள்ளது.

1018 "எந்த அடிமை தனது எஜமானர்கள் அல்லது வீட்டாரிடம் அனுமதி பெறாமல் திருமணம் செய்கிறானோ அவன் விபச்சாரம் புரிபவனாவான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது போன்றே இப்னு ஹிப்பானிலும் உள்ளது.

1019 "ஒரு பெண்ணையும் அவளுடைய அத்தையையும், ஒரு பெண்ணையும் அவளுடைய சிற்றன்னையையும் ஒரு சேர மணமுடிக்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1020 "இஹ்ராம் அணிந்தவர் திருமணம் செய்து கொள்வதும் (பிறருக்கு) திருமணம் செய்து வைப்பதும் கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உஸ்மான்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

மற்றோர் அறிவிப்பில் "(நிக்காஹ்) உரையாற்ற வேண்டாம் என்றும் இப்னு ஹிப்பானில் அவன் தனக்காகவோ, பிறருக்காவோ பெண் பேசவும் கூடாது அவரிடம் பெண் கேட்கவும் கூடாது" என்றும் உள்ளது.

1021 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டிய நிலையில் மைமூனா(ரலி) அவர்களை நிக்காஹ் செய்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1022 நபி(ஸல்) அவர்கள் இஹ்ராம் கட்டாத (ஹலாலான) நிலையில் தான் என்னை மணமுடித்துக் கொண்டார்கள் என்று மைமூனா(ரலி) அவர்கள் கூறினார்கள் என, ஓர் அறிவிப்பு முஸ்லிமில் பதிவாகியள்ளது.

1023 "எதன் வாயிலாக மர்மஸ்தானங்களை நீங்கள் (உங்களுக்கு) அனுமதிக்கப்பட்டதாக்கிக் கொள்கிறீர்களோ அந்த மஹர் தொகை தான் நிபந்தனைகளிலேயே நிறை வேற்றுவதற்கு அதிகத் தகுதி வாய்ந்ததாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1024 'அவ்தாஸ்' யுத்தத்தின் போது மூன்று தினங்களுக்க முத்ஆ-(தற்காலிக திருமணம்) செய்து கொள்ள

நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்தார்கள். பின்னர் அதைத் தடை செய்து விட்டார்கள். என்று ஸலமா இப்னு அல்அக்வஃ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1025 நபி(ஸல்) அவர்கள் 'முத்ஆ' திருமணத்தை கைபர் போர் நடந்த ஆண்டில் தடை செய்தார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1026 பெண்களை 'முத்ஆ' (தற்காலிகமாக) மணம்புரிவதையும், நாட்டுக் கழுதையை உண்பதையும் நபி(ஸல்) அவர்கள் கைபர் போரின் போது தடை செய்தார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லீம், அஹ்மத், நஸயீ

1027 "பெண்களை 'முத்ஆ' திருமணம் புரிவதை நான் உங்களுக்கு ஆகுமானதாக்கி இருந்தேன். இப்போது மறுமை நாள் வரை 'அல்லாஹ அதனைத் தடை செய்து விட்டான். எனவே, எவரிடமேனும் அப்படி எதுவும் இருந்தால் அவர் அவளது வழியில் அவளை விட்டு விடட்டும். அவளுக்குக் கொடுத்ததிலிருந்து எதையும் வாங்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ரபீஃ இப்னு ஸப்ரா(ரலி) அறிவிக்கிறார்கள். முஸ்லிம், அபூதாவூத், நஸயீ, இப்னு மாஜா, அஹ்மத் மற்றும் இப்னு ஹிப்பான்.

1028 மூன்று தலாக் நிறைவேறிய பின் அதைத் திரும்பப் பெறுவதற்காக பெயரளவில் மற்றொருவருடன் திருமணம் செய்பவரையும், திருமணம் செய்து வைக்கப்படுபவரையும், நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள் என, இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1029 அலீ(ரலி) வாயிலாக அபூதாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜாவில் மேற்கண்ட ஹதீஸ் இடம் பெற்றுள்ளது.

1030 "கசையடி கொடுக்கப்பட்ட ஆண் விபச்சாரி தன்னைப் போன்றோருடன் அல்லாது திருமணம் செய்ய மாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1031 ஒருவர் தன்னுடைய மனைவியை மூன்று முறை தலாக் செய்து விட்டார். அவரை மற்றொருவர் மணமுடித்து உடலுறவு, கொள்வதற்கு முன்னரே, தலாக் செய்து விட்டார். பின்னர் அவரை முதல் கணவர் (மறுபடியும்) திருமணம் செய்ய விரும்பினார். இது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. (அதற்கு) "இல்லை. முதலாமவர் அவளிடமிருந்து தேன் சுவைத்தது போன்றே இரண்டாமவர் (தேன்) சுவைக்காதவரை கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

சமத்துவம் மற்றும் விருப்பம் (தேர்வு) GO TO CHAPTER INDEX

1032 "அரபு மக்களில் ஒருவர் மற்றவருக்கு சமமாவார். விடுதலை செய்யப்பட்ட அடிமைகள் ஒருவர் மற்றவருக்குச் சமமாவர் நெசவாளியை அல்லது இரத்தம் குத்தி எடுப்பவரைத் தவிர" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

இது ஹாம்மில் அறிவிப்பாளர் பெயர் இல்லாமல் உள்ளது. அபூஹாதமில் முன்கர் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முஆத் இப்னு ஜபல் வாயிலாக பஸ்ஸாரில் முன்கதீ எனும் தரத்தில் உள்ளது.

1033 மேற்கண்ட ஹதீஸிற்குச் சான்றாக பஸ்ஸாரில் முஆத் இப்னு ஜபல்(ரலி) வாயிலாக முன்கதிஃ எனும் தரத்தில் ஹதீஸ் உள்ளது.

1034 "உஸாமாவை மணம் புரிந்து கொள்" என்று என்னை நபி(ஸல்) அவர்கள் பணித்தார்கள். என ஃபாத்திமா பின்த்து கைஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1035 "பனா பயாளா குலத்தாரே! அபூ ஹிந்திற்கு திருமணம் செய்து வையுங்கள், அவருக்குத் திருமணம் செய்து வையுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் இரத்தம் குத்தி எடுப்பவராக இருந்தார் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கின்றனர்.

இது ஹாம்கி மற்றும் அபூ தாவூதில் நல்ல அறிவிப்பாளர் தொடருடன் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1036 பரீரா(ரலி) விடுதலை செய்யப்பட்டபோது அவருடைய கணவருடன் இருக்க அவருக்கு உரிமை வழங்கப்பட்டது என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் அவரது கணவர் அடிமையாக இருந்தார் என்றும். மற்றோர் அறிவிப்பில் சுதந்திரமானவராக இருந்தார் என்றும் உள்ளது. முதல் கூற்றே பலமானது.

இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக புகாரீயில், “அவர்அடிமையாக இருந்தார்“ என்றுள்ளது.

1037 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இஸ்லாத்தில் இணைந்துவிட்டேன். இரண்டு சகோதரிகள் என் கீழ் (ஒரே நேரத்தில் மனைவியராக) உள்ளனர்?“ என்று நான் கூறியதற்கு “அவர்களில் நீ விரும்பியவனை விவாகரத்துச் செய்து விடு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ளஹ்ஹாக் இப்னு ஃபைரூஜ் அத்தய்லமி தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னு மாஜா.

இது இப்னு ஹிப்பான், பைஹகீ மற்றும் தாரகுத்னியில் ஸஹீஹ் எனும் தரத்திலும், புகாரீயில் மஃலூல் எனும் தரத்திலும் பதிவு செய்யப் பட்டுள்ளது.

1038 கைலான் இப்னு ஸலமா இஸ்லாத்தில் இணைந்தார். அவருக்குப் பன்னிரெண்டு மனைவியர் இருந்தனர். அவர்களும் அவருடன் இஸ்லாத்தில் இணைந்தனர். அவர்களில் (விரும்பிய) நான்குபேரை மட்டும் தேர்வு செய்து கொள்ளுமாறு நபி(ஸல்) அவர்கள் அவருக்குக் கட்டளையிட்டார்கள் என ஸாலிம் தன் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ,

இது ஹாம்கி மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் புகாரீ, அபூஸு ர்ஆ மற்றும் அபூஹாத்தமில் ‘மஃலூல்‘ எனும் தரத்திலும் உள்ளது.

1039 நபி(ஸல்) அவர்கள் தமது மகள் ஸைனபை ஆறு வருடங்களுக்குப் பிறகு (தம் மருமகர்) அபுல் ஆஸ் இப்னு ரபீஉ அவர்களிடம் (அவர்களுடைய) திருமணத்தைப் புதுப்பிக்காமலேயே திருப்பியனுப்பினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ மற்று இப்னு மாஜா

இது அஹ்மத் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1040 நபி(ஸல்) அவர்கள் தமது மகள் ஸைனபை (தம் மருமகர்) அபுல் ஆஸ்பின் ரபீஉ அவர்களிடம் (அவர்களுடைய (திருமணத்தைப் புதுப்பித்து திருப்பியனுப்பினார்கள் என்று அமர் இப்னு ஷு ஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார்.

இப்னு அப்பாஸ் உடைய ஹதீஸில் அறிவிப்பாளர் தொடர் பலமானது. இருப்பினும் அம்ர் இப்னு ஷு ஐபுவின் ஹதீஸின்படியே செயல்பாடு உள்ளது“ என்று திர்மிதீ கூறியுள்ளார்.

1041 ஒரு பெண் இஸ்லாத்தில் இணைந்தார். பின்னர் திருமணம் செய்துகொண்டார். (அதன்பின்னர்) அவளது கணவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இஸ்லாத்தில் இணைந்துவிட்டேன். நான் இஸ்லாத்தில் இணைந்ததை என்னுடைய மனைவியும் அறிந்து கொண்டாள்“ என்று கூறினார். இதைக்கேட்ட நபி(ஸல்) அவர்கள் அவளது இரண்டாவது கணவனிடமிருந்து அவளைப் பிரித்து அவளது முதல் கணவனிடம் திருப்பியனுப்பி விட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் என்றுள்ளது.

1042 பனா கிஃபார் குலத்திலிருந்து ‘ஆலியா‘ எனும் பெண்ணை நபி(ஸல்) அவர்கள் மணம் புரிந்து கொண்டார்கள். அப்பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து தன் ஆடையை நீக்கிய போது அவளது இடுப்பில் (நோயின் காரணமாக) வெண்மையாகக் கண்டவுடன் நபி(ஸல்) அவர்கள், “ உன் வீட்டாரிடம் போய்ச் சேர்“ என்று கூறிவிட்டு அவளுக்கு மஹர் தொகையைக் கொடுக்கும் படி உத்தரவிட்டார்கள் என ஸைத் இப்னு கஅப் இப்னு உஜ்ரா தம் தந்தையின் வாயிலாக அறிவிக்கிறார்.

இதன் அறிவிப்புத் தொடரில் இடம் பெறும் ஜமீல் இப்னு ஸைத் மறதியுடையவர் என்பதும் இன்னும் அதிகமாக கருத்து முரண்பாடுகள் அவரைப்பற்றி உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒருவர் ஒரு பெண்ணை மணம் புரிந்து அவளுடன் உடலுறவு கொண்ட பின் அவள் வெண்குஷ்டம் பிடித்தவளாகவோ, பைத்தியக்காரியாகவோ, ஒரு வியாதிக்காரியாகவோ இருப்பத கணவனுக்குத் தெரியவந்தால், அவளைத் தொட்டு (அனுபவித்து) விட்ட காரணத்தால் மஹர் தொகை அப்பெண்ணுக்கே உரியதாகும். அவள்

வாயிலாக அவரை ஏமாற்றியவர் அவருக்கு அந்த மஹர் தொகையைக் கொடுத்து விட வேண்டும்" என்று உமர் (ரலி) அவர்கள் கூறியதாக சயீத் பின் முஸய்யப் (ரஹ்) அறிவிக்கிறார். சயீத் பின்மன்சூர், மாலிக், இப்னு ஆபீஷைபா. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

தலையில் கட்டியுள்ள பெண்ணை மணந்து கொண்டால் அவளை மணபந்தத்தில் வைதிருக்க பிடிக்காவிட்டால் விவாகரத்து செய்து விட கணவனுக்கு உரிமையுண்டு. அவளுடன் உறவு கொண்டு விட்டிருந்தால் அவன் அவளை அனுபவித்த காரணத்தால் அவளுக்கு மஹர் கொடுத்தாக வேண்டும் என்று சயீத் பின் முஸய்யப் (ரஹ்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடமிருந்தே அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில் அதிகப்படியாக இடம் பெற்றுள்ளது.

சயீத் (ரஹ்) அவர்கள் அலீ (ரலி) அவர்களிடமிருந்து இதே போன்று அறிவித்துள்ளார்கள்.

உமர் (ரலி) அவர்கள் ஆண்மையற்றவர் ஒருவரின் விஷயத்தில் அவனுக்கு ஓராண்டுக் காலம் தவணை வழங்கப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

பெண்களுடன் உறவு GO TO CHAPTER INDEX

1043 "எவன் பெண்ணின் (தன்னுடைய மனைவியின்) பின் துவாரத்தில் உறவு கொள்கிறானோ அவன் சபிக்கப்பட்டவனாவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ,

இங்கு நஸயீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1044 "எவன், ஓர் ஆண் அல்லது பெண்ணுடன் பின் துவாரத்தில் உறவு கொண்டானோ, அவனை அல்லாஹ் (மறுமையில்) ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ, நஸயீ, இப்னு ஹிப்பான்

இது மவ்கூ∴ப் எனும் தரத்திலுள்ளது.

1045 எவர் அல்லாஹ்வையும், இறுதி நாளையும், நம்புகிறாரோ அவர் தன்னுடைய அண்டைவீட்டாரை நோவினை செய்ய வேண்டாம். இன்னும் நீங்கள் பெண்களுடன் நல்ல விதமாக நடந்து கொள்ளுங்கள். ஏனெனில், அவர்கள் விலா எலும்பால் படைக்கப் பட்டுள்ளார்கள். எலும்புகளிலேயே விலா எலும்பின் மேல் பகுதி தான் வளைவானது. அதை நீ நேராக்க நினைத்தால், உடைத்து விடுவாய். அதை நீ அப்படியே விட்டுவிட்டால் அது எப்போதும் வளைந்தே இருந்துவிடும். நீங்கள் பெண்களுடன் நன்றாக நடந்து கொள்ளுங்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

இங்கு புகாரீயின் வாசம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமில், "நீ பெண்ணிடமிருந்து பலன் பெற்றால், அவளது கோணல் குணத்துடனே நீ பலன் பெறுவாய். அவளை உடைத்துவிடுவாய். அவளை உடைப்பதென்பது அவளை விவாகரத்து செய்வது ஆகும்" என்று உள்ளது.

1046 ஒரு யுத்தத்தில் நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். நாங்கள் மதீனா வந்த போது நகரினுள் நுழைய நாடினோம். அப்போது "நில்லுங்கள். இரவில் நுழையுங்கள் - அதாவது இஷா நேரம் - ஏனெனில், (பயணிகளின்) மனைவியர் தலைசீவி அழுக்குகளைப் போக்கித் தயாராகிக் கொள்ளட்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபர் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

புகாரீயின் மற்றொரு அறிவிப்பிங்ல "உங்களில் எவரேனும் நீண்ட பயணம் சென்றிருந்தால், இரவில் திடீரென வீட்டிற்கு வரவேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உள்ளது.

1047 "எவன் (தன்னுடைய மனைவியிடம்) சென்று, அவளும் அவனிடம் வந்து (உறவுகொண்டு) பின்னர் அவளுடைய ரகசியத்தை வெளிப்படுத்துகிறானோ, அவன்தான் மறுமைநாளில் அல்லாஹ்விடம் மக்களில் மோசமானவனாக இருப்பான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ (ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1048 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மனைவிக்கு எங்கள் மீது உள்ள உரிமை என்ன?" என்று நான் கேட்டேன். "நீ உண்ணும்போது அவளையும் உண்ணச் செய்! நீ உடுத்தும் போது அவளையும் உடுத்தச் செய்! அவளது முகத்தில் அடிக்காதே! இன்னும் முகத்தில் அடிக்காதே! இன்னும் அவளைத் (தீய வார்த்தைகளால்)

திட்டாதே! அவளை வீட்டில்லாது (வெளியே) கண்டிக்காதே!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹக்கீம் இப்னு முஆவியா தன் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ மற்றும் இப்னு மாஜா.

இது புகாரீயில் முஅல்லக் ஆகவும் இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்திலும் உள்ளது.

1049 மனிதன் தன்னுடைய மனைவியிடம் அவளது பின்புறமாக முன் துவாரத்தில் உறவு கொண்டால் குழந்தை ஊனமாகப் பிறக்கும் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். அப்போது "பெண்கள் உங்களது விளைநிலமாவர். அதில் நீங்கள் விரும்பியவாறு செல்லுங்கள்" என்னும் இறைவசனம் அறிவிக்கப்பட்டது என்று ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் (ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்.

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1050 உங்களில் ஒருவர் தன் மனைவியுடன் உறவு(கொள்வதற்கு) நெருங்கி, "அல்லாஹ்வின் பெயரால், (என்று தொடங்கி) "இரட்சகனே! எங்களை ஷைத்தானிடமிருந்து தூரமாக்குவாயாக! இன்னும் நீ எங்களுக்கு அளிப்பதிலிருந்து ஷைத்தானைத் தூரமாக்குவாயாக" என்று கூறிவிட்டால், (அதற்குப் பின்பு) அவர்கள் இருவருக்கும் குழந்தை பிறக்குமாயின் அதை ஒருபோதும் ஷைத்தான் நெருங்க மாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1051 "ஒருவன் தன்னுடைய மனைவியை படுக்கைக்கு அழைத்து அவள் மறுத்துவிட (அவளது) கணவன் கோபமான நிலையில் இரவைக் கழித்தால் விடியும் வரை வானவர்கள் அவளைச் சபிக்கிறார்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயில் வாசகம் இடம் பெற்றுள்ளது.

முஸ்லிமில், "அவளது கணவன் அவளைப் பற்றி மகிழ்ச்சியடையும் வரை வானத்தில் இருப்பவன் அவள் மீது கோபமாக இருப்பான்" என்று உள்ளது.

1052 சவுரி முடி வைத்து விடும் பெண்களையும், சவுரி முடி வைத்துக கொள்ளும் பெண்களையும், பச்சை குத்தும் பெண்களையும், பச்சை குத்திக் கொள்ளும் பெண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1053 நபி(ஸல்) அவர்கள் மக்கள் சிலரிடையே இருந்த போது நான் அவர்களிடம் சென்றேன் அப்போது அவர்கள், "கீலா செய்வதை தடுத்துவிட நான் எண்ணினேன். ஆனால் ரோமர்களையும், பாரசீகர்களையும் பார்க்கும் போது 'கீலா' செய்வதை தடுத்துவிட நான் எண்ணினேன். ஆனால் ரோமர்களையும், பாரசீகர்களையும் பார்க்கும் போது 'கீலா' செய்வதால் அவர்களது பிள்ளைகளுக்கு எவ்வித தீங்கும் ஏற்பட வில்லை" என்று கூறினார்கள். பின்னர் மக்கள் அஸ்ல் செய்வதைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்டனர். அதற்கு, 'அது மறைமுகமாக உயிருடன் புதைப்பதாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என ஜு தாமா பின்த்து வஹப்(ரலி) அறிவிக்கிறார்.

1054 ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் அடிமைப் பெண் ஒருத்தி இருக்கிறாள். அவள் கர்ப்பமாவதை நான் விரும்பாத காரணத்தால் அவளிடம் நான் 'அஸல்' செய்கிறேன். மற்ற ஆண்கள் விரும்புவதையே நானும் விரும்புகிறேன். ஆனால், யூதர்கள், 'அஸ்ல் செய்வதை உயிருடன் புதைப்பதைப் போன்றது தான்' என்று கூறுகின்றனர்" என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "யூதர்கள் பொய்யுரைத்தார்கள். (ஏனெனில்) அல்லாஹ் அதை (குழந்தையை) படைக்க நாடிவிட்டால், உம்மால் அதை மாற்றியமைக்க முடியாது" என்று கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ஸல்) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இங்கு அபூ தாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது. நஸயீ மற்றும் தஹாவீயிலும் உள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1055 நாங்கள் நபி(ஸல்) அவர்களது காலத்தில் குர்ஆன் அருளப்பட்டுக் கொண்டிருந்த சூழ்நிலையில் 'அஸ்ல்' செய்திருக்கிறோம். இது தடை செய்யப்பட வேண்டியதாக இருந்திருப்பின் அதைச் செய்யக் கூடாது என்று குர்ஆன் எங்களுக்குத் தடை விதித்திருக்கும் என ஜாபிர்(ரலி) கூறினார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பின்படி இச்செய்தி நபி(ஸல்) அவர்களுக்கு எட்டியும், அவர்கள் இதைத் தடைசெய்யவில்லை என்று உள்ளது.

1056 நபி(ஸல்) அவர்கள் ஒரே குளியலுடன் தமது மனைவிமார்களிடம் வலம் வருவார்கள் (உறவு கொள்வார்கள்) என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

மஹர் தொகை GO TO CHAPTER INDEX

1057 நபி(ஸல்) அவர்கள் ஸஃபியா(ரலி) அவர்களை அடிமைத் தளையிலிருந்து விடுவித்து அந்த விடுதலையையே அவருக்கு மஹராகவும் அறிவித்தார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1058 "நபி(ஸல்) அவர்கள் கொடுத்த மஹர் அளவு என்ன? என நான் ஆயிஷா(ரலி) அவர்களிடம் கேட்டதற்கு, "அவர்களது மனைவியருக்கு அவர்கள் கொடுத்த மஹர் தொகை பன்னிரெண்டு ஊக்கியா மற்றும் ஒரு 'நஷ்' ஆக இருந்தது" என்று கூறிவிட்டு, "நஷ்" என்றால் என்ன என்பதை அறிவீரா?" என்று கேட்டார்கள். நான் "இல்லை" என்று கூறினேன். அதற்கு அவர்கள், "அது அரை ஊக்கியா ஆகும். அது (மொத்தம்) ஐநூறு திர்ஹம் ஆகும். இது தான் நபி(ஸல்) அவர்கள் தங்கள் மனைவியருக்கு (அளித்த) மஹராக இருந்தது" என்று கூறினார்கள் என அபூ ஸலமா இப்னு அப்திர் ரஹ்மான்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1059 அலீ(ரலி) அவர்கள் ஃபாத்திமா(ரலி) அவர்களைத் திருமணம் செய்த போது, "அவளுக்கு (மஹராக) ஏதேனும் கொடு!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதற்கு, "என்னிடம் எதுவுமில்லை" என்று அலீ கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "ஜு தமிய்யாவால் தயாரிக்கப்பட்ட உன்னுடைய கேடயம் எங்கே?" என்று கேட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1060 "திருமணத்திற்கு முன் (நிர்ணயிக்கப்படும்) மஹர் அல்லது (மணப்பெண்ணுக்கோ அல்லது மற்றவருக்கோ வழங்குவதாக கூறப்படும்) அன்பளிப்பு அல்லது வாக்குறுதி ஆகியவை மணப் பெண்ணுக்கே உரியதாகும். திருமணத்திற்குப் பின் (வழங்கப்படும் அன்பளிப்பு மற்றும் வாக்குறுதி) யாருக்கு வழங்கப்படுகிறதோ அது அவரையே சாரும். மேலும், மனிதன் தன் மகள் அல்லது சகோதரி விஷயத்தில் சங்கை செய்யப்படுவதற்கு மிகவும் உரித்தானவன் ஆவான்", என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷுஐப் தம் தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, மற்றும் இப்னு மாஜா.

1061 ஒருவர் பெண்ணை மணமுடித்து அவளுக்கென மஹர் நிர்ணயம் செய்யாமலும், இறந்துபோன ஒருவரைப் பற்றி இப்னு மஸ்வூத்(ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, "மற்ற பெண்களுக்குரியது போன்ற மஹர் அவருக்கு உண்டு. அது குறைவாகவோ, கூடுதலாகவோ இல்லை. மேலும், அவள் மீது (இத்தா) கடமையாகும். இன்னும் அவளுக்குச் சொத்துரிமையும் உண்டு" என்று பதிலளித்தார்கள். அப்போது மஃகல் இப்னு ஸினான் அல் அஷ்ஜயீ(ரலி) அவர்கள் எழுந்து, "எங்கள் குலத்தைச் சேர்ந்த பர்வஃ பின்த்து வாஷிக் எனும் பெண்ணிற்கு நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்து போன்றே நீங்கள் தீர்ப்பளித்துள்ளீர்கள்" என்று கூறினார். (இதைக் கேட்ட) இப்னு மஸ்வூத்(ரலி) மகிழ்ச்சியுற்றார்கள் என அல் கமா(ரஹ்) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீயில் 'ஸஹீஹ்' எனும் தரத்திலும் மற்றொரு குழுவிடத்தில் ஹஸன் எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1062 "எவரொருவர் மஹராக மாவு அல்லது பேரீச்சம்பழம் கொடுக்கின்றாரோ, அதுவும் அவருக்கு (பெண்ணை) அனுமதிக்கப்பட்டவளாக்கி விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது மவ்கூஃப் எனும் தரத்திலுள்ளதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

1063 காலணிகளுக்குப் பதிலாக ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள நபி(ஸல்) அவர்கள் அனுமதியளித்துள்ளார்கள் என, அப்துல்லாஹ் இப்னு ஆமிர் இப்னு ரபீஆ தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

1064 ஓர் இரும்பு மோதிரத்திற்குப் பதிலாக ஒருவருக்கு ஒரு பெண்ணை நபி(ஸல்) அவர்கள் திருமணம் செய்து வைத்தார்கள் என ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். (இது நீண்ட ஹதீஸின் சுருக்கம்) ஹாம்கி

"பத்து திர்ஹமிற்குக் குறைவாக மஹர் இருக்கக்கூடாது" என்று அலீ(ரலி) கூறினார்.

இது தாரகுதனீயில் மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1065 "சுலபமாக இருக்கக் கூடிய மஹரே சிறந்தது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உக்பா இப்னு ஆமீர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1066 அம்ரா பின்த்து ஜவ்ன் நபி(ஸல்) அவர்களிடம் பாதுகாப்புத் தேடினார். அவர் நபி(ஸல்) அவர்களிடம் கொண்டுவரப்பட்ட போது, அதாவது: அவர் நபி(ஸல்) அவர்களைத் திருமணம் செய்தபோது, "நீ சரியான இடத்தில் பாதுகாப்புத் தேடிக் கொண்டாய்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவரை தலாக் (விவாகரத்துச்) செய்து மூன்று துணிகளை அவருக்கு உதவிப் பொருளாகக் கொடுக்குமாறு உஸாமாவிடம் கட்டளையிட்டார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா

இதன் அறிவிப்புத் தொடரில் ஒருவர் விடுபட்டுள்ளார்.

1067 அபூ உஸைத் அஸ்ஸாஇதி வாயிலாக ஸஹீஹில் இதன் முழுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வலீமா விருந்து GO TO CHAPTER INDEX

1068 அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள் மீது மஞ்சள் நிறத்தைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், "இது என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு (பேரீச்சம்பழக்) கொட்டையளவு தங்கத்திற்குப் பகரமாக நான் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன்" என்று கூறினார். "அல்லாஹ் உனக்கு அருள்வளம் அளிப்பானாக! நீ ஓர் ஆட்டையேனும் வலீமா விருந்தாகக் கொடு! என்று நபி(ஸல்) அவாகள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லீம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1069 "உங்களில் எவரேனும் வலீமா விருந்திற்கு அழைக்கப்பட்டால், அதற்கு அவர் செல்லட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், "உங்கள் சகோதரன் உங்களை விருந்திற்கு அழைத்தால் நீங்கள் பதிலளியுங்கள் (செல்லுங்கள்) அது வலீமா விருந்தாகவோ அல்லது அது போன்ற மற்ற விருந்தாகவோ இருந்தாலும் (சரி)" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உள்ளது.

1070 "வருபவர்களைத் தடுத்தும், விருப்பமற்றவர்களை அழைத்தும் நடத்துகின்ற வலீமா விருந்தே (உணவுகளில்) தீய உணவு. இன்னும் எவர் விருந்தழைப்பைப் புறக்கணிக்கின்றாரோ அவர் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவராவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1071 "உங்களில் எவரேனும் விருந்திற்கு அழைக்கப்பட்டால் அவர் பதில் அளிக்கட்டும்! (செல்லவும்). அவர் நோன்பாளியாக இருந்தால் (அழைத்தவருக்காக) பிரார்த்திக்கட்டும். அவர் நோன்பில்லாதவராக இருந்தால் (சென்று) உணவு உண்ணட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1072 ஜாபிர்(ரலி) வாயிலாக முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், "அவர் (கடமையல்லாத நோன்பிருப்பவர்) விரும்பினால் சாப்பிடட்டும்' அல்லது விட்டு விடட்டும்" என்று உள்ளது.

1073 "வலீமா உணவு முதல் நாளில் கடமையாகும், இரண்டாவது நாள் உணவு சுன்னத்தாகும் மூன்றாவது நாள் உணவு பகட்டாகும். எவன் பகட்டு காட்டுகிறானோ அவனுடைய குறைகளை அல்லாஹ் பம்ரங்கப்படுத்துகிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது கரீப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் சரியானவர்கள்.

1074 மேற்கண்ட ஹதீஸிஹ்குச் சான்றாக இப்னு மாஜாவில் அனஸ்(ரலி) வாயிலாக ஒரு ஹதீஸ் பதிவாகியள்ளது.

1075 நபி(ஸல்) அவர்கள் (திருமணம் செய்த போது) தங்கள் மனைவியருக்காக இரண்டு 'முத்' கோதுமையை 'வலீமா' விருந்தாக கொடுத்தார்கள் என ஸஃபிய்யா பின்த்து ஷைபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1076 கைபருக்கும், மதீனாவிற்கும் இடையில் நபி(ஸல்) அவர்கள் மூன்று இரவுகள் தங்கினார்கள். அப்போது ஸஃபிய்யா(ரலி) அவர்களைத் திருமணம் செய்திருந்த காரணத்தால் அவர்களுக்காக கூடாரம் அமைக்கப்பட்டது.

அப்போது நான் முஸ்லிம்களை வலீமா விருந்திற்கு அழைத்தேன். அ(ந்த விருந்)தில், ரொட்டியோ, கறியோ இல்லை. நபி(ஸல்) அவர்களது கட்டளைப்படி போர்வைகள் விரிக்கப்பட்டன. அவற்றின் மீது பேரீச்சம்பழம், பாலாடைக் கட்டி மற்றும் நெய் (விருந்துணவாக) வைக்கப்பட்டது என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1077 “இரண்டு பேர் ஒன்றாக (ஒரே நேரத்தில்) விருந்திற்கு அழைத்தால் உன்னுடைய வீட்டிற்கு நெருக்கமானவரின் அழைப்பை நீ ஏற்றுக் கொள்! (இருப்பினும்) அவ்விருவரில் எவர் முந்திக் கொள்கிறாரோ, அவரின் அழைப்பை ஏற்றுக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என நபித் தோழர்களில் ஒருவர் அறிவிக்கிறார். அபூதாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1078 “நான் (எதன் மீதும்) சாய்ந்து கொண்டு சாப்பிடுவதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜு ஹைஃபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1079 “சிறுவனே! நீ அல்லாஹ்வின் பெயர் கூறி உன் வலக்கரத்தால் சாப்பிடு! மேலும் உனக்கு முன்பாக உள்ளதிலிருந்து சாப்பிடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள் என உமா இப்னு அபீ ஸலமா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1080 நபி(ஸல்) அவர்களுக்கு ஒரு கோப்பையில், குழம்பில் ஊற வைக்கப்பட்ட ரொட்டி கொடுக்கப்பட்டது. அப்போது அவர்கள் “(தட்டின்) ஓரங்களிலிருந்து உண்ணுங்கள். நடுவிலிருந்து உண்ணாதீர்கள். ஏனெனில், அதன் நடுவில் அருள்வளம் (பரக்கத்) வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது“ என்று கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். நூல்: அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

இங்கு நஸயீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1081 நபி(ஸல்) அவர்கள் எப்போதும் உணவைக் குறை கூறியதில்லை. அவர்கள் ஒன்றை விரும்பினால், அதைப் புசிப்பார்கள். அவர்கள் அதை வெறுத்தால், அதை விட்டு விடுவார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1082 “இடக் கரத்தால் உண்ணாதீர்கள். ஏனெனில், ஷைத்தான் இடக் கரத்தால் உண்ணுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1083 “உங்களில் எவரேனும் பருமினால் அவர் அந்தப் பாத்திரத்தில் மூச்சு விட வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூகதாதா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1084 இப்னு அப்பாஸ் வாயிலாக அபூதாவூதில் மேற்கண்ட ஹதீஸ் போன்றே இடம் பெற்றுள்ளது. அதில், “அதனுள் (பாத்திரத்தினுள்) ஊத வேண்டாம்“ என்று உள்ளது. மேலும், இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் இடம் பெற்றுள்ளது.

பங்கீடு GO TO CHAPTER INDEX

1085 நபி(ஸல்) அவர்கள் தங்கள் மனைவியருக்கு மத்தியில் (தம்மிடம் உள்ளதைப்) பங்கிடுபவர்களாகவும், நீதியுடன் நடப்பவர்களாகவும் இருந்தார்கள். இன்னும் அவர்கள் “இரட்சகனே! இது நான் கட்டுப்பாடாக இருப்பதால் செய்யப்படும் பங்கீடாகும். என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத, உன்னுடைய கட்டுப்பாட்டில் உள்ளதைக் கொண்டு என்னை இழிவுபடுத்தி விடாதே!“ என்று கூறுபவர்களாகவும் இருந்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், தரம் மேலோங்கியள்ளதாக திர்மிதீ குறிப்பிடுகிறார்.

1086 “ஒருவருக்கு இரு மனைவியர் இருந்து, அவர்களிடருவரில் ஒரு மனைவியின் பக்கம் அவர் அதிகம் சாய்ந்து விட்டால், மறுமை நாளில் அவர் தனது ஒரு பக்க தோள்புஜம் இறங்கியவராக வருவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது ‘ஸஹீஹ்‘ எனும் தரத்தில் இடம் பெற்றுள்ளது.

1087 எவரொருவர் (மனைவி இருக்கும் நிலையில்) கன்னிப் பெண்ணை மணக்கிறாரோ, அவர் அவளுடன் ஏழு இரவுகள் தங்கி இருக்கவேண்டும். பின்னரே (இரவுகளைப்) பங்கீடு செய்ய வேண்டும். எவர் கன்னி கழிந்த

(விதவை அல்லது கைவிடப்பட்ட) பெண்ணைத் திருமணம் செய்கிறாரோ, அவர் அவளுடன் மூன்று இரவுகள் தங்கிய பின்னரே இரவுகளைப் பங்கீடு செய்ய வேண்டும் என்பது சுன்னத்தாகும் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரியின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1088 நபி(ஸல்) அவர்கள் உம்மு ஸலமா(ரழி) அவர்களைத் திருமணம் செய்த போது அவருடன் மூன்று இரவுகள் தங்கிவிட்டு, உன்னை உன் கணவர் (நான்) லேசாகக் கருதவில்லை. நீ விரும்பினால் நான் உன்னுடன் ஒரு வாரம் தங்குவேன். உன்னிடம் ஒரு வாரம் தங்கினால், என்னுடைய மற்ற மனைவிகளிடமும் ஒரு வாரம் தங்க வேண்டியது வரும்" என்று கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி). அவர்களே அறிவிக்கிறார். முஸ்லிம்

1089 ஸவ்தா பின்த் ஸம்ஆ (ரலி) தனது ஓர் இரவை ஆயிஷா(ரலி) அவர்களுக்கு (அன்பளிப்பாக) அளித்து விட்டதால், நபி(ஸல்) அவர்கள் ஆயிஷா(ரலி) அவர்களது நாளையும் ஸவ்தா(ரலி அவர்களது நாளையும் ஆயிஷா(ரலி) அவர்களுக்கே பங்கிட்டார்கள் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1090 "என்னுடைய சகோதரியின் மகனே! நபி(ஸல்) அவர்கள் (தம் மனைவிமார்களான) எங்களிடம் தங்கும் நாட்களில் ஒருவரை விட மற்றொருவருக்கு அதிகப் பங்கு அளிக்க மாட்டார்கள். பங்கீட்டில் ஏதாவது ஒரு நாள் மீதமாம் விட்டால், அவர்கள் பெரும்பாலும் ஒவ்வொரு நாளிலும் தங்களது மனைவியர் எல்லாருடைய வீட்டிற்கும் வந்து உடலுறவு கொள்ளாமல், அனைவரோடும் நெருக்கமாக உறவாடுவார்கள். இறுதியில் அந்த நாள் யாருடையதோ அவரது இல்லத்தை அடைந்து அவரிடம் இரவைக் கழிப்பார்கள்" என ஆயிஷா(ரலி) கூறினார் என உர்வா(ரஹ்) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இங்கு அபூதாவூதில் வாசகம் இடம் பெற்றுள்ளது. மற்றும் இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1091 நபி(ஸல்) அவர்கள் அஸர் தொழுதுவிட்டால், தமது மனைவியர் அனைவரிடமும் சென்று அவர்களுடன் நெருக்கமாகப் பழகுவார்கள் என, ஆயிஷா(ரலி) வாயிலாக முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது. (ஹதீஸ் சுருக்கம்)

1092 நபி(ஸல்) அவர்கள் தமது இறப்புக்கு முன்பாக நோய் வாய்ப்பட்டிருந்த போது எனது இல்லத்தில் தங்க விரும்பி, "நாளை நான் எங்கு தங்குவது?" என்று அடிக்கடி புரிந்து கொண்ட அவர்களது மற்ற மனைவியர் நபி(ஸல்) அவர்களுக்க அவர்கள் விரும்பிய இடத்தில் தங்கிக் கொள்ள அனுமதியளித்தார்கள். எனவே, அவர்கள் எனது இல்லத்தில் தங்கினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1093 நபி(ஸல்) அவர்கள் பயணம் மேற்கொள்ள விரும்பினால், தமது மனைவியருக்கிடையில் சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். யாருடைய பெயர் அப்போது வருகிறதோ, அவரைத் தம்முடன் அழைத்துச் செல்வார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1094 "அடிமையை அடிப்பது போன்று உங்கள் மனைவியை எவரும் அடிக்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸம்ஆ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

குல்வு சட்டம் GO TO CHAPTER INDEX

1095 ஸாபித் இப்னு கைஸ்(ரலி) அவர்களது மனைவி நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஸாபித் இப்னு கைஸ் அவர்களை அவர்களது ஒழுக்கத்திலோ, மார்க்கத்திலோ நான் குறை ஏதும் கூறவில்லை. ஆனால், இஸ்லாத்தில் இருந்து கொண்டு இறை நிராகரிப்பை (இறைவனுக்கு மாறு செய்வதை) வெறுக்கிறேன்" என்று கூறினார். அதற்கு, "அப்படியானால் (அவர் மஹராக உனக்களித்த) அவருடைய தோட்டத்தை அவரிடம் திருமபக் கொடுக்கிறாயா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் "கொடுக்கிறேன்" என்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள் (ஸாபித் இப்னு கைஸிடம்) "உன்னுடைய தோட்டத்தைப் பெற்றுக் கொண்டு இவரை ஒட்டு மொத்தமாக விட்டுவிடு!" என்று கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

மற்றோர் அறிவிப்பின்படி "அவரை தலாக் விவகாரத்துச் செய்யுமாறு அவரிடம் கட்டளையிட்டார்கள்"என்று வாசகம் உள்ளது.

1096 ஸாபித் இப்னு கைஸ்(ரலி) அவர்களது மனைவி அவரிடமிருந்து குல்வு (விவாகரத்துக் கேட்டார். எனவே,

நபி(ஸல்) அவர்கள் அவருக்கு ஒரு மாதவிடாய் காலத்தை 'இத்தா' என நிர்ணயித்தார்கள் என்று ஹஸன் எனும் தரத்தில் அபூதாவூத் மற்றும் திர்மிதீயில் உள்ளது.

1097 மற்றோர் அறிவிப்பில், "ஸாபித் இப்னு கைஸ் அருவருப்பான தோற்றமுடையவராக இருந்தார். அதனால் அவரது மனைவி, "அல்லாஹ்வின் அச்சம் எனக்கு இல்லை என்றால், அவர் என்னுடன் உறவு கொண்ட போது அவருடைய முகத்தில் நான் துப்பி இருப்பேன்" என்று கூறினார் என அம்ர் இப்னு ஷுஐபு தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். இப்னுமாஜா

1098 "இது தான் இஸ்லாத்தின் முதல் 'குல்வு'வாக இருந்தது என, ஸஹ்ல் இப்னு அபீஹஸ்மாஹ்(ரலி) வாயிலாக அஹ்மதில் இடம் பெற்றுள்ளது.

'தலாக்' (விவாகரத்து) GO TO CHAPTER INDEX

1099 "அனுமதிக்கப்பட்ட விஷயங்களிலேயே 'தலாக்' தான் அல்லாஹ்வுக்கு மிகவும் கோபமூட்டக் கூடியது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், இப்னு மாஜா

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் முர்ஸல் எனும் தரம் மேலோங்கியள்ளதாக அபூஹாதிம் குறிப்பிட்டுள்ளார்.

1100 நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் இப்னு உமர்(ரலி) அவர்கள் தமது மனைவியை அவர் மாதவிலக்காக இருக்கும் நிலையில் விவாகரத்துச் செய்துவிட்டார். இதைப்பற்றி உமர்(ரலி) அவர்கள், நபி(ஸல்) அவர்களிடம் கேட்ட போது, "அவரை திருப்பியழைத்துக் கொள்ளுமாறு அவருக்கு (உன் மகனுக்கு) கட்டளையிடுங்கள். பின்னர் அவள் தூய்மையாகும் வரை அவளைத் தன்னிடம் நிறுத்திக் கொள்ள வேண்டும். பின்னர் அவர் விரும்பினால் வைத்துக் கொள்ளட்டும் அல்லது அல்லது அவர் விரும்பினால், தொடாமலேயே விவாகரத்து செய்யட்டும். பெண்களை விவாகரத்து செய்வதற்கு இந்தக் கால வரம்பு அல்லாஹ் இட்ட கட்டளையாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1101 முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், "அவளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு கட்டளையிடு! பின்னர் அவள் தூய்மையாயிருக்கும் நிலையிலோ, கர்ப்பமாக இருக்கும் நிலையிலோ, அவளை அவர் விவாகரத்து செய்யட்டும்" என்று உள்ளது.

1102 புகாரீயுடைய மற்றோர் அறிவிப்பின்படி, "இது ஒரு தலாக்காக' கணக்கிடப்பட்டது" என்று உள்ளது.

1103 முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில், இடம் பெற்றுள்ளதாவது: (தம்மிடம் தலாக் குறித்து கேள்வி கேட்டவர் ஒருவருக்கு பதிலளித்த போது) இப்னு உமர்(ரலி) அவர்கள், "நீ அவளை ஒன்று அல்லது இரண்டு முறை தலாக் செய்திருந்தால் (நான் அவ்விதம் ஒருமுறை என் மனைவியை தலாக் செய்த போது) நபி(ஸல்) அவர்கள் நான் அவளைத் திரும்ப அழைத்துக் கொண்டு, மற்றொரு மாதவிடாய்க் காலம் வரும் வரை அப்படியே அவளை வைத்திருந்து: அதிலிருந்து அவள் தூய்மையடையும் வரை காத்திருந்துவிட்டு பிறகு அவளுடன் உறவு கொள்ளும் முன்பே சொல்லி விடு" என்று எனக்குக் கட்டளையிட்டார்கள். (அவ்வாறே நீயும் செய்.) நீ அவளை (ஒரே சமயத்தில்) மூன்று தலாக் சொல்லி விட்டால், உன் மனைவியை தலாக் சொல்ல உன் இறைவன் கட்டளையிட்ட வழிமுறையைக் கைவிட்டு அவனுக்கு நீ மாறு செய்தவனாய்" என்று சொன்னார்கள்.

1104 அவளை என்னிடம் நபி(ஸல்) அவர்கள் திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்த தலாக்கை அவர்கள் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. மேலும் "அவள் தூய்மை அடைந்து விட்டால், தலாக் செய்து கொள்ளட்டும்! அல்லது வைத்துக் கொள்ளட்டும்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) கூறினார் என்று உள்ளது.

1105 நபி(ஸல்) அவர்கள் மற்றும் அபூபக்ர்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும், இன்னும் உமர்(ரலி) அவர்களின் ஆரம்ப இரண்டு வருட ஆட்சிக் காலத்திலும் மூன்று தலாக் (சொல்வது) ஒன்றாகவே கருதப்பட்டது. பின்னர் உமர்(ரலி) அவர்கள், "எதில் தாமதப்படுத்துவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதோ, அதில் மக்கள் அவசரப்படுகின்றனர். எனவே இதை (ஒரே சமயத்தில் விடப்படும் மூன்று தலாக்கை) அவர்கள் மீது செல்லுபடியாக்கினால், அதுவே சரியானதாக இருக்கும்" என்று கூறி அதை செல்லுபடியாக்கினார் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1106 ஒருவர் தன்னுடைய மனைவிக்கு மூன்று தலாக்கை ஒருசேரக் கூறிவிட்டார் என்ற செய்தி நபி(ஸல்)

அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது. (உடனே) அவர்கள் கோபமாக எழுந்து, "நான் உங்களுக்கு மத்தியில் இருக்கும் பொழுதே, அவர் அல்லாஹ்வுடைய சட்டத்தில் விளையாடுகிறாரா?" என்று கூறினார்கள். ஒரு மனிதர் எழுந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவரை நான் கொன்று விடட்டுமா?" என்று கேட்டார் என மஹ்மூது இப்னு லபீத்(ரலி) அறிவிக்கிறார். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். நஸயீ

1107 உம்முருகானவை அபூருகானா விவாகரத்துச் செய்துவிட்டார். அவரிடத்தில், "உன்னுடைய மனவையைத் திரும்ப அழைத்துக்கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதற்கு, அவர், "நான் அவளை மூன்று முறை தலாக் சொல்லி விட்டேன்" என்றார். அதற்கு, நான் நன்றாக அறிவேன். அவளைத் திரும்ப அழைத்துக் கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

1108 அஹ்மதில் இடம் பெற்றுள்ளதாவது: அபூ ருகானா தமது மனைவியை ஒரே அமர்வில் மூன்று தலாக் சொல்லி விட்டார். பின்னர் அதற்காக வருந்தினார். அப்போது, "மூன்று தலாக்குகளும் ஒன்றாகத் தான் கருதப்படும்" என்று நபி(ஸல்) அவர்கள் அவரிடத்தில் கூறினார்கள். மேற்கண்ட இரண்டு அறிவிப்புகளின் அறிவிப்பாளர் தொடரிலும் இப்னு இஸ்ஹாக் இடம் பெறுகிறார்.

1109 இதை விட அழகாக அபூதாவூதின் மற்றோர் அறிவிப்பில் உள்ளது. அதில்: அபூ ருகானா தமது மனைவியை ஒட்டு மொத்தமாக தலாக் செய்து விட்டார். பின்னர், "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதன் மூலம் ஒரு தலாக் கொடுக்கவே விரும்பினேன்" என்றார். எனவே நபி(ஸல்) அவர்கள் சுஹைமாவை அவரிடமே திருப்பியனுப்பி விட்டார்கள் என்று உள்ளது.

1110 "மூன்று விஷயங்கள் அவற்றைப் பொறுப்புடன் கையாண்டாலும் அவற்றால் ஏற்படக்கூடிய விளைவுகள் ஏற்பட்டே தீரும். அவற்றை விளையாட்டாகக் கையாண்டாலும் அவற்றால் ஏற்படும் விளைவுகள் ஏற்பட்டே தீரும். 1, நிக்காஹ் 2, தலாக் 3, தலாக்கை திரும்ப பெறுதல்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1111 இப்னு அதீ வாயிலாக ளயீஃப் எனும் தரத்தில் மற்றோர் அறிவிப்பில், "அவை: 1, தலாக் 2, அடிமையை விடுதலை செய்தல் 3, நிக்காஹ்" என்று உள்ளது.

1112 "மூன்று விஷயங்களில் விளையாட்டு அனுமதிக்கப்படவில்லை. 1. தலாக் 2. நிக்காஹ் 3. அடிமையை விடுதலை செய்தல். எவரேனும் இவற்றை வாயால் மொழிந்தால், அது கடமையாகி விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என உபாதா இபனு ஸாமித்(ரலி) வாயிலாக ஹாரிஸ் இப்னு அபீ உஸாமாவின் நூலில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1113 "என்னுடைய சமுதாயத்தவர் தங்கள் உள்ளங்கள் எண்ணுவதைப் பேசாமலிருக்கும் வரை அல்லது அவற்றை செயல்படுத்தாமலிருக்கும் வரை அவர்களை அல்லாஹ் மன்னித்து விடுவான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

1114 என்னுடைய சமுதாயத்தில் மறதியாகவோ, தவறுதலாகவோ அல்லது நிர்பந்தத்தின் காரணமாகவோ செய்யும் பாவங்களை அல்லாஹ் மன்னித்து விட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். இப்னுமாஜா, ஹாம்கி இந்த அறிவிப்பு நிரூபணமாகவில்லை.

1115 "மனிதன் தன்னுடைய மனைவியைத் தானாக ஹராமாக்கிக் கொண்டால், அது ஒரு பொருட்டல்ல, (அதை தலாக்காக கருத முடியாது)" என்று இப்னு அப்பாஸ்(ரலி) கூறி, "உண்மையில் அல்லாஹ்வுடைய தூதரிடத்தில் தான் உங்களுக்கு அழகிய முன் மாதிரியுள்ளது" என்றும் கூறினார். புகாரீ

1116 "மனிதன் தன்னுடைய மனைவியைத் தனக்கு ஹராமாக்கிக் கொண்டால், அது சத்தியம் செய்ததாகும். எனவே அதற்குப் பரிகாரம் செய்தாக வேண்டும்" என்று இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார் என முஸ்லிமில் உள்ளது.

1117 ஜவ்னுடைய மகள் நபி(ஸல்) அவர்களுக்குத் நிக்காஹ் செய்து வைக்கப்பட்டு, அவரை நபி(ஸல்) அவர்கள் நெருங்கிய போது, "நான் உங்களிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடிக் கொண்டாய். நீ உன்னுடைய குடும்பத்தாரிடம் சென்று சேர்ந்து கொள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1118 "திருமணத்திற்கு முன்பு 'தலாக்' இல்லை. இன்னும் உரிமையாளராவதற்கு முன்னால் அவனை விடுதலை செய்வதென்பது இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அபூ யஃலா

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இது ம∴லூல் எனும் தரத்தில் உள்ளதாகும்.

1119 மேற்கண்ட ஹதீஸ் போன்றே மிஸ்வர் இப்னு மக்ரமா(ரலி) வாயிலாக இப்னு மாஜாவில் இடம் பெற்றுள்ளது. இது ஹஸன் எனும் தரத்தில் உள்ளது. ஆனால் இதுவும் ம∴லூல் எனும் தரத்தில் உள்ளதாகும்.

1120 "எந்தப் பொருளுக்கு தான் உரிமையாளனில்லையோ, அந்தப் பொருளை நேர்ச்சை செய்ய ஆதமின் மகனுக்கு (மனிதனுக்கு) உரிமையில்லை. எந்த அடிமைக்கு அவன் உரிமையாளனில்லையோ அந்த அடிமையை விடுதலை செய்யவும் அவனுக்கு உரிமையில்லை. எந்தப் பெண்ணுக்கு (மணபந்தத்தின் வாயிலாக) அவன் உரிமையாளனாக இல்லையோ அவளைத் தலாக் செய்யவும் அவனுக்கு உரிமையில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தனது தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான சட்டங்களில் இந்த ஹதீஸ் மிகவும் ஸஹீஹ் என்று புகாரீ குறிப்பிட்டுள்ளார்.

1121 "மூன்று நபர்களின் குற்றங்கள் (அவர்களின் வினைச்சுவடியில்) எழுதப்பட மாட்டா 1. தூங்கிக் கொண்டிருப்பவர் கண்விழிப்பதற்கு முன்பு வரை செய்யும் குற்றங்கள் 2, சிறியவர் பெரியவராகும் முன்பு செய்யும் குற்றங்கள் 3, புத்தி சுவாதீனமிழந்தவன் புத்தி சுவாதீனமடையும் முன்பு அல்லது தெளிவடையும் முன்பு செய்யும் குற்றங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, மற்றும் இப்னு மாஜா.

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது இப்னு ஹிப்பானிலும் உள்ளது.

விவாகாரத்தைத் திரும்ப பெறுதல் GO TO CHAPTER INDEX

1122 சாட்சி ஏதும் இல்லாமல் (மனைவியைத்) 'தலாக்' செய்து பின்னர் (சாட்சி ஏதும் இல்லாமலேயே) திருப்பியழைத்துக் கொண்ட ஒருவரைப் பற்றி தம்மிடம் கேட்கப்பட்டதற்கு, "தலாக்கின் போதும், அதைத் திரும்பப் பெறும் போதும் சாட்சியை ஏற்படுத்திக் கொள்க!" என்று பதிலளித்ததாக இம்ரான் இப்னு ஹு சைன்(ரலி) அறிவிக்கிறார்.

இது அபூ தாவூதில் 'மவ்கூ∴ப்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், இது 'ஸஹீஹ்' எனும் தரத்தில் உள்ளது.

1123 பைஹகீயுடைய மற்றோர் அறிவிப்பில், (தலாக் செய்துவிட்ட) தன்னுடைய மனைவியை, சாட்சி ஏதுமில்லாமல் திரும்பப் பெற்றுக் கொண்ட ஒருவரைப் பற்றி கேட்கப்பட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், "அது சரியான வழி முறையல்ல. இனிமேல் சாட்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்கள் என உள்ளது.

தப்ரானியுடைய மற்றொரு அறிவிப்பில் "அவர் அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புக் கோரட்டும்" என்பது அதிகப்படியாக உள்ளது.

1124 நான் என் மனைவியை தலாக் செய்யும் போது, என் தந்தை உமர்(ரலி) அவர்களிடம், "அவளைத் திருப்பியழைத்துக் கொள்ளும்படி அவருக்குக் கட்டளை இடுங்கள்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

ஈலா, ளிஹார் மற்றும் அதற்குரிய பரிகாரம் GO TO CHAPTER INDEX

1125 நபி(ஸல்) அவர்கள் தம் மனைவியர்களில் சிலரை ஈலா செய்துவிட்டு, ஹராமாக்கிக் கொண்டார்கள். பின்னர் தாம் ஹராமாக்கிக் கொண்டதை மீண்டும் ஹலால் ஆக்கிக் கொண்டார்கள். இன்னும் சத்தியம் செய்ததற்காகப் பரிகாரம் செய்தார்கள்" என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்

ஈலா செய்தவன் (அதே நிலையில்) நான்கு மாதங்களை கழித்து விட்டால், அவர் ஆட்சியாளர் முன்பு கொண்டு வரப்பட்டு, ஆட்சியாளர் முன்பே 'தலாக்' செய்ய வேண்டும். அவர் தலாக் மொழியாதவரை 'தலாக்' நிறைவேறாது என்று இப்னு உமர்(ரலி) கூறினார். புகாரீ

'நான் நபித்தோழர்களில், பத்துக்கும் மேற்பட்டோரை ஈலாவை நான்கு மாதம் முடிந்த உடன் நிறுத்தி

விடுபவர்களாகக் கண்டுள்ளேன்“ என, சுலைமான் இப்னு யஸார்(ரலி) அறிவிக்கிறார். அஷ் ஷா:பிஈ

“அறியாமைக் காலத்தில் ‘ஈலா‘ ஒரு வருடம், இரண்டு வருடம் என்றிருந்தது (இஸ்லாத்தில்) அது நான்கு மாதங்கள் தான் என, அல்லாஹ் அதற்கு கால நிர்ணயம் செய்து விட்டான். நான்கு மாதங்களுக்குக் குறைந்ததில் ‘ஈலா‘ இல்லை“ என்று இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார். பைஹகீ

1126 ஒருவர் தன்னுடைய மனைவியை ளிஹார் செய்து விட்டு, பின்னர் அவளுடன் உறவு கொண்டு விட்டு, நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “நான் பரிகாரம் செய்வதற்கு முன்பே அவளுடன் உறவு கொண்டு விட்டேன்“ என்று கூறினார். அதற்கு, “அல்லாஹ் உனக்களித்துள்ள சட்டத்தை நீ நிறைவேற்றாதவரை நீ அவளை நெருங்கக் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதியில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் முர்ஸல் எனும் தரமே மேலோங்கியள்ளதாக நஸயீ குறிப்பிடுகிறார்.

இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக பஸ்ஸாருடைய மற்றொரு அறிவிப்பில் “பரிகாரம்“ செய்து கொள்! இனிமேல் இவ்வாறு செய்யாதே!“ என்று உள்ளது.

1127 ரமளான் வந்து விட்டதால், அதில் என் மனைவியுடன் உறவு கொண்டு விடுவனோ, என்று பயந்தவனாக நான் என்னுடைய மனைவியை ளிஹார் செய்துவிட்டேன். ஒர் இரவில் அவளது அங்கம் ஒன்று வெளிப்பட்டு (என்னைக் கவர்ந்து) விட்டதால், நான் அவளுடன் உறவு கொண்டு விட்டேன். அதற்காக நபி(ஸல்) அவர்கள் என்னிடம், நி ஓர் அடிமையை விடுதலை செய்! என்று கூறினார்கள். “என்னுடைய தலையைத் தவிர வேறு எந்தத் தலைக்கும் நான் உரிமையாளன் இல்லை“ என்று நான் கூறினேன். “அப்படியானால் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் நோன்பு நோற்றுக்கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு நான், “எனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சனை நோன்பினால் தானே ஏற்பட்டுள்ளது? என்று கூறினேன். அதற்கு, “ஏழைகளுக்கு ஒரு :பரக்“ அளவு பேரீச்சம் பழத்தை உணவளி“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸலமா இப்னு ஸக்ர்(ரழி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு குஸைமா மற்றும் இப்னு அல் ஜாரூதில் ‘ஸஹீஹ்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

‘லிஆன்‘ சட்டம் GO TO CHAPTER INDEX

1128 ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே!“ எங்களில் ஒருவர் தன்னுடைய மனைவியை மானக்கேடான செயலில் ஈடுபட்டிருக்கக் கண்டால், அவர் என்ன செய்வது?“ என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள் பேசினாலும், மிகப்பெரியதொரு விஷயத்திற்காகத்தான் பேசுவார்கள் மௌனமாயிருந்தாலும் அப்படிப்பட்டதொரு விஷயத்திற்காகத் தான் மௌனமாயிருப்பார்கள். நபி(ஸல்) அவர்கள் அவருக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. அவர் பின்னர் மறுபடியும் வந்து, “நான் தங்களிடம் கேட்ட விஷயத்திலே, நானே பாதிக்கப்பட்டுள்ளேன்“ என்று கூறினார். ஏற்கனவே அல்லாஹ் இது தொடர்பான சூரத்துன்னர் வசனங்களை அவருக்கு ஓதிக் காண்பித்து உபதேசம் செய்தார்கள். இன்னும் உலகத் தண்டனை மறுமைத் தண்டனையை விட லேசானது என்றும் தெரிவித்தார்கள்“ அதற்கு அவர் “இல்லை தங்களைச் சத்திய மார்க்கத்துடன் அனுப்பியவன் மீது ஆணையாக! நான் அவர்களுக்கெதிராகப் பொய் சொல்லவில்லை“ என்று கூறினார். பின்னர், அவரது மனைவியை அழைத்து அவளுக்கும் அவ்வாறே உபதேசம் செய்தார்கள். அவள் “இல்லை, தங்களை சத்திய மார்க்கத்துடன் அனுப்பியவன் மீது ஆணையாக! அவர் பொய்யர்“ என்று கூறினாள். பின்னர் நபி(ஸல்) அவர்கள் முதலில் அந்த மனிதரை அழைத்து சத்தியம் செய்யச் சொன்னார்கள். அவர் நான்கு முறை அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தார். பின்னர் நபி(ஸல்) அவர்கள் இரண்டாவதாக அந்தப் பெண்ணை அழைத்து சத்தியம் செய்யச் சொன்னார்கள். பின்னர், இருவரையும் பிரித்து விட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்.

1129 நபி(ஸல்) அவர்கள் சத்தியம் செய்த இருவரிடமும், “உங்கள் கணக்கு அல்லாஹ்விடம் உள்ளது ஏனெனில், உங்கள் இருவரில் ஒருவர் பொய்யராவார். இனி அந்தப் பெண்ணுடன் உனக்கு எந்தத் தொடர்புமில்லை“ என்று கூறினார்கள். அப்போது அந்த மனிதர், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய மஹர் தொகை என்னாவது?“ என்று கேட்டார். “நீ உண்மை பேசியிருந்தால் அவளது பிறப்பு உறுப்பை ஏற்கனவே அனுமதிக்கப்பட்டதாக ஆக்கிக் கொண்டு அவளை நீ அனுபவித்ததற்கு அந்த மஹர் தொகை பகரமாம் விடும். நீ பொய் சொல்லியிருந்தால் (அதற்கு தண்டனையாக) அந்தப் பொய்யே அவளிடமிருந்து (மஹர் தொகையைத்

திரும்பப் பெறவிடாமல்) உன்னை தூரமாக்கி விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1130 அந்தப் பெண்ணைப் பாருங்கள். அவள் கட்டழகான முழு வடிவம் கொண்ட வெண்மையான குழந்தையைப் பெற்றெடுத்தால், அது அவளது கணவனது பிள்ளையாகும். அவள் குட்டையான கருப்பான குழந்தையைப் பெற்று எடுத்தால், அது அவளது கணவனது பிள்ளையாகும். அவள் குட்டையான கருப்பான குழந்தையைப் பெற்று எடுத்தால், அந்தப் பிள்ளை, பழி சுமத்தப்பட்டவனின் பிள்ளையாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1131 ஐந்தாவது முறை தனது வாயில் கையை வைக்குமாறு நபி(ஸல்) அவர்கள் ஆணுக்குக் கட்டளையிட்டார்கள். “நிச்சயமாக இந்த முறை சத்தியம் செய்வது (தண்டனையை) விதித்துவிடும்“ என்றும் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1132 ‘லிஆன்‘ செய்த இருவரைப் பற்றிக் குறிப்பிடு கையில், அவர்கள் தம் சத்தியத்தை முடித்துக் கொண்டதும், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அவள் விஷயத்தில் பொய்யுரைத்தேன். அவளை என்னிடத்தில் நிறுத்திக் கொண்டால், நான் மூன்று ‘தலாக்‘ செய்தாக வேண்டும். பின்னர் நபி(ஸல்) அவர்கள் அவருக்குக் கட்டளையிடும் முன்பு மூன்று தலாக் செய்துவிட்டார் என ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1133 நபி(ஸல்) அவர்களிடம் ஒருவர் வந்து, “நிச்சயமாக என்னுடைய மனைவி அவளைத் தொடுபவர்களின் கரத்தை விலக்குவதில்லை“ என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “அவளைத் தூரமாக்கி விடு!“ என்று கூறினார்கள். அதற்கவர் “என்னுடைய உள்ளம் அவளைப் பின் தொடரும் என அஞ்சுகிறேன்“ என்று கூறினார். “அப்படியானால் அவளைக் கொண்டு பலன் பெற்றுக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதி மற்றும் பஸ்ஸார். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக நஸயீயின் மற்றொரு அறிவிப்பில் “அவளை ‘தலாக்‘ செய்துவிடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கவர், “அவளது பிரிவை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது“ என்று கூறினார் “அப்படியானால் அவளைக் கொண்டு பலன் பெற்றுக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதி மற்றும் பஸ்ஸார். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்

இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக நஸயீயின் மற்றொரு அறிவிப்பில் “அவளை ‘தலாக்‘ செய்துவிடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கவர், “அவளது பிரிவை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது“ என்று கூறினார். அதற்கு, “அப்படியானால் அவளை வைத்துக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உள்ளது.

1134 ‘லிஆன்‘ செய்த இருவரையும் பற்றிய வசனம் அருளப்பட்ட போது எந்தப் பெண் ஒரு குடும்பத்தாரைச் சேராத ஒரு பிள்ளையை (தன் கணவனுக்குப் பெறாமல் தன் கள்ளக் காதலனுக்குப் பெற்ற குழந்தையை கணவனின்) அந்தக் குடும்பத்தார் இடையே (அவர்களின் சந்ததி என்று பொய் சொல்லிப்) புகுத்துகிறாளோ, அவளுக்கும் அல்லாஹ்விற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மேலும், அவளை அல்லாஹ் ஒரு போதும் சுவர்க்கத்தில் நுழைய விடமாட்டான். இன்னும் எவன் தன்னுடைய பிள்ளையைப் பார்த்துக் கொண்டே (தனது பிள்ளை என அறிந்து கொண்டே அது தன்னுடைய பிள்ளை இல்லை என) மறுக்கின்றானோ? அல்லாஹ் அவனை விட்டுத் தன்னைத் திரையிட்டுக் கொள்வான். இன்னும் அவனை முந்தியவர்கள் பிந்தியவர்கள் அனைவரின் முன்பாகவும் இழிவுபடுத்தி விடுவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற தான் கேட்டதாக அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் இப்னுமாஜா

இது இப்னு ஹிப்பானில் ‘ஸஹீஹ்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கண் சிமிட்டும் அளவு நேரமேனும் எவராவது தன்னுடைய பிள்ளையை ஒப்புக் கொண்டால் பின்னர் அதை மறுப்பதற்கு அவனுக்கு உரிமையில்லை“ என்று உமர்(ரலி) கூறினார். பைஹகீ

இது ஹஸன், மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1135 ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய மனைவி கறுப்பான பையனைப் பெற்றிருக்கிறாள்“ என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “உன்னிடம் ஒட்டகங்கள் உள்ளனவா?“ என்று கேட்டார்கள். அவர் “ஆம்“ என்றார் “அவற்றின் நிறங்கள் என்ன?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் “ஆம்“ என்றார். அதற்கு “அது எப்படிப் பிறந்தது?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர் “அதன் ஒரு நரம்பு அவ்வாறு பெற்றிருக்கக் கூடும்“ என்றார். “அப்படியானால் உன்னுடைய மகனையும், ஏதாவது

ஒரு நரம்பு இவ்வாறு பெற்றிருக்கலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றொரு அறிவிப்பில், “அவர் (தன் மகனை) மறுக்க முற்பட்டார்“ என்று இடம் பெற்றுள்ளது. அதன் இறுதியில் அவ்வாறு “நபி(ஸல்) அவர்கள் மறுப்பதற்கு அனுமதியளிக்கவில்லை“ என்று இடம் பெற்றுள்ளது.

இத்தா விதவை அனுஷ்டிக்கும் துக்கம், கருப்பைச் சோதனை முதலியன

GO TO CHAPTER INDEX

1136 சுபைஆ அல் அஸ்லமிய்யா(ரலி) அவர்கள் தம் கணவரது மரணத்திற்குப் பின்பு (குழந்தை பெற்றெடுத்து) சில இரவுகள் ‘நி∴பாஸ்‘ உதிரப் போக்குள்ளவராக இருந்தார். பின்னர் அவர் நபி(ஸல்) அவர்களிடம் சென்று திருமணத்திற்கு அனுமதி கேட்டார். நபி(ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதியளித்து விட்டார்கள். பின்னர் அவர் திருமணம் செய்து கொண்டார் என மிஸ்வர் இப்னு மக்ரமா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

இதன் மூலம் முஸ்லிமிலும் உள்ளது. மற்றொரு அறிவிப்பில், “அவர் தன் கணவன் இறந்து நாற்பது இரவுகளுக்குப் பின்பு குழந்தை பெற்றார்“ என்று உள்ளது. பெண் உதிரப் போக்குள்ளவளாக இருக்கும் நிலையில் திருமணம் செய்வது குற்றமில்லை. ஆனால், “அவள் தூய்மை அடையும் வரை கணவன் அவளை நெருங்கக் கூடாது“ என்று ஜுஹ்ரி கூறினார் என முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் உள்ளது.

1137 மூன்று மாதவிடாய் காலகட்டம் வரை இத்தா இருக்க வேண்டுமென பரீரா கட்டளையிடப்பட்டார் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். ஆனால் இது ‘ம∴லூல் எனும் தரத்தில் உள்ளது.

1138 மூன்றாவது முறை ‘தலாக்‘ செய்யப்பட்ட பெண்ணைப் பற்றிக் குறிப்பிடுகையில், “அவளுக்குத் தங்குமிடமோ செலவுத் தொகையோ இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ∴பாத்திமா பின்த்து கைஸ்(ரலி) வாயிலாக அஷ்ஷு அபிய்யி அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1139 “இறந்துவிட்ட எவருக்காகவும், ஒரு பெண் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிக்கக் கூடாது. கணவன் இறந்து விட்டால் மட்டும் மனைவி நான்கு மாதம் பத்து நாள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும். அப்போது அவள் சாயமிடப்பட்ட ஆடைகள் அணியக் கூடாது. ஆனால் சாயமிடப்பட்ட பருத்தி ஆடைகள் அணியலாம். கண்ணுக்கு சுர்மா போடக்கூடாது. நறுமணமும் பூசக் கூடாது. தூய்மையடைந்து விட்டால் நறுமணச் செடிகளிலிருந்து சிறிதளவு பயன்படுத்தலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. அபூதாவூத் மற்றும் நஸயீயில் “சாயம் பூசிக் கொள்ளக் கூடாது“ என்றும் நஸயீயில் “தலைவாரிக் கொள்ளக் கூடாது“ என்றும் உள்ளது.

1140 நபி(ஸல்) அவர்கள், “அது முகத்தை வண்ணத்தால் அழகாக்கி விடும். ஆகவே, அதை இரவில் மட்டும் இட்டுக் கொள் பகலில் அகற்றிவிடும். நறுமணம் பூசித் தலை வாராதே! ஏனெனில் அது சாயமாகும்“ என்று சொன்னார்கள். நான், “எதனால் நான் தலைவாரிக் கொள்வது?“ என்று கேட்டேன். அதற்கு அவர்கள் இலந்தை இலைச் சாறினால் தலைவாரிக் கொள்“ என்று சொன்னார்கள். அபூதாவூத், நஸயீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1141 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய மகளின் கணவர் இறந்துவிட்டார். அவளைக் கண்வலி பீடித்துள்ளது. (அதனால்) அவளுக்கு சுர்மா இடலாமா?“ என்று ஒரு பெண் கேட்டதற்கு நபி(ஸல்) அவர்கள், “கூடாது“ என்று கூறினார்கள் என உம்மு ஸலமா(ரழி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1142 என்னுடைய சின்னம்மா ‘தலாக்‘ செய்யப்பட்டு (இத்தாவில்) இருந்த போது பேரீச்சம் பழத்தைப் பறிக்க விரும்பினார். அப்போது அவர் வெளியில் செல்வதைக் குறித்து ஒருவர் கடிந்து கொண்டார். அதனால் (அதைப் பற்றி சட்டம் கேட்க) அவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்தார். அப்போது “நீ உனது பேரீச்சம் பழத்தை பறித்துக் கொள். ஏனெனில், அதை நீ தர்மம் செய்யலாம் அல்லது அதன் மூலம் ஏதேனுமொரு நல்ல காரியம் செய்யலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1143 என்னுடைய கணவர் தம் அடிமைகளைத் தேடிச் சென்றார். அவர்கள் அவரைக் கொலை செய்துவிட்டார்கள். நான் நபி(ஸல்) அவர்களிடம் சென்று, “நான் என்னுடைய குடும்பத்தாரிடம் செல்லட்டுமா? ஏனெனில், என்னுடைய கணவர் எனக்காக அவருக்குச் சொந்தமான வீடு எதையும் கொடுக்கவில்லை. எனது செலவிற்காகவும் எதையும்

அவர் விட்டுச் செல்லவில்லை" என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "ஆம்" என்று கூறினார்கள். நான் என்னுடைய அறையில் இருந்த போது மறுபடியும் என்னை அழைத்து, "இத்தாவுடைய காலம் முடியும் வரை நீ உன்னுடைய வீட்டிலேயே தங்கியிரு!" என்று கூறினார்கள் நான் என்னுடைய அந்த வீட்டில் நான்கு மாதம் பத்து நாள் இத்தாவைக் கழித்தேன். அதற்குப் பின்பு உஸ்மான்(ரழி) எனது இந்த நிகழ்ச்சியை வைத்தே அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என ஃபுரைஆ பின்த்து மாலிக்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, இப்னு மாஜா மற்றும் துஹலி

இப்னு ஹிப்பான், ஹாம்கி, திர்மிதீ ஆகியவற்றில் இது 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1144 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய கணவர் என்னை மூன்று 'தலாக்' செய்து விட்டார். எனவே இந்தக்கால கட்டத்தில் எனக்கேதும் நேர்ந்து விடும் என நான் அஞ்சுகிறேன்" என்று நபி(ஸல்) அவர்களிடம் நான் கூறினேன். அதற்கு அவர் என்னுடைய வீட்டை மாற்றிக் கொள்ளுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் நானும் மாற்றிக் கொண்டேன் என ஃபாத்திமா பின்த் கைஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1145 நபி(ஸல்) அவர்களது சுன்னத்தை எங்களுக்கு குழப்பி விடாதீர்கள். 'உம்முல் வலத்' உடைய எஜமான் இறந்துவிட்டால் நான்கு மாதம் இறந்து விட்டால் நான்கு மாதம் பத்து நாள் அவளது 'இத்தா' காலமாகும் என்று அம்ர் இப்னு ஆஸ்(ரலி) கூறினார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் இப்னு மாஜா

இது ஹாம்மில் 'ஸஹீஹ்' எனும் தரத்திலும், தாரகுத்னீயில் 'முன்கதி' என்பதுடன் 'மஃலூல்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"தலாக் செய்யப்பட்ட பெண்கள் (இத்தா காலமாக) மூன்று குர்உகள் வரை எதிர்பார்த்துக் காத்திருக்கட்டும்" (2:227) என்னும் இறை வசனத்தில் சொன்ன மூன்று குர்உகள் என்பது மாதவிடாய்க்கு பின் தூய்மையடையும் (மூன்று) காலங்களைக் குறிக்கும்" என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்.

மாலிக்(ரஹ்) அவர்கள் ஒரு சம்பவத்தை விவரிக்கும் போது, இதை ஸஹீஹான அறிவிப்பாளர் தொடருடன் பதிவு செய்து உள்ளார்கள்.

1146 "அடிமைப் பெண்ணுடைய தலாக் இரண்டாகும். அவளது இத்தா காலம் இரண்டு மாத விடாயாகும்" என்று இப்னு உமர்(ரலி) கூறினார். தாரகுத்னீ. இது மர்ஃபூல் மற்றும் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1147 ஆயிஷா(ரலி) வாயிலாக அபூதாவூத், திர்மிதீ, இப்னு இடம் பெற்றுள்ளது. இது ஹாம்மில் மட்டும் ஸஹீஹ் என்று உள்ளது. ஆனால், இது ளயீஃப் என்பதில் அனைவரும் ஒத்த கருத்துடன் உள்ளனர்.

1148 "தனது தண்ணீரை அந்நியனின் பயிரில் பாய்ச்சுவது (கர்ப்பமுற்றிருக்கும் பெண் போர்க் கைதியுடன் அல்லது அடிமைப் பெண்ணுடன் பாலுறவு கொள்வது) அல்லாஹ்வையும் இறுதிநாளையும் நம்புகின்ற எந்த ஆணுக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ருவைஃபி இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் "ஸஹீஹ்" எனும் தரத்திலும், பஸ்ஸாரில் 'ளயீஃப்' எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"கணவன் காணாமல் போன பெண், நான்கு வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதற்குப் பின் நான்கு மாதம் பத்து நாள் இத்தா கொள்ள வேண்டும் என்று உமர்(ரலி) கூறினார்கள். மாலிக், ஷாபிஈ

1149 "கணவன் காணாமல் போன பெண், அவளிடம் அவனைப் பற்றிய தெளிவான செய்தி வரும் வரை அவனது மனைவியாகவே இருப்பாள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முகீரா இப்னு ஷு அபா(ரலி) அறிவிக்கிறார். இது தாரகுத்னீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1150 ஒரு பெண்ணுடன் அவளை மணந்து கொண்டவரோ, அவளை மணந்து கொள்ளத் தர விதிக்கப்பட்டுள்ள (நெருங்கிய) உறவினரோ, அன்றி, வேறெவரும் இரவு நேரத்தில் (தனியாகத்) தங்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1151 "திருமண உறவு தடை செய்யப்பட்டவருடனல்லாமல் வேறு எந்த ஆணும், ஒரு பெண்ணுடன் ஒரு போதும் தனித்திருக்கக் கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1152 "கர்ப்பிணியாக இருப்பவள், தனது குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை உறவு கொள்ள வேண்டாம். இன்னும் கர்ப்பிடிணயாக இல்லாதவள் ஒரு முறை மாதவிலக்காம் தூய்மையடையாதவரை உறவு கொள்ள வேண்டாம்"

என்று நபி(ஸல்) அவர்கள் அவ்தாஸ் யுத்தக் கைதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்கள் என அபூ ஸயீத்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹாம்மில் 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1153 மேற்கண்ட ஹதீஸிற்குச் சான்றாக இப்னு அப்பாஸ் (ரலி) வாயிலாக தாரகுத்னீயில் ஹதீஸ் உள்ளது.

1154 "(ஒரு பெண்ணின்) படுக்கைக்குச் சொந்தக்காரர் எவரோ, அவருக்கே (அவளது) குழந்தை உரியதாகும். (அப் பெண்ணுடன்) விபச்சாரம் செய்தவருக்கு இழப்புதான் உரியதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1155 மேற்கண்ட ஹதீஸ் ஆயிஷா(ரலி) வாயிலாக நஸயீயில் பதிவாகியுள்ளது.

1156 இப்னு மஸ்வூத்(ரலி) வாயிலாகவும் நஸயீயில் பதிவாகி உள்ளது.

1157 அபூதாவூதில் உஸ்மான்(ரலி) வாயிலாகவும் பதிவாகியுள்ளது.

பால்குடிச் சட்டம் GO TO CHAPTER INDEX

1158 "ஒரு முறை அல்லது இரண்டு முறை (குழந்தை பாலை) சிறிது உறிஞ்சுவதால், திருமண உறவு விலக்கப்பட்டதாக ஆகாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1159 "பெண்களே! உண்மையில் உங்கள் (பால்குடிச்) சகோதரர்கள் எவரொருவர் ஆராய்ந்து (அறிந்து வைத்துக்) கொள்ளுங்கள். ஏனெனில், (குழந்தை) பசியின் காரணத்தால் (ஒரு பெண்ணிடம்) பால்குடிப்பதன் மூலமாகத் தான் பால்குடி உறவு ஏற்படும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1160 ஸஹ்லா பின்த்து ஸுஹைல் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூஹுதைஃபாவால் விடுதலை செய்யப்பட்ட அடிமை ஸாலிம் எங்கள் வீட்டில் இருக்கிறார். அவர் இப்போது மற்ற மனிதர்களைப் போன்று பருவம் அடைந்து விட்டார்" என்று கூறினார். அதற்கு, "அவருக்குப் பால் கொடுத்திருந்தால் நீ அவருக்கு ஹராமாம் விடுவாய்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1161 அபுல் குஅய்ஸ் உடைய சகோதரர் பர்தா சட்டம் வந்த பின்பு என்னிடம் வந்து (பார்க்க) அனுமதி கேட்டார். நான் அவருக்கு அனுமதி வழங்க மறுத்து விட்டேன். நபி(ஸல்) அவர்கள் வந்ததும் நபி(ஸல்) அவர்கள் வந்ததும் நான் செய்ததை தெரிவித்தேன். நபி(ஸல்) அவர்கள் அவரை, என் முன்பு வர அனுமதித்து, அவர் உன்னுடைய சிறிய தந்தையாவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1162 "பத்து தடவை வாய் வைத்துப் பாலருந்துவது (தான்)(திருமண உறவைத்) தடை செய்யக் கூடியதாகும்" என்று குர்ஆனில் (சட்டம்) இருந்தது. பின்னர் அது ஐந்து தடவையாக மாற்றப்பட்டது. பின்னர் நபி(ஸல்) அவர்கள் இறந்து விட்டார்கள். அது (ஓதப்படக் கூடாத வசனமென மக்கள் அறியாததால் இப்போதும்) குர்ஆனிலிருந்து ஓதப்படுகிறது என்று ஆயிஷா(ரலி) கூறினார். முஸ்லிம்

1163 ஹம்ஸாவுடைய மகளை நபி(ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதற்கு, "ஹம்ஸா என்னுடைய பால்குடி சகோதரராக உள்ள காரணத்தால் அவள் எனக்கு அனுமதிக்கப்பட்டவளல்ல. இரத்த சம்பந்தமான உறவுகளில் எவரெல்லாம் (மணம் செய்ய) விலக்கப்பட்டவர்களோ, பாலூட்டும் உறவுகளிலும் அவர்கள் (மணம் செய்ய) விலக்கப்பட்டவர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1164 "பால்குடிப் பருவத்தில் இரைப்பையைச் சென்றடையும் விதமான பாலூட்டுதலைத் தவிர மற்றவை (திருமண உறவை) விலக்கி விடாது. இது பால்குடி மறக்கடிப்பதற்கு முன்பு நிகழ வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலாமா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1165 "இரண்டு வருடத்திற்குள் இல்லாமல் பால்குடி (கணக்கில்) இல்லை" என இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார். தாரகுத்னீ, இப்னு அதீ

இது மர்ஃபூஉ மற்றும் மவ்கூஃப் எனும் தரத்தில் உள்ளது. இரண்டு நூலாசிரியர்களிடத்திலும் மவ்கூஃப் எனும் தரமே மேலோங்கியுள்ளது.

1166 “எலும்பை இணைத்து வலுப்படுத்தி, சதையை வளர்க்கும் (கால கட்டத்தில்) பாலூட்டலைத் தவிர வேறெதுவும் (பால்குடி உறவை உருவாக்கும்) பாலூட்டலாகக் கருதப்படாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினாாகள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

1167 உம்மு யஹ்யா பின்த்து அபீ இஹாபை நான் திருமணம் செய்ததும் ஒரு பெண் வந்து, “நான் உங்கள் இருவருக்கும் பாலூட்டியுள்ளேன்“ என்று கூறினார். அதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் நான் கேட்டதற்கு, “இவ்வாறு சொல்லப்படும் போது நீ எப்படி அவளுடன் (மணபந்தத்தில்) இருக்க முடியும்?“ என்று அவர்கள் கூறினார்கள். நான் அவளை விட்டுப் பிரிந்து விட்டேன். அந்தப் பெண் மற்றொரு திருமணம் செய்து கொண்டார் என உக்பா இப்னு அல்ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1168 அறிவு குன்றிய பெண்களின் பாலை (பிள்ளைகளுக்கு) ஊட்டுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள் என ஸியாத் அஸ்ஸஹ்மீ அறிவிக்கிறார். அபூதாவூத்

இது முர்ஸல் எனும் தரத்தில் உள்ளது. இன்னும் ஸியாத் ஒரு நபித் தோழர் அல்லர்.

செலவிடுதல்

GO TO CHAPTER INDEX

1169 அபூ ஸு ஃப்யானின் மனைவி ஹிந்த் பின்த்து உத்பா நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூ ஸு ஃப்யான் கஞ்சத்தனமான மனிதர். அவர் எனக்கும், என் பிள்ளைகளுக்கும் போதுமான அளவு பணத்தை செலவிற்குக் கொடுப்பதில்லை. எனவே, அவருக்குத் தெரியாமல், அவருடைய பணத்திலிருந்து நான் எதையும் எடுத்தால் அது என் மீது குற்றமாம் விடுமா?“ என்று கேட்டதற்கு, “நியாயமான அளவிற்கு உனக்கும் உன்னுடைய பிள்ளைகளுக்கும் போதுமானதை அவருடைய பணத்திலிருந்து நீ எடுத்துக்கொள்“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1170 நாங்கள் மதீனாவிற்கு வந்த போது நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் நின்று மக்களுக்கு உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அபபோது, “கொடுப்பவரின் கையே உயர்ந்த கையாகும். எனவே நீங்கள் உங்கள் வீட்டாரிலிருந்து, உங்கள் தாய், தந்தை, சகோதரர், சகோதரயிலிருந்து கொடுக்கத் துவங்குகள். பின்னர் உங்களுக்கு நெருக்கமான உறவினர்களுக்கும் பின்னர், அதற்கடுத்து நெருக்கமான உறவினர்களுக்கும் கொடுங்கள்“ என்று கூறினார்கள் என தாரிக் அல் முஹாரிபீ(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

இது தாரகுத்னீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1171 “அடிமைக்கு உணவு அளிப்பதும் உடை தருவதும் அவனது சக்திக்கு மீறிய வேலையை அவன் மீது சுமத்தாமலிருப்பதும் அவனது எஜமானன் மீது கடமையாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1172 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்கள் மனைவியருக்கு எங்கள் மீதுள்ள உரிமை என்ன?“ என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, “நீ உண்ணும் போது அவளை உண்ணச் செய்! நீ உடுத்தும் போது அவளையும் உடுத்தச் செய்!“ என்று கூறினார்கள் என ஹகீம் இப்னு மு ஆவியா(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸ் சுருக்கம்) இது முழுமையாக 1048வது ஹதீஸில் இடம் பெற்றுவிட்டது.

1173 நபி(ஸல்) அவர்கள் பெண்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், அறியப்பட்ட வழிமுறைப்படி அவர்களுக்கு உணவு, உடுத்துவது அனைத்தும் (அளிப்பது) ஆண்களான உங்கள் மீது கடமையாகும்“ என்று கூறினார்கள் என ஜாபிர்(ரழி) ஹஜ்ஜு டைய நீண்ட ஹதீஸில் கூறினார். முஸ்லிம்

1174 “தனது குடும்பத்திற்குச் செலவிடாமல் அவர்களை வீண் அடிப்பதே ஓர் ஆணுக்கு (அவனை அழித்திட)ப் போதுமான பாவமாம் விடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

“தான் எவரைப் பரிகாரமக்கக் கடமைப்பட்டுள்ளானோ அவர்களுக்கு (அதாவது) தன் மனைவி, மக்கள் மற்றும் குடும்பத்தாருக்கு செலவிடாமல் இருப்பதே ஓர் ஆணுக்கு (அவனை அழித்திடப்) போதுமான பாவமாம் விடுகிறது“ எனும் வாசகம் முஸ்லிமில் இடம் பெற்றுள்ளது.

1175 கணவன் இறந்து விட்ட கர்ப்பமான விதவை பெண்ணைப் பற்றிக் கூறுகையில், “அவளுக்குச் செலவுத் தொகை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னதாக மர்ஃபூஃ எனும் தரத்தில் ஜாபிர்(ரழி) அறிவிக்கிறார்.

பைஹகீ

இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். இன்னும் இது மவ்கூ.:ப் எனும் தரத்தில் பாதுகாக்கப்பட்டது.

1176 செலவுத் தொகை இல்லை என நிரூபமான .:பாத்திமா பின்த்து கைஸ் உடைய ஹதீஸ் முன்பு சென்றுள்ளது. முஸ்லிம்

1177 “மேலிருக்கும் கை கீழிருக்கும் கையை விடச் சிறந்தது. மனிதன் தான் பராமரிப்பவளுக்கு (மனைவிக்கு) முதலில் அளிக்கட்டும். (ஏனெனில்) ‘எனக்கு உணவு கொடு இல்லையேல், என்னை தலாக் செய்து விடு‘ என்று பெண் கூறுகிறாள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1178 “எவர் தன்னுடைய மனைவிக்குப் போதிய அளவு செலவிட இயலாதவராக உள்ளாரோ அவரையும் அவருடைய மனைவியையும் பிரித்து வைத்து விட வேண்டும் என ஸயீத் இப்னு முஸய்யப் அறிவிக்கிறார்.

ஸயீத் இப்னு முஸ்ய்யிப்பிடம், “இது நபிவழியா“ என்று அபூஜினாத் கேட்டதற்கு, “ஆம் இது நபிவழி தான்“ என்று கூறினார் என ஸு ப்யான் வாயிலாக ஸயீத் இப்னு மன்ஸு ரில் பதிவாகியள்ளது. இது முர்ஸல் எனும் தரத்திலுள்ள பலமான அறிவிப்பாகும்.

எவர் தங்கள் மனைவியரை விட்டு ஒடிவிட்டார்களோ, அவர்களைப் பிடித்து அவர்கள் தங்கள் மனைவியருக்குச் செலவிற்குக் கொடுக்க வேண்டும் அல்லது விவாகரத்துச் செய்து விட வேண்டும் அப்படி அவர்கள் விவாகரத்துச் செய்துவிட்டால், அந்த (இடைப்பட்ட) காலத்தில் அவர்களுக்குத் தராமல் நிறுத்தி வைத்திருந்த செலவுத் தொகையைக் கொடுத்துவிட வேண்டும் என்று கட்டளையிடுமாறு மாகாணங்களின் ஆளுநர்களுக்கு (ஆணையிட்டு) உமர்(ரலி) அவர்கள் கடிதம் எழுதினார்கள். அஷ்ஷா.:பிஈ, அல்பைஹகீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1179 (“தர்மம் செய்யுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் (ஒருநாள்) கூறினார்கள்.) அப்போது ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னிடம் ஒரு தீனார் உள்ளது“ என்று கூறினார். அதற்கு, “அதை உன்னுடைய பிள்ளைகளுக்குச் செலவிடு என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் மற்றொன்று உள்ளது“ என்று கூறினார். அதற்கு, “நீ அதை உன்னுடைய மனைவிக்குச் செலவிடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் மற்றொன்று உள்ளது என்றார். அதற்கு, “நீ அதை உன்னுடைய ஊழியர்களுக்குச் செலவிடு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அவர், “என்னிடம் இன்னொன்றும் உள்ளது“ என்றார். அதற்கு, “அதைப் பற்றி நீயே தீர்மானித்துக் கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். ஷா.:பிஈ, அபூதாவூத், நஸாயீ, ஹாம்கி

இங்கு அபூதாவூதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1180 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் யாருக்கு அதிக நன்மை செய்ய வேண்டும்?“ என்று நான் நபி(ஸல்) அவர்களிடத்தில் கேட்டதற்கு, “உன்னுடைய தாய்க்கு“ என்று அவர்கள் கூறினார்கள். “பின்னர் யாருக்கு?“ என்று நான் கேட்டதற்கு “உன்னுடைய தாய்க்கு“ என்றே கூறினார்கள். “பின்னர் யாருக்கு?“ என நான் (நான்காவது முறை) கேட்டதும், உன்னுடைய நெருங்கிய உறவினருக்குப் பின்னர் அதற்கடுத்து நெருங்கிய உறவினருக்கு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என பஹ்ஜ் இப்னு ஹாம்கி தம் தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொறுப்பேற்றல்

GO TO CHAPTER INDEX

1181 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவன் என்னுடைய மகன்! என்னுடைய வயிறு இவனுக்குப் பாதுகாப்பான தொட்டிலாகவும், என்னுடைய மார்பு இவனுக்குத் தண்ணீர்ப் பையாகவும், என்னுடைய மடி இவனுக்கு வீடாகவும் இருந்தது. இவனுடைய தந்தை என்னை விவாகரத்துச் செய்து விட்டார். அவர் இவனையும் என்னிடமிருந்து பறித்துக் கொள்ள விரும்புகிறார்“ என்று ஒரு பெண் நபி(ஸல்) அவர்களிடம் கூறியதற்கு, “நீ (மறு)மணம் செய்து கொள்ளாத வரை அவன் மீது நீயே அதிகம் உரிமை பெற்றவள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1182 ‘‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! என்னுடைய மகனை என்னுடைய கணவர் கொண்டு செல்ல விரும்புகிறார். அவனோ எனக்குப் பயனுள்ளவனாகவும், ‘அபூ இனபா‘ எனும் கிணற்றிலிருந்து எனக்குத் தண்ணீர் புகட்டிக் கொண்டுமிருக்கிறான்‘‘ என்று ஒரு பெண் நபி(ஸல்) அவர்களிடம் கூறினார். அப்போது அவளது கணவர் அங்கு வந்தார். ‘‘சிறுவனே! இதே உன்னுடைய தந்தை. உன்னுடைய தாய். இவர்கள் இருவரில் நீ விரும்பியவரின் கையைப் பிடித்துக் கொள்!‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அந்தச் சிறுவன்) தனது தாயின் கரத்தைப் பிடித்துக் கொண்டான். அவனுடன் அவள் சென்றுவிட்டாள்‘‘ என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1183 ரா∴பிஉ இப்னு ஸினான்(ரலி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவருடைய மனைவி இஸ்லாத்தை ஏற்க மறுத்து விட்டாள். நபி(ஸல்) அவர்கள் தாயை ஓர் ஓரத்திலும், தந்தையை ஓர் ஓரத்திலும் அமர்த்தி பையனை இருவருக்கும் மத்தியில் அமர்த்தி விட்டார்கள். அவன் தன் தாயின் பக்கமே திருப்பினான். அப்போது ‘‘இரட்சகனே! அவனுக்கு நேர் வழியைக் கொடு!‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் பிரார்த்தித்தார்கள். உடனே, அவன் தன் தந்தையின் பக்கம் திரும்பி விட்டான். அவர் அவனைப் பிடித்துக் கொண்டார் என்று ரா∴பி இப்னு ஸினான்(ரலி) அவர்களே அறிவிக்கிறார். அபூதாவூத் நஸயீ

1184 ஹம்ஸா(ரலி) அவர்களின் மகள் விஷயத்தில் அவரது சித்தியைப் பொறுப்பாளராக நியமித்துத் தீர்ப்பளித்தார்கள். மேலும் அப்போது, ‘‘சித்தி தாயின் ஸ்தானத்தில் இருப்பவர்‘‘ என்று கூறினார்கள் என பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1185 ‘‘கன்னிப் பெண் அவளது சித்தியிடமிருப்பாள். சித்தி தாய் (போன்று) ஆவாள்‘‘ என்று அலீ(ரலி) கூறினார்கள் என ஹதீஸ் அஹ்மதில் உள்ளது.

1186 ‘‘உங்களில் ஒருவருக்கு அவரது ஊழியர் அவரது உணவைக் கொண்டுவந்தால், அவர் அந்த ஊழியரைத் தன்னுடன் அமரச் செய்யாவிட்டாலும், குறைந்த பட்சம் அவருக்கு ஓரிரு கவளமாவது கொடுக்கட்டும்‘‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம். இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1187 ‘‘ஒரு பூனை விஷயத்தில் ஒரு பெண் தண்டிக்கப்பட்டாள். (ஏனெனில்) அது சாகும் வரை அதை அவள் சிறை வைத்திருந்தாள். அதனால் அவள் நரகத்தில் புகுந்து விட்டால். அவள் அந்தப் பூனைக்க உணவளிக்கவுமில்லை, நீர் புகட்டவில்லை. அதை அடைத்தே வைத்திருந்தாள். பூமியிலுள்ள புழு, பூச்சிகளை அது இரையாகத் தேடிக்கொள்ள அதை அவள்விட்டு விடவுமில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ முஸ்லிம்

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - குற்றங்கள்

- குற்றங்கள்
- இழப்பீடு மற்றும் உயிரிட்டுத் தொகை
- கொலைக்குற்றம் சாட்டுவதும் கஸாமத் என்னும் அறியாமைக்கால சத்தியமும்
- கலகக்காரர்கள் மற்றும் துரோகிகளுடனான போர்
- குற்றவாளியுடன் போர் மற்றும் மதம் மாறி துரோகம் புரிந்தவனை கொலை செய்தல்

குற்றங்கள் GO TO CHAPTER INDEX

1188 “அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர். வேறெவருமில்லை என்றும் என்னை அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி சொல்லும் மனிதரை, அவர் திருமணத்திற்குப் பின்பு விபச்சாரம் புரிந்தவராக இருந்தாலோ, (நியாயமின்றி) எவரையேனும் அவர் கொலை செய்திருந்தால் அதற்குப் பழிவாங்கும் விதத்திலோ, தன் மார்க்கத்தை விட்டு, ஜமாஅத் அமைப்பை விட்டுப் பிரிந்து சென்றவராக இருந்தாலோ - ஆக, இந்த மூன்றில் ஏதாவது ஒரு காரணத்திற்காகவே தவிர கொலை செய்வது அனுமதிக்கப்பட்டதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1189 “திருமணத்திற்குப் பின்பு விபச்சாரம் செய்பவன் கல்லால் அடித்துக் கொல்லப்பட வேண்டும். ஒரு முஸ்லிமை வேண்டுமென்றே கொல்பவன், (பதிலுக்குக்) கொல்லப்பட வேண்டும். மேலும் இஸ்லாத்தில் இருந்து வெளியேறி அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் போரிடுபவன் கொல்லப்பட வேண்டும் அல்லது தூக்கிலிடப்படவேண்டும் அல்லது நாடு கடத்தப்பட வேண்டும் அல்லது நாடு கடத்தப்பட வேண்டும். இந்த மூன்று குற்றங்களில், ஏதேனும் ஒன்றைச் செய்த முஸ்லிமைத் தவிர மற்ற முஸ்லிமைக் கொல்வது அனுமதிக்கப்பட்டதல்ல“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1190 “மறுமை நாளில் மக்கள் மத்தியில் (மனித) உயிர்க்கொலை பற்றிய தீர்ப்பு தான் முதலில் வழங்கப்படும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1191 “எவன் தன்னுடைய அடிமையைக் கொல்கிறானோ, அவனை நாம் கொல்வோம். எவன் தன்னுடைய அடிமையின் காது, மூக்கை அறுக்கிறானோ, அவனது காது, மூக்கை நாம் அறுப்போம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1192 “மகனைக் கொன்றதற்காகத் தந்தையிடம் பழிவாங்கக் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன் என உமர் இப்னு கத்தாப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ இப்னு மாஜா

இது இப்னுல் ஜாரூத் மற்றும் பைஹகீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. திர்மிதீ இதை முழ்தரிப் (பலவீனமானது) என்று குறிப்பிட்டுள்ளார்.

1193 “இறைச் செய்தியில் குர்ஆனைத் தவிர வேறு எதுவும் தங்களிடம் உள்ளதா?“ என்று நான் அலீ(ரலி) அவர்களிடம் கேட்டதற்கு, “இல்லை. தானியத்தைப் பிளந்து உயிரைப் படைத்தவன் மீது சத்தியமாக! அல்லாஹ்

குர்ஆனில் ஒரு மனிதனுக்கு அளித்திருக்கும்விளக்கத்தையும் இந்த ஏட்டில் (எழுதி வைக்கப்பட்டு) இருப்பவற்றையும் தவிர, “என்று அவர்கள் பதிலளித்தார்கள். நான், “இந்த ஏட்டில் என்ன (எழுதி வைக்கப்பட்டு) உள்ளது?“ என்று கேட்டேன். அதற்கு அவர்கள், “உயிரீட்டுத் தொகை பற்றிய விளக்கம், எதிரி நாட்டவரிடம் சிறைப்பட்டுள்ள போர்க்கைதியை விடுவிப்பது தொடர்பான சட்டம்“ என்று கூறினார்கள் என அபூ ஜு ஹை:பா அறிவிக்கிறார். புகாரீ

1194 அலீ(ரலி) வாயிலாக அஹ்மத், அபூதாவூத் மற்றும் நஸயீயில் மற்றொரு அறிவிப்பின் படி “இறை நம்பிக்கையாளர்களின் உயிர்கள் ஒன்றுக் கொன்று சமமானவை. அவர்களில் கடை நிலையில் உள்ளவர் கொடுக்கும் அபயத்தைக் கூட அவர்கள் அனைவரும் பாதுகாத்து நிறை வேற்றிட முயல வேண்டும். பிறருக்கு எதிராக அவர்கள் அனைவரும் ஒரே கையாக (ஒன்றுபட்டு) நிற்பார்கள். ஓர் இறைமறுப்பாளனைக் கொன்றதற்கு தண்டனையாக ஓர் இறை நம்பிக்கையாளன் கொல்லப்படக் கூடாது. ஒப்பந்தம் குடுத்தவன் ஒப்பந்தக் காலத்தில் கொல்லப்படக் கூடாது“ என்று இடம் பெற்றுள்ளது.

1195 இரண்டு கற்களுக்கும்டையில் தலையை வைத்து நசுக்கப்பட்டவளாக ஓர் அடிமைப் பெண்ணை கண்டனர். “யார் உன்னை இவ்வாறு செய்தது? இன்னரா? இன்னாரா?“ என்று மக்கள் வினவிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு ூதனுடைய பெயர் வந்ததும், அவள் தன் தலையை அசைத்து “ஆமாம்“ என்றாள். அந்த ூதன் பிடித்து வரப்பட்டான். அவன் குற்றத்தையும் ஒப்புக் கொண்டான். இரண்டு கற்களுக்கு இடையில் அவனது தலையை வைத்து நசுக்குமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்“ என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1196 ஏழை மக்களைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் பணக்காரக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனின் காதை அறுத்து விட்டான். அவர்கள் (இச்செய்தியுடன்) நபி(ஸல்) அவர்கள் அவர்களுக்காக இழப்பீட்டுத் தொகை எதையும் நிர்ணயிக்கவில்லை என்று இம்ரான் இப்னு ஹீஸைன்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1197 ஒருவர் ஒருவருடைய முழங்காலில் கொம்பால் குத்திவிட்டார். அவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து “எனக்காகப் பழி வாங்குங்கள்“ என்று கேட்டுக் கொண்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “காயம் நன்றாக ஆறிய பின்னர் வா!“ என்று கூறினார்கள். அவர் மறுபடியும் வந்து பழி வாங்குமாறு கேட்டுக் கொண்டார். நரி(ஸல்) அவர்களும் பழி வாங்கினார்கள். அதற்குப் பின்னர் அவர் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் நொண்டியாகிவிட்டேன்“ என்று கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “நான் உன்னைத் தடுத்தும் நீ கேட்கவில்லை மாறு செய்தாய். அதனால் தன் கருனையிலிருந்து அல்லாஹ் உன்னை தூரமாக்கி விட்டான். உமது ஊனம் வீணாம் விட்டது“ அதற்கு பின் காயங்கள் குணமாகாதவரை பழிதீர்ப்பதை நபி(ஸல்) அவர்கள்தடை செய்தார்கள். அஹ்மத், தாரகுத்னீ

1198 ஹு தைல் கோத்திரத்தைச் சேர்நத் இரணடு பெண்கள் சண்டையிட்டுக் கொண்டனர். அவர்களில் ஒருத்தி மற்றொருத்தி மீது கல் எறிந்து அவளையும் வயிற்றிலிருந்து சிசுவையும் கொன்று விட்டாள். இது தொடர்பான வழக்கை நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தனர். அடிபட்டவருக்கு அடித்தவர் ஓர் அடிமையையோ ஓர் அடிமைப் பெண்ணையோ ஈடாகக் கொடுக்க வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள். அதன் முடிவை அடிபட்டவர் வசம் ஒப்படைத்தார்கள். மேலும் அந்த அடிமையை அவரது வாரிசுகளுக்கு உரியதாக்கினார்கள். அப்போது ஹமல் இப்னு நாபிகா அல் ஹு தலீ என்பவர் “அல்லாஹ்வின் தூதரரே! சாப்பிடாத, குடிக்காத, பேசாத, அழுகைச் சத்தம் எழுப்பாத ஒன்றுக்கு நான் எவ்வாறு உயிரீட்டுத் தொகை கொடுப்பது?“ என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், அவர் பேசிய அடுக்கு மொழி நடையின் காரணத்தால், “இவர் குறிகாரர்களின் சகோதரர் போலும்“ என்று கூறனார்கள். என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1199 இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக அபூதாவூத் மற்றும் நஸயீயில் ஹு னைன் சம்பந்தமாக நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்த போது, அங்கிருந்த ஒருவரிடம் (அந்நிகழ்வு பற்றி) உமர்(ரலி) அவர்கள் கேட்டதற்கு, “ஹமல் இப்னு நாபிகா என்பவர் எழுந்து, ஒருவர் மற்றவர் மீது கல் எறிந்த போது நான் அந்த இரண்டு பெண்களுக்கும் நடுவில் இருந்தேன்“ என்று (சாட்சி) கூறினார் என்று அவர் தெரிவித்தார். (இப்னு அப்பாஸ்(ரலி) பின்னர் இந்த ஹதீஸை சுருக்கமாகக் கூறினார். இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு

செய்யப்பட்டுள்ளது.

1200 என்னுடைய அத்தை ரூபய்யிஉ பின்த்து நள்ர் என்னும் அன்ஸாரிப் பெண், ஒருவருடைய பல்லை உடைத்து விட்டார். இதற்காக ருபய்யிஉவின் குலத்தார். (அதாவது எங்கள் குலத்தார்) அவரிடம் மன்னிப்புக் கோரினர். அவர் அதை ஏற்றுக் கொள்ளாததால் இழப்பீட்டுத் தொகை சமர்ப்பித்தனர். ஆனால், அவர் அதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்து பழிவாங்கும்படி கோரினர். நபி(ஸல்) அவர்கள் பழிவாங்கும்படி கட்டளையிட்டார்கள். அப்போது, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் ருபய்யிஉவின் பல்லை உடைக்கப் போகிறீர்களா? இல்லை. தங்களை சத்தியத்துடன் அனுப்பியவன் மீது ஆணையாக! அவளது பல் உடைக்கப்பட்டது!“ என்று (என் தந்தையின் சகோதரர்) அனஸ் இப்னு நள்ர் கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “அனஸே! அல்லாஹ்வின் கட்டளை பழிவாங்குதல் தான்“ என்றார்கள். அப்போது அந்த மக்கள் சமாதானமாம் மன்னித்து விட்டார்கள். அதன் பின்னர் நபி(ஸல்) அவர்கள், “அல்லாஹ்வின் நல்லடியார்களில் சிலர் எத்தகையவர்களாயிருக்கின்றனர் எனில், அல்லாஹ்வின் மீது அவர்கள் சத்தியம் செய்தால் அல்லாஹ் அதை உண்மையாக்கி விடுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அனஸ்(ரலி) அறிவிக்கிறார்.

1201 “கொன்றவர் யார் என்று அறிய முடியாத வகையில் ஒரு கலவரத்திலோ கல்லெறிக்கு ஆளாகியோ, தடியடிபட்டோ கொல்லப்பட்டால் அவருக்கு (அவருடைய வாரிசுகளுக்கு) தவறிச் செய்யும் கொலைக்கான உயிரீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும். எவரேனும் வேண்டுமென்றே கொல்லப்பட்டால் அதற்காகப் பழி வாங்கப்பட வேண்டும். இந்நிலையில் அதை (தீர்ப்பு வழங்குவதை) எவரேனும் தடுத்துவிட்டால், அவர் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, இப்னு மாஜா

இதன் வரிசைத் தொடர் பலமானது.

1202 ஒருவன் மற்றவனைப் பிடித்துக் கொள்ள இன்னொருவன் அந்த மற்றவனைக் கொன்று விட்டால், கொன்றவனைக் கொன்று விடவேண்டும். பிடித்துக் கொண்டிருந்தவனைச் சிறையிலடைக்க வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார்.

இது தாரகுத்னீயில் மவ்ஸூல் எனுத் தரத்திலும், இப்னு கத்தானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் உள்ளது. இன்னும் அதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். இன்னும் இது பைஹகீயில் முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1203 நபி(ஸல்) அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டு வாழும் ஓர் இறை நிராகரிப்பாளருக்காக ஒரு முஸ்லிமைக் கொன்று விட்டு, “தாங்கள் பாதுகாப்புப் பொறுப்பை நிறைவேற்றியவர்களில் நானே மேலானவன்“ என்று கூறினார் என அப்துர் ரஹ்மான் இப்னு பைலமானீ(ரலி) அறிவிக்கிறார்.

இது அப்துர் ரஸ்ஸாக்கில் முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உமர்(ரலி) வாயிலாக தாரகுத்னீயில் மவ்ஸூல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த அறிவிப்பு பலவீனமாக உள்ளது.

அடிமை ஒருவன் கொல்லப்பட்டால், “அந்தக் கொலையில் ஸன்ஆவைச் சேர்ந்தோர் அனைவரும் ஈடுபட்டிருந்தாலும் கூட நான் அவர்கள் அனைவரையும் அதற்கு பதிலாகக் கொன்றிருப்பேன்“ என்று உமர்(ரலி) கூறினார்கள். இது மேற்கண்ட ஹதீஸ் சம்பந்தமாகக் கூறப்பட்டது.

1204 “என்னுடைய இந்த உரைக்குப் பின் எவரேனும் ஒருவர் மற்றவரைக் கொன்றுவிட்டால், இறந்தவருடைய குடும்பத்தினர் இரண்டு விஷயங்களில் தாம் விரும்பியதைத் தேர்ந்தெடுக்கும் கொள்ளலாம், விரும்பினால் உயிரீட்டுத் தொகை பெற்றுக் கொள்ளலாம் அல்லது கொலையாளியைப் பழிக்கும் பழியாகக் கொன்றுவிடலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் ஓர் உரையில் கூறினார்கள் என அபூஷுரைஹ் அல் குஸாயீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத் நஸயீ

1205 இதே பொருளில் அபூஹுரைரா(ரலி) வாயிலாக இதன் மூலம் புகாரீ, முஸ்லிமில் உள்ளது.

இழப்பீடு மற்றும் உயிரீட்டுத் தொகை GO TO CHAPTER INDEX

1206 நபி(ஸல்) அவர்கள் யமன் வாசிகளுக்கு (ஒரு கடிதம்) எழுதினார்கள். (ராவீ ஹதீஸ் முழுவதையும் அறிவிக்கிறார்) அதில், எவரேனும் குற்றமற்ற ஒரு முஃமினைக் கொன்று விட்டால், அதற்கு ஆதாரமும் இருந்தால் அதற்காகப் பழிவாங்குவது கடமையாகும். கொலை செய்யப்பட்டவனின் பொறுப்பாளர்கள் (உயிரீட்டுத் தொகை

பெற்றுக் கொண்டு) மன்னித்து விட ஒப்புக் கொண்டாலே தவிர. உயிருக்கான நஷ்டஈடு 100 ஒட்டகங்களாகும். மேலும், மூக்கை அடியோடு அறுத்துவிட்டால் முழு நஷ்ட ஈடு வழங்க வேண்டும். இரண்டு கண்கள், நாக்கு, உதடுகளுக்கு பதிலாக முழு நஷ்ட ஈடு தரப்பட வேண்டும். ஒரு கால் வெட்டப்பட்டால் அரைப்பங்கு நஷ்ட ஈடாகும். மூளை மற்றும் வயிற்றுக் காயங்களுக்கு மூன்றில் ஒரு பங்கு நஷ்ட ஈடாகும். முதுகெலும்பைக் காயப்படுத்தியதற்கு பதினைந்து ஒட்டகங்களாகும். கை, கால்களின் ஒவ்வொரு விரலுக்கும் நஷ்ட பத்து ஒட்டகங்களாகும். ஒரு பல்லுக்குரிய நட்ஷஈடு ஐந்து ஒட்டகங்களாகும். எலும்பு தெரியும் அளவிற்குள்ள காயங்களுக்கு ஐந்து ஒட்டகங்கள் நஷ்ட ஈடாகும். பெண்ணுக்குப் பதிலாக ஆணை கொலை செய்பவர்களுக்குரிய நஷ்ட ஈடு அவரிடம் தங்கம் இருந்தால் ஆயிரம் தீனார்கள் ஆகும் என்று எழுதப்பட்டிருந்தது. என அபூ பக்கர் இப்னு முஹம்மத் இப்னு அம்ர் இப்னு ஹஜம் தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார். நஸயீ, இப்னு குஸைமா, இப்னு ஸ்ஜாரூத், இப்னு ஹிப்பான், அஹ்மத். இது ஸஹீஹ் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது.

1207 1. மூன்று வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் இருபது 2. நான்கு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் இருபது 3. ஒரு வருடம் பூர்த்தியான பெண் ஒட்டகங்கள் பத்து 4 இரண்டு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் இருபது 5. இரண்டு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் இருபது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

திர்மீதி, நஸயீ, இப்னுமாஜா, அபூதாவூத் ஆகிய நூல்களில் “இரண்டு வருடங்கள் பூர்த்தியான ஒட்டகங்கள் என்பதற்குப் பதிலாக ஒரு வருடம் பூர்த்தியான ஒட்டகங்கள்“ என்றுள்ளது. இருப்பினும் முதற் கூற்றே பலமானது. இப்னு அபீ ஷைபா இதை மற்றொரு வகையில் மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்துள்ளார். இன்னும் இது மர்ஃபூஉவை விட அதிகமாக ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1208 அம்ர் இப்னு ஷு ஐபு தம்முடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக மர்ஃபூஉ என்னும் தரத்தில் “உயிரீட்டுத் தொகை மூன்று வருடங்கள் பூர்த்தியான முப்பது ஒட்டகங்களும், நான்கு வருங்கள் பூர்த்தியான முப்பது ஒட்டகங்களும், இன்னும் வயிற்றில் குட்டியிருக்கும் நாற்பது கர்ப்பிணி ஒட்டகைகள்“ என அபூதாவூத் மற்றும் திர்மிதீயின் மற்றொரு அறிவிப்பில் உள்ளது.

1209 மூன்று விதமான மக்கள் அல்லாஹ்விடத்தில் அதிகம் வரம்பு மீறியவர்களாவர். 1. அல்லாஹ் புனிதமாக்கிய இடத்தில் கொலை செய்பவன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1210 “மக்களே! தவறுதலாக செய்யப்பட்ட கொலைக்கும் வேண்டுமென்றே செய்யப்பட்டதற்கு ஒப்பாக உள்ள தவறிச் செய்த கொலைக்கும் - அதாவது கசை மற்றும் கம்பால் அடிக்கப்பட்டு நிகழ்ந்த கொலைக்கும் உரிய ஒட்டகங்களாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் இப்னு மாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1211 “இதுவும் இதுவும் அதாவது பெருவிரலும் கண்டு விரலும் சமமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

விரல்கள் மற்றும் முன் பற்கள், பின் வரிசைப் பற்களுக்கான நஷ்டயீடு சமமானதாகும்“ என்று அபூதாவூத் மற்றும் திர்மிதீயிலும் உள்ளது.

“இரு கரங்களின் விரல்கள் மற்றும் இரு கால்களின் விரல்களுக்கான நஷ்டயீடு சமமாகும். ஒவ்வொரு விரலுக்கும் பத்து ஒட்டகங்கள் (நஷ்ட ஈடு) ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு ஹிப்பானில் உள்ளது.

1212 “ஒருவர் மருத்துவத் துறையில் அறியப்பட்டவராக (தேர்ச்சியும் அனுபவமும் அற்றவராக) இல்லாத நிலையில் அவர் எவருக்காவது சிம்ச்சையளித்து சிம்ச்சை பெற்றவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தி விட்டால், அதற்கான (இழப்பீடு தரும்) பொறுப்பை அவரே ஏற்க வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தம்முடைய தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக மர்ஃபூஉ எனும் தரத்தில் அறிவிக்கிறார். தாரகுத்னீ

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அபூதாவூத் நஸயீயிலும் உள்ளது.

ஆனால் இதை முர்ஸலாக அறிவித்தவர்களே மவ்ஸூலாக அறிவித்தவர்களை விட பலமானவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1213 "எலும்புகள் வெளியில் தெரியும் அளவுள்ள காயங்களுக்கு நஷ்டயீடு ஐந்து, ஐந்து ஒட்டகங்களாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

"விரல்கள் எல்லாம் சமமாகும். அவற்றிற்கான நஷ்டஈடு பத்து பத்து ஒட்டகங்களாகும்" என்று அஹ்மதில் அதிகப்படியாக உள்ளது. இது இப்னு குஸைமா மற்றும் இப்னுல் ஜாரூதில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1214 "திம்மிகளுக்கான இழப்பீட்டுத் தொகை முஸ்லிம்களுக்கான இழப்பீட்டுத் தொகையிலிருந்து பாதியாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

"ஒப்பந்தம் செய்து வாழ்பவர்களுக்கான நஷ்டயீடு சுதந்திரமான அசல் குடிமக்களுக்கான நஷ்டயீட்டிலிருந்து பாதியாகும்" என்று அபூதாவூதில் உள்ளது.

"பெண்ணுக்குரிய நஷ்டஈடு ஆணுக்குரியது போன்றே ஆகும். அதில் மூன்றில் ஒரு பகுதி மையத்திற்குச் சாரும்" என்று நஸயீயில் உள்ளது. இன்னும் இது இப்னு குஸைமாவில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1215 'வேண்டுமென்றே செய்யப்பட்டதற்கு ஒப்பான தவறுதலாக நிகழ்ந்த கொலைக் குற்றத்திற்குரியது போல் கடுமையானது தான். இரண்டிற்குமிடையிலுள்ள வேறுபாடு என்னவென்றால், தவறுதலாக நிகழ்ந்த கொலைக்குற்றத்தில் குற்றவாளி கொல்லப்படமாட்டார். வேண்டுமென்றே செய்யும் கொலைக்கு ஒப்பானது என்பது எதுவெனில் குரோதம் எதுமின்றியும் ஆயுதமேந்தாமலிருக்கும் நிலையிலும் (தாக்கும் எண்ணமின்றியும்) இருக்கும் போது ஷைத்தானின் தூண்டுதலால் மக்கள் தமக்கிடையே ஒருவரையொவருவர் அடித்துக் கொண்டு உயிரைப் போக்கடிப்பதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ. இது ளயீ.:ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1216 நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஒரு மனிதர் மற்றொரு மனிதரைக் கொலை செய்துவிட்டார். கொல்லப்பட்டவருக்குரிய நஷ்ட ஈட்டுத் தொகையாக நபி(ஸல்) அவர்கள் பனிரெண்டு ஆயிரம் திர்ஹம் விதித்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

நஸயீ மற்றும் அபூஹாதிம் இதை முர்ஸல் என்று குறிப்பிட்டுள்ளனர்.

1217 நான் என்னுடைய மகனுடன் நபி(ஸல்) அவர்களிடம் ஆஜரானேன். அப்போது, "இவர் யார்?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். "இவன் என்னுடைய மகன்! தாங்கள் இதற்கு சாட்சியாக இருங்கள்!" என்று நான் கூறினேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், "அவன் உனக்கு ஏதும் தீங்கு விளைவிக்க மாட்டான். நீயும் அவனுக்கு ஏதும் தீங்கு விளைவிக்கமாட்டாய்" என்று கூறினார்கள். நஸயீ, அபூதாவூத்

இப்னு குஸைமா மற்றும் இப்னுல் ஜாரூத்தில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொலைக்குற்றம் சாட்டுவதும் கஸாமத் என்னும் அறியாமைக்கால சத்தியமும் GO TO CHAPTER INDEX

1218 அப்துல்லாஹ் இப்னு ஸஹ்ல் மற்றும் முஹய்யிஸா இப்னு மஸ்ஊத் ஆகிய இருவரும் தங்களுக்கு ஏற்பட்ட சில பிரச்சினைகளின் காரணமாக கைபரின் பக்கம் சென்றனர். ஒரு நாள் முஹய்யிஸாவிடம் ஒருவர் வந்து அப்துல்லாஹ் இப்னு ஸஹ்ல் கொல்லப்பட்டு விட்டார். அவரது உடல் ஓர் ஊற்றில் போடப்பட்டு விட்டது என்ற செய்தியைத் தெரிவித்தார். முஹய்யிஸா யூதர்களிடம் சென்று, "அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் அவரைக் கொன்று விட்டீர்கள்" என்று கூறினார். அவர்கள் "அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவரை நாங்கள் கொல்லவில்லை" என்று கூறினார். பின்னர் அவரும் அவரது சகோதரர் ஹு வய்யிஸாவும் அப்துர் ரஹ்மான் இப்னு ஸஹ்லும் (இதைப் பற்றி பேசுவதற்காக) நபி(ஸல்) அவர்களிடம் வந்தனர். முஹய்யிஸா நபி(ஸல்) அவர்களிடம் பேசப்போனார். அப்போது நபி(ஸல்) அவர்கள், "பெரியவரைப் பேசவிடுங்கள்" என்று கூறினார்கள். நபி(ஸல்) வயதுக்கு மரியாதை தர நாடி இப்படிக் கூறினார்கள். உடனே ஹு வய்யிஸா பேசத் தொடங்கினர். பின்னர் முஹய்யிஸா பேசினார். அவர்கள் விஷயத்தைச் சொல்லி முடித்த பின் நபி(ஸல்) அவர்கள் "அவர்கள் உங்கள் சகோதரருக்கான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இல்லை என்றால் யுத்த பிரகடனத்தைப் பெறுவார்கள்" என்று கூறிவிட்டு அவர்களுக்கு அது பற்றி ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு அவர்கள், "அல்லாஹ்வின் மீது

ஆணையாக அவரை நாங்கள் கொலை செய்யவில்லை“ என்று பதில் எழுதினார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் ஹு வய்யிஸா, முஹய்யிஸா மற்றும் அப்துர் ரஹ்மான் இப்னு ஸஹ்ல் ஆகியோரிடம், “நீங்கள் சத்தியம் செய்து உங்களுடைய நண்பரின் இரத்தத்திற்கு நீங்கள் உரிமை பெறுவீர்களா?“ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், “இல்லை“ என்று கூறினார். “உங்கள் மீது யூதர்கள் சத்தியம் செய்கிறார்களே?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, “அவர்கள் முஸ்லீம்கள் இல்லையே“ என்று (பதில்) கூறினர். அதனால் நபி(ஸல்) அவர்கள் தமது தரப்பிலிருந்து அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்தார்கள். அவர்களுக்கு நூறு ஒட்டகங்களை அனுப்பினார்கள். அவற்றில் ஓர் ஒட்டகம் என்னை மிதித்து விட்டது“ என ஸஹ்ல் கூறினார். இச்சம்பவத்தை ஸஹ்ல் இப்னு அபீ ஹஸ்மா(ரலி) அவர்கள் தமது குலத்தின் பெரியவர்களிடமிருந்து அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1219 “அறியாமைக் காலத்தின் ஒரு சத்தியத்தை நபி(ஸல்) அவர்கள் அப்படியே அங்கீகரித்து அதன் அடிப்படையில் அன்சாரிகளில் சிலரிடையே யூதர்களால் கொல்லப்பட்டு விட்டதாக அவர்கள் சொன்னவரின் விஷயத்தில் தீர்ப்பளித்தார்கள். சிலருக்கு மத்தியில் கொலை செய்யப்பட்டவன் பால் தீர்ப்பளித்தார்கள் என அன்ஸாரிகளில் ஒருவர் அறிவிக்கிறார். முஸ்லிம்

கலகக்காரர்கள் மற்றும் துரோகிகளுடனான போர் GO TO CHAPTER INDEX

1220 “எவன் நமக்கெதிராக ஆயுதம் தூக்குகிறானோ, அவன் நம்மைச் சேர்ந்தவன் அல்லன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1221 “எவர் தலைமைக்குக் கட்டுப்படுவதை விட்டு வெளியேறி, இன்னும் கூட்டமைப்பை விட்டே பிரிந்து விடுகிறாரோ அவரது மரணம் அறியாமைக் கால (இறை நிராகரிப்பாளரது) மரணமாக ஆகிவிடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1222 “துரோகிகளின் ஒரு கூட்டம் அம்மாரைக் கொலை செய்யும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1223 “உம்மு அப்துடைய மகனே! இந்த சமுதாயத்திலிருந்து துரோகியாக மாறி விடுபவாகளுக்கான இறைச் சட்டம் என்னவென்பதை நீர் அறிவீரா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதற்கு, “அல்லாஹ்வும் அவனுடைய தூதருமே நன்கு அறிவர்“ என்று அவர் பதில் கூறினார். அவர்களில் காயமுற்றவனைத் தீர்த்துக் கட்டக்கூடாது ஆற விடக் கூடாது.“ இன்னும் அவர்களில் கைதானவரைக் கொல்லக் கூடாது. அவர்களில் ஓடிப் போனவனைத் தேடிப் போகலாகாது. இன்னும் அவர்களின் போர்ச் செல்வங்களை பங்கிடவும் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். பஸ்ஸார், ஹாம்கி

இது ஸஹீஹ் எனும் தரத்தில் உள்ளதாக ஹாம்கி சொன்னது தவறு, ஏனெனில், இதன் அறிவிப்பாளர் தொடரில் ஹதீஸ் கலை அறிஞர்களால் கைவிடப்பட்ட கௌஸர் இப்னு ஹம்கி என்பவர் இடம் பெறுகிறார்.

இது அலீ(ரலி) வாயிலாக மற்றோர் அறிவிப்பில் ஸஹீஹ் என்றிருந்தாலும், இப்னு அபீ ஷைபா மற்றும் ஹாம்மில் இது மவ்கூஃப் எனும் தரமே பெற்றுள்ளது.

1124 “ஒன்றுபட்டு இருக்கும் உங்கள் கூட்டமைப்பைப் பிரித்து விடும் எண்ணத்தோடு எவரேனும் உங்களிடம் வந்தால், “அவரைக் கொன்று விடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அர்ஃபஜ் இப்னு ஷு ரைஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

குற்றவாளியுடன் போர் மற்றும் மதம் மாறி துரோகம் புரிந்தவனை கொலை செய்தல் GO TO CHAPTER INDEX

1225 “எவர் தனது சொத்தைப் பாதுகாப்பதற்காக இறந்து விடுகிறாரோ அர் ஷஹீத் ஆவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1126 யஃலா இப்னு உமையா ஒருவருடன் சண்டையிட்டார். அப்போது அவர்களில் ஒருவர் மற்றவரைத் தனது பல்லால் கடித்தார். உடனே மற்றவர் தனது கையை அவரது வாயிலிருந்து உருவிக் கொண்டார். அதனுடன் அவரது முன்பல்லையும் (உடைத்துக்) கழற்றி விட்டார். இந்த வழக்கு நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. “உங்களில் ஒருவர் தனது சகோதரனை பலமான ஒட்டகம் கடிப்பது போன்று கடிப்பதா?

இதற்கெல்லாம் நஷ்டஈடில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு ஸைன்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1227 "அனுமதியின்றி ஒருவர் உங்கள் மீது (வீட்டின் ஜன்னல் வழியாக) எட்டிப் பார்த்ததற்காக நீங்கள் அவரைக் கல்லால் அடித்து, அவரது கண்ணைத் தோண்டியெடுத்து விட்டாலும் அது உங்கள் மீது குற்றமாகாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

அஹ்மத் மற்றும் நஸயீயின் மற்றோர் அறிவிப்பில், "அதற்கு நஷ்ட ஈடோ, பழி வாங்குதலோ இல்லை" என்று உள்ளது. இன்னும் இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1228 "பகலில் தோட்டங்களைப் பாதுகாத்துக் கொள்வது அதன் எஜமானின் பொறுப்பாகும். இரவில் கால் நடைகளைப் பாதுகாப்பது அவற்றின் எஜமானன் மீதே பொறுப்பாகும். இன்னும் இரவில் அவற்றிற்கு ஏதேனும் தீங்குகள் ஏற்பட்டால், அதற்கான பொறுப்பு உரிமையாளனையே சாரும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என பராஉ இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா.

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இதன் அறிவிப்பாளர் தொடரில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

1229 இஸ்லாத்தை ஏற்றுப் பின்னர், யூதனாம்ப் போனவனைப் பற்றிக் கூறுகையில், "அவன் கொல்லப்படும் வரை நான் அமர மாட்டேன். ஏனெனில், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரின் தீர்ப்பு இது தான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர் அதற்கான கட்டளையிடப்பட்டது. உடனே அவன் கொல்லப்பட்டான் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

அபூதாவூதின் மற்றோர் அறிவிப்பில் கொல்லப்படுவதற்கு முன்பு பாவமன்னிப்புக் கோருமாறு அவனிடம் சொல்லப்பட்டது என்றும் உள்ளது.

1230 "எவன் (இஸ்லாத்திலிருந்து கொண்டு) தனது மார்க்கத்தை மாற்றிக் கொள்கிறானோ அவனைக் கொன்று விடுங்கள்." என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார் கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

1231 பார்வையற்ற ஒரு நபித்தோழரிடம் ஓர் உம்முவலத் இருந்தாள். அவள் நபி(ஸல்) அவர்களை ஏசிக் குறை பேசிக் கொண்டிருந்தாள். அவர் அவளைத் தடுத்தும் கூட அவள் திருந்தவில்லை. ஒரு நாள் இரவு கோடாரியை எடுத்து அவளது வயிற்றில் பாய்ச்சி அவள் மீது சாய்ந்து அவளைக் கொன்று விட்டார். இச்செய்தி நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டது. அதற்கு "அறிந்து கொள்ளுங்கள்! அவளது இரத்தம் வீணாம் விட்டது. (அவள் கொலையுண்டதற்காக உயிரீட்டுத் தொகை தரத் தேவையில்லை) என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - தண்டனைச் சட்டங்கள்

- தண்டனைச் சட்டங்கள்
- அவதூறுக் குற்றத்திற்கான தண்டனை
- திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை
- குடிகாரனக்குரிய தண்டனை மற்றும் போதைப் பொருட்கள்
- நிர்ணயிக்கப்படாத தண்டனை மற்றும் தாக்குபவர்கள்

விபச்சாரத்திற்கான தண்டனை GO TO CHAPTER INDEX

1232 கிராமவாசிகளில் ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் எனக்கு அல்லாஹ்வின் சட்டத்தின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டுமென தங்களுக்கு அல்லாஹ்வின் மீது சத்தியமிட்டுக் கூறுகிறேன்" என்றார். அவருடனிருந்த அவரை விட அதிகமாகப் புரிந்து கொள்ளும் ஆற்றல் கொண்ட மற்றொருவர், "ஆம்! எங்கள் மத்தியில் அல்லாஹ்வின் கட்டளைப்படி தீர்ப்பளியுங்கள். இன்னும் (நடந்ததைக்) கூற என்னை அனுமதியுங்கள்" என்றார்கள். "என்னுடைய மகன் இவரிடம் வேலை பார்த்து வந்தான். அப்போது அவன் இவரது மனைவியுடன் விபச்சாரம் செய்துவிட்டான். என்னுடைய மகனைக் கல்லெறிந்து கொல்ல வேண்டும் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் அதற்கு பகரமாக நூறு ஆடுகள் மற்றும் ஓர் அடிமைப் பெண்ணை ஈட்டுத் தொகையாகக் கொண்டு அவனை தண்டனையிலிருந்து விடுவித்தேன். பின்னர் அதைப் பற்றி நான் அறிஞர்களிடம் கேட்டதற்கு அவர்கள், "அவனுக்குரிய தண்டனை நூறு கசையடியும் ஒரு வருடம் ஊரைவிட்டு வெளியேற்றுதலுமாகும்" என்றும் இவரது மனைவியைக் கல்லால் எறிந்து கொல்லவேண்டும் என்றும் கூறினார்" என்று சொன்னார். (இதைகேட்ட) நபி(ஸல்) அவர்கள் எவனது கரத்தில் என் உயிர் இருக்கின்றதோ அவன் மீது ஆணையாக! நான் உங்கள் மத்தியில் இறைச் சட்டத்தைக் கொண்டு தீர்ப்பளிப்பேன், அந்த அடிமைப் பெண்ணும், ஆடுகளும் உங்களிடம் திரும்பத் தரப்பட வேண்டும். உங்கள் மகனுக்குத் தண்டனையாக நூறு கசையடி கொடுக்கப்படும் மேலும் ஒரு வருடம் ஊர் விலக்கம் செய்யப்படும். உனைஸே! இவரது மனைவியிடம் செல்லும். அவள் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டால் அவளைக் கல்லெறிந்து கொல்லும்!" என்று கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1233 "என்னிடமிருந்து இறைச் சட்டத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். என்னிடமிருந்து இறைச் சட்டத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பெண்களுக்கு தீர்ப்பளித்து வழி ஏற்படுத்த விட்டான். திருமணமாகாதவன், திருமணமாகாதவளுடன் விபச்சாரம் செய்தால் அதற்குத் தண்டனை நூறு கசையடியும் ஒரு வருட காலம் நாடு கடத்துவதுமாகும். மேலும், திருமணம் ஆணவன், திருமணம் ஆனவளுடன் விபச்சாரம் செய்தால் அதற்குரிய தண்டனை நூறு கசையடியும், கல்லெறிந்து கொல்வதுமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உபாதா இப்னு ஸாமித்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1234 நபி(ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் இருக்கும்போது முஸ்லிம்களில் ஒருவர், அவர்களிடம் வந்து நபி(ஸல்) அவர்களை அழைத்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் விபச்சாரம் செய்துவிட்டேன்" என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள் மறுபடியும் தமது முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள். அவர் இவ்வாறே திரும்பத் திரும்ப

நான்கு முறை செய்தார். இவ்வாறு அவர் தனக்கெதிராக நான்கு முறை சாட்சி சொல்லிக் கொண்ட பின்னர் நபி(ஸல்) அவர்கள், “இவரை அழைத்துச சென்று கல்லேறிந்து கொல்லுங்கள்“ என்று கட்டளையிட்டார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1235 மாயிஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களிடம் வந்தபோது, “நீ முத்தமிட்டிருப்பாய் அல்லது கண்சாடை காட்டியிருப்பாய் (கட்டியணைத்திருப்பாய்) அல்லது பார்த்திருப்பாய்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கவர், “இல்லை, அல்லாஹ்வின் தூதர் அவர்களே!“ என்று கூறினார் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1236 உமர்(ரலி) அவர்கள் ஒரு முறை உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும் போது “நிச்சயமாக அல்லாஹ் முஹம்மத்(ஸல்) அவர்களை சத்திய மார்க்கத்துடன் அனுப்பினான். அவர்களுக்கு வேதத்தையும் அருளினான். அதில் நாங்கள் கல்லெறியும் சட்டத்தை எடுத்துரைக்கும் வசனத்தைப் படித்தோம். அதைப் புரிந்து காண்டு மனதில் பதித்தோம். நபி(ஸல்) அவர்களும் கல்லெறியும் தண்டனையை நிறைவேற்றினார்கள். அவர்களுக்குப் பின் நாங்களும் கல்லெறியும் தண்டனையை நிறைவேற்றினோம். மக்கள் மீது நீண்ட காலம் சென்று விட்டதால் கல்லெறியும் சட்டத்தை அல்லாஹ்வின் வேதத்தில் நாங்கள் காணவில்லை“ என்று எவரேனும் கூற மக்கள் அல்லாஹ் அருளிய ஒரு கடமையைக் கை விட்டு வழிகெட்டு விடுவார்கள் என நான் அஞ்சுகிறேன். உண்மையில் திருமணமான ஆணோ, பெண்ணோ விபச்சாரம் செய்து அதற்கான சாட்சியம் கிடைத்தாலோ, கருத்தரித்துவிட்டாலோ அல்லது (தானே முன் வந்து குற்றத்தை) ஒப்புக் கொண்டாலோ அவளைக் கல்லெறிந்து கொல்வது அல்லாஹ்வின் கட்டளையாகும்“ என்று உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள். புகாரீ, முஸ்லிம்

1237 “உங்களில் எவரது அடிமைப் பெண்ணேனும் விபச்சாரம் செய்து, அது நிரூபணமாம் விட்டால் அவர் அவளுக்கு நூறு கசையடி தரட்டும். அவளை ஏசிப் பேசி மனவேதனை தரவேண்டாம். பின்னரும் அவள் விபச்சாரம் செய்து அது நிரூபணமாம்விட்டால் அவளுக்கு அவன் நூறு கசையடி தரட்டும். அவளை ஏசிப் பேசி மன வேதனை தர வேண்டாம். பின்னர் அவள் மூன்றாவது முறையும் விபச்சாரம் செய்து அது நிரூபணமாம் விட்டால், முடியால் செய்யப்பட்ட ஒரு கயிற்றுக்கேனும் அவளை விற்பனை செய்துவிடட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1238 “உங்களது ஆதிக்கத்தின் கீழ் அடிமைப் பெண்கள் மற்றும் அடிமைகள் மீது (அவர்கள் குற்றம் புரிந்து விட்டால்) தண்டனையை நிறைவேற்றுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்க்ள கூறினார்கள். என அலீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது முஸ்லிம் மவ்கூஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1239 “விபச்சாரம் செய்து கர்ப்பிணியான ஜு ஹைனா கோத்திரத்தைச் சேர்ந்த ஒருபெண் அதே நிலையில் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தண்டனைக்குரிய குற்றத்தை புரிந்து விட்டேன். என்மீது அதை (தண்டனையை) நிறைவேற்றுங்கள்“ என்று கூறினார். இதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள் அவரது பொறுப்பாளரை அழைத்து, அவரது பொறுப்பாளரை அழைத்து, இவளுடன் நன்றாக நடந்து கொள்ளும் இவள் குழந்தை பெற்றெடுத்தும் என்னிடம் அழைத்து வாரும்“ என்று கூறினார்கள். அவர் நபி(ஸல்) அவர்களது கட்டளையை நிறைவேற்றினார். பின்னர் நபி(ஸல்) அவர்கள் அவளது துணியை அவள் மீது கட்டிவிட்டு அவள் மீது கல்லெறிந்து கொல்லுமாறு கட்டளையிட்டார்கள். இதைக் கண்ட உமர்(ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! விபச்சாரம் செய்த ஒரு பெண்ணுக்கா தாங்கள் தொழுகை நடத்துகிறீர்கள்?“ என்று கேட்டார். அதற்கு, “அவள் செய்திருக்கும் பாவமன்னிப்பை இந்த மதீனா நகரில் உள்ள எழுபது மனிதர்களுக்குப் பிரித்துப் பங்கிட்டாலும் அது அவர்கள் அனைவரின் பாவங்களும் மன்னிக்கப்பட போதுமானதாயிருக்கும். அந்த அளவிற்கு அவள் பாவமன்னிப்புக் கோரியிருக்கிறாள். தன்னுடைய உயிரை இறைவன் வசம் ஒப்படைத்து விட்ட ஒரு பெண்ணை விடச் சிறந்த செயல் புரிந்தவரை நீர் கண்டதுண்டா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னுஹு சைன்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1240 அஸ்லம் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் ஆணுக்கும் யூத குலத்தைச் சேர்ந்த ஓர் ஆணுக்கும் இன்னும் ஓர் பெண்ணுக்கும் நபி(ஸல்) அவர்கள் கல்லெறிந்து கொல்லும் தண்டனை வழங்கினார்கள் என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1241 விபச்சாரம் புரிந்த யூதர்களையும் யூதப் பெண்ணையும் நபி(ஸல்) அவர்கள் கல்லெறிந்து கொன்ற சம்பவம்

இப்னு உமர்(ரலி) வாயிலாக புகாரீ, முஸ்லிமில் பதிவாகியள்ளது.

1242 திருமணம் ஆகாத பலவீனமான சிறிய மனிதர் ஒருவர் எங்கள் வீடுகளில் இருந்து வந்தார். (ஒருமுறை) அவர் எங்கள் அடிமைப் பெண்களில் ஒருத்தியுடன் தகாத முறையில் நடந்து கொண்டார். (இதைப் பற்றி) நபி(ஸல்) அவர்களிடம் என் தந்தை சஅத்(ரலி) அவர்கள் முறையிட்டார்கள். அதற்கு, “அவருக்கு அதற்கான கசையடி கொடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள். “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர் மிகவும் பலவீனமானவர்“ என்று மக்கள் சொன்னார்கள். சிறு கிளைகள் கொண்ட பெரிய ஒன்றைப் பிடுங்கி அதனால் அவரை ஒரு அடி அடியுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்களும் அவ்வாறே செய்தனர் என ஸயீத் இபனு ஸஅத் இப்னு உபாதா(ரலி) அறவிக்கிறார். அஹ்மத், நஸயீ மற்றும் இப்னு மாஜா

இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இது மவ்ஸு லா மற்றும் முர்ஸலா என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

1243 “லூத்(அலை) அவர்களது கூட்டத்தார் செய்த (ஓரினச் சேர்க்கை) செயலை எவரேனும் செய்ய நீங்கள் கண்டால், செய்தவனையும் செய்யப்பட்டவனையும் கொன்று விடுங்கள். கால்நடையோடு உறவு கொள்பவனை, நீங்கள் கண்டால், அவனையும் அந்தக் கால்நடையையும் கொன்றுவிடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள் இருப்பினும் இதில் கருத்து வேறுபாடு உள்ளது.

1244 நபி(ஸல்) அவர்கள் (கசையால்) அடித்தார்கள். மேலும் ஊர்விலக்கம் செய்தார்கள். அபூபக்ர்(ரலி) அவர்கள் (கசையால்) அடித்தார்கள். மேலும் ஊர்விலக்கம் செய்தார்கள். உமர்(ரலி) அவர்கள் (கசையால்) அடித்தார்கள். இன்னும் ஊர் விலக்கம் செய்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள் இன்னும் இது மர்ஃபூஉ மவ்கூஃப் என்பதில் கருதது வேறுபாடு உள்ளது.

1245 பெண்களைப் போன்று மாறிக் கொள்ளும் ஆண்களையும், ஆண்களைப் போன்று மாறிக் கொள்ளும் பெண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள். மேலும், “அவர்களை உங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றி (விரட்டி) விடுங்கள்“ எனக் கட்டளையிட்டார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1246 “தண்டனைகளை விலக்கிக் கொள்ளும் முகாந்திரம் உள்ள வரை அவற்றை விலக்கிக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1247 “உங்களால் முடிந்த அளவு முஸ்லிம்களை விட்டு தண்டனைகளைத் தடுத்துக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) வாயிலாக திர்மிதீ மற்றும் ஹாம்மில் உள்ளது. இப்னும் இதுவும் ளயீஃப் எனும் தரத்தில் தான் உள்ளது. 1248 “சந்தேகங்களால் தண்டனைகளைத் தவிர்த்து விடுங்கள்“ (என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக) என்பதாக அலீ(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

1249 “அல்லாஹ் தடை செய்துள்ள நீயே செயல்களையும் கெட்ட பேச்சுக்களையும் தவிர்த்துக் கொள்ளுங்கள். எவன் ஒரு குற்றத்தைப் புரிகிறானோ, அல்லாஹ் அதை மறைத்தவாறே அவன் அதை மறைத்துக் கொண்டு இறைவனிடம் பாவமன்னிப்புக் கோராட்டும். எவன் நம்மிடம் தன் குற்றத்தை வெளிப்படுத்துகிறானோ, அவன் மீது நாம் இச்சட்டத்தை நிலை நிறுத்துவோம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி

இது முஅத்தாவில் ஸைத் இப்னு அஸ்லம் வாயிலாக முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவதூறுக் குற்றத்திற்கான தண்டனை GO TO CHAPTER INDEX

1250 நான் தூய்மையானவன் என்று எடுத்துரைக்கும் இறைவசனம் அருளப்பட்டதும் நபி(ஸல்) அவர்கள் மிம்பரில் ஏறி அதைக் கூறிவிட்டு குர்ஆனை ஓதினார்கள். பின்னர் கீழே இறங்கி இரண்டு ஆண்களையும் ஒரு பெண்ணையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார்கள். அவர்களுக்கு கசையடி கொடுக்கப்பட்டது என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார்கள். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா.

இது புகாரியிலும் சமிக்கைஞயாகக் கூறப்பட்டுள்ளது.

1251 ஷரீக் இப்னு ஸஹ்மாவின் மீது ஹிலால் இப்னு உமையா இணைத்து (விபச்சாரக்) குற்றம் சாட்டினார்.

அதற்கு, “சாட்சி கொண்டுவா! இல்லையெனில், உனது முதுகில் கசையடி தான் (விழும்)“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். அபூ யஃலா. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1252 இன்னும் இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக புகாரீயிலும் இது போன்ற ஹதீஸ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“அபூபக்ர், உமர், உஸ்மான் மற்றும் அவருக்குப் பின்னர் வந்தவர்கள் அனைவரும் அவதூறுக் குற்றம் புரிந் அடிமைகளுக்கு நாற்பது கசையடிகள் தருவதைத்தான் நான் கண்டுள்ளேன்“ என அப்துல்லாஹ் இப்னு ஆமிர் இப்னு ரபீஆ(ரலி) அறிவிக்கிறார். மாலிக், சவ்ரீ

1253 “எவன் தன் அடிமை மீது அவதூறாகக் குற்றம் சாட்டுகிறானோ அவன் சொன்னது போல் இல்லை எனில் மறுமையில் அவனுக்குக் கசையடி கொடுக்கப்படும்“ என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

திருட்டுக் குற்றத்திற்கான தண்டனை

GO TO CHAPTER INDEX

1254 “கால் தீனார் அல்லது அதற்கும் அதிகமானதற்காகவேயன்றி, திருடனின் கை வெட்டப்படக்கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

“கால் தீனார் அல்லது அதற்கு அதிகமானதற்காக திருடனின் கை வெட்டப்படும்“ என்று (நபி(ஸல்) அவர்கள் கூறியதாக) புகாரீயில் உள்ளது.

“கால் தீனாரில் கையை வெட்டுங்கள். அதற்குக் குறைவாக உள்ளதில் கையை வெட்டாதீர்கள்“ என்று அஹ்மதில் உள்ளது.

1255 நபி(ஸல்) அவர்கள் மூன்று திர்ஹம்கள் விலையுடைய கேடயத்தைத் திருடியதற்காக ஒருவரது கையை வெட்டினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1256 “முட்டை திருடும் திருடனை அல்லாஹ் சபிக்கிறான். அவனது கை வெட்டப்பட வேண்டும். மேலும், கயிற்றை திருடுபவனையும் (சபிக்கிறான்.) அவனது கையும் வெட்டப்படவேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1257 திருட்டுக் குற்றம் புரிந்த உயர்குலத்துப் பெண்ணுக்கு தண்டனையைத் தளர்த்தும்படி தம்மிடம் பரிந்துரைத்த தம் வளர்ப்புப் பேரன் உஸாமாவை நோக்கி “அல்லாஹ் நிர்ணயித்துள்ள தண்டனைகளில் ஒன்றைத் தளர்த்தும்படியா நீ பரிந்துரை செய்கிறாய்?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு எழுந்து நின்று உரை நிகழ்த்தினார்கள். அதில், “மக்களே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் தங்களிடையே கௌரவமானவன் திருடினால் அவனை விட்டுவிடுவர். தங்களிடையேயுள்ள பலவீனன் திருடினால் அவனுக்கு தண்டனை தருவர். அதன் காரணத்தால் தான், அவர்கள் அழிக்கப்பட்டனர்“ என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

ஆயிஷா(ரலி) அவர்களின் மற்றொரு அறிவிப்பில் “ஒரு பெண் இரவலாக பாத்திரத்தை வாங்குவாள். அதைத் திரும்பிக் கேட்டால் தர மறுத்து விடுவாள். அதனால் அவளது கையை வெட்டுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்“ என்று உள்ளது. இது முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1258 “மோசடி செய்பவன், பறித்துக் கொண்டு செல்பவன், (பார்த்துக் கொண்டிருக்கும் போதே) கொள்ளையடித்துக் கொண்டு செல்பவன் (ஊழல் பேர்வழி) ஆகியோருக்கு கையை வெட்டும் தண்டனை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

இது திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1259 “பழங்கள் மற்றும் பேரீச்சங் குருத்துக்களுக்காகக் கையை வெட்டக் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற தான் கேட்டதாக ராஃபிஃ இப்னு கதீஜ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ திர்மிதீ மற்றும் இப்னுமாஜா

இது திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனுத் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1260 நபி(ஸல்) அவர்களிடம் ஒஒரு திருடன் கொண்டு வரப்பட்டான். அவன் தனது திருட்டை ஒப்புக் கொண்டான். ஆனால் அவனிடம் பொருள் ஏதும் காணப்படவில்லை. அவனிடம் நபி(ஸல்) அவர்கள், "நீ திருடியிருப்பாய் என்று நான் கருதவில்லை" என்று கூறினார்கள். அதற்கவன் "ஏனில்லை" என்றான். ஆனால் நபி(ஸல்) அவர்கள் இரண்டு அல்லது மூன்று முறை அதே போன்று திரும்பத் திரும்பக் கேட்டார்கள். இறுதியாக (அவனது கையை வெட்டுமாறு) கட்டளையிட்டார்கள். உடனே(கை) வெட்டப்பட்டது. பின்னர் அவன் கொண்டு வரப்பட்டான். அப்போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என (அதன் அறிவிப்பாளர் கூறுகிறார்). இது பஸ்ஸாரிலும் உள்ளது. இதன் ஸனது சரியானது.

1262 "திருடனுக்குரிய தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டால் அதற்குப் பின்னர் அவன் மீது அபாரதம் விதிக்கக் கூடாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

இது முன்கதிஃ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அபூஹாம்மில் முன்கர் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1263 (மரத்தில்) தொங்கிக் கொண்டிருக்கும் பேரீச்சம் பழத்தைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது, அதற்கு, "எவன் தனது மடியில் அள்ளி எடுத்துக் கொள்ளாமல் வயிற்றுத் தேவைக்காக உண்டு கொள்கிறானோ அவனுக்குத் தண்டனை இல்லை. இன்னும் எவன் அதில் சிறிதை வெளியில் எடுத்துச் செல்கிறானோ அவன் மீது அபாரதம், தண்டனை இரண்டும் உண்டு. எவன் அதைக் களஞ்சியத்தில் சேமித்த பின்பு அதில் சிறிதை வெளியில் எடுத்துச் சென்று விடுகிறானோ அவனது கையை ஒரு கேடயத்தின் விலைக்கு சமமானதாயிருந்தால் வெட்டி விட வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1264 எனது போர்வையைத் திருடிய ஒருவனது கரத்தை வெட்டுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்ட போது அவனை விட்டு விடும்படி நான் அவனுக்காகப் பரிந்துரை செய்தேன். அதற்கு, என்னிடம் கொண்டு வருமுன் இவர் மீது உனக்கு ஏன் இரக்கம் ஏற்படவில்லை?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் என ஸஃப்வான் பின் உமய்யா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.

இப்னு ஜாரூத் மற்றும் ஹாம்மில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1265 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு திருடன் கொண்டு வரப்பட்ட போது, "அவனைக் கொன்று விடுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு மக்கள், "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இவர் திருடத்தான் செய்தார்" என்று கூறினர். "அவனது கையை வெட்டுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் உத்தரவிட்டார்கள். அவனது கை வெட்டப்பட்டது. பின்னர் மறுபடியும் அவன் கொண்டு வரப்பட்டான். (அப்போதும்) "அவனைக் கொன்று விடுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (மக்கள்) முன்பு போன்றே (கை வெட்டும்படி) உத்தரவிட்டார்கள். பின்னர் அவன் மூன்றாவது முறையும் கொண்டு வரப்பட்டான். பின்னர் அவன் மூன்றாவது முறையும் கொண்டு வரப்பட்டான். முன்பு போன்றே சொன்னார்கள். பின்னர் நான்காவது முறையும் அவ்வாறே அவன் கொண்டு வரப்பட்டான். முன்பு போன்றே சொன்னார்கள். பின்னர் அவன் ஐந்தாவது முறை கொண்டு வரப்பட்டான். அப்போது, "அவனைக் கொன்று விடுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரழி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இது முன்கர் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1266 ஹாரிஸ் இப்னு ஹாதிப் அவர்களின் இதே போன்ற அறிவிப்பு ஒன்றை நஸயீ பதிவு செய்துள்ளார். "ஐந்தாவது முறை திருடும் போது கொல்லச் சொன்ன ஹதீஸின் சட்டம் மன்ஸூ க்(ரத்து) ஆகிவிட்டது" என்று ஷாபிஈ கூறியுள்ளார்.

குடிகாரனக்குரிய தண்டனை மற்றும் போதைப் பொருட்கள்

GO TO CHAPTER INDEX

1267 மது அருந்தியிருந்த ஒருவர் நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார். நபி(ஸல்) அவர்கள் இரண்டு பேரீச்சங்கம்புகளால் நாற்பது அடிகள் அவருக்குக் கொடுத்தார்கள். இவ்வாறே அபூபக்ர்(ரலி) அவர்களும் செய்தார்கள். உமர்(ரலி) அவர்களின் காலத்தில் மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது அப்போது, "(எண்பது அடி கொடுங்கள்) (இதற்கான) தண்டனைகளில் எண்பது தான் குறைந்தது" என்று அவ்ஃப்(ரலி) கூறினார். உமர்(ரலி) அவர்களும் அவ்வாறே கட்டளையிட்டார்கள்" என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1268 முஸ்லிமில் வலீத் இப்னு உக்பா உடைய சம்பவ விபரத்தில் அலீ(ரலி) அவர்களின் அறிவிப்பொன்று இடம்

பெற்றுள்ளது. அதில், “நபி(ஸல்) அவர்கள் மது அருந்தியவனுக்கு நாற்பது கசையடி கொடுத்தார்கள். அபூபக்ர்(ரலி) அவர்களும் நாற்பது கசையடி அடித்தார்கள். உமர்(ரலி) அவர்கள் எண்பது கசையடி கொடுத்தார்கள். இவை ஒவ்வொன்றும் சுன்னத்தாகும். எண்பது கசையடிகளே எனக்கு மிகவும் பிடித்தமானதாகும்“ என்று உள்ளது.

(மது அருந்தியதால்) அவர் வாந்தி எடுத்ததை தான் பார்த்ததாக ஒருவர் சாட்சி கூறினார். அதற்கு “அவர் மது அருந்தும் வரை வாந்தி எடுக்கவில்லை அல்லவா?“ என்று உஸ்மான் (ரலி) கேட்டார்கள் என்றும் அநத் ஹதீஸில் உள்ளது.

1269 மது அருந்துபவனுக்குரிய தண்டனை பற்றிக் குறிப்பிட்ட போது, “அவன் மது குடித்தால் கசையடி கொடுங்கள். மீண்டும் அவன் மது குடித்தால் கசையடி அடியுங்கள். அவன் மூன்றாம் முறையும் மீண்டும் மது குடித்தால் அப்போதும் அவனுக்குக் கசையடி கொடுங்கள். அவன் பின்னர் நான்காவது முறையும் மது குடித்தால் அவனது கழுத்தை வெட்டி விடுங்கள் (தலையைக் கொய்து விடுங்கள்)“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆவியா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா.

இங்கு அஹ்மதின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

“நான்காவது முறையாகக் குடித்து விட்டு வந்தால் அவனைக் கழுத்தை வெட்டிக் கொன்று விடுங்கள்“ என்று சொல்லும் இந்த ஹதீஸின் சட்டம் மற்றோரு அறிவிப்பின் வாயிலாக மாற்றப்பட்டு விட்டது என்று திர்மிதீ கூறுகிறார். வெளிப்படையான அந்த அறிவிப்பை ஸு ஹ்ரீ(ரஹ்) வாயிலாக அபூதாவூத்(ரஹ்) தமது நூலில் பதிவு செய்துள்ளார்.

1270 “நீங்கள் எவரையாவது அடிக்க நேர்ந்தால், முகத்தைக் தவிர்த்துக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1271 “பள்ளிவாசலில் தண்டனைகள் நிறைவேற்றப்படக் கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ, ஹாம்கி

1272 மதுவைத் தடை செய்யும் சட்டத்தை அல்லாஹ் அருளிய போது மதீனாவில் பேரீச்சம்பழத்தால் செய்யப்பட்டதைத் தவிர வேறு எந்த மதுவும் இருக்கவில்லை என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1273 “தடை செய்யப்பட்ட மது செய்தி அறிவிக்கப்பட்ட போது திராட்சை, பேரீச்சம் பழம், தேன், கோதுமை மற்றும் வாற்கோதுமை ஆகிய ஐந்து பொருள்களால் மது தயாரிக்கப்பட்டு வந்தது. அறிவுக்குத் திரையிட்டு மறைப்பதே மதுவாகும்“ என்று உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1274 “போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் மதுவாகும் போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1275 “எந்தப் பொருளை அதிக அளவில் அருந்தினால் அது போதையுண்டாக்குமோ அதனைக் குறைந்த அளவில் அருந்துவதும் தடை செய்யப்பட்டதேயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னு மாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1276 நபி(ஸல்) அவர்கள், உலர்ந்த திராட்சையால் நபீத் எனும் பானத்தைத் தயாரித்து முதல் நாள், அதற்கடுத்த நாள் மற்றும் மூன்றாம் நாள் மாலை வரை அதைக் குடிப்பார்கள். பிறருக்குக் குடிக்கக் கொடுப்பார்கள். அதற்குப் பின் அதில் ஏதாவது மிச்சம் இருந்தால், அதைக் கீழே கொட்டிவிடுவார்கள் என்று இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1277 “அல்லாஹ் உங்களுக்கு எவற்றைத் தடை செய்திருக்கின்றானோ அவற்றில் அவன் உங்களுக்கு நிவாரணத்தை வைக்கவில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1278 மருந்துக்காகத் தயாரிக்கும் மதுவைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் தாரிக் இப்னுஸு வைத்(ரலி) கேட்டபோது, “நிச்சயமாக அது மருந்தல்ல் மாறாக அது நோயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என வாயில் இப்னு ஹள்ரமீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம் மற்றும் அபூதாவூத்

நிர்ணயிக்கப்படாத தண்டனை மற்றும் தாக்குபவர்கள் GO TO CHAPTER INDEX

1279 "அல்லாஹ்வுடைய தண்டனைகளில் எதிலும் பத்து கசையடிக்கு மேல் அடிக்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டதாக அபூ புர்தா அல் அன்ஸா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1280 "இறைத் தண்டனைக்குரிய குற்றங்களைத் தவிர கண்ணியமானவர்கள் செய்யும் பிற தவறுகளுக்காக அவர்களை (தண்டிக்காமல்) மன்னித்து விடுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, பைஹகீ

"எவருக்கேனும் நிர்ணயிக்கப்பட்ட தண்டனையில் அவர் இறந்து விட்டால் நான் என் மனத்தில் கவலை கொள்வேன். ஆனால், குடிகாரனுக்குரிய தண்டனையில் அவன் இறந்துவிட்டால் அவனுக்கு நான் நஷ்டஈடு கொடுப்பேன்" என்று என அலீ(ரலி) அவர்கள் கூறினார்கள். புகாரீ

1281 "தனது சொத்தை (அநியாயமாகப் பிடுங்கிக் கொள்ள ஒருவர் முனையும் போது அதைப்) பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் ஒருவர் கொல்லப்பட்டால், அவர் உயிர்த்தியாகி ஆவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸயீத் இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னுமாஜா. இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1282 "அல்லாஹ்வின் அடிமையே! (விரைவில்) பல குழப்பங்கள் தோன்றும். அப்போது நீ கொலை செய்யப்பட்டவனாக இருக்கலாம். (ஆனால்) கொலைகாரனாக இருக்கக் கூடாது" என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறக் கேட்டதாக என் தந்தை சொன்னார் என்று அப்துல்லாஹ் இப்னு கப்பாப்(ரலி) அறிவிக்கிறார். இப்னு அபீகைஸமா, தாரகுத்னீ

1283 காலித் இப்னு உர்ஃபுதா வாயிலாக அஹ்மதில் மேற்கண்ட ஹதீஸ் போன்று இடம் பெற்றுள்ளது.

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - ஜிஹாத் (புனிதப் போர்)

- ஜிஹாத் (புனிதப் போர்)
- ஜிஸ்யா வரி மற்றும் ஹு த்னாவரி
- பந்தயம் மற்றும் அம்பெய்தல்

ஜிஹாத் (புனிதப் போர்) GO TO CHAPTER INDEX

1284 “எவன் (சத்தியத்தை மேலோங்கச் செய்வதற்காகப்) போர் புரியாமலும், அதைப் பற்றி நாட்டங்கூட கொள்ளாமலும் இறந்து விடுகிறானோ அவன் நயவஞ்சகத்தின் ஓர் அம்சத்துடன் தான் இறக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1285 “நீங்கள் உங்கள் பொருட்கள், உங்கள் உயிர்கள் மற்றும் உங்கள் நாவுகள் மூலம் இணை வைப்பாளர்களுடன் அறப்போர் புரியுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1286 “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெண்களுக்கு ஜிஹாத் கடமையா?“ என்று நான் கேட்டதற்கு, “ஆமாம் அவர்களுக்கு யுத்தமில்லாத ஜிஹாத் உண்டு. அது ஹஜ் மற்றும் உம்ராவாகும்“ என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா

இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

1287 ஒருவர் அல்லாஹ்வின் தூதர் அவர்களிடத்தில் வந்து ஜிஹாதில் (கலந்து கொள்ள) அனுமதி கேட்டார். அதற்கு, “உன்னுடைய பெற்றோர் உயிருடன் உள்ளனரா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், “ஆமாம்“ என்றார். “நீ அவர்களுக்கு உறுதுணையாக இருந்து நீர் ஜிஹாத் செய்வீராக!“ என்று நபி(ஸல்) அவர்கள் அவரிடம் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1288 அபூ ஸயீத்(ரலி) வாயிலாக அஹ்மத் மற்றும் அபூதாவூதில், “திரும்பச் செல்! அவர்கள் இருவரிடமும் அனுமதி கேள்!“ அவர்கள் உனக்கு அனுமதியளித்தால் (வா!) இல்லையெனில், அவர்கள் இருவருக்கும் நன்மை செய்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இடம் பெற்றுள்ளது.

1289 “இணை வைப்பாளர்களுக்கு மத்தியில் வசிக்கும் ஒவ்வொரு முஸ்லிமை விட்டும் நான் விலம்க் கொள்கிறேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள என ஜரீர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் முர்ஸல் எனும் தரமே மேலோங்கியிருப்பதாக புகாரீயில் உள்ளது.

1290 “வெற்றிக்குப் பின்பு ஹிஜ்ரத் இல்லை! மாறாக, ஜிஹாத் மற்றும் (அதற்கான) எண்ணம் (கொள்ளுதல்) தான் உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். நூல்: புகாரீ, முஸ்லிம்

1291 “அல்லாஹ்வின் வாக்கை உயர்த்த வேண்டுமென எவர் போர்புரிகிறாரோ அவர், அல்லாஹ்வின் பாதையில் உள்ளவராவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ மூஸா அல் அஷ் அரி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1292 "எதுவரையில் பகைவர்களுடன் யுத்தம் தொடர்கிறதே, அதுவரை ஹிஜ்ரத் முடிவதில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1293 நபி(ஸல்) அவர்கள் பனா முஸ்தலிக் கூட்டத்தார் மீது (தீடீரெனப்) படை எடுத்தார்கள். அப்போது அவர்கள் அசட்டையாக இருந்தார்கள். அவர்களில் போரிடக் கூடியவர்களைக் கொன்று, பெண்கள் மற்றும் குழந்தைகள் பிடித்துக் கொள்ளப்பட்டார்கள். இதை எனக்கு அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) கூறினார் என நா.்பிஉ(ரலி) அறிவிக்கிறார்.

1294 எவரை நபி(ஸல்) அவர்கள் படைத்த தளபதியாகவோ அல்லது சிறு படைக்குழுவின் தலைவராகவோ நியமிக்கின்றார்களோ அவருக்கு, அவருடைய அகவாழ்விலும் இறையச்சத்தைக் கைக்கொள்ளும் படியும் மற்றும் முஸ்லிம்களுடன் நன்றாக நடந்து கொள்ளும் படியும் உபதேசம் செய்வார்கள். பின்னர், "எவர் அல்லாஹ்வை நிராகரிக்கின்றார்களோ, அவர்களுடன் அல்லாஹ்வின் பெயரால் போரிடுங்கள். அல்லாஹ்வை நிராகரிப்பவர்களுடன் போரிடுங்கள். போர்ச் செல்வங்களை மோசடியாக எடுத்துக் கொள்ளாதீர்கள். ஏமாற்றாதீர்கள். அங்கங்களைச் சிதைக்காதீர்கள். மேலும் குழந்தைகளைக் கொல்லாதீர்கள். மேலும் இணை வைப்பாளர்களில் உங்கள் எதிரியை நீங்கள் சந்திக்க நேர்ந்தால் மூன்று நிபந்தனைகளின் பக்கம் அவர்களை அழையுங்கள். அவர்கள் அவற்றில் ஏதாவது ஒன்றை ஏற்றுக் கொண்டால் நீங்கள் (அவர்களைத் தாக்காமல்) விட்டு விடுங்கள். 1. அவர்களை இஸ்லாத்தின்பால் அழையுங்கள் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டால் நீங்கள் அவர்களிடமிருந்து (முஸ்லிம்கள் என) ஒப்புக் கொள்ளுங்கள். 2. பின்னர் அவர்களை நீங்கள் முஹாஜிர்கள் வசிக்கும் பகுதிக்கு வந்து வசிக்கும் படி அழைப்புக் கொடுங்கள். அவர்கள் அதை ஏற்க மறுத்தால் கிராமப் புறத்து முஸ்லிம்களின் நிலை போன்றது தான் அவர்களின் நிலையும். அதாவது எதுவரை அவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து போருக்குச் செல்லவில்லையோ, அதுவரை அவர்களுக்கு கனீமத் மற்றும் .்பய்உ பொருட்களில் எந்தப் பங்கும் கொடுக்கப்படாது என்று அவர்களுக்குத் தெரிவித்து விடுங்கள். அவர்கள் இதையும் ஏற்க வில்லை என்றால், 3. அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். அவர்கள் இதை ஏற்க மறுத்து விட்டால் நீங்கள் அவர்களுக்கெதிராக அல்லாஹ்வின் உதவியைக் கோரி அவர்களுடன் போர் புரியுங்கள். முஸ்லிம்.

1295 நபி(ஸல்) அவர்கள் போருக்கான எண்ணங் கொண்டால் வேறு எதனையோ நாடியிருப்பதாகக் காட்டிக் கொண்டு அதை ரகசியமாக வைத்து விடுவார்கள் என கஅப் இப்னு மஸாக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1296 நபி(ஸல்) அவர்களுடன் பல போர்களில் நான் கலந்து கொண்டேன். அவர்கள் முற்பகல் நேரத்தில் போர்புரியவில்லை என்றால், சூரியன் உச்சிசாய்ந்து காற்றுவீசி இறைவனின் உதவி இறங்கும் வரை காத்திருப்பார்கள் என நு.்மான் இப்னு முகர்ரின்(ரலி) கூறியதாக மஅகில் அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் புகாரீயில் உள்ளது.

1297 இணைவைப்போர் மீது இரவு நேரங்களில் தாக்குதல் நடத்தும் போது அவர்களின் பெண்களும் குழந்தைகளும் கூட (சில நேரங்களில்) பாதிக்கப்படுவது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு, "அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களே" என்று நபி(ஸல்) அவர்கள் (பதில்) கூறினார்கள் என ஸஅப இப்னு ஜஸ்ஸாமா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1298 பத்ருப் போரின் போது தம்மைப் பின் தொடர்ந்து வந்த ஒருவரிடம் நபி(ஸல்) அவர்கள், "நீ திரும்பிச் சென்றுவிடு! இணை வைப்பாளனிடம் நான் ஒரு போதும் உதவி பெறமாட்டேன்" என்று கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1299 ஒரு யுத்தத்தில் பெண் ஒருத்தி கொல்லப்பட்டுக் கிடந்ததைக் கண்ட நபி(ஸல்) அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளை கொல்வதைத் தடை செய்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1300 "இணை வைப்பாளர்களில் (போரிடும் வலிமை கொண்ட) பெரியவர்களைக் கொன்று விடுங்கள் சிறுவர்களை விட்டு விடுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1301 பத்ருப் போரின் போது நாங்கள் எதிரியை நேருக்கு நேர் சந்தித்து யுத்தம் செய்யச் சென்றோம் என்று அலீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

இது அபூ தாவூதில் நீண்ட ஹதீஸாக உள்ளது.

1302 "(கான்ஸ்டான்டி நோபிளில் நடந்த) ஒரு போரின் போது ரோமப் படைக்குள் புகுந்து அவர்களின் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கண்டு, ("உங்கள் கரங்களை அழிவில் ஆழ்த்திக் கொள்ளாதீர்கள்" என்னும் இறைவசனத்தை ஆதாரமாகக் காட்டி, 'இவர் தன்னைத் தானே அழித்துக் கொள்கிறாரே' என்று கண்டனம் தெரிவித்தவர்களுக்கு மறுப்புக் கூறும் விதத்தில், "அன்சாரிகளே! இந்த வசனம் நம்முடைய விஷயத்தில் தான் இறக்கியருளப்பட்டது (நீங்கள் நினைப்பது போல் இறைவழியில் உயிரை அர்ப்பணித்துப் போராடுவதைக் கண்டிப்பதற்காக அல்ல)" என்று அபூ அய்யூப் அல் அன்சாரி கூறினார்கள். அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ

இது திர்மிதீ, இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1303 நபி(ஸல்) அவர்கள் "பனா நளீர் குலத்தாருடைய பேரீச்ச மரங்களை எரித்து, துண்டு துண்டாக வெட்டி விட்டார்கள்" என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1304 கனீமத் பொருள்களில் மோசடி செய்யாதீர்கள்! ஏனெனில் மோசடி, இம்மையிலும் மறுமையிலும் மோசடி செய்தவரை வாட்டும் நெருப்பாகவும் இழிவு தரக்கூடியதாகவும் உள்ளது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உபாதா இப்னு ஸாமித்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், நஸயீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1305 (போரில் எதிரியைக்) கொன்றவருக்கே கொலை செய்யப்பட்டவனுடைய பொருட்கள் சொந்தம் என நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என அவ்ஃப் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

1306 அபூஜஹல் கொல்லப்பட்ட சம்பவத்தைப் பற்றி அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறுகையில், "அவர்கள் இருவரும் விரைவாக வாளைச் சுழற்றி(வெட்டி)னார்கள். அவன் இறந்துவிட்டான். பின்னர் அவர்கள் இருவரும் நபி(ஸல்) அவர்களிடம் வந்து செய்தியைச் சொன்னார்கள். "உங்கள் இருவரில் அவனை யார் வெட்டியது?" நீங்கள் வாளைத் துடைத்து (சுத்தப்படுத்தி) விட்டீர்களா?" என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர்கள், "இல்லை" என்று சொன்னார்கள். உடனே நபியவர்கள் அந்த வாளைக் கூர்ந்து பார்த்து விட்டு, "நீங்கள் இருவருமே அவனைக் கொன்றிருக்கிறீர்கள்" என்று (ஆறுதலாகச்) சொன்னார்கள். பிறகு அவனது பொருட்களை (அபூஜஹ்லைக் கொல்லத் துணை புரிந்த மூன்றாமவர்) முஆத் பின் அம்ர் பின் ஜமூஹ்(ரலி) அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும் எனத் தீர்ப்பளித்தார்கள் என்று அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1307 தாயிஃப் நகரவாசிகளுடன் நிகழ்ந்த யுத்தத்தில் மிஞ்ஜனீக் எனும் ஆயுதத்தை நபி(ஸல்) அவர்கள் பயன்படுத்தினார்கள் என மக்ஹூல்(ரலி) அறிவிக்கிறார்.

இது அபூதாவூதில் முர்ஸல் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள். அலீ(ரலி) வாயிலாக உகைலி எனும் நூலில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1308 நபி(ஸல்) அவர்கள் (மக்கா நகரை வெற்றி கொண்ட பின்) மக்காவினுள் நுழையும் போது தன் தலையில் இரும்புத் தொப்பி அணிந்திருந்தார்கள். அவர்கள் அதைக் கழற்றிய போது ஒருவர் வந்து, "இப்னு கதில் என்பவன் கஅபாவின் திரையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கின்றான்" என்ற கூறினார். (அதைக்கேட்ட) நபி(ஸல்) அவர்கள், "அவனைக் கொன்று விடுங்கள்" என்று கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1309 நபி(ஸல்) அவர்கள் பத்ருப் போரின் போது மூன்று நபர்களைக் கட்டி வைத்துக் கொன்றார்கள் என ஸயீத் இப்னு ஜுபைர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூதில் முர்ஸல் எனும் தரத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1310 இரண்டு முஸ்லிம் ஆண்களை (எதிரிகள்) விடுதலை செய்வதற்காக நபி(ஸல்) அவர்கள் ஒரு முஷ்ரிக்கை (இணைவைப்பாளரை) விடுதலை செய்தார்கள் என இம்ரான் இப்னு ஹுசைன்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

1311"மக்கள் இஸ்லாத்தை ஏற்று இறைவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் அவர்கள் தங்கள் உயிர்களையும் உடமைகளையும் காப்பாற்றிக் கொள்வர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸக்ர் இப்னு அய்லா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லிமில் உள்ளது.

1311 “மக்கள் இஸ்லாத்தை ஏற்று இறைவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் அவர்கள் தங்கள் உயிர்களையும், உடமைகளையும் காப்பாற்றிக் கொள்வர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸக்ர் இப்னு அய்லா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

1312 நபி(ஸல்) அவர்கள் பத்ருப் போர்க் கைதிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் “முத்இம் இப்னு அதீ அவர்கள் உயிருடன் இருந்திருப்பின் இந்த நாற்றம் பிடித்த கைதிகளுக்காக என்னிடம் பேசியிருப்பார். நான் அவருக்காக இவர்களை விடுவித்து விட்டிருப்பேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜு பைர் இப்னு முத்யிம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1313 அவ்தாஸ் கணவாய் யுத்தத்தின் போது எங்களுக்குச் சில (கணவனியிருக்கும்) பெண்கள் கைதிகளாகக் கிடைத்தனர். அவர்களுடன் உறவு கொள்வதை நபித்தோழர்கள் பாவம் என்று கருதினர். அப்போது 42:4 வசனம் அருளப்பட்டது. என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1314 நஜ்தை நோக்கி ஒரு சிறு படையை நபி(ஸல்) அவர்கள் அனுப்பினார்கள். அதில் நானும் இருந்தேன். அந்தப் போரில் நாங்கள் அதிகமான ஒட்டகங்களை கைப்பற்றிக் கொண்டு வந்தோம். அதில் ஒவ்வொருவருக்கும் பன்னிரெண்டு ஒட்டகங்கள் பங்கு கிடைத்தது அவர்களுக்கு ஒவ்வோர் ஒட்டகம் அதிகப்படியாகவும் கொடுக்கப்பட்டது என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1315 கைபர் போரின் போது நபி(ஸல்) அவர்கள் குதிரை வீரர்களுக்கு இரண்டு பங்குகளும், வாகனமில்லாத வீரர்களுக்கு ஒரு பங்கும் என, கனீமத் பொருளைப் பங்கிட்டார்கள் என, இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1316 நபி(ஸல்) அவர்கள் ஒரு மனிதருக்கும் அவரது குதிரைக்கும் மூன்று பங்குகள் கொடுத்தார்கள். (அதில்) இரண்டு பங்குகள் அவரது குதிரைக்கும், ஒரு பங்கு அவருக்கும் ஆகும் என அபூ தாவூதில் உள்ளது.

1317 “(கனீமத் பொருள்) அல்லாஹ்வுக்கும் அல்லாஹ்வின் தூதருக்கும் உரிய குமுஸ் ஐந்திலொரு பங்கைக் கொடுத்து விட்ட பின்னர் மட்டுமே அதிகப்படியாக கொடுக்க வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என மஃன் இப்னு ய[illegible]த்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத். இது தஹாவீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1318 நபி(ஸல்) அவர்களுடன் நான் முதலில் ஒரு யுத்தத்தில் கலந்து கொண்டதற்கு நான்காவது கலந்து கொண்டதற்கு நான்காவது பங்கு அதிகப்படியாகவும், இரண்டாவது முறை கலந்து கொண்டதற்கு மூன்றாவது பங்கு அதிகப்படியாகவும் கொடுத்தார்கள் என ஹபீப் இப்ன மஸ்லமா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னுல் ஜாரூத், இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1319 நபி(ஸல்) அவர்கள் படைக் குழுக்களில் தாம் அனுப்பி வைக்கும் வீரர்களில் சிலருக்கு பிரத்யேகமான முறையில் (போர்ச் செல்வங்களில்) பொதுவாகப் படைவீரர்களுக்கெனக் கொடுக்கும் பங்கு போக அதிகப்படியாகவும் கொடுப்பார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1320 நாங்கள் கலந்து கொள்ளும் புனிதப் போர்களில் தேன் மற்றும் திராட்சையைப் பெறுவோம். அதை நாங்கள் சாப்பிட்டுவிடுவோம் எடுத்துவரமாட்டோம் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

“அதில் ‘குமுஸ்‘ ஐந்திலொரு பங்கு எடுக்கப்படவில்லை“ என அபூதாவூதில் உள்ளது. இன்னும் இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1321 கைபர் யுத்தத்தில் எங்களுக்கு உணவுப் பொருள் கிடைத்தது. எங்களில் ஒவ்வொருவரும் வந்து, தங்களுக்குப் போதுமான அளவு எடுத்துக் கொண்டு திரும்பிச் சென்று விடுவர் என அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னு அல் ஜாரூத் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1322 “எவர் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளாரோ, அவர் முஸ்லிம்களின் வெற்றிச் செல்வத்திலிருந்து எந்த (கால்நடை) வாகனத்திலும் சவாரி செய்ய வேண்டாம். அதை (நன்கு பயன்படுத்திக் கொண்டு) மெலியச் செய்த பின்பு, அதைத் திருப்பித் தர வேண்டாம். மேலும், அவர் முஸ்லிம்களின் வெற்றிச் செல்வத்திலிருந்து எந்த ஆடையையும் எடுத்து அணிய வேண்டாம். அதை (நன்கு உடுத்திப்) பழையதாக்கி

விட்டுப் பின்னர் திருப்பித் தர வேண்டாம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ருவை∴பிஉ இப்னு ஸாபித்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், தாரிமீ. இதன் அறிவிப்பாளர்களில் குளறு படி ஏதும் இல்லை.

1323 “முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் அபயம் அளித்துக் கொள்ளலாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என அபூ உபைதா (ரலி) அறிவிக்கிறார். இப்னு அபீஷைபா, அஹ்மத். இதன் அறிவிப்பாளர் தொடர் பலவீனமானது.

1324 “முஸ்லிம்களில் கடைசித் தரத்தில் இருப்பவரும் அபயம் அளிக்கலாம்“ என்பதாக அம்ர் இப்னு ஆஸ்(ரலி) வாயிலாக தயாலிஸ் எனும் நூலில் உள்ளது.

1325 “முஸ்லிம்களில் அளிக்கும் அபயம் (அவர்களில் எவர் அளித்திருந்தாலும் ஒன்றுக்கொன்று சமமாகும். அவர்களில் கடைசி தரத்தில் உள்ளவரும் அபயம் அளிக்கலாம்“ என்று அலீ(ரலி) வாயிலாக புகாரீ முஸ்லிமில் உள்ளது. மற்றோர் அறிவிப்பில் “அவர்களில் கடைநிலையில் உள்ளவரும் பாதுகாப்பு அளிக்கலாம்“ என்று உள்ளது. புகாரீ, முஸ்லிம்

1326 “நீ யாருக்குப் பாதுகாப்பு அளித்தாயோ நாமும் அவருக்கு பாதுகாப்பளித்தோம்“ என்று உம்முஹானீ(ரலி) புகாரீ அவர்களிடம் முஸ்லிமில் உள்ளது.

1327 “முஸ்லிம்களைத் தவிர்த்து வேறெவரையும் விட்டு வைக்காத நிலை வரும் வரை ﾆதர்கள், கிறிஸ்தவர்கள் அனைவரையும் நான் அரபு தீபகற்பத்தை விட்டு வெளியேற்றி விடுவேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1329 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் கைபர் மீது போர் தொடுத்தோம். கைபரில் எங்களுக்கு ஆடுகள் கிடைத்தன. இறைத்தூதர் அவர்கள் அவற்றில் ஒரு மந்தையை எங்களிடையே பங்கிட்டுவிட்டு, மீதமிருந்ததை கனீமத் பொருளுடன் சேர்த்து விட்டார்கள் என, முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இதன் அறிவிப்பாளர்களில் குளறுபடி ஏதுமில்லை.

1330 “நான் ஒப்பந்தத்தை முறிக்க மாட்டேன்! மேலும், பிறநாட்டுத் தூதர்களை (வெளியுறவுத் துறை அதிகாரி களைத்) தடுக்கமாட்டேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ரா∴பி∴உ அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1331 “(முஸ்லிம்களே!) நீங்கள் எந்த ஊருக்குச் சென்று தங்கிவிடுகிறீர்களோ அதில் தான் உங்களுக்குப் பங்கு கிடைக்கும். இன்னும் எந்த ஊர் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்குரியது. பின்னர் (மீதமுள்ளது) உங்களுக்குரியது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

ஜிஸ்யா வரி மற்றும் ஹு த்னாவரி

GO TO CHAPTER INDEX

1332 ஹஜர் பிரதேசத்தில் வசித்து வந்த (நெருப்பு வணங்கிகளான) மஜூ ஸிகளிடமிருந்து நபி(ஸல்) அவர்கள் ஜிஸ்யா வரி வசூலித்தார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு அவ்∴ப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

முன்கதிஉ ‘எனும் தரத்தில் இது முஅத்தாவிலும் வேறொரு வழியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

1333 தூமத்துல் ஐந்தல் எனும் பிரதேசத்தின் அரசன் உகைதிர் என்பவனிடம் நபி(ஸல்) அவர்கள் காலித் இப்னு வலீதை (ஒரு படையுடன்) அனுப்பினார்கள். அவர்கள் அவரைப் பிடித்து நபி(ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தனர். நபி(ஸல்) அவர்கள் அவன் இஸ்லாமிய ஜிஸ்யா வரி செலுத்த வேண்டும் எனும் நிபந்தனையின் பேரில் அவனுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டு அவன் இரத்தம் சிந்தவிடாமல் அவனைப் பாதுகாத்தார்கள் என அபூ சுலைமான்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அபூதாவூத்

1334 நபி(ஸல்) அவர்கள் என்னை யமன் தேசம் அனுப்பி, ஒவ்வொரு பருவமடைந்தவரிடமும் ஒரு தீனார் அல்லது அதற்குச் சமமான யமன் நாட்டு (மஆ∴பிர் நகரத்துத்) துணியை ஜிஸ்யா வரியாக வசூலிக்க வேண்டுமென எனக்குக் கட்டளையிட்டார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1335 “இஸ்லாம் தான் மேலோங்கும். வேறு எந்தக் கொள்கையாலும் அதை வென்று மேலோங்க முடியாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயித் இப்னு அம்ர் அல் முஸ்னீ(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

1336 “யூதர்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு நீங்கள்முதலில் சலாம்(முகமன்) கூறாதீர்கள். நீங்கள் அவர்களை

வழியில் சந்திக்கும் போது அவர்கள்(ஒடுங்கி நடக்கும் படி) குறுகலான பாதையில் செல்ல நிர்பந்தியுங்கள். (நீங்கள் விலம் வழிவிடாதீர்கள்)" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1337 நபி(ஸல்) அவர்கள் ஹுதைபிய்யா ஆண்டில் (உம்ரா செய்ய மக்காவை நோக்கிப்) புறப்பட்டுச் சென்ற போது குறைஷிகளுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அறிவிப்பாளர் ஹதீஸ் முழுவதையும் கூறுகிறார். அந்த ஹதீஸில் (சமாதான ஒப்பந்தம் பின்வருமாறு எழுதப்பட்டிருந்ததாக) உள்ளது. இது அப்துல்லாஹ்வின் குமாரர் முஹம்மது அவருடைய மகன் சுஹைலுடன், 'மக்கள் அச்சமின்றி வாழ்வதற்காக பத்து ஆண்டுகள் போர் புரிவதைக் கைவிட்டு, ஒருவர் மீதொருவர் தாக்குதல் நடத்தாமல் நிறுத்திக் கொள்வோம் என்ற ஷரத்தின் பேரில் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தமாகும். இதை மிஸ்வர் இப்னு மக்ரமா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இதன்மூலம் புகாரீயில் உள்ளது.

1338 அதனுடைய சில பகுதிகள் அனஸ்(ரலி) வாயிலாக முஸ்லிமில் பதிவாகியுள்ளது. அதில், "உங்களிடமிருந்து எவர் எங்களிடம் வருகிறாரோ அவரை நாங்கள் திருப்பி அனுப்ப மாட்டோம். மேலும், எங்களிடமிருந்து எவர் உங்களிடம் வருகிறாரோ, அவரை நீங்கள் எங்களிடம் திருப்பி அனுப்பி விட வேண்டும்" என்றிருந்தது. (இதைக் கண்ட) நபித்தோழர்கள் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதை எழுதப் போகிறீர்களா?" என்று கேட்டனர். நபி(ஸல்) அவர்கள், "ஆமாம் எவர் நம்மை விட்டு அவர்களிடம் செல்கிறாரோ, அல்லாஹ்வே அவரை தூரமாக்கி விட்டான். அவர்களில் எவர் நம்மிடம் வருகிறாரோ (அவரை அவர்களிடமே திருப்பியனுப்பி விட்டாலும்) அவருக்கு ஏதேனும் ஒரு வழியை அல்லாஹ் ஏற்படுத்துவான்" என்று கூறினார்கள் என உள்ளது.

1339 "இஸ்லாமிய அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் பிரஜையாக வாழும் முஸ்லிமல்லாத வரை எவன் கொன்று விடுகின்றானோ அவன் சொர்க்கத்தின் நறுமணத்தைக் கூட நுகர மாட்டான். அதன் நறுமணமோ நாற்பதாண்டு காலப் பயண தூரத்துக்கு வீசக் கூடியதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் பின் உமர்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்.

பந்தயம் மற்றும் அம்பெய்தல் GO TO CHAPTER INDEX

1340 ஹஃப்யா எனும் இடத்திலிருந்து ஸனிய்யத்துல் வதாஃ எனும் இடம் வரைக்கும் நபி(ஸல்) மெலிய வைக்கப்பட்ட குதிரைகளுக்கிடையில் பந்தயம் வைத்தார்கள். மேலும், ஸனிய்யாவிலிருந்து பனா ஸுரைக் குலத்தாரின் பள்ளிவாசல் வரை மெலிய வைக்கப்படாத குதிரைகளுக்கிடையில் பந்தயம் வைத்தார்கள். பந்தயத்தில் கலந்து கொண்டவர்களில் உமரும் ஒருவராக இருந்தார் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

ஹஃப்யாவிலிருந்து ஸனிய்யத்துல்வதா வரை ஐந்து அல்லது ஆறு மைல் தூரமாகும். மேலும், ஸனிய்யாவிலிருந்து பனா ஸுரைக் பள்ளிவாசல் வரை ஒரு மைல் தூரமாகும் என்று சுஃப்யான் வாயிலாக புகாரியில் அதிகப்படியாக இடம்பெற்றுள்ளது.

1341 நபி(ஸல்) அவர்கள் குதிரைகளுக்கு மத்தியில் போட்டி வைத்தார்கள். பருவமடைந்த குதிரைகளுக்கு பந்தய தூரத்தை அதிகமாக்கினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1343 இரண்டு குதிரைகளுக்கிடையில் ஒருவர் தன்னுடைய குதிரையை நுழைத்து அது தோற்று விடவும் கூடும் என்னும் அச்சத்துடன் இருந்தால் அது குற்றமில்லை. அது தோற்று விடும் என்ற அச்சமில்லாமல் இருந்தால் அதுவே சூதாட்டம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1344 நபி(ஸல்) அவர்கள் மிம்பரின் மீதிருந்தபடி பகைவர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக உங்களால் முடிந்த அளவு பலத்தையும் தயார் நிலையிலுள்ள குதிரைப்படையையும் திரட்டி வையுங்கள் என்னும் (7:60) இறைவசனத்தை ஓத நான் கேட்டுள்ளேன். (பின்னர் அவர்கள்) "அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக சக்தி அம்பு எய்வதில் தான் உள்ளது. அறிந்த கொள்ளுங்கள்! சக்தி அம்பு எய்வதில் தான் உள்ளது. அறிந்து கொள்ளுங்கள்! சக்தி அம்பு எய்வதில் தான் உள்ளது" என்று (மூன்றுமுறை) கூறினார்கள் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - உணவுகள்

- உணவுகள்
- வேட்டையாடுதலும் (உணவுக்காக) அறுக்கப்படும் பிராணிகளும்
- குர்பானி
- அகீக்கா

உணவுகள் GO TO CHAPTER INDEX

1345 “விலங்குகளில் கீறிக் கிழிக்கும் ஒவ்வொன்றையும் உண்பது விலக்கப்பட்டதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1346 இப்னு அப்பாஸ்(ரலி) அவர்களது ஓர் அறிவிப்பில், (தடை செய்தார்கள்) என்றுள்ளது. “பறவைகளில் கால் நகங்களால் பிடித்துத் தூக்கி உண்பவை“ என்பதும் உள்ளது.

1347 கைபரில் நாட்டுக் கழுதையின் கறியை உண்ணக் கூடாதென நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். மேலும், குதிரைக் கறியை (உண்ண) அனுமதியளித்தார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீயில், “குதிரைகளுக்கு அனுமதியளித்தார்கள்“ என்றுள்ளது.

1348 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஏழு யுத்தங்களில் பங்கு கொண்டுள்ளோம். (அப்போது) நாங்கள் வெட்டுக்கிளியை உண்போம் என இப்னு அபீ அவ்ஃபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1349 முயல் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், “அவர் (அபூ தல்ஹா) அதை அறுத்து நபி(ஸல்) அவர்களுக்கு அதன் பிட்டத்தைக் கொடுத்தார். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டார்கள்“ என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1350 எறும்பு, தேனீ, ஹுத்ஹுத் மற்றும் சிட்டுக்குருவி ஆகிய நான்கு உயிரினங்களைக் கொல்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1351 நான் ஜாபிர்(ரலி) அவர்களிடம், “கழுதைப்புலி வேட்டைப் பிராணியா? (ஹலாலா?)“ என்று கேட்டேன். அவர் ‘ஆம்‘ என்றார். நபி(ஸல்) அவர்கள் இதைக் கூறியுள்ளார்களா? என்று நான் கேட்டதற்கு, “ஆம்“ என்று அவர்கள் பதிலளித்தார்கள் என இப்னு அபீ அம்மார்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது புகாரீ மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1352 இப்னு உமர்(ரலி) அவர்களிடம் முள்ளம் பன்றியைப் பற்றி (அதைச் சாப்பிடலாமா என்று) கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், “(நபியே!) கூறும். எனக்கு அறிவிக்கப்பட்ட வஹீயில் உண்பவர்களுக்கு எந்த உணவும் தடை செய்யப்பட்டதாக நான் காணவில்லை ஆனால், செத்த பிராணியையும் ஓடும் இரத்தத்தையும், பன்றி இறைச்சியையும் தவிர, திண்ணமாக இவை அசுத்தங்களாகும். மேலும், அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறி அறுக்கப்பட்ட பாவமானவற்றைத் தவிர“ என்னும் (6:145) இறை வசனத்தை ஓதினார்கள் அப்போது அவரிடமிருந்த

முதியவர் ஒருவர், நபி(ஸல்) அவர்களிடம் முள்ளம் பன்றி பற்றிய பேச்சு வந்தது. அப்போது நபி(ஸல்) அவர்கள், “அது அருவருப்பானவற்றில் ஒன்று“ என்று கூறினார்கள்“ என்று அபூஹுரைரா(ரலி) அவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்றார். அதைக் கேட்ட இப்னு உமர்(ரலி) அவர்கள், நபி(ஸல்) அவர்கள், “அப்படிக் கூறியிருந்தால், அது அவர்கள் கூறியவாறு தான்“ என்று சொன்னார்கள். அஹ்மத், அபூதாவூத். இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1353 “அசுத்தங்களை உண்ணும் கால்நடைகளையும் அவற்றின் பாலையும் உண்ணக் கூடாதென நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்“ என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா. இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1354 காட்டுக் கழுதையைப் பற்றிய சம்பவத்தைக் கூறும் போது நபி(ஸல்) அவர்கள் அதிலிருந்து உண்டார்கள் என அபூ கதாதா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1355 நாங்கள் நபி(ஸல்) அவர்களது காலத்தில் ஒரு குதிரையை அறுத்து அதை உண்டோம் என, அஸ்மா பின்த்து அபீ பக்கர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1356 நபி(ஸல்) அவர்களின் உணவு விரிப்பில் உடும்பு(கறி) உண்ணப்பட்டது என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1357 தவளையைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் ஒரு மருத்துவர், “அதை மருந்துக்காக உபயோகிக்கலாமா?“ என்று கேட்டதற்கு, அதைக் கொல்ல வேண்டாமென நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என அப்துர் ரஹ்மான் இப்னு உஸ்மான் அல்குரஷிய்யா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், மற்றும் நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வேட்டையாடுதலும் (உணவுக்காக) அறுக்கப்படும் பிராணிகளும்

GO TO CHAPTER INDEX

1358 “கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக அல்லது வேட்டைக்காக அல்லது விவசாய நிலத்தைப் பாதுகாப்பதற்காக அன்றி, எவரொருவர் நாய் வளர்க்கின்றாரோ அவருடைய நற்செயல்களுக்கான ஊதியத்திலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு கீராத் அளவு குறைந்து கொண்டிருக்கும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1359 “நீ உன்னுடைய நாயை (வேட்டைக்காக) அனுப்பினால் (அதை அனுப்பும் போது), ‘பிஸ்மில்லாஹ்‘ கூறி அனுப்பு அது உன்னிடம் (எதையேனும் வேட்டையாடிக்) கொண்டுவந்து அதை நீ உயிருடன் கண்டால் அதை (உண்பதற்கு) அறுத்துக் கொள்! அப் பிராணியை அது கொன்று விட்டிருந்து அதிலிருந்து அது (நாய்) எதையும் உண்ணாது இருந்தால் அதைப் புசித்துக் கொள்! உன்னுடைய நாயுடன் வேறு நாயைக் கண்டு அது (வேட்டைப் பிராணி) கொல்லப்பட்டிருந்தால், அதை உண்ணாதே! ஏனெனில், அந்த இரண்டில் எது அதைக் கொன்றது என்பது உனக்குத் தெரியாது. இன்னும் நீ உன்னுடைய அம்மை எய்யும் போது அல்லாஹ்வின் அம்மை எய்யும் போது அல்லாஹ்வின் பெயரைக் கூறிக் கொள். (நீ வேட்டையாடிய அந்தப் பிராணி) உன்னைவிட்டு ஓடி உன்னுடைய அம்பின் காயத்தைத் தவிர வேறு காயம் ஏதும் இல்லாமல் அதை நீ (மறுநாள்) கண்டால் நீ விரும்பினால், அதை புசித்துதக் கொள்! அது தண்ணீரில் மூழ்கி இருக்க நீ கண்டால் அதை நீ உண்ணாதே!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அதீ இப்னு ஹாதிம்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசனம் இடம் பெற்றுள்ளது.

1360 மிஃரான் எனும் ஆயுதத்(தால் வேட்டையாடுவ)தைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் நான் கேட்டதற்கு “அதன் கூர்மையான பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தால் அதைப் புசித்துக் கொள்! அதனுடைய அகலப் பகுதியால் காயம் ஏற்பட்டிருந்தால் அதை சாப்பிடாதே! ஏனெனில், அது அடித்துக் கொல்லப்பட்டதாகும்“ என்று கூறினார்கள் என அதீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1361 “நீ அம்மை எய்த போது அது (வேட்டையாடப்பட்ட பிராணி) உன்னை விட்டு மறைந்துபின்னர் அதை (சில நாட்களில்) நீ கண்டால் அது துர்வாடை வீசவில்லை எனில் புசித்துக் கொள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ சஅலபா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1362 “எங்களிடம் சிலர் கறியைக் கொடுக்கின்றனர். அவர்கள், அதன் மீது அவர்கள் அல்லாஹ்வின் பெயர் கூறினார்களாக இல்லையா என்று எங்களுக்குத் தெரியாது“ என்று ஒரு கூட்டத்தார் நபி(ஸல்) அவர்களிடம்

கூறியதற்கு, “நீங்கள் அதன் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறி உண்ணுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1363 (கூர்மையற்ற கல் போன்றவற்றை) எறிந்து வேட்டையாடுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்தார்கள். இன்னும் “அது எந்தப் பிராணியையும் வேட்டையாடவும் செய்யாது எதிரிக்குத் தண்டனையையும் கொடுக்காது. ஆனால், அது பல்லை உடைக்கும் கண்ணைத் தோண்டி எடுத்து விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு முகஃப்பல்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1364 “உயிருள்ள எவற்றையும், (வேட்டையாடப் பழகுவதற்காகக்) குறி வைக்காதீர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1365 பெண்ணொருத்தி ஆடு ஒன்றைக் கல்லால் அறுத்து விட்டாள். அதைப் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டதற்கு அதை உண்ணுமாறு கட்டளையிட்டார்கள் என கஅப் இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1366 “பல் மற்றும் நகத்தைத் தவிர்த்து அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டு எதுவெல்லாம் இரத்தத்தை ஓட்டுகிறதோ, அதனால் அல்லாஹ்வின் பெயர் கூறி அறுக்கப்பட்டதை உண்ணுங்கள். ஏனெனில், பல் எலும்பாகும். நகமோ அபிசீனியர்களின் ஆயுதமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ராஃபிஉ இப்னு கதீஜ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1367 “கால்நடைகளைக் கட்டி வைத்துக் கொல்வதை நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்“ என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1368 “அல்லாஹ் ஒவ்வோர் உயிருக்கும் உபகாரம் செய்ய வேண்டுமென விதியாக்கியள்ளான். எனவே நீங்கள் (ஓர் உயிரை உணவுக்காகக்) கொன்றால் நல்லவிதமாகக் கொன்று விடுங்கள். அறுத்தால் அதை நல்லவிதமாக அறுத்து விடுங்கள். நீங்கள் உங்கள் கத்தியை நன்றாகத் தீட்டிக் கொண்டு அறுக்கப்படும் பிராணிக்கு சிரமமேற்படாதவாற அறுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஷத்தாத் இப்னு அவ்ஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1369 “(சினையாக உள்ள) தாய்ப்பிராணியை அறுத்தாலே வயிற்றிலுள்ள குட்டியையும் அறுத்தாம் விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1370 “(ஒரு பிராணியை அறுக்க) முஸ்லிமிற்கு அவனது பெயரே போதுமானது. அவன் அறுக்கும்போது அல்லாஹ்வின் பெயரைக் கூற மறந்துவிட்டால் அதைக் கூறிவிட்டுப் பிறகு உண்ணட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

இதன் அறிவிப்பாளர் ஞாபகசக்தி குறைந்தவர் என்பதால் ளயீஃப் எனும் தரத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் வரிசையில் முஹம்மத் இப்னு யஜீதிப்னு ஸினான் என்பவர் உண்மையாளர் என்றாலும் ஞாபகசக்தி குன்றியவர்.

1371 இன்னும் இது ஸஹீஹ் எனும் தரத்திலும் மவ்கூஃப் எனும் தரத்திலும் இப்னு அப்பாஸ் வாயிலாக அப்துர்ரஸ்ஸாக்கில் இடம் பெற்றுள்ளது.

1372 இதற்குச் சான்றாக அபூதாவூதில் முர்ஸல் எனும் தரத்தில், “முஸ்லிமால் அறுக்கப்பட்டது அல்லாஹ்வின் பெயர் சொல்லப்பட்டிருந்தாலும், சொல்லப்படாதிருந்தாலும் அனுமதிக்கப்பட்டது தான்“ என்று உள்ளது. இதன் அறிவிப்பாளர்கள் பலமானவர்கள்.

குர்பானி GO TO CHAPTER INDEX

1373 நபி(ஸல்) அவர்கள் கொம்புகளுடைய இரண்டு செம்மறியாட்டுக் கிடாய்களை அவற்றின் கழுத்தின் மீது தன் காலை வைத்து அல்லாஹ்வின் பெயர் சொல்லி தக்பீர் கூறி அறுத்து குர்பானி கொடுப்பார்கள்“ என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவிப்பில் தமது கரத்தால் அவற்றை அறுப்பார்கள்“ என உள்ளது. மற்றொரு அறிவிப்பில், “கொழுத்த இரண்டு ஆடுகளை“ என்று உள்ளது. அபூ அவானாவின் ஸஹீஹில், “விலை உயர்ந்த இரண்டு ஆடுகள்“ என்று உள்ளது. முஸ்லிமுடைய மற்றொரு அறிவிப்பில் “பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்“ என்று

கூறுவார்கள் என்று உள்ளது.

1374 காலும், முட்டியும், கண்ணைச் சுற்றியுள்ள இடமும் கருப்பு நிறமாயுள்ள செம்மறி ஆட்டுக் கிடாய் ஒன்றை குர்பானி கொடுப்பதற்காகக் கொண்டு வருமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அப்போது "ஆயிஷாவே! கல்லில் கத்தியைத் தீட்டிக் கூராக்கு!" என்று கூறினார்கள். அவ்வாறே நானும் அதைக் கூர் தீட்டி பிறகு எடுத்துக் கொடுக்க, நபி(ஸல்) அவர்கள் அதைக் கையில் எடுத்து (ஆட்டைப்) படுக்கவைத்து, பின்னர் அறுத்தார்கள் (அப்போது) அல்லாஹ்வின் பெயரால் முஹம்மதிடமிருந்தும், முஹம்மதுடைய குடும்பத்தாரிடமிருந்தும், முஹம்மதுடைய சமுதாயத்திடமிருந்தும், "இரட்சகனே! இதை ஏற்றுக் கொள்வாயாக!" என்று கூறினார்கள் என்று ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவித்ததாக முஸ்லிமில் உள்ளது.

1375 "வசதி இருந்தும் எவர் குர்பானி கொடுக்கவில்லையோ, அவர் நமது தொழும் இடத்திற்கு வரவேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், இப்னுமாஜா

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1376 ஈதுல் அல்ஹா தொழுகையில் நான் நபி(ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டேன். தொழுகை முடிந்ததும் ஏற்கனவே அறுக்கப்பட்டுவிட்டிருந்த ஓர் ஆட்டைக் கண்டார்கள். உடனே, "எவர் தொழுகைக்கு, முன் அறுத்து விட்டாரோ அவர் அதற்குப் பதில் மற்றோர் ஆட்டை அறுக்கட்டும். எவர் (இன்னும்) அறுக்கவில்லையோ, அவர் அல்லாஹ்வின் பெயர் கூறி இப்போது அறுக்கட்டும்" என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜு ன்துப் இப்னு ஸு ஃப்யான்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1377 நான்கு பிராணிகளை குர்பானிக்காக அறுப்பது கூடாது. அவையாவன: 1. நான்கு தெரியும் படியாக கண் பொட்டையான பிராணி 2. வெளிப்படையாகத் தெரியும்படியாக நோயுற்றிருக்கும் பிராணி 3. ஊனம் வெளிப்படையாகத் தெரியுமளவிற்குள்ள நொண்டியான பிராணி 4. எலும்பு மஜ்ஜை பலவீனமான வயது முதிர்ந்த பிராணி. இதை பராஉபின் ஆஸிப்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, இப்னுமாஜா

இதை திர்மிதியும் இப்னு ஹிப்பானும் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்துள்ளனர்.

1378 "குர்பானிக்காக பல் முளைத்த பிராணியையே அறுங்கள் அது உங்களுக்குக் கிடைக்காவிட்டால் (அப்போது மட்டும்) மூன்று வயது செம்மறியாட்டை அறுங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1379 "கூர்ந்து கவனித்து கண்ணிலும் காதிலும் குறை இல்லாத பிராணியையே குர்பானி கொடுக்கத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், காதின் ஓரம் கிழிக்கப்பட்டு தொங்கிக் கொண்டிருக்கின்ற பிராணியையும், பின் காது கிழிக்கப்பட்டுத் தொங்கிக் கொண்டிருக்கும் பிராணியையும், காதுகள் இரண்டும் கிழிக்கப்பட்டுப் பிளந்திருக்கின்ற பிராணியையும், முன்பற்கள் விழுந்து விட்ட பிராணியையும் குர்பானி கொடுக்கக் கூடாது என்றும் எங்களுக்கு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்" என்று அலீ(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். அஹ்மத், திர்மிதீ, நஸயீ இப்னுமாஜா, அபூதாவூத்

திர்மிதீ, இப்னுஹிப்பான், ஹாம்கி ஆகியோர் இதை ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்துள்ளனர்.

1380 நபி(ஸல்) அவர்கள் (தமது ஹஜ்ஜின் போது) அவர்களுடைய ஒட்டகங்களை அவர்கள் சார்பாக அறுத்து குர்பானி கொடுக்கும் பணியை கவனித்துக் கொள்ளும்படியும், அவற்றின் இறைச்சிகளையும், அவற்றின் தோல்களையும் (அங்கேயே) ஏழைகளிடையே பங்கிட்டு விடும் படியும் அதை அறுப்பதற்காக (அறுப்பவருக்கு) அதிலிருந்து எதையும் (கூலியாகத்) தரக்கூடாது என்றும் எனக்குக் கட்டளை இட்டார்கள்.

1381 நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் ஹு தைபிய்யா ஆண்டில் ஒட்டகம் மற்றும் மாட்டை ஏழு நபர்கள் சார்பாக குர்பானியாகக் கொடுத்தோம் என்று ஜாபிர் பின் அப்தில்லாஹ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

அகீக்கா GO TO CHAPTER INDEX

1382 ஹஸன் மற்றும் ஹு சைன்(ரலி) சார்பாக நபி(ஸல்) அவர்கள், ஆளுக்கு ஓர் ஆட்டை அகீகா கொடுத்தார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னு குஸைமா, இப்னுல் ஜாரூத் மற்றும் அப்துல் ஹக்கில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அபூஹாதமில் முர்ஸல் எனும் தரமே மேலோங்கி உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1383 அனஸ்(ரலி) வாயிலாக இப்னு ஹிப்பானில் இதே போன்று ஹதீஸ் பதிவாகியள்ளது.

1384 "ஆண் குழந்தைக்கு இரண்டு ஆடுகளுக்கு, பெண் குழந்தைக்கு ஓர் ஆடும் அகீகா கொடுக்குமாறு நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குக் கட்டளையிட்டாகள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1385 உம்மு குர்ஸ் அல்கஅபிய்யாஹ் வாயிலாக அஹ்மத் மற்றும் நால்வரில் இது போன்று ஹதீஸ் உள்ளது.

1386 "ஒவ்வொரு குழந்தையும் அதன் ஆகீகாவுக்குப் பிணையாக வைக்கப்பட்டுள்ளது. அதன் சார்பாக அது பிறந்த ஏழாவது நாளில் குர்பானி கொடுக்கப்பட வேண்டும். அதன் குர்பானி கொடுக்கப்பட வேண்டும். அதன் தலையை மழித்து அதற்குப் பெயர் சூட்ட வேண்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என சமுரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா.

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - சத்தியம் செய்தல் மற்றும் நேர்ச்சை

1387 உமர்(ரலி) அவர்கள் தம் தந்தையின் மீது சத்தியம் செய்ததைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், அவர்களை அழைத்து "எச்சரிக்கையாக இருங்கள்! உங்கள் தந்தைமார்கள் மீது நீங்கள் சத்தியம் செய்வதை அல்லாஹ் தடை செய்கின்றான்! எவரேனும் சத்தியம் செய்ய நேர்ந்தால் அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யட்டும் அல்லது மௌனமாக இருக்கட்டும்!" என்று நபி(ஸல்) அறிவிக்கிறார்கள். புகாரீ, முஸ்லிம்

1388 "உங்கள் தந்தைமார்கள் மீதும், தாய்மார்கள் மீதும் இணைவைத்து வணங்கப்படும் பொய்க் கடவுள்கள் மீதும் சத்தியம் செய்யாதீர்கள். நீங்கள் உண்மையாளராக இருந்தாலே தவிர, அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்யாதீர்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ

1389 "உன்னிடம் சத்தியம் வாங்குபவர் (நீதிபதி அல்லது பிரதிவாதி) நீ எதற்காக சத்தியம் செய்ததாக நம்புகிறாரோ, அதற்காக செய்ததாகவே உன் சத்தியம் இருக்கும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்.

1390 மற்றோர் அறிவிப்பில், "சத்தியத்தைக் கேட்டு வாங்கியவரின் (நீதிபதியின்) நோக்கத்தின் அடிப்படையில் தான் அந்த சத்தியத்திற்குப் பொருள் கொள்ளப்படும்" என்று பதிவாகியள்ளது. முஸ்லிம்

1391 "நீ ஒரு உறுதிப் பிரமாணத்திற்காக சத்தியம் செய்து விட்டு பின்னர் அதைவிடச் சிறந்ததைக் கண்டால் (அதை முறித்து விட்டு) உன்னுடைய சத்தியத்திற்குப் பரிகாரம் செய்து கொள். பின்னர் அந்த நல்லதைச் செய்து கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அப்துர் ரஹ்மான் இப்னு ஸமுரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

புகாரீயில் "நல்லதைச் செய்துவிட்டு உன்னுடைய சத்தியத்திற்கு, பரிகாரம் செய்துகொள்" என்று உள்ளது.

அபூ தாவூதுடைய மற்றொரு அறிவிப்பில், "உன்னுடைய சத்தியத்திற்குப் பரிகாரம் செய்து விட்டு பின்னர் நல்லதைச் செய்துகொள்!" என்றுள்ளது

1392 "எவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து, அல்லாஹ் நாடினால் என்பதையும் (இணைத்துக்) கூறுகிறாரோ, (அவர் அதை மீறிவிட்டால்) அதற்காகப் பரிகாரம் செய்யத் தேவை இல்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னு மாஜா

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1393 "உள்ளங்களை புரட்டுபவன் மீது ஆணையாக!" என்று நபி(ஸல்) அவர்கள் சத்தியம் செய்பவர்களாக இருந்தார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1394 நபி(ஸல்) அவர்களிடம் ஒரு கிராமவாசி வந்து, "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பெரும் பாவங்கள் எவை?" என்று கேட்டார். (அறிவிப்பாளர் முழு ஹதீஸையும் கூறினார்) அதில் "பொய் சத்தியம் (பெரும் பாவங்களில் ஒன்று)" என்றும் உள்ளது. "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! பொய் சத்தியம் என்றால் என்ன?" என்று நான் கேட்டதற்கு, "ஒரு முஸ்லிமுடைய செல்வத்தைப் பொய் சொல்லியபடி சத்தியமிட்டுப் பறித்துக் கொள்கிறானே அந்த மோசடியான சத்தியம் தான் அது" என்று கூறினார்கள் என்றும் அதில் உள்ளது. இதை அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1395 "நீங்கள் விளையாட்டாகச் செய்யும் சத்தியங்களுக்காக (அவற்றை முறித்தால்) உங்களை அல்லாஹ் தண்டிக்க மாட்டான்" என்னும் (2:225) இறைவசனத்திற்கு விளக்கம் தரும் போது, அதாவது இல்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக! 'ஏனில்லை? அல்லாஹ்வின் மீது சத்தியமாக!' என்றெல்லாம் கூறுவதைத் தான் விளையாட்டாகச் செய்யும் சத்தியம் என்று இறைவன் குறிப்பிடுகிறான் என்று ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

இது அபூதாவூதில் மர்ஃபூஉ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1396 “அல்லாஹ்வுக்கு மொத்தம் 99 பெயர்கள் உள்ளன. எவர் அவற்றை மனனம் செய்து கொள்கிறாரோ அவர் சுவர்க்கம் புகுவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

திர்மிதீ மற்றும் இப்னு ஹிப்பானில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1397 “ஒருவருக்கு நன்மை புரியப்பட்டு, அவர் தனக்கு நன்மை புரிந்தவரை நோக்கி, “ஜஸாக்கல்லாஹு கைரன் - அல்லாஹ் உங்களுக்கு நல்ல பிரதிபலனைத் தரட்டும்“ என்று கூறுவாராயின் அவர் நிறைவான முறையில் நன்றி செலுத்தியவராவார்“ நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உஸாமா இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1398 நபி(ஸல்) அவர்கள் நேர்ச்சை செய்வதைத் தடுத்து விட்டு, அதன் மூலம் கஞ்சனிடமிருந்து (ஏழை எளியவர்களுக்காக) சிறிது பொருளை வெளியே கொண்டு வரலாம் என்பதைத் தவிர, அது வேறெந்த நன்மையையும் தராது என்று கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1399 “சத்தியத்திற்குரிய பரிகாரமே நேர்ச்சைக்கும் உரியதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

“இது அல்லாஹ்வுக்காக செய்யும் நேர்ச்சை என்று குறிப்பிட்டுக் கூறாவிட்டால்“ என்னும் வாசகம் திர்மிதீயில் அதிகப்படியாக உள்ளது. இன்னும் இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1400 “இது அல்லாஹ்வுக்காகச் செய்யும் நேர்ச்சையை நிறைவேற்றக் கூடாது“ என்று இம்ரான்(ரலி) வாயிலாக முஸ்லிமில் உள்ளது.

1403 கஅபத்துல்லாஹ்விற்கு (செருப்பில்லாமல்) வெறுங்காலால் நடந்து செல்வதாக என்னுடைய சகோதரி நேர்ச்சை செய்திருந்தார். இதைப்பற்றி நபி(ஸல்) அவர்களிடம் சட்டம் கேட்குமாறு என்னிடம் கூறினார். நானும் அவ்வாறே நபி(ஸல்) அவர்களிடம் சட்டம் கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் “அவர் நடந்து செல்லட்டும்“ என்று கூறினார்கள் என உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1404 உன்னுடைய சகோதரி (இதனால்) கஷ்டப்படுவதை வைத்து அல்லாஹ் ஏதும் செய்யப் போவதில்லை. பர்தா அணிந்து கொண்டு வாகனத்தில் செல்லச் சொல்! மேலும், மூன்று நோன்புகள் நோற்கும்படி கட்டளையிடு! என்று உள்ளது.

1405 தன்னுடைய தாயார் ஒரு நேர்ச்சை செய்திருந்து அதை நிறைவேற்றாமலேயே இறந்து போனது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் ஸஅத் இப்னு உபாதா(ரலி) சட்டம் கேட்டதற்கு, “அவர் சார்பாக அதை நீர் நிறைவேற்றும்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1406 நபி(ஸல்) அவர்களது காலத்தில் சில ஒட்டகங்களை ‘புவானா‘ எனும் இடத்தில் அறுப்பதாக ஒருவர் நேர்ச்சை செய்து கொண்டார். பின்னர் அவர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து அதைப் பற்றிக் கேட்டார். அதற்கு, “அங்கு ஏதேனும் சிலை வணங்கப்பட்டு வந்ததா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், “இல்லை“ என்றார். “அறியாமைக்கால விழாக்களில் ஏதேனும் ஒரு திருவிழா அங்கு நடத்தப்பட்டு வந்ததா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அவர், “இல்லை“ என்றார். “(அப்படியானால்) நீ உன்னுடைய நேர்ச்சையைப் பூர்த்தியாக்கிக் கொள்! அல்லாஹ்விற்குமாறு செய்வதாக உள்ள நேர்ச்சையைத் தான் பூர்த்தி செய்யக் கூடாது. மேலும், உறவை முறிக்கும் நேர்ச்சையைப் பூர்த்தி செய்யக் கூடாது. மேலும் ஆதமுடைய மகனால் இயலாதவற்றில் நேர்ச்சை இல்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என சாபித் இப்னு ளஹ்ஹாக்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், தபரானீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1407 கர்தம் வாயிலாக அஹ்மதில் இதற்கு சான்றாக ஹதீஸ் உள்ளது.

1408 மக்கா வெற்றி தினத்தன்று ஒருவர் எழுந்து நின்று “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களுக்கு அல்லாஹ் மக்காவின் வெற்றியை அளித்து விட்டால் பைத்துல் மத்திஸில் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவதாக நான் நேர்ச்சை செய்திருந்தேன்“ என்று கூறினார். அதற்கு “இங்கு தொழுது கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் மறுபடியும் கேட்டதற்கு, “இங்கு தொழுது கொள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் மூன்றாவது முறை கேட்டதும், “அப்படியானால் நீ உன் விருப்பப்படி செய்து கொள்! என்று நபி(ஸல்)

அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1409 "1, மஸ்ஜிதுல் ஹராம் 2. மஸ்ஜிதுல் அக்ஸா (பைத்துல் முகத்தஸ்) 3. என்னுடைய இந்தப் பள்ளி (மஸ்ஜிதுன் நபவீ எனும் மதீனாவின் பள்ளி) ஆகிய மூன்று பள்ளிவாசல்களை தவிர வேறு எதை நோக்கியம் பயணம் மேற் கொள்ளாதீர்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு புகாரீயின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1410 "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மஸ்ஜிதுல் ஹராமில் ஓர் இரவு (தங்கி) இஃதிகாஃப் இருப்பதாக நான் அறியாமைக் காலத்தில் நேர்ச்சை செய்திருந்தேன்" என்று கூறினார். அதற்கு "இங்கு தொழுது கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் மறுபடியும் கேட்டதற்கு, "இங்கு தொழுது கொள்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர் மூன்றவாது முறை கேட்டதும், "அப்படியானால் நீ உன் விருப்பப்படி செய்து கொள்! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

"அவ்வாறே உமர்(ரலி) அவர்கள் ஓர் இரவு மஸ்ஜிதுல் ஹராமில் இஃதிகாஃப் இருந்தார்" என்னும் வாசகம் புகாரீயில் அதிகமாக இடம் பெற்றுள்ளது.

FIRST CHAPTER PREVIOUS CHAPTER NEXT CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - நீதி வழங்குதல்

- நீதி வழங்குதல்
- சாட்சிகள்
- தாவா மற்றும் ஆதாரம்

நீதி வழங்குதல் GO TO CHAPTER INDEX

1411 "நீதிபதிகள் மூன்று வகைப்படுவர். இருவர் நரகத்திலும், ஒருவர் சுவர்க்கத்திலும் புகுவர். 1. நீதியை அறிந்து அதன் படி செயல்படுபவர். இவர் சுவர்க்கத்தில் புகுவார். 2. நீதியை அறிந்தும் அதன் படி தீர்ப்பளிக்காமல், தீர்ப்பில் அநீதி செய்தவர். இவர் நரகத்தில் புகுவார். 3. உண்மையை அறியாமல் தன்னுடைய அறியாமையுடனேயே மக்களுக்குத் தீர்ப்பு வழங்கியவர் நரகத்தில் புகுவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புரைதா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ இப்னுமாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1412 "எவரிடத்தில் தீர்ப்பளிக்கும் பொறுப்பு தரப்பட்டு விட்டதோ அவர் கத்தியில்லாமல் அறுக்கப்பட்டவர் போன்றாவார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, இப்னுமாஜா.

இது இப்னு குஸைமா மற்றும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1413 "நீங்கள் தலைமைப் பதவிக்கு ஆசைப்படவீர்களானால், மறுமையில் அதுவே உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும். அது உலக வாழ்வில் இனிமையானது மறுமையில் கசப்பானது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1414 "தீர்ப்பளிப்பவர் நன்கு ஆராய்ந்து பின்னர் சரியான முடிவை அடைந்தால் அவருக்கு இரு நன்மைகள் உண்டு. தீர்ப்பளிப்பவர் நன்கு ஆராய்ந்து தீர்ப்பளித்தும் அதில் தவறு ஏற்பட்டு விட்டால், அவருக்கு ஒரு நன்மையுண்டு" என்று நபி(ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1415 "கோபமாக இருக்கும் எவரும் அந்நிலையில் இருவருக்கு மத்தியில் தீர்ப்பளிக்க வேண்டாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என அபூ பக்ரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1416 "உன்னிடம் எவரேனும் தீர்ப்பு கேட்டு வந்தால் மற்றவரின் (பிரதி வாதியின்) பேச்சைக் கேட்காமல் தீர்ப்பளிக்காதே! (ஏனெனில்,) அப்போது தான் எவ்வாறு தீர்ப்பு அளிப்பது என்பதை நீ அறிந்து கொள்வாய்!" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். "அதற்குப் பின் நான் அவ்வாறே தீர்ப்பளித்து வந்தேன்" என அலீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

இது திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்னு மதீனீயில் இது 'பலமானது' என்று கூறப்பட்டுள்ளது. இப்னு ஹிப்பானில் 'ஸஹீஹ்' எனும் தரத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1417 இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் வாயிலாக ஹாம்மில் இதற்குச் சான்றாக ஓர் அறிவிப்பு உள்ளது.

1418 "நீங்கள் என்னிடம் வழக்குகளைக் கொண்டு வருகிறீர்கள். உங்களில் ஒருவர் மற்றொருவரை விட வாக்கு சாதுர்யமிக்கவராக இருக்கக் கூடும். எனவே, அவரிடம் கேட்டதை அடிப்படையாக வைத்து நான் அவருக்கு

(சாதகமாக) தீர்ப்பளித்துவிடுகிறேன். ஆகவே, எவருக்கு (அவருக்கு உரிமையில்லாத) அவரது சகோதரனின் உரிமையிலிருந்து சிறிதை (அவருக்குரியது என்று) தீர்ப்பளித்து விடுகின்றேனோ, அவருக்கு நான் நரக நெருப்பின் ஒரு துண்டைத் தான் துண்டித்துக் கொண்டிருக்கின்றேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1419 “எந்த சமுதாயத்தின் வலியவர்களிடமிருந்து அதிலுள்ள எளியவர்களுக்கு (அவர்களின்) உரிமை பெற்றுத் தரப்படுவதில்லையோ, அந்த சமுதாயத்தைத் தூய்மையானது என்று எப்படிச் சொல்ல முடியும்?“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என, ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான்.

1420 பஸ்ஸாரில் புரைதா(ரலி) வாயிலாக இதற்குச் சான்றாக ஹதீஸ் உள்ளது.

1421 இப்னு மாஜாவில் அபூஸயீத்(ரலி) வாயிலாக இதற்குச் சான்றாக ஹதீஸ் உள்ளது.

1422 “மறுமை நாளில் (உலகில்) நீதி செலுத்திய நீதிபதி விசாரணைக்கு அழைக்கப்படுவார். அவரிடத்தில் கடுமையான முறையில் கணக்கு வாங்கப்படும். அப்போது, “நான் என்னுடைய வாழ்நாளில் எந்த இருவருக்கிடையிலும், தீர்ப்பளிக்ககாமல் இருந்ததிருந்தால், நன்றாக இருந்திருந்தால், நன்றாக இருந்திருக்குமே!“ என்று கூறுவார் என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு ஹிப்பான், பைஹகீ

பைஹகீயில், “எந்த இருவருக்கிடையிலும்“ என்பதற்குப் பதிலாக “ஒரு காய்ந்த பேரீச்சம் பழம் தொடர்பாகவும்“ எனும் வாசகம் உள்ளது.

1423 “பெண்ணிடம் தன் விவகாரங்களை ஒப்படைக்கும் சமுதாயம் எப்போதும் உருப்படாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூபக்ரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1424 “முஸ்லிம்களுடைய விவகாரங்களில் சிலவற்றுக்குப் பொறுப்பாளராக அல்லாஹ் எவரை நியமித்து விட்டானோ, அவர் முஸ்லிம்களில் தேவையுடையவர்களையும், ஏழை எளியவர்களையும் அவர்களது தேவையை நிறை வேற்றிக் கொள்ளவிடாமல் தடுத்துவிட்டால், அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றிக் கொள்ளவிடாமல் தடுத்துவிடுவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ மர்யம் அல் அஸ்தீ(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ

1425 (மார்க்க மற்றும் நீதிமன்றத்) தீர்ப்புக்காக இலஞ்சம் வாங்குபவரையும், இலஞ்சம் கொடுப்பவரையும் நபி(ஸல்) அவர்கள் சபித்தார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, இப்னுமாஜா, அஹ்மத்

திர்மிதீயில் ஹஸன் எனும் தரத்திலும் இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

1426 அப்துல்லாஹ் இப்னு அம்ர்(ரலி) வாயிலாக திர்மிதீ அபூதாவூத் மற்றும் இப்னுமாஜாவில் இதற்குச் சான்றாக ஹதீஸ் உள்ளது.

1427 நீதிவிசாரணையின் போது வாதியும், பிரதிவாதியும் நீதிபதிக்கு முன்பு (சரிசமமாக) அமர வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸு பைர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகள்

GO TO CHAPTER INDEX

1428 “சாட்சியமளிப்பவர்களில் சிறந்தவர் யாரென உங்களுக்கு அறிவிக்கட்டுமா? கேட்பதற்கு முன்பே சாட்சி சொல்பவரே அவர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸைத் இப்னு காலித் அல்ஜு ஹனீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1429 “உங்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையை சேர்ந்தவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள், பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள் அவர்களிடம் சாட்சியம் கேட்காமலேயே சிலர் சாட்சி சொல்வர், அவர்கள் மோசடி செய்வார்கள். அவர்கள் மீது நம்பிக்கை வைக்கப்படாது. (ஏனெனில்) அவர்கள் நேர்ச்சை செய்யமாட்டார்கள். அதில் அவர்களது உண்மை நிலை வெளிப்பட்டு விடும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இம்ரான் இப்னு ஹு சைன்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1430 “மோசக்காரன், மோசக்காரியின் சாட்சியம் செல்லாது. பொறாமைக்காரன் தன் (முஸ்லிம்) சகோதரனுக்கு

எதிராகச் சொல்லும் சாட்சியமும் செல்லாது. ஒரு வீட்டாருக்கு ஆதரவாக அவர்களின் பணியாள் (அல்லது ஊழியர்) சொல்லும் சாட்சியமும் செல்லாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத்

1431 "நகரவாசிக்கெதிராக கிராமவாசி அளிக்கும் சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்படாது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், இப்னுமாஜா

1432 உமர்(ரலி) அவர்கள் உரை நிகழ்த்திய போது, "நபி(ஸல்) அவர்களது காலத்தில் சிலர் (தவறிழைத்த போது) வஹீ மூலம் கண்டித்து தண்டிக்கப்பட்டார்கள். இப்போது வஹீ அறிவிக்கப்படுவது நின்று விட்டதால், உங்கள் செயல்களில் எது வெளிப்படுகிறதோ, அதற்காகவே இப்போது நாம் உங்களைப் பிடிப்போம்" என்று கூறினார்கள். புகாரீ

1433 "பொய் சாட்சியைப் பெரும் பாவங்களில் மிகப் பெரியதாக நபி(ஸல்) அவர்கள் கருதினார்கள்" என அபூபக்ராஹ்(ரலி) அறிவிக்கிறார். (நீண்ட ஹதீஸ்) புகாரீ, முஸ்லிம்

1434 நபி(ஸல்) அவர்கள் ஒரு மனிதரிடம், "நீ சூரியனைப் பார்க்கிறாயா?" என்று கேட்டதற்கு அவர் "ஆம்" என்றார். "அதைப்போன்று தெளிவானவற்றில் சாட்சி சொல்! இல்லையேல் விட்டுவிடு!" என்று கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு அதீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் தவறுதலாக அப்படிச் சொல்லி விட்டார்.

1435 நபி(ஸல்) அவர்கள் ஒரு சத்திதயத்தையும் ஒரு சாட்சியைக் கொண்டும் தீர்ப்பளித்தார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம், அபூதாவூத் மற்றும் நஸயீ

இது நஸயீயில் சிறந்தது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

1436 அபூதாவூத் மற்றும் திர்மிதீயில் அபூஹுரைரா(ரலி) வாயிலாக மேற்கண்ட ஹதீஸ் இடம் பெற்றுள்ளது. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாவா மற்றும் ஆதாரம் GO TO CHAPTER INDEX

1437 "மக்களுக்கு, அவர்களுடைய வாதத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் கோருவதையெல்லாம் (பிரதிவாதியை விசாரிக்காமல்) கொடுத்து விட்டோம் என்றால் மக்கள், பலரது உயிருக்கும் உடமைக்கும் உரிமை கொண்டாடத் தொடங்கி விடுவார்கள். எனினும், பிரதிவாதியின் மீது (தன் மீது) சுமத்தப்பட்ட குற்றத்தை மறுத்திட) சத்தியம் செய்யும் கடமை உள்ளது" என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1438 "தாவா செய்தவன் (வாதி) ஆதாரம் கொண்டு வர வேண்டும். அதை மறுப்பவன் (பிரதிவாதி) சத்தியம் செய்ய வேண்டும்" என நபி(ஸல்) கூறினார்கள். பைஹகீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவாகியள்ளது.

1439 ஒரு கூட்டத்தை நபி(ஸல்) அவர்கள் சத்தியம் செய்யுமாறும் கட்டளையிட்ட போது அவர்கள் விரைவாக சத்தியம் செய்ததைக் கண்டு, "யார் சத்தியம் செய்வது?" என்று குலுக்கல் போடக் கட்டளையிட்டார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1440 "எவரேனும் பொய் சத்தியம் செய்து ஒரு முஸ்லிமுடைய உரிமையைப் பறித்து விட்டால், அவருக்கு அல்லாஹ் நரகத்தை விதித்து விட்டான். மேலும், சுவர்க்கத்தை விலக்கி விட்டான். மேலும், சுவர்க்கத்தை விலக்கி விட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (இதைக் கேட்ட ஒருவர்) "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு சாதாரணப் பொருளுக்காகவுமா?" என்று கேட்டார். "அராக் மரத்தின் ஒரு கிளையாக இருந்தாலும்" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலாளித்தார்கள் என அபூ உமாமா அல்ஹாரினிய்யீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1441 "எவன் ஒரு சத்தியம் செய்து அதன் காரணமாக ஒரு முஸ்லிமுடைய சொத்தைப்பறித்துக் கொள்கிறானோ அதில் அவன் பொய்யனாக இருப்பின் மறுமையில் அல்லாஹ்வை அவன் தன் மீது கோபமான நிலையில் சந்திப்பான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அஷ்அஸ் இப்னு கைஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1442 ஒரு கால்நடை விஷயத்தில் இரண்டு மனிதர்களுக்கிடையே சச்சரவு ஏற்பட்டது. அவர்கள் இருவரிடமுமே (அது யாருடையது என்ற) ஆதாரம் எதுவும் இல்லை. (எனவே அந்த வழக்கு தம்மிடம் கொண்டுவரப்பட்ட

போது) அவர்கள் இருவருக்கிடையில் பாதிப் பாதியாகப் பிரித்து நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என அபூ மூஸா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், மற்றும் நஸயீ

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது. இதன் அறிவிப்பு சரியானது, சிறந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1443 "எவர் என்னுடைய மிம்பருக்கு அருகே (அல்லது மிம்பரில் நின்று) பாவகரமான (பொய்) சத்தியம் செய்கிறாரோ அவர் தன்னுடைய இருப்பிடத்தை நரகமாக்கிக் கொள்ளட்டும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத் மற்றும் நஸயீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1444 "மூன்று வகையான மனிதர்களுடன் மறுமையில் அல்லாஹ் பேசமாட்டான். அவர்களைப் பார்க்கவும் மாட்டான். அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்குத் துன்பம் தரும் வேதனையும் உண்டு. 1. வானாந்திரத்தில் மிஞ்சியிருக்கும் தண்ணீரை வழிப்போக்கர்கள் பயன்படுத்த விடாமல் தடுப்பவன் 2. அசருக்குப் பின் ஒருவருடன் வியாபாரம் செய்து அந்தப் பொருளை இன்ன விலைக்கு வாங்கினேன் என்று பொய் சத்தியம் செய்து அதை உண்மை என்று நம்ப வைத்தவன். ஆனால் அது உண்மை அல்ல. 3. உலக லாபத்திற்காகவே ஆட்சித் தலைவரிடம் பைஅத் செய்தவன். அவன் ஏதேனும் கொடுத்தால், அவனுக்கு நன்றி செலுத்துவான் எதையும் கொடுக்கவிட்டால் அவனுக்கு மாறு செய்வான்" என்று நபி(ஸல்) கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1445 ஓர் ஒட்டகம் தொடர்பாக இருவர் சண்டையிட்டுக் கொண்டனர். அவர்களில் ஒவ்வொருவரும் இந்த ஒட்டகம் என்னிடம் தான் பிரசவிக்கப்பட்டது என்றனர். தம் வாதத்திற்கான சான்றுகளைச் சமர்ப்பித்தனர். அந்த ஒட்டகம் எவரிடமிருந்தோ, அவருக்கே (அது உரியது) என்று நபி(ஸல்) அவர்கள் தீர்ப்பளித்தார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

1446 உரிமையைக் கோருபவரின் பக்கமே நபி(ஸல்) அவர்கள் சத்தியத்தைத் திருப்பி விட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். தாரகுத்னீ

மேற்கண்ட இரண்டு ஹதீஸு ம் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1447 ஒருமுறை நபி(ஸல்) அவர்கள் தமது முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் மின்ன என்னிடம் வந்தார்கள். "(ஆயிஷாவே!) முஜஸ்ஸிஸ் அல் முத்லிஜியை நீ பார்க்கவில்லையா? அவர் ஸைது இப்னு ஹாரிஸா மற்றும் உஸாமா இப்னு ஸைதைப் பார்த்து இந்தக் கால்கள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்று கூறினார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

FIRST CHAPTER PREVIOUS CHAPTER LAST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - சுதந்திரம்

1448 “எந்த முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை விடுதலை செய்கின்றானோ, அல்லாஹ் விடுதலை செய்யப்பட்டவனது உறுப்புக்குப் பகரமாக அவனது ஒவ்வொரு உறுப்பையும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றுவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1449 “(அடிமைகளான) இரண்டு முஸ்லிம் பெண்களை விடுதலை செய்த முஸ்லிம் ஒருவன் நரகத்திலிருந்து விடுதலை பெற அவ்விரு முஸ்லீம் பெண்களே காரணமாவர்“ என்று அபூ உமாமா(ரலி) வாயிலாக திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1450 “ஒரு முஸ்லிம் பெண்ணை விடுதலை செய்யும் ஒரு முஸ்லிம் பெண் நரகத்திலிருந்து விடுதலை பெற (விடுவிக்கப்பட்ட) அந்தப் பெண்ணே காரணமாவாள்“ என்று கஅப் இப்னு முர்ரா(ரலி) வாயிலாக அபூ தாவூதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1451 “எந்தச் செயல் சிறந்தது“ என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டதற்கு, “அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைப்பதும், அவனது வழியில் போராடுவதும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். “எப்படிப்பட்டோரை விடுதலை செய்வது சிறந்தது?“ என்று நான் கேட்டதற்கு “எஜமானனிடம் இருக்கக் கூடிய அடிமைகளிலேயே அவர்களுக்கு மிகவும் விருப்பமான விலை உயர்ந்த அடிமையை விடுதலை செய்வது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1452 “எவர் ஓர் அடிமையில் தனக்குரிய பங்கை விடுதலை செய்கிறாரோ, அவரிடம் அந்த அடிமையின் (முழு) விலையையும் எட்டுகின்ற அளவிற்குச் செல்வம் இருந்தால், (அந்த அடிமையின்) நியாயமான விலையை மதிப்பிடப்பட்டு, தனது பங்குதாரார்களுக்கு அவர்களின் பங்குக்கான விலையை கொடுத்து அந்த அடிமையை (முழுமையாக) விடுதலை செய்துவிட வேண்டும். இல்லையெனில், அவர் எந்த அளவுக்குத் தான் விடுதலை செய்தவராவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1453 புகாரி, முஸ்லிம் அறிவித்துள்ள ஹதீஸில் “இல்லையெனில் அவ்வடிமையின் (நியாயமான) விலை மதிப்பிடப்பட்டு (மீதி பங்குகளின் விலையை தருவதற்காக) உழைத்து சம்பாதித்துக் கொள்ள அனுமதிக்கப்படவேண்டும். அதிக சிரமத்தை தரக்கூடாது“ என்று அபூஹுரைரா(ரலி) வாயிலாக இடம் பெற்றுள்ளது.

1454 “ஒருவர் தன்னுடைய தந்தையை அடிமையாகக் காண்பாராயின் அவரை விலைக்கு வாங்கி விடுதலை செய்வதைத் தவிர்த்து வேறு எதுவும் அவருடைய தந்தைக்குப் கைம்மாறு செய்ததாகாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1455 “எவரேனும் (தனக்கு மணம் புரிந்து கொள்ள) விலக்கப்பட்ட நெருங்கிய உறவினருக்கு எஜமானனாம் விட்டால் அந்த உறவினர் (தானாகவே) சுதந்திரம் பெற்றவராம் விடுவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா இப்னு ஜுன்துப்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, இப்னுமாஜா

1456 ஒருவர் தன் மரணத் தருவாயில் தன்னிடமிருந்த ஆறு அடிமைகளை விடுதலை செய்தார். அவர்களை தவிர அவரிடம் வேறு சொத்து எதுவுமில்லை. அப்போது நபி(ஸல்) அவர்களை அழைத்து மூன்று பிரிவாகப் பிரித்து அவர்களுக்கு மத்தியில் குலுக்கலில் போட்டார்கள். பின்னர் (தேர்ந்தெடுக்கப்பட்ட) இருவரை விடுதலை செய்தார்கள். மீதமுள்ள நான்கு பேரையும் அடிமைகளாகவே இருக்கச் செய்தார்கள். மேலும், (மரணத் தருவாயில் இருந்த) அவரைக் கடுமையாக கண்டித்தார்கள் என இம்ரான் இப்னு ஹுசைன்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1457 “நீ வாழ்க்கை முழுவதும் நபி(ஸல்) அவர்களுக்கு ஊழியராக இருக்க வேண்டும்“ என்ற நிபந்தனையின் பேரில் உம்மு ஸலமா(ரலி) தமது அடிமையை விடுதலை செய்தார் என ஸஃபீனா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ மற்றும் ஹாம்கி.

1458 “அடிமையை விடுதலை செய்தவருக்கே ‘வலா‘ உரியதாகும்“ என்ற நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நீண்ட ஹதீஸ் சுருக்கம்) புகாரீ, முஸ்லிம்

1459 “வலா எனும் உறவு இரத்த உறவைப் போன்றதாகும். அதை விற்கவோ அன்பளிப்புச் செய்யவோ கூடாது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அஷ்ஷா..பிஈ

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம், புகாரீ, முஸ்லிமில் வேறு வார்த்தைகளில் உள்ளது.

முதப்பா முகாதப் உம்முல் வலத்

1460 அன்ஸார்களில் ஒருவர் தன்னிடமிருந்த ஓர் அடிமையை “நீ என் மரணத்திற்குப் பிறகு விடுதலையாவாய்“ என்று அறிவித்து விட்டார். ஆனால், அவரிடத்தில் அதைத் தவிர வேறு சொத்து எதுவுமில்லை. இச்செய்தி நபி(ஸல்) அவர்களிடம் எட்டிய போது, “அவரை (அந்த அடிமையை) என்னிடமிருந்து யார் விலைக்கு வாங்குவார்“ என்று கேட்டார்கள். உடனே நுஅய்கி இப்னு அப்தில்லாஹ்(ரலி) அவரை எண்ணூறு திர்ஹம்கள் கொடுத்து விலைக்கு வாங்கினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

நஸயீயுடைய மற்றொரு அறிவிப்பில் அவருக்குக் கடனிருந்தது. எனவே அந்த அடிமையை நபி(ஸல்) அவர்கள் எண்ணூறு திர்ஹம்களுக்கு விற்பனை செய்து அவரிடம் கொடுத்து “உன்னுடைய கடனை அடை“ என்று கூறினார்கள் என்று உள்ளது.

1461 “அடிமை விடுதலைப் பத்திரம் (சுதந்திரப் பத்திரம்) எழுதிக் கொடுத்தவன், ஒரு திர்ஹம மீதம் வைத்திருக்கும் வரையிலும் அடிமையாகவே இருப்பான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷு ஐபு தமது தந்தை மற்றும் பாட்டனார் வாயிலாக அறிவிக்கிறார்.

இது அபூ தாவூதில் ‘ஹஸன்‘ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ மற்றும் நஸயீயில் உள்ளது. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1462 “(பெண்களே!) நீங்கள் உங்கள் அடிமைக்கு குறிப்பிட்ட தொகை செலுத்தினால், விடுதலை செய்து விடுவதாக வாக்களித்திருந்து சுதந்திரப்பத்திரம் எழுதப்பட்டு அவனிடம் அதைச் செலுத்துவதற்கான பணமும் இருக்குமாயின் (பெண் - எஜமானி) அவனிடமிருந்து தன்னை மறைத்து (பர்தா போட்டு)க் கொள்ள வேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், நஸயீ, திர்மிதீ இப்னுமாஜா

1463 “விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட அடிமை கொல்லப்பட்டு விட்டால், அவன் எந்த அளவிற்கு (ஒப்பந்தப் பணத்தைச்ச செலுத்தி) சுதந்திரமானவனாகியள்ளானோ அந்த அளவிற்கு சுதந்திரமானவனுக்குரிய இரத்த ஈட்டுத் தொகை (அவனது வாரிசுகளுக்கு வழங்கப்பட வேண்டும். எந்த அளவிற்கு தொகை செலுத்தப்படாமல் இன்னும் (விடுவிக்கப்படாமல்) அடிமையாக இருக்கின்றானோ, அந்த அளவிற்கு அடிமைக்குரிய இரத்த ஈட்டுத் தொகை (அவனது வாரிசுகளுக்கு) வழங்கப்பட வேண்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ்(ரலி) அறவிக்கிறார். அஹ்மத், அபூதாவூத், மற்றும் நஸயீ

1464 நபி(ஸல்) அவர்கள் மரணம் எய்திய போது தம்முடைய வெள்ளை நிறம் கோவேறுக் கழுதை, ஆயுதம் மற்றும் அவர்கள் தர்மம் செய்த நிலம் இவற்றைத் தவிர திர்ஹம், தீனார், அடிமைப் பெண், அடிமை இது போன்ற எதையுமே விட்டுச் செல்லவில்லை என்று உம்முல் மூ..மினீன் (இறை நம்பிக்கையாளர்களின் தாய்) ஜு வைரியாவின் சகோதரர் அம்ர் இப்னு ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ,

1465 “தனது எஜமானனுக்குக் குழந்தை பெறுகின்ற அடிமைப் பெண் அவனது மரணத்திற்குப் பின் சுதந்திரம் பெற்றவளாவாள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

இது இப்னு மாஜா மற்றும் ஹாம்மில் ளயீ..ப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு சாரார் இதை உமர்(ரலி) மீது மவ்கூ..ப் செய்துள்ளனர்.

1466 “எவர் அல்லாஹ்வின் பாதையில் போராடுபவனுக்கு உதவுகிறாரோ அல்லது கடன்பட்டிருப்பவரது கஷ்ட நிலையை நீக்குகிறாரோ அல்லது சுதந்திரப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட அடிமையை விடுதலை செய்கிறாரோ அவருக்கு நிழலே இல்லாத அந்த மறுமை நாளில் அல்லாஹ் தன் நிழலை அவருக்கு அளிக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஸஹ்ல் ஹு னை..பி(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத். இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

PREVIOUS CHAPTER FIRST CHAPTER

நீங்கள் கேட்கும் நபிமொழிகள் - ஒழுக்கம்

- ஒழுக்கம்
- ஒழுக்கம் மற்றும் உறவைப் பேணுதல்
- உலகப் பற்றின்மையும் பேணுதலும்
- தீய பண்புகளைக் குறித்து எச்சரிப்பது
- நல்லொழுக்க ஆர்வம்

ஒழுக்கம் GO TO CHAPTER INDEX

1467 “ஒரு முஸ்லிமிற்கு மற்றொரு முஸ்லிம் மீது ஆறு உரிமைகள் உள்ளன. 1. நீ அவனைச் சந்திக்கும் போது ஸலாம் சொல்வது. 2. அவன் உன்னை விருந்திற்கு அழைத்தால் அதற்கு பதிலளிப்பது (ஏற்றுக் கொள்வது) 3. அவன் உன்னிடம் அறிவுரை கேட்டால் சரியான அறிவுரை கூறுவது 4. அவன் தும்மி “அல்ஹம்து லில்லாஹ்“ என்று கூறினால், அதற்கு (யர்ஹமுக்கல்லாஹ் என்று) பதிலளிப்பது. 5 அவன் நோய்வாய்ப்பட்டால், அவனை நலம் விசாரிப்பது. 6. அவன் மரணித்து விட்டால் அவனைப் பின் தொடர்ந்து (அடக்கம் செய்யச்) செல்வது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1468 வாழ்க்கைத் தரத்தில்) உங்களுக்குக் கீழிருப்போரை நீங்கள் பாருங்கள். உங்களுக்கு மேலிருப்போரை பார்க்காதீர்கள். ஏனெனில், அல்லாஹ் உங்கள் மீது புரிந்துள்ள அருட்கொடைகளை நீங்கள் சாதாரணமாகக் கருதாமலிருக்க அதுவே சரியானதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1469 நல்லவை மற்றும் பாவத்தைப் பற்றி நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு, “நற்குணமே, நற்செலும் நன்மையுமாகும். எது உன் உள்ளத்தில் நெருடலை ஏற்படுத்துமோ எதை மக்கள் அறிந்து கொள்வதை நீ விரும்ப மாட்டாயோ அதுவே பாவமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என நவாஸ் இப்னு ஸம் ஆன்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1470 “நீங்கள் மூன்றுபேர் (ஒன்றாக) இருக்கும் போது மக்களுடன் கலந்து விடும் வரை மூன்றாமவரை விட்டுவிட்டு இருவர் மட்டும் ரகசியமாக எதையும் பேச வேண்டாம். ஏனெனில் அது அவருக்கு வருத்தத்தை (கவலையை) ஏற்படுத்தும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

இங்கு முஸ்லிமின் வாசகம் இடம் பெற்றுள்ளது.

1471 “ஒரு மனிதர் அமர்ந்திருக்கும் இடத்தில் நீங்கள் அமர்வதற்காக அவரை அந்த இடத்தை விட்டு எழுப்பாதீர்கள். மாறாக, சிறிது இடம் விட்டு விசாலமாக்கிக் கொள்ளுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1472 “உங்களுடன் எவரேனும் உணவு உண்டால் கைவிரல்களைச் சுவைக்காத அல்லது சுவைக்கச் செய்யாதவரை தனது கையைக் கழுவ வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1473 “சிறியவர் பெரியவருக்கும், நடந்து செல்பவர் அமர்ந்திருப்பவருக்கும், குறைந்த எண்ணிக்கையிலுள்ளவர்கள்

அதிகமான எண்ணிக்கையலுள்ளவர்களுக்கும் ஸலாம் சொல்லட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

முஸ்லிமுடைய மற்றோர் அறிவிப்பில் “சவாரியில் செல்பவர் நடந்து செல்பவருக்கு (ஸலாம் சொல்லட்டும்)“ என்று உள்ளது.

1471 “(ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரைக் கடந்து செல்லும் போது) கூட்டத்தார் அனைவரின் சார்பாகவும் அவர்களில் ஒருவர் சலாம் சொல்வதும் மற்றொரு கூட்டத்தாரின் சார்பாக அவர்களில் ஒருவர் பதில் சொல்வதும் போதுமானதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத், பைஹக்கீ

1475 “நீங்கள் கிறிஸ்தவர்களையும், யூதர்களையும் சந்தித்தால் (முதலில்) நீங்கள் ஸலாம் சொல்லாதீர்கள். மேலும், குறுகிய பாதையில் அவர்களைச் செல்லச் செய்யுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1476 “உங்களில் ஒருவர் தும்மினால் அவர் அல்ஹம்துலில்லாஹ் (அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்)“ என்று கூறட்டும். அவருடைய சகோதரர் அவருக்காக “யர்ஹமுகல்லாஹ் (அல்லாஹ் உன்மீது கிருபை செய்யட்டும்)“ என்று கூறட்டும். தும்மியவர் அதைக் கேட்டு, “யஹ்தீகுமுல்லாஹு வயுஸ்லிஹ் பாலகும்...... (அல்லாஹ் உமக்கு நேர்வழியைத் தந்து உமது நிலையை சீராக்கட்டும்) என்று கூறட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1477 “உங்களில் எவரும் நின்று கொண்டு குடிக்க வேண்டாம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1478 “உங்களில் ஒருவர் காலணியை அணிந்தால் தமது வலக் காலில் முதலில் அணியட்டும்.“ பின்னர் அதைக் கழற்றும் போது இடக் காலிலிருந்து முதலில் கழற்றட்டும். மேலும் அணியும் போது வலக் காலை முதலில் நுழைந்து அதைக் கழற்றும் போது இடக்காலிலிருந்து முதலில் கழற்றட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

இதில் இடக்கால் வரை என்பது வரையில் முஸ்லிமிலும் மீதி மாலிக் திர்மிதீ, அபூதாவூத், ஆகியவைகளிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1479 “உங்களில் ஒரு காலில் மட்டும் செருப்பணிந்து நடக்க வேண்டாம். இரு கால்களிலுமே அணிந்து கொள்ளட்டும். அல்லது இரண்டையும் கழற்றி விடட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அலீ(ரலி) அறவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1480 “பெருமையடித்தவனாக தன்னுடைய ஆடையை பூமியில் பரவவிட்டு நடப்பவனை அல்லாஹ (மறுமையில்) ஏறெடுத்துப் பார்க்க மாட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1481 “நீங்கள் புசிக்கும்போது வலக்கரத்தால் புசியுங்கள். பருகும் போது வலக் கரத்தால் பருகுங்கள். ஏனெனில், நிச்சயமாக ஷைத்தான் தனது இடக் கரத்தால் புசிக்கிறான். மேலும் தனது இடக் கரத்தால் குடிக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1482 “வீண் விரயம், மற்றும் பெருமையின்றி புசி, பருகு! உடுத்து!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அம்ர் இப்னு ஷுஐபு(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், அஹ்மத்

இது புகாரீயில் முஅல்லக் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒழுக்கம் மற்றும் உறவைப் பேணுதல் GO TO CHAPTER INDEX

1483 “எவர் தனது உணவில் அபிவிருத்தியையும், நீண்ட ஆயுளையும் விரும்புகிறாரோ அவர் தனது உறவினர்களுடன் உறவை வலுப்படுத்தட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1484 “உறவுகளைத் தூண்டிப்பவன் சுவர்க்கம் புகமாட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜுபைர் இப்னு முத்இ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1485 “தாய்மார்களைத் துன்புறுத்துவதையும், பெண் பிள்ளைகளை உயிருடன் புதைப்பதையும், (அல்லாஹ்வின் கட்டளையை) நிறைவேற்றாமல் இருப்பதையும் (பிறர் செல்வத்தை) அபகரிப்பதையும், வீண்பேச்சுக்களையும், அதிகமாகக் கேள்வி கேட்பதையும், சொத்துக்களை வீணடிப்பதையும், அல்லாஹ் உங்கள் மீது ஹராமாக்கி (விலக்கி) விட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முகீரா இப்னு ஷு ஃபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1486 “அல்லாஹ்வின் மகிழ்ச்சி பெற்றோரின் மகிழ்ச்சியில் உள்ளது. அல்லாஹ்வின் கோபம் பெற்றோரின் கோபத்தில் உள்ளது“ அல்லாஹ்வின் கோபம் பெற்றோரின் கோபத்தில் உள்ளது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1487 “எவனுடைய கரத்தில் என்னுடைய உயிர் இருக்கிறதோ! அவன் மீது ஆணையாக, ஒருவர் தனக்கு விரும்புவதையே தன்னுடைய அண்டை வீட்டாருக்கு விரும்பாதவரை இறை நம்பிக்கை கொண்டவராக மாட்டார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1488 “எப் பாவம் பெரியது?“ என்று நான் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டேன். அதற்கு, “அல்லாஹ் உன்னைப் படைத்திருயீகக நீ அவனுக்கு இணை வைப்பது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் “பின்பு, எது?“ என்று நான் கேட்டேன். அதற்கு, உன்னுடன் புசிக்கும் என்ற அச்சத்தில் உன்னுடைய குழந்தையைக் கொல்வது“ என்று கூறினார்கள். “பின்னர் எது?“ என்று நான் கேட்டேன். அதற்கு“உன்னுடைய அண்டை வீட்டானின் மனைவியுடன் விபச்சாரம் செய்வது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1489 தன்னுடைய பெற்றோரைத் திட்டுவது பெரும் பாவங்களில் உள்ளதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறிய போது மனிதன் தன்னுடைய பெற்றோரைத் திட்டுவானா?“ என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு “ஆம்! ஒருவன் மற்றொருவனுடைய தந்தையைத் திட்டுகிறான் அவன்(பதிலுக்கு) இவனுடைய தந்தையைத் திட்டுகிறான். அதற்கு அவன் இவனுடைய தாயைத் திட்டுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1490 “ஒரு முஸ்லிம் தன்னுடைய சகோதரனை மூன்று நாள்களுக்கு மேல் வெறுத்து விலம் இருப்பது அனுமதிக்கப்பட்டதல்ல. இருவரும் சந்திக்கும் போது அவரை விட்டு இவரும் இவரை விட்டு அவரும் முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள். இந்நிலையில் (எவர்) (முதலில் ஸலாம் சொல்கிறாரோ) அவரே சிறந்தவர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஅய்யூப்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1491 “ஒவ்வொரு நல்ல காரியமும் தர்மமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1492 “நல்ல காரியம் எதையுமே இழிவாகக் கருதாதே! நீ உன்னுடைய சகோதரனைச் சிரித்த முகத்துடன் சந்தித்தால் அதுவும் நல்ல காரியமே!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார்.

1493 “நீ (நல்ல) குழம்பு வைத்தால் அதில் தண்ணீரை அதிகமாக்கி உன்னுடைய அண்டை வீட்டாருக்கும் கொடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1494 “எவரொருவர் ஒரு முஸ்லிமிற்கு ஒரு உலகக் கஷ்டத்தை நீக்குகிறாரோ, மறுமை நாளில் அல்லாஹ் அவருடைய கஷ்டத்தை நீக்குகிறான். எவரொருவர் ஒரு முஸ்லிமுடைய குறையை மறைக்கின்றாரோ மறுமையில் அல்லாஹ் அவருடைய குறையை மறைக்கின்றான். அடியான் எதுவரை தன்னுடைய சகோதரனுக்கு உதவியாக இருக்கிறானோ அதுவரை அல்லாஹ் அவனுக்கு உதவியாக இருக்கிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1495 “எவரொருவர் (மற்றொருவருக்கு) நன்மைக்கு வழிகாட்டுகிறாரோ, சகோதரனுக்கு உதவியாக இருக்கிறானோ அதுவரை அல்லாஹ் அவனுக்கு உதவியாக இருக்கிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1495 “எவரொருவர் (மற்றொருவருக்கு) நன்மைக்கு வழிகாட்டுகிறாரோ, நன்மை செய்பவருக்குக் கொடுக்கப்படும் பிரதிபலனைப் போன்றே அவருக்கும் கொடுக்கப்படும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1496 “எவரொருவர் அல்லாஹ்வின் பெயரால் உங்களிடம் பாதுகாப்புக் கோருகிறாரோ அவருக்கு பாதுகாப்பு அளியுங்கள். மேலும் எவரொருவர் உங்களிடம் அல்லாஹ்வின் பெயரால் (தன் தேவையைக்) கேட்கிறாரோ அவருக்குக் கொடுங்கள். மேலும் எவர் உங்களுக்கு நன்மை செய்கிறாரோ, நீங்களும் பதிலுக்கு அவருக்கு நன்மை செய்யுங்கள். உங்களிடம் எதுவும் இல்லை எனில் அவருக்காக துஆ செய்யுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

உலகப் பற்றின்மையும் பேணுதலும் GO TO CHAPTER INDEX

1497 “நிச்சயமாக ஹலால் (அனுமதிக்கப்பட்டது) தெளிவாக்கப்பட்டு விட்டது“ ஹராம் (விலக்கப்பட்டது) தெளிவாக்கப்பட்டுவிட்டது. இவை இரண்டிற்குமிடையில் சந்தேகத்திற்கிடமான பல உள்ளன. மக்களில் பெரும்பாலோர் இதைப் பற்றி அறியாமாட்டார். எவர் சந்தேகத்திற்கிடமானதை விட்டுவிட்டாரோ அவர் தான் மார்க்கத்தையும், தன் மானத்தையும் காத்துக் கொண்டார். எவர் சந்தேகத்திற்கிடமானதில் விழுந்து விடுகிறாரோ அவர் ஹராமில் விழுந்து விடுகிறார். எப்படியென்றால் மேய்ப்பாளன் (தனது ஆடுகளை) வேலி வேயப்பட்ட வயல்களை சுற்றி மேய்க்கின்றான். அப்போது (அந்த ஆடுகள் வேலியைத் தாண்டி வயலில்) இறங்கி விடக் கூடும். அறிந்து கொள்ளுங்கள்! ஒவ்வோர் அரசனுக்கும் ஒரு வேலியுண்டு. அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வினால் வேலி வேயப்பட்ட வயல்கள் அவனால் தடை செய்யப்பட்ட ஹராமான காரியங்களாகும். அறிந்து கொள்ளுங்கள்! உடலில் ஒரு சதைத்துண்டு உள்ளது. உடல் முழுவதும் சரியாக இருக்கும். அது கெட்டுவிடும். அறிந்து கொள்ளுங்கள்! அது இதயமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன் என நுஃமான் இப்னு பஷீர்(ரலி) அறிவிக்கிறார். நுஃமான் இதைக் கூறும்போது தமது இரண்டு காதுகளின்பால் தமது இரண்டு விரல்களைக் கொண்டு சென்றார். புகாரீ, முஸ்லிம்

1498 “திர்ஹம், தீனார் மற்றும் பூம்பட்டு போர்வையின் அடிமை நாசமாகட்டும்! (ஏனெனில்) அவை தனக்குக் கொடுக்கப்பட்டால் இவன் மகிழ்ச்சியடைகிறான். இல்லையெனில் அதிருப்தியடைகிறார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1499 நபி(ஸல்) அவர்கள் என்னுடைய தோளைப் பிடித்தார்கள். அப்போது, “நீ உலகில் வழிப்போக்கள் போன்றோ இருந்து கொள்“ என்று கூறினார்கள் என, இப்னு உமர் அறிவிக்கிறார். மேலும் இப்னு உமர்(ரலி) அவர்கள், நீ மாலையையடைந்து விட்டால், காலையை அடைந்து விட்டால் மாலையை எதிர் பார்க்காதே! ஆரோக்கியமாக இருக்கும் போதே நோய்க் காலத்திற்காக எதையாவது தேடிக் கொள்! இன்னும் நீ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே (உனது மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கைக்காக) எதையாவது தேடிக்கொள்!“ என்று கூறுபவராக இருந்தார். புகாரீ

1500 “யார் ஒரு சமூகத்தாருக்கு ஒப்பாம் (வாழ்வின் எந்த அம்சத்திலும்) நடந்து கொள்கிறாரோ அவரும் அவர்களைச் சேர்ந்தவரே“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1501 நான் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் இருந்தேன். அப்போது அவர்கள், “தம்பி! நீ அல்லாஹ்வின் கட்டளைகளை மனத்தில் வை! அல்லாஹ் உன்னைப் பாதுகாப்பான். மேலும் நீ உன் கவனத்தை அல்லாஹ்வின் பால் செலுத்து. நீ அவனை உன் முன் காண்பாய் (அறிவாய்). (உன் தேவை எதையேனும்) கேட்டால், அல்லாஹ்விடம் மட்டுமே கேள்! மேலும் நீ உதவி தேடினால் அல்லாஹ்விடமே மட்டுமே உதவி தேடு!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1502 ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு ஒரு செயலைக் காட்டுங்கள். நான் அதைச் செய்தால் அல்லாஹ்வும், மக்களும் என்னை நேசிக்க வேண்டும்“ என்று கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், “உலக மோகத்தைக் குறைத்துக் கொள்! அல்லாஹ் உன்னை நேசிப்பான். மக்களிடம் உள்ளவற்றின் மீது உன் மோகத்தைக் குறைத்துக் கொள்! மக்கள் உன்னை விரும்புவார்கள்“ என்று கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1503 “மக்களிடமிருந்து தன் தேவைகளை எதிர்பார்க்காதவனாக அந்தரங்க வாழ்க்கையில் சிறந்தவனாக வாழும்

அடியானை அல்லாஹ் நேசிக்கின்றான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸஅத் இப்னு அபீவக்காஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1504 "தனக்கு தேவையில்லாதவற்றை (தனக்கு சம்பந்தமில்லாதவற்றை) விட்டு விடுவதே முஸ்லிமுடைய சிறந்த பண்பாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1505 "ஆதமுடைய மகன் தன் வயிற்றை விட அதிகமாக ஒரு தீய பாத்திரத்தை நிரப்புவதில்லை" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மிக்தாம் இப்னு மஃதீ கரிப்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

1506 "ஆதமுடைய மக்கள் அனைவரும் தவறு செய்யக் கூடியவர்களே! அவர்களில் சிறந்தவர்கள் தம் பாவங்களுக்காக மனம் வருந்தி திருந்துபவர்கள் ஆவர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறவிக்கிறார். திர்மிதீ, இப்னு மாஜா. இது பலமான ஹதீஸாகும்.

1507 "அமைதியாக இருப்பது அறிவுடைய செயலாகும். மேலும் இதை மிகக் குறைந்த மக்களே விரும்புவர்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். பைஹகீ

இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்னும் இது ஸஹீஹ் எனும் தரத்திலும் உள்ளது. இது லுக்மான்(அலை) அவர்களது கூற்றில் உள்ளதாகும்.

தீய பண்புகளைக் குறித்து எச்சரிப்பது

GO TO CHAPTER INDEX

1508 "பொறாமை கொள்ளாதிருக்கும்படி உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், நெருப்பு விறகைத் தின்று விடுவதைப் போன்று பொறாமை நற்செயல்களைத் தின்று விடும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத்

1509 அனஸ்(ரலி) வாயிலாக இப்னு மாஜாவில் 1508வது ஹதீஸ் போன்றே பதிவாகியள்ளது.

1510 "கோபத்தில் கொதிப்பவன் வீரனல்ல. மாறாக கோபமூட்டப்படும்போது தன்னைத் தானே அடக்கிக் கொள்பவனே வீரன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1511 "அநியாயம் (எவன் செய்கிறானோ அது அவனுக்காக) மறுமை நாளில் (அடுக்கடுக்கான) பல இருள்களாக வந்து நிற்கும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1512 "அநியாயத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில், அது மறுமை நாளில் (உங்கள் முன்பு) இருளாக வந்து நிற்கும், இன்னும் தீய கஞ்சத்தனத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அது உங்களுக்கு முன்பிருந்தோரை அழித்துவிட்டது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1513 "உங்களைக் குறித்து நான் மிகவும் அஞ்சுவதெல்லாம் நீங்கள் சிறிய இணைவைப்பில் ஈடுபட்டு விடுவீர்கள் என்பது தான். பிறருக்குக் காட்டிக் கொள்வதறக்காக வணக்கத்திலும், நற்செயல்களிலும் ஈடுபடுவதே சிறிய இணைவைப்பாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மஹ்மூத் இப்னு லபீத்(ரலி) அறிவிக்கிறார். இது அஹ்மதில் ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1514 "நயவஞ்சகனுடைய அடையாளங்களை மூன்று 1. அவன் பேசினால் பொய்யே பேசுவான். 2. அவன் வாக்குறுதி கொடுத்தால் மாறு செய்வான். 3. அவனிடம் ஒரு பொருள் அல்லது பணி தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் அதில் மோசடி செய்வான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1515 "அவன் சண்டையிட்டால் கெட்ட வார்த்தைகளால் திட்டுவான்" என்று அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) வாயிலாக புகாரீ, முஸ்லிமில் பதிவாகியள்ளது.

1516 "முஸ்லிமைத் திட்டுவது பாவமாகும். அவனுடன் போராடுவது இறைநிராகரிப்பாகும்" என்று நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1517 "நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென எச்சரிக்கின்றேன். ஏனெனில் செய்திகளில் மிகவும்

பொய்யானது சந்தேகமேயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1517 “நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென எச்சரிக்கின்றேன். ஏனெனில், செய்திகளில் மிகவும் பொய்யானது சந்தேகமேயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1518 “குடிமக்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஒரு மனிதரிடம் அல்லாஹ் ஒப்படைத்திருக்க, தன் பிரஜைகளை மோசடி செய்தவனாக அவன் மரணிக்கும் நாளில் உயிர்துறப்பானாயின், அவன் மீது சொர்க்கத்தை அல்லாஹ் ஹராமாக்கி விடுவான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என மஃகில் இப்னு யஸ்ஸார்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1519 “என்னுடைய இரட்சகனே! எவரேனும் ஒருவர் ஒரு வேலைக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபின், (அவரது பொறுப்பில் கவனமில்லாமல்) அவர் அதில் கஷ்டத்தை ஏற்படுத்தினால், அவர் மீது நீ கஷ்டத்தை உண்டாக்குவாயாக!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1520 “உங்களில் எவரேனும் சண்டையிட்டுக் கொண்டால் (எதிரியின்) முகத்தை (சேதப்படுத்தாமல்) தவிர்த்து விடட்டும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1521 ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம், “அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு உபதேசம் செய்யுங்கள்“ என்று கேட்டார். அதற்கு, “கோபம் கொள்ளாதே! என்று அவர்கள் கூறினார்கள். அவர் மறுபடியும் கேட்டார். அப்போதும், “கோபம் கொள்ளாரே!“ என்றே நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1522 “நிச்சயமாக சிலர் அல்லாஹ்வுடைய சொத்தில் நியாயமின்றி நுழைகிறார்கள். அவர்களுக்கு மறுமையில் நரகம் தான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என கவ்லா அன்ஸாரி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1523 அல்லாஹ்விடமிருந்து அறிவிப்பவற்றில் (ஹதீஸ் குதுஸியில்) நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். “என்னுடைய அடியார்களே! அநியாயத்தை எனக்கு நானே விலக்கிக் கொண்டேன். இன்னும் உங்களுக்கிடையேயும் அதை விலக்கி விட்டேன். எனவே, நீங்கள் உங்களுக்கிடையேயும் ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாதீர்கள்“ என்று அல்லாஹ் கூறுகிறான் என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1524 “புறம் பேசுதல் என்றால் என்ன வென்று அறிவீர்களா?“ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நபித்தோழர்கள், “அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவர்“ என்று கூறினார்கள். “உன்னுடைய சகோதரனைப் பற்றி அவன் பிறரிடம் சொல்ல விரும்பாத ஒரு விஷயத்தை அவனைப் பற்றி நீ பிறரிடம் கூறுவது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது ஒருவர், “நான் கூறுகின்ற குறை என் சகோதரனிடம் உண்மையிலேயே காணப்பட்டாலுமா?“ என்று கேட்டார். அதற்கு, “நீ அவனிடம் கானும் குறையைச் சொன்னால், புறங்கூறியவனாவாய். அவனிடம் காணப்படாததைச் சொன்னால் அவன் மீது அவதூறு கற்பித்தவனாவாய்“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1525 “ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்! ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர்கள்! ஒருவருக்கொருவர் தீய வார்த்தை பேசிக்கொள்ளாதீர்கள். இன்னும் 'நஜ்ல்' செய்யாதீர்கள். இன்னும் ஒருவருடைய வியாபாரத்தில் மற்றவர் (இடையே புகுந்து) வியாபாரம் செய்யாதீர்கள். நீங்கள் அல்லாஹ்வுடைய அடியார்களாகவும் (உங்களுக்குள்) சகோதரர்களாகவும் இருங்கள், ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமிற்கும் சகோதரனாவான். அவன், அவன் மீது அநியாயம் செய்யாமாட்டான். அவன் அவனை ஏமாற்ற மாட்டான் அவன் அவனை இழிவுபடுத்த மாட்டான்“ இறையச்சம் இங்கே இருக்கிறது என்று (கூறி) தன்னுடைய நெஞ்சை மூன்று முறை சுட்டிக் காண்பித்து, “மனிதன் தன்னுடைய சகோதரனை இழிவு படுத்துவதே பெரும் தீங்கிற்குப் போதுமானதாகும். முஸ்லிமுடைய இரத்தமும் அவனுடைய சொத்தும், மேலும் அவனது தன்மானமும் மற்றொரு முஸ்லிம் மீது ஹராம் (விலக்கப்பட்டது) ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1526 “என்னுடைய இரட்சகனே! என்னைத் தீயபழக்கங்களிலிருந்தும், தீய செயல்களிலிருந்தும் தீய செயல்களிலிருந்தும், தீய இச்சைகளிலிருந்தும், இன்னும் கொடும் நோய்களிலிருந்தும் காப்பாயாக!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறுவார்கள் என குத்பா இப்னு மாலிக்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹாம்மில் 'ஸஹீஹ்' எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு அதன் வாசகமே இடம் பெற்றுள்ளது.

1527 “உன் முஸ்லிம் சகோதரனுடன் சண்டையிடாதே! அவனை கேலி செய்யாதே! அவனிடம் உன்னால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதியைத் தராதே!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். இது திர்மிதீயில் ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1528 “உலோபித்தனமும், தீயகுணமும் ஓர் இறைநம்பிக்கையாளனிடம் ஒன்று சேராது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறனார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1529 “இருவர் ஒருவருக்கொருவர் திட்டிக் கொண்டால் அதன் பாவம் (திட்ட) ஆரம்பித்தவரைச் சாரும். இது எதுவரை எனில், அநியாயம் செய்யப்பட்டவர் வரம்பு மீறாதவரை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1530 “எவன் ஒரு முஸ்லிமிற்குத் தீங்கு இழைக்கின்றானோ, அல்லாஹ் அவனுக்கு தீங்கிழைப்பான். மேலும் எவன் ஒருவன் முஸ்லிமைக் கஷ்டத்தில் ஆழ்த்துகிறானோ, அல்லாஹ் அவனைக் கஷ்டத்தில் ஆழ்த்துவான்“என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூ ஸிர்மா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1531 “பகைமை கொள்பவர்களும். தீயவர்களும் (தான்) அல்லாஹ்விடத்தில் கெட்டவர்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபுத்தர்தா(ரலி) அறிவிக்கிறார். இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1532 “இறைநம்பிக்கையாளன் குத்திப் பேசுபவனாகவும், அடிக்கடி சாபமிடுபவனாகவும் இருப்பது இல்லை மானங்கெட்ட செயல்புரிபவனாகவும், (சண்டையில்) தீய வார்த்தைகள் பேசுபவனாகவும் இருப்பதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்தா(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி. இது தாரகுத்னீயில் மர்ஃபூஃ எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1533 “இறந்தவர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், அவர்கள் தங்களின் செய்கையின் பால் சென்று விட்டனர்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1534 “புறம் பேசுபவன் சுவர்க்கம் புக மாட்டான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஹுதைஃபா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1535 “எவர் தன்னுடைய கோபத்தைத் தடுத்துக் கொள்கிறாரோ, அவரிடமிருந்து அல்லாஹ் தனது தண்டனையைத் தடுத்துக் கொள்கிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். தப்ரானி

1536 1535-வது ஹதீஸிற்குச் சான்றாக இப்னு அபித் துன்யாவில் இப்னு உமர்(ரலி) அவர்களின் ஹதீஸ் இடம்பெற்றுள்ளது.

1537 “ஏமாற்றுக்காரன், உலோபித்தனமுள்ளவன், தன் பொறுப்பின் கீழுள்ளவர்களுக்குத் தீங்கு செய்பவன் ஆகிய எவரும் சுவர்க்கம் புக மாட்டார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ பக்கர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1538 ஒரு கூட்டம் வெறுக்கக் கூடிய நிலையில், அவர்களது பேச்சைக் கேட்பதற்கு எவர் முயற்சிக்கிறாரோ, மறுமை நாளில் அவரது காதில் (காய்ச்சிய) ஈயம் ஊற்றப்படும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்.

1539 “எவர் மக்களுடைய குறைகளை விட்டுவிட்டுத் தம் குறைகளைக் காண்கிறாரோ, அவருக்கு ‘தூபா‘ எனும் நிழல் தரும் மரம் (சுவர்க்கத்தில்) உண்டு“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். பஸ்ஸார். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1540 “தன்னைத் தானே பெரியவன் என்று எண்ணிக்கொண்டும், பெருமையாக பூமியில் நடந்து கொண்டும் இருப்பவன் (மறுமையில்) அவன் மீது கோபமாயிருக்கும் நிலையில் அல்லாஹ்வைக் சந்திப்பான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். ஹாம்கி. இது பலமான ஹதீஸாகும்

1541 “அவசரப்படுவது ஷைத்தானின் (செயல்களில்) ஒன்றாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸஹ்ல் இப்னு ஸஃது(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1542 “துர்க்குறி என்பது தீயகுணமேயாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஆயிஷா(ரலி)

அறிவிக்கிறார். அஹ்மத். இது பலவீனமான அறிவிப்பாகும்

1545 "சபிப்பவர்கள் மறுமையில் பரிந்துரை செய்பவர்களாகவோ, சாட்சி சொல்பவர்களாகவோ இருக்க மாட்டார்கள்" என்று நபி(ஸல்) கூறினார்கள் என அபூ தர்தா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1544 "எவனொருவன் தன் முஸ்லிம் சகோதரனை பாவம் புரியத் தூண்டுகிறானோ அவன் அந்தப் பாவத்தைத் தானும் செய்யாதவரை மரணிக்க மாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபல்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்கதிஃ எனும் தரத்திலும் உள்ளது.

1545 "மக்களைச் சிரிக்க வைப்பதற்காகப் பொய் சொல்பவனுக்குக் கேடுதான். அவனுக்குக் கேடுதான். அவனுக்கு கேடு தான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என பஹ்ஜ் இப்னு ஹகீம்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதீ. இது பலமான ஹதீஸாகும்.

1546 "நீ எவரைப் பற்றியாவது புறம் பேசினால் அதற்குப் பரிகாரம் அவரிடம் மன்னிப்புக் கேட்பதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அனஸ்(ரலி) அறிவிக்கிறார். ஹாரிஸ் இப்னு அபீஉஸாமா. இது ளயீஃப் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1547 "கடுமையாகச் சண்டையிடுபவன், மனதில் பகைமையை வைத்திருப்பவன். அல்லாஹ்விடம் மிகவும் வெறுப்புக்குரியவன் ஆவான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

நல்லொழுக்க ஆர்வம்

GO TO CHAPTER INDEX

1548 உண்மையில் நிலைத்திருங்கள். ஏனெனில், உண்மை நன்மையில் கொண்டு செல்கிறது. நன்மை, சுவர்க்கத்திற்குக் கொண்டு செல்கிறது. மனிதன் எப்போதும் உண்மையையே பேசிக்கொண்டு உண்மையைத் தேடிக் கொண்டே இருந்தால், அல்லாஹ் அவனை உண்மையாளர்களில் ஒருவனாக எழுதுகிறான். பொய் பேசுவது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், பொய் தீயவழியில் கொண்டு செல்கிறது. மேலும், தீயவழி நரகத்திற்குக் கொண்டு செல்கிறது. மனிதன் எப்போதும் பொய்யே பேசிக்கொண்டு பொய்யின் தேட்டத்திலேயே இருந்தால், அவனைப் பொய்யர்களில் ஒருவனாக எழுதுகிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1549 "நான் உங்களை சந்தேகப்பட வேண்டாமென எச்சரிக்கின்றேன். ஏனெனில், செய்திகளில் மிகவும் பொய்யானது சந்தேகமேயாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1550 "பாதைகளில் அமர்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள் "அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் பேசிக் கொள்வதற்கு எங்களுக்கு சபைகள் தேவைப்படுகின்றனவே" என்று கூறினர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "நீங்கள் பேசித்தான் ஆக வேண்டும் என்றால், பாதைக்கு அதன் உரிமையைக் கொடுத்து விடுங்கள்" என்று சொன்னார்கள். மக்கள், "அதன் உரிமைகள் யாவை?" என்று வினவ, நபி(ஸல்) அவர்கள், "(அந்நியப் பெண்களைக் கூர்ந்து பார்க்காமல்) பார்வையைத் தாழ்த்திக் கொள்வதும், பிறருக்குத் துன்பம் விளைவிக்காமலிருப்பதும், சலாமுக்கு பதிலுரைப்பதும், நன்மை புரியும்படிக் கட்டளையிட்டுத் தீமையிலிருந்து தடுப்பதும் தாம் அவை" என்று பதிலளித்தார்கள்.

1551 "அல்லாஹ் யாவருக்கு நல்லதை நாடுகிறானோ, அவருக்கு மார்க்க அறிவைக் கொடுக்கின்றான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆவியா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1552 "நல்லொழுக்கத்தை விட மறுமையின் தராசில் வேறு எதுவும் கனமானதாக இருக்காது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூ தர்தா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1553 "வெட்கம் இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1554 "நீ வெட்கம் கொள்ளவில்லை எனில் நீ விரும்பியதை செய்து கொள்! என்பது முந்தைய இறைத்தூதுத்துவ

மொழிகளில் ஒன்றாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1555 பலமான இறை நம்பிக்கையாளன் பலமற்ற இறை நம்பிக்கையாளனைவிட அல்லாஹ்விடத்தில் சிறந்தவனும் விருப்பத்திற்குரியவனும் ஆவான். (இறை நம்பிக்கையுள்ள) ஒவ்வொருவரிலும் நன்மையுண்டு. இன்னும் உனக்கு பயனளிப்பதை நீ ஆசைப்படு. இன்னும் அல்லாஹ்விடமே உதவி தேடு! உனக்கு ஏதாவது நேர்ந்துவிடின், நான் இன்னின்னவாறு? செய்திருந்தால், இப்படியாகியிருக்குமே! என்று கூறாதே!" அல்லாஹ் எதை நாடினானோ, எது விதியோ அது நடந்துவிட்டது என்று கூறிக்கொள்! ஏனெனில், அந்த வார்த்தை ஷைத்தானின் சூழ்ச்சிக்கு வழி திறக்கும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1556 "ஒருவர் மற்றவர் மீது அக்கிரமம் புரியாமல், ஒருவர் மற்றவர் மீது பெருமை கொள்ளாமல் பணிந்தவர்களாக இருங்கள் என்று எனக்கு வஹீ (இறைச் செய்தி) அறிவிக்கப்பட்டுள்ளது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இயாள் இப்னு ஹிமார்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1557 "எவர் தன்னுடைய சகோதரனுடைய மானத்தை அவனறியாமலேயே காக்கிறாரோ அல்லாஹ் அவருடைய முகத்தை மறுமையில் நெருப்பிலிருந்து காக்கிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்தா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1558 அஸ்மா பின்த்து ய[illegible]த் வாயிலாக 1557-வது ஹதீஸ் போன்றே அஹ்மதில் பதிவாகி உள்ளது.

1559 "தர்மம் எந்த செல்வத்தையும் குறைத்து விடாது. அடியான் மன்னிப்புக் கோருவதால் அல்லாஹ் அவனுடைய மதிப்பை (மேலும்) அதிகப்படுத்தவே செய்கிறான். அல்லாஹ்வுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொண்ட எந்த மனிதனையும் அல்லாஹ் உயர்த்தாமல் இருக்க மாட்டான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1560 "மக்களே! ஸலாமைப் பரப்புங்கள்! உறவினரோடு சேர்ந்து வாழுங்கள்! உணவளியுங்கள்! மேலும் இரவில் மக்கள் தூங்கும் போது நீங்கள் (எழுந்து) தொழுங்கள். அப்போது நீங்கள் சுவர்க்கத்தில் அமைதியுடன் நுழையலாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸலாம்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1561 "நலம் நாடுவதே மார்க்கமாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் மூன்று முறை சொன்னார்கள். அப்போது, "அல்லாஹ்வின் தூதரே! யாருக்கு நலம் நாடுவது?" என்று நாங்கள் கேட்டோம். அதற்கு, "அல்லாஹ்வுக்கும் அவனுடைய வேதத்திற்கும் அவனுடைய தூதருக்கும் முஸ்லிம்களின் தலைவர்களுக்கும் மற்றும் முஸ்லிம் பொது மக்களுக்கும் நலம் நாடுவதாகும்" என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள் என தமீமுத்தாரி(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1562 "(மக்களை) அதிகமாக சொர்க்கத்தில் புகுத்துபவனை இறையச்சமும் நற்குணமும் தாம்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1563 "நீங்கள் உங்கள் சொத்துக்களால் மக்களைக் கவர முடியாது. மாறாக, உங்களுடைய மலர்ந்த முகம் மற்றும் நற்குணத்தால் தான் (அவர்களைக்) கவர முடியும்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூயக்லா. துஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1564 "இறை நம்பிக்கையாளன் இறை நம்பிக்கை கொண்டுள்ள தன்னுடைய சகோதரனுக்குக் கண்ணாடி போலாவான்" என்று நபி(ஸல்) அவர்கள்கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத். இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1565 "மக்களுடன் உறவாடி அவர்களிடமிருந்து வரக்கூடிய துன்பங்களைச் சகித்துக் கொள்ளும் இறைநம்பிக்கையாளன், மக்களுடன் உறவாடாத, அவர்களிடமிருந்து வரக்கூடிய துன்பங்களைச் சம்காத இறை நம்பிக்கையாளனை விட, மேலானவன்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். இது இப்னு மாஜாவில் ஹஸன் எனும் தரத்திலும் மற்றும் திர்மிதீயில் ஸஹாபியின் பெயரில்லாமலும் இடம் பெற்றுள்ளது.

1566 "என்னுடைய இரட்சகனே! என்னை அழகாகப் படைத்தது போன்று என்னுடைய ஒழுக்கத்தையும் அழகுபடுத்துவாயாக!" என்று நபி(ஸல்) அவர்கள் பிராத்தித்தார்கள் என, இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். அஹ்மத். இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரார்த்தனை மற்றும் தியானம்

1567 “என்னுடைய அடியான் என்னை நினைவு கூர்ந்து கொண்டும், என் தியானத்தால் தன் உதடுகளை அசைத்துக் கொண்டு இருக்கும் வரையில் நான் அவனுடன் இருக்கிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். இப்னுமாஜா

இது இப்னுஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்திலும் புகாரீயில் முஅல்லக் எனும் தரத்திலும் உள்ளது.

1568 “அல்லாஹ்வை நினைவு கூர்வதை விட அல்லாஹ்வின் வேதனையிலிருந்து தன்னை அதிகமாகக் காக்கக் கூடிய வெறெந்த நற்செயலையும் ஆதமின் மகன் செய்வதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என முஆத் இப்னு ஜபர்(ரலி) அறிவிக்கிறார்.

இப்னு அபீஷைபா மற்றும் தப்ரானியீல் இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1569 “அல்லாஹ்வை நினைவு கூர்ந்தபடி மக்கள் ஒரு சபையில் அமரும் போது வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றனர். இறைக்கருணை அவர்களை அரவணைத்துக் கொள்கிறது. அல்லாஹ் அவர்களைப் பற்றித் (தனது அவையில்) தன்னிடம் இருப்பவர்களிடம் (அவர்களைப் புகழ்ந்தபடி) நினைவு கூர்கிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1570 “மக்கள் ஓரிடத்தில் அமர்ந்து அங்கு அல்லாஹ்வை நினைவு கூராமலும், நபி(ஸல்) அவர்கள் மீது சலவாத் கூறாமலும் இருப்பார்களாயின், அதுவே மறுமை நாளில் அவர்கள் மீது பேரிழப்பாகவே வந்து முடியும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1571 “எவர் (லாயிலாஹா இல்லல்லாஹு வஹ்...) வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை துணை இல்லை. அதிகாரங்கள் எல்லாம் அவனுக்கே உரியன புகழனைத்தும் அவனுக்கே உரியன. அவன் அனைத்து விஷயங்கள் மீதும் ஆற்றல் உடையவன்“ என்று எவர் பத்துமுறை ஓதுகிறாரோ அவர் இஸ்மாயீல்(அலை) அவர்களின் சந்ததியினரிலிருந்து நான்கு அடிமைகளை விடுவித்தவரைப் போன்றவர் ஆவார்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹய்யூப் அன்ஸாரி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1572 “எவர் நூறுமுறை ஸு ப்ஹானல்லாஹி வபிஹமதிஹி“ (அல்லாஹ் தூயவன். அவனது புகழைக் கொண்டே)“ என்று ஓதுகிறாரோ அவருடைய பாவம் கடல் நுரையளவு இருப்பினும் மன்னிக்கப்படும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1573 நிச்சயமாக, நான் உனக்காக நான்கு வார்த்தைகளைக் கூறியுள்ளேன். இன்னு வரையில் நீ பேசியுள்ள வார்த்தைகளையும் இதையும் எடைபோட்டால் அவை அனைத்தையும் விட இது கடுமையானதாக இருக்கும். அது (ஹு ப்ஹானல்லாஹி) அல்லாஹ் பரிசுத்தமானவன். இன்னும் அவன் அவனது படைப்பினங்கள் அளவு புகழ்பெற்றவன். இன்னும் அவனுடைய அரியணையின் கனமும் அவனுடைய வார்த்தைகளின் மையிக்கு சமமானது“ என்று நபி(ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள் என, ஜு வைரியாபின்த் அல்ஹாரிஸ்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1574 1. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு நாயனில்லை. 2. அல்லாஹ் மிகப்பெரியவன். 3. புகழனைத்தும் அல்லாஹ்விற்கே 4. தீங்கிலிருந்து விலம்க் கொள்ளவும் நன்மைகள் செய்யவும் அல்லாஹ்வின் உதவியின்றி (வேறு) இல்லை ஆகிய வாசகங்கள் என்றும் நிலையான நன்மை பயக்கும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஸயீத் அல் குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். நஸயீ

இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1575 “நான்கு வார்த்தைகள் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானவை. அவற்றில் எதிலிருந்து ஆரம்பித்தாலும் சரி உனக்கு அது தீங்கிழைக்காது. அவை ‘சுப்ஹானல்லாஹ், அல்ஹம்து லில்லாஹ், லாஹிலாஹ இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர்‘ ஆகியனவாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸமுரா இப்னு ஜு ன்துப்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1576 “அப்துல்லாஹ் இப்னு கைஸே! சுவர்க்கத்தின் புதையல்களில் ஒன்றை நான் உனக்கு அறிவிக்கட்டுமா?“ அது ‘லாஹவ்லவலா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்பதாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூமூஸா அல் அஷ்அரீ(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

“அல்லாஹ்வைத் தவிர வேறு புகலிடம் இல்லை“ என்பதும் நஸயீயில் உள்ளது.

1577 “துஆ (பிரார்த்தனை) வணக்கமாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என நு∴மான் இப்னு பஷீர்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னுமாஜா.

இது திர்மிதீயில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1578 ‘துஆ தான் வணக்கத்தின் கரு‘ எனும் ஹதீஸ் அனஸ்(ரலி) வாயிலாக மர்∴பூஉ எனும் தரத்தில் திர்மிதீயில் உள்ளது.

1579 “அல்லாஹ்விடத்தில் துஆவை விட கண்ணியம் வாய்ந்தது எதுவுமில்லை“ என்பது அபூஹுரைரா(ரலி) வாயிலாக மர்∴பூஉ எனும் தரத்தில் திர்மிதீயில் உள்ளது. இன்னும் இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1580 “பாங்கிற்கும் இகாமத்திற்குமிடையில் செய்யப்படும் துஆ (பிரார்த்தனை) ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படுவதில்லை“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அனஸ்(ரலி) அறவிக்கிறார். நஸயீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1581 நிச்சயமாக உங்கள் இரட்சகன் அதிக வெட்கமுள்ளவன். கொடையாளி, தன்னுடைய அடியான் கையை ஏந்திவிட்டால், அதை வெறுமனே திருப்பி அனுப்புவதற்கு அவன் வெட்கப்படுகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஸல்மான்(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், திர்மிதீ மற்றும் இப்னு மாஜா.. இது ஹாகியில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1582 “நபி(ஸல்) அவர்கள் துஆவிற்காகத் தமது கரங்களை உயர்த்தினால் அதை முகத்தில் தடவிக் கொள்ளாத வரை அகற்ற மாட்டார்கள்“ என்று உமர்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ

இதற்குச் சான்றாக பல ஹதீஸ்கள் உள்ளன.

1583 அபூ தாவூதிலும் பிறவற்றிலும், இப்னு அப்பாஸ்(ரலி) வாயிலாக உள்ள ஒரு ஹதீஸ், இது ஹஸன் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1584 “எவர் அதிகமாக என் மீது ஸலவாத் கூறினார்களோ, அவர்களே மறுமையில் என்னுடன் அதிக நெருக்கமுள்ளவர்களாக இருப்பார்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். திர்மிதீ. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1585 “இறைவா! நீயே எனது இரட்சகன்! வணக்கத்திற்குரியவர் உன்னைத் தவிர வேறெவருமில்லை! நீயே என்னைப் படைத்தாய்! நான் உனது அடியான்! என்னால் இயன்ற அளவு நான் உனக்களித்த வாக்குறுதியில் நிலைத்திருப்பேன். நான் செய்த செயல்களின் தீங்கை எல்லாம் விட்டு உன்னிடம் பாதுகாவல் தேடும்றேன்! நீ என் மீது செய்துள்ள கருணையை நான் ஒப்புக் கொள்கின்றேன். மேலும், உன் முன்பு என் பாவங்களை ஒப்புக் கொள்கின்றேன். ஆகவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவங்களை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறுயாரும் இல்லை“ என்று அடியான் ஓதுவதுதான் ஸய்யிதுல் இஸ்திக்∴பார் எனும் பாவமன்னிப்பிற்கான பெரும் துஆ ஆகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஷத்தாத் இப்னு அனஸ்(ரலி) அறிவிக்கிறார். புகாரீ

1586 “எனது இரட்சகனே! எனது மார்க்கம், எனது உலகம், எனது குடும்பம் மேலும் எனது சொத்து ஆகியவற்றின் நலனை உன்னிடமே நான் வேண்டுகிறேன். எனது இரட்சகனே! எனது மானத்தைக் காத்தருள்! எனது பயத்தைப் போக்கிவிடு! என் முன்னாலிருந்தும் என் வலப்பக்கத்திலிருந்தும் இடப்பக்கத்திலிருந்தும் என் மேலிருந்தும் என்னைக் காத்தருள்! மேலும், என் கீழிருந்து நான் அறியாத வண்ணம் பிடிக்கப்படாமலிருக்க உனது உயர்வைக் கொண்டு பாதுகாப்புத் தேடுகிறேன்“ என்று நபி(ஸல்) அவர்கள் காலையிலும் மாலையிலும் ஓதாமல் இருக்கமாட்டார்கள என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, இப்னுமாஜா. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1587 “எனது இரட்சகனே! உனது அருள் நீங்கி விடுவதிலிருந்தும், உனது பாதுகாப்பு மாறிவிடுவதிலிருந்தும், உன்னுடைய தண்டனை மற்றும் உன்னுடைய கோபத்திலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்“ என்று

நபி(ஸல்) அவர்கள் பிரார்த்திப்பார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1588 “என்னுடைய இரட்சகனே! கடன் சுமை, எதிரிகளின் தாக்குதல் மற்றும் (என்னைப் பார்த்து) எதிரிகள் மகிழ்ச்சியடைதல் ஆகியவற்றிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்“ என நபி(ஸல்) அவர்கள் பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ. இது ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1589 “எனது இரட்சகனே! நிச்சயமாக நீயே அல்லாஹ் உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறெவரும் இல்லை!“ என்று நான் சாட்சி கூறுவதைக் கொண்டு உன்னிடம் நான் வேண்டுகிறேன். நீ தனித்தவன், தேவையற்றவன். அவன் யாரையும் பெறவுமில்லை அவன் யாராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு நிகர் எவருமில்லை“ என்று ஒரு மனிதர் கூறிக் கொண்டிருந்ததை நபி(ஸல்) அவர்கள் செவியேற்று, “அல்லாஹ்விடம் அவனது பெயரைக் கொண்டு கேட்கும் போது அவன் கொடுக்கின்றான். மேலும், துஆ செய்யும்போது அங்கீகரிக்கின்றான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என புரைதா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ, மற்றும் இப்னுமாஜா. இது இப்னு ஹிப்பானில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1590 “எனது இரட்சகனே! நாங்கள் உன்னைக் கொண்டே காலையை அடைகிறோம். மேலும் உன்னைக் கொண்டே மாலையை அடைகிறோம். மேலும் உன்னாலேயே உயிர்ப்பிக்கப்படுகிறோம். மேலும், உன்னாலேயே மரணமடைகின்றோம். இன்னும் உன் பக்கமே திரும்புகின்றோம்“ என்று நபி(ஸல்) அவர்கள் காலையை அடையும் போது பிரார்த்திப்பார்கள். மேலும் மாலையை அடையும் போதும் இவ்வாறே பிரார்த்திப்பார்கள் என, அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். அபூதாவூத், நஸயீ, திர்மிதீ மற்றும் இப்னுமாஜா.

1591 “இறைவா! எங்களுக்கு உலக வாழ்விலும் நல்லதைக் கொடு“ என்பது தான் நபி(ஸல்) அவர்களின் பிரார்த்தனைகளில் அதிகமானதாக இருந்து என, அனஸ்(ரழி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1592 “எனது இரட்சகனே! எனது பாவங்களை எனக்கு மன்னிப்பாயாக! என்னுடைய அறியாமை மற்றும் என்னுடைய காரியங்களில் என்னுடைய வீண்விரயம் மற்றும் என்னிடமிருந்து அறிந்த குற்றங்களை மன்னித்தருள்! எனது இரட்சகனே! நான் வேண்டுமென்றே செய்த பிழைகளையும் விளையாட்டாகச் செய்த பிழைகளையும் தவறிச் செய்த குற்றத்தையும், அறிந்தே செய்த குற்றத்தையும் மன்னிப்பாயாக! எனது இரட்சகனே! நான் முன்னர் செய்தவைகளையும் பின்னர் செய்தவைகளையும் மறைமுகமாகச் செய்தவைகளையும், பம்ரங்கமாகச் செய்தவைகளையும், இன்னும் எதை எல்லாம் நீ என்னிடமிருந்து அறிந்த தவறுகள் அனைத்தையும் மன்னித்தருள்! நீயே உயர்த்துபவன் ஆவாய். மேலும் நீயே தாழ்த்துபவன் ஆவாய். நீ அனைத்தின் மீதும் ஆற்றல் மிக்கவன்“ என்று நபி(ஸல்) அவர்கள் பிரார்த்தனை செய்வார்கள் என அபூ மூஸா அல் அஷ்அரி(ரலி) அறிவிக்கிறார். புகாரீ, முஸ்லிம்

1593 “எனது இரட்சகனே! எனது மார்க்கத்தை எனக்காக சீர்திருத்து! ஏனெனில், அதில் தான் எனது காரியங்களுக்கான பாதுகாப்பு உள்ளது. எனது உலகை எனக்காக அலங்கரித்திடு. ஏனெனில், அதில் தான் என் வாழ்க்கை இருக்கிறது. எனக்காக என்னுடைய மறுமையை அலங்கரித்திடு. ஏனெனில், நான் அதன் பக்கமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. மேலும் என்னுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நல்ல காரியத்தையும் அதிகப்படுத்துவாயாக! மேலும் என்னுடைய மரணத்தை ஒவ்வொரு தீங்கிலிருந்தும் மாற்றி விடுவாயாக!“ என்று நபி(ஸல்) பிரார்த்தனை செய்வார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். முஸ்லிம்

1594 எனது இரட்சகனே! நீ எனக்குக் கற்றுக் கொடுத்ததை எனக்குப் பயனுள்ளதாக்குவாயாக! மேலும், எனக்குப் பயன் தரக் கூடியதைக் கற்றுத் தருவாயாக! மேலும், எனக்குப் பயன் தரக்கூடிய கல்வியை எனக்கு அருள்வாயாக! என்று நபி(ஸல்) அவர்கள் பிரார்த்திப்பார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். நஸயீ, ஹாம்கி

1595 அபூஹுரைரா(ரலி) வாயிலாக திர்மிதீயில் 1594வது ஹதீஸ் போன்றே உள்ளது. மேலும் அதன் இறுதியில், “எனது அறிவை அதிகப்படுத்துவாயாக! ஒவ்வொரு நிலையிலும் அல்லாஹ்விற்கே புகழனைத்தும்! மேலும் நரகவாசிகளின் நிலையிலிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்“ என்றும் அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

1596 “இரட்சகனே! விரைவான, தாமதமான, நான் அறிந்துள்ள, இன்னும் நான் அறியாதிருக்கும் அனைத்துவித நன்மைகளையும் நான் உன்னிடம் கோருகிறேன். மேலும் விரைவான, தாமதமான, நான் உன்னிடம் கோருகிறேன். மேலும் விரைவான, தாமதமான, நான் அறிந்துள்ள, நான் அறியாது இருக்கின்ற அனைத்துவிதத் தீமைகளிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். இரட்சகனே! உன்னுடைய அடியார் உன்னிடம்

வேண்டிய நன்மைகளில் சிலவற்றை வேண்டுகிறேன். மேலும், உன்னுடைய அடியார், உன்னுடைய தூதர் பாதுகாப்புத் தேடிய தீமைகளிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். இரட்சகனே! நான் உன்னிடம் சுவர்க்கத்தை வேண்டுகிறேன். மேலும் என்னை அதனிடம் கொண்டு செல்லக் கூடிய வார்த்தை மற்றும் செயலைக் கோருகிறேன். மேலும், நான் நரகத்திலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். அதனிடம் கொண்டு செல்லக் கூடிய சொல், செயலிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். இன்னும் எனக்கு நீ நிர்ணயித்துள்ள விதிகள் அனைத்தையும் எனக்கு நல்லதாக்கிக் தருமாறு உன்னிடம் வேண்டுகிறேன்“ என்று இந்தப் பிரார்த்தனையை நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள் என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். இப்னு மாஜா. இது இப்னு ஹிப்பான் மற்றும் ஹாம்மில் ஸஹீஹ் எனும் தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1597 “தராசில் கனமானவையாகவும், நாவில் இலோசனவையாகவும் (ஆனால்) கருணையாளனிடத்தில் அன்புக்குரியவையாகவும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. 1. அல்லாஹ் தூய்மையானவன். அவனது புகழை நான் எடுத்துரைக்கின்றேன். 2. மகத்தான அல்லாஹ் தூய்மையானவன்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) வாயிலாக புகாரீ மற்றும் முஸ்லிமில் பதிவாகியள்ளது.